

# தமிழரசு


மார்ச் 1–15, 1999, ரூ.3











# நமது அன்றாட பழக்கவழக்கங்களால், எய்ட்ஸ் வராது.

# அதற்கு நீங்களே ஒரு உதாரணம்.

காலையில் எழுந்தது முதல் ராத்திரி படுக்கப் போகும் வரை நீங்கள் எத்தனையோ பேரைச் சந்திக்கிறீர்கள். ஓட்டலுக்குச் செல்கிறீர்கள், சினிமா பார்க்கிறீர்கள், நெரிசலான பஸ்ஸில் பயணம் செய்கிறீர்கள், பலருடன் கை குலுக்குகிறீர்கள்.

இவர்களில் யாருக்காவது எச்ஐவி/ எய்ட்ஸ் பாதித்து இருக்கலாம்.

**சாதாரண பழக்கவழக்கங்களின் மூலம் எய்ட்ஸ் பரவுவதாக இருந்தால், உங்களையும் எய்ட்ஸ் பாதித்திருக்க வேண்டும்.**

**ஆனால் அப்படி இல்லையே...**

ஏனெனில், கை குலுக்குவதாலோ, உணவைப் பகிர்ந்து கொள்வதாலோ, தொடுவதாலோ, தும்மலினாலோ, கழிப்பிடத்தை அனைவரும் உபயோகிப்பதாலோ, எய்ட்ஸ் பரவுவதில்லை.

எனவே எய்ட்ஸ் பாதித்தவரைக் கண்டு நீங்கள் ஒதுங்க வேண்டியதில்லை. உங்களுக்கு எந்த ஆபத்தும் இல்லை.

அவர்களும் நம்மைப் போன்றவர்கள்தான். அவர்களுக்கு எப்பொழுதும் போல நாம் அன்பும், ஆதரவும் காட்டுவோம்.

**சிறிதளவு ஆதரவு பெருமளவு சுமையைக் குறைக்கும்.**

குழந்தை பிறப்பைத் தடுப்போம்
எய்ட்ஸ் வந்தோரைக் காப்போம்

மேலும் விவரங்களுக்கு அணுக வேண்டிய முகவரி :
தமிழ்நாடு எய்ட்ஸ் கட்டுப்பாட்டு அமைப்பு
417, பாந்தியன் ரோடு, சென்னை - 600 008.
தொ.பே.: 8255467, 8255261, 8254917.
24 மணிநேர தொ.பே.: 8256882, 8256864.

Mudra.TNSACS:6259:98

# இந்த இதழில்


★ மகளிர் சமுதாயத்திற்கு உதவும் உணர்வு பெறுவோம்! ........ 2
– முதலமைச்சர் கலைஞர் வாழ்த்து

★ தமிழக திட்ட ஒதுக்கீடு ........ 4

★ பெண் விடுதலை ........ 6

★ கன்னியாகுமரியில் திருவள்ளுவர் சிலை அமைப்புப் பணிகள் ........ 7

★ சிறுதொழில் வளர்க்கும் சிட்கோ நிறுவனம் ........ 9

★ இல்லாதவர்கள் ........ 13

★ இன்றைய சாதனை நாளைய சரித்திரம் ........ 16

★ மனிதக்கழிவை மனிதன் சுமக்கும் அவலம் அகற்றப்படும் ........ 17

★ தமிழ் இலக்கியத்தில் பொருளியல் கோட்பாடுகள் ........ 35

★ ஒரு மானிட ஏக்கம் ........ 40

★ சிதராலில் சமணர்களின் பல்கலைக்கழகம் ........ 41

★ வாசனைத் திரவியப் பயிர்கள் சாகுபடி ஊக்குவிப்பு மற்றும் மேம்பாட்டுத் திட்டங்கள் ........ 42

★ மகளிருக்கு சிறு வணிகக் கடன் ........ 43

★ 25வது இந்திய சுற்றுலா மற்றும் தொழில் பொருட்காட்சி – 1999 ........ 47


## திருக்குறள்

*பல்லார் முனியப் பயனில சொல்லுவான்*
*எல்லாரும் எள்ளப் படும்*

*பலரும் வெறுக்கும்படியான பயனற்ற சொற்களைப் பேசுபவரை எல்லோரும் இகழ்ந்துரைப்பார்கள்.*

*- **கலைஞர்** திருக்குறள் உரையிலிருந்து...*


## தமிழரசு

திருவள்ளுவர் ஆண்டு – 2030

மாசி–பங்குனி

மார்ச் 1–15, 1999

மலர் : 30 இதழ் : 17

விலை ரூ.3


*முதல் பக்க அட்டையில்*

25.2.99 அன்று புதுடில்லியில், மத்திய திட்டக்குழுத் துணைத் தலைவர் திரு. கே.சி. பந்த் அவர்களுடன் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் கலைஞர் மு. கருணாநிதி அவர்கள் 1999–2000 ஆண்டு திட்ட ஒதுக்கீடு குறித்து கலந்துரையாடல்.

*கடைசிப் பக்க அட்டையில்*

உலக மகளிர் நாள்: 8–3–99

# மகளிர் சமுதாயத்திற்கு உதவும்





இன்று (8.3.99) உலக மகளிர் நாள். உலகில் ஏறத்தாழ சரிபாதியாக வாழும் பெண்கள் சமுதாயம் எதிர்கொள்ளும் இன்னல்கள் அகன்று - கல்வி, சமூக, பொருளாதார நிலைகளில் பெண்கள் முன்னேற்றம் எய்திடத்தக்க வகையில் கருத்தினைச் செலுத்தி கடமைகள் ஆற்றிடக்கூடிய உணர்வுகளை வளர்க்குமுகத்தான் 'உலக மகளிர் நாள்' ஆண்டுதோறும் மார்ச் திங்கள் 8ஆம் நாளன்று உலகெங்கும் கடைப்பிடிக்கப்படுகிறது.

1929ஆம் ஆண்டில் செங்கல்பட்டில் நடைபெற்ற முதல் சுயமரியாதை இயக்க மாநாட்டிலும், அதன்பின் நடைபெற்ற பல்வேறு மாநாடுகளிலும், தந்தை பெரியார் அவர்களும், பேரறிஞர் அண்ணா அவர்களும் பெண்கள் முன்னேற்றம் குறித்த பல்வேறு கருத்துக்களின் அடிப்படையில் தீர்மானங்களை நிறைவேற்றி, சமுதாயத்தில் பெண்கள் மேம்பாடு குறித்த விழிப்புணர்வை வளர்த்தனர்.



அப்பெருமக்களின் அடிச்சுவட்டில் இயங்கி வரும் இந்த அரசு, பெண்கள் மேம்பாட்டிற்கெனப் பல்வேறு சமூக நலத்திட்டங்களைச் செயல்படுத்தி வருவதுடன், பொருளாதாரத்தில் தன்னிறைவு பெறுவதன் மூலமே பெண்கள் தக்க பாதுகாப்பையும், முன்னேற்றத்தையும் பெற்றிட இயலும் என்பதை உணர்ந்து, அவற்றிற்கு வழிவகுக்கும் திட்டங்கள் பலவற்றை தொடர்ந்து உருவாக்கியும் செயல்படுத்தியும் வருகிறது.





பெண் காவலர்கள் நியமனத் திட்டம் - அரசுப் பணிகளில் பெண்களுக்கு 30 விழுக்காடு இட ஒதுக்கீடு வழங்கும் திட்டம் - முதல் தலைமுறையாகத் தொழில் தொடங்கும் மகளிருக்கு 50 ஆயிரம் ரூபாய் வரை மானிய உதவி வழங்கும் திட்டம் - தொழில்மனை ஒதுக்கீட்டில் மகளிர் தொழில் முனைவோருக்கு முன்னுரிமை வழங்கும் திட்டம் - 1000 மகளிருக்கு தொழில் வாய்ப்பு வழங்கும் மகளிர் உயிர் தொழில்நுட்பவியல் பூங்கா அமைக்கும் திட்டம் - சிறு வணிக மகளிருக்குச் சேமிப்புடன் கூடிய கடன் வழங்குத் திட்டம் முதலிய பல்வேறு திட்டங்களை

# உணர்வு பெறுவோம்!

- முதலமைச்சர் **கலைஞர்** வாழ்த்து!



உருவாக்கியும் நடைமுறைப்படுத்தியும் பெண்களின் வேலை வாய்ப்புகளுக்கும் பொருளாதார மேம்பாட்டிற்கும் வழி வகுத்து வருகிறது இந்த அரசு.

இவை மட்டுமல்லாமல், பெண்களுக்குச் சொத்துரிமை வழங்கியமை - பல்வேறு திருமண உதவித் திட்டங்களின் கீழ் ஏழை எளிய மகளிருக்கு நிதியுதவி வழங்கி வருகின்றமை - குறிப்பாக 1989இல் அறிமுகப்படுத்தப்பட்ட மூவலூர் மூதாட்டியார் திருமண உதவித் திட்டத்தின் கீழ் 1996இல் இந்த அரசு அமைந்தபின், 128 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்து, 1 இலட்சத்து 28 ஆயிரம் மகளிருக்கு 10 ஆயிரம் ரூபாய் வீதம் திருமண நிதியுதவி வழங்கியமை - 1996ஆம் ஆண்டு நடைபெற்ற உள்ளாட்சி அமைப்புகளுக்கான தேர்தல்களில் 33 விழுக்காடு இடங்களைப் பெண்களுக்கு ஒதுக்கீடு செய்து, மாநகராட்சிகளில் 2 பெண் மேயர்கள் உட்பட ஏறத்தாழ 40 ஆயிரம் மகளிர் உள்ளாட்சி அமைப்புகளில் பங்குபெறச் செய்தமை முதலாகப் பல்வேறு சீரிய திட்டங்கள் நிறைவேற்றப்படுவதன் மூலம் தமிழகப் பெண்கள் சமுதாயம் நாளொரு மேனியும், பொழுதொரு வண்ணமுமாய் ஏற்றம் பெற்று வருகின்றது.

இந்த நிலை என்றும் தொடர - தமிழக மகளிர் சமுதாயம் தொடர்ந்து முன்னேறிட - மகளிர் சமுதாயத்திற்கு உதவும் உணர்வுகள் மாநில முழுதும் தழைத்துச் செழித்திட இந்த உலக மகளிர் நாளில் உயரிய சிந்தனைகள் முகிழ்க்கட்டும்! இந்நன்னாளில் மகளிர் சமுதாயத்திற்கு என் மனம் கனிந்த நல்வாழ்த்துக்கள் உரித்தாகுக!

உலக மகளிர் நாளை முன்னிட்டு 8.3.99 அன்று
முதலமைச்சர் **கலைஞர்** அவர்கள்
விடுத்த வாழ்த்துச் செய்தி .

# தமிழக திட்ட ஒதுக்கீடு

தமிழக முதலமைச்சர் கலைஞர் அவர்கள் 25.2.99 அன்று புதுடில்லியில் மத்திய திட்டக்குழு துணைத்தலைவர் திரு. கே.சி. பந்த் அவர்களுடனும் மத்திய திட்டக்குழு உறுப்பினர்களுடனும் தமிழகத் திட்டங்கள் குறித்து விவாதித்தார். மத்திய திட்டக்குழுவுடன் முதலமைச்சர் நடத்திய கலந்துரையாடலில் மாநில தலைமைச் செயலர், நிதித்துறை செயலர், முதலமைச்சரின் செயலர், திட்டம் மற்றும் வளர்ச்சித்துறை செயலர் மற்றும் மாநிலத் திட்டக்குழு உறுப்பினர் – செயலர் ஆகியோர் கலந்து கொண்டனர். நீண்ட கலந்துரையாடலுக்குப் பின் தமிழக திட்ட ஒதுக்கீடு குறித்து இறுதி முடிவு காணப்பட்டது. அதன்படி 1999 – 2000 ஆண்டு திட்ட ஒதுக்கீடு ரூ.5,250 கோடியாக நிர்ணயிக்கப்பட்டுள்ளது. இது நடப்பு ஆண்டு திட்ட ஒதுக்கீடான ரூ.4,500 கோடியை விட ரூ.750 கோடி அதிகமாகும்.

மத்திய திட்டக்குழுவின் துணைத் தலைவர் திரு.கே.சி.பந்த் அவர்கள் தமிழ்நாட்டில் கடந்த ஆண்டு திட்டத்தினை மிகச் சிறப்பாக செயல்படுத்தியதை வெகுவாகப் பாராட்டினார். தொழில் வளர்ச்சிக்கான அடிப்படைக் கட்டுமானப் பணிகளிலும், கல்வி, மருத்துவம் மற்றும் சமூக நலத் துறைகளிலும் மாநில அரசு அதிகக் கவனம் செலுத்தி வருவதையும் புகழ்ந்துரைத்தார். வேகமாக வளர்ந்து வரும் தகவல் தொழில்நுட்பத் துறையில் மாநில அரசு மேற்கொண்டு வரும் முக்கியமான முயற்சிகளையும், தமிழக மக்கள் பயனுறும் வகையில் இணையத்தில் (Internet) தமிழின் பயன்பாட்டை மேலும் அதிகப்படுத்தும் வகையில் அரசு மேற்கொண்டு வரும் நடவடிக்கைகளையும் மத்திய திட்டக்குழுவின் கவனத்திற்கு முதலமைச்சர் கொண்டுவந்தார்.

மேலும் இந்தச் சந்திப்பின்போது முதலமைச்சர் கலைஞர் மாநிலத்தின் வளர்ச்சி சம்பந்தப்பட்ட சில முக்கியமான கோரிக்கைகளை முன் வைத்தார்.

# முதல்வர் கலைஞர் அவர்கள் திட்டக்குழு கூட்டத்தில் ஆற்றிய உரை

மாண்புமிகு திட்டக்குழுவின் துணைத்தலைவர், உறுப்பினர்கள் மற்றும் அதிகாரிகளே!

முதலாவதாக இங்குக் குழுமியிருக்கும் எல்லோருக்கும் எனது அன்பான வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

ஒன்பதாவது ஐந்தாண்டுத் திட்டத்தின் முதலாம் ஆண்டில் தமிழ்நாடு, மாநிலத்தின் நிகர பொருளாதார உற்பத்தியில் (Net State Domestic Product) 6 விழுக்காடு வளர்ச்சியை அடைந்துள்ளது. நடப்பு ஆண்டிலும் வளர்ச்சி விகிதம் இதே அளவு இருக்குமென்று எதிர்பார்க்கிறோம். ஒன்பதாவது ஐந்தாண்டுத் திட்ட காலத்தில் மாநில அரசு திட்ட வளர்ச்சி இலக்கினை முழுமையாக எய்திட மைய அரசு போதுமான அளவு திட்ட நிதியினை ஒதுக்கீடு செய்யும் என மாநில அரசு எதிர்பார்க்கிறது.

அண்மையில் நடந்து முடிந்த தேசிய வளர்ச்சிக் குழு கூட்டத்தில் மாண்புமிகு திட்டக்குழுவின் துணைத் தலைவர் தெரிவித்ததுபோல, தமிழ்நாடு தனது நிதியாதாரத்தை மிகத் திறமையாக நிர்வகித்து, அங்கீகரிக்கப்பட்ட திட்ட இலக்கினைத் தொடர்ந்து எய்தி வருகிறது. அதேபோல நடப்பு ஆண்டின் திட்ட இலக்கான ரூ.4,500 கோடியையும் எய்திடும் என்று உங்களுக்கு உறுதியளிக்கிறேன்.

ரூ.5,200 கோடி ரூபாயை 1999–2000 ஆண்டிற்கான திட்ட இலக்காக மாநில அரசு நிர்ணயித்துள்ளது. இத்திட்ட இலக்கை முழுமையாக எய்திட, தேவையான நிதி ஆதாரங்களை மாநில அரசால் திரட்டிட இயலும்.

திட்டத்தின் ஒவ்வொரு பிரிவிலும் மாநில அரசு நிர்ணயித்துள்ள வளர்ச்சி இலக்கு மைய திட்டக் குழுவின் திட்ட இலக்கினை ஒத்துள்ளது. திட்ட ஒதுக்கீட்டில் 40 விழுக்காடு பொருளாதார கட்டமைப்பை மேம்படுத்திடவும், 35 விழுக்காடு சமூகத் துறையிலும், எஞ்சிய 25 விழுக்காடு வேளாண்மை, கிராமப்புற வளர்ச்சி போன்ற துறைகளிலும் செலவிடப்படுகிறது.

மக்களின் அடிப்படைத் தேவைகளை நிறைவு செய்வதில் மாநில அரசு முக்கிய கவனம் செலுத்துகிறது. குடிநீர் விநியோகம், கிராமச் சாலைகள், கல்வி, சுகாதாரம், சத்துணவு போன்ற துறைகளில் மாநில அரசு திட்ட இலக்கினைத் தொடர்ந்து மிஞ்சி வருகிறது. இத்துறைகளில் தொடர்ந்து நாம் அடைந்து வரும் ஒட்டுமொத்த வளர்ச்சி, மாநிலத்தின் சாதகமான சமூகப் – பொருளாதார வளர்ச்சி குறியீடுகளில் பிரதிபலிக்கிறது.

சமூக, பொருளாதார வளர்ச்சிக்கு உறுதுணையாக விளங்கும் தகவல் தொழில்நுட்பத்திற்கு மாநில அரசு மிகுந்த முக்கியத்துவம் அளிக்கிறது. மைய அரசு அமைக்க உத்தேசித்துள்ள தகவல் உயர் தொழில்நுட்ப மையங்களின் வரிசையில் சென்னையையும் சேர்க்க வேண்டும் என்ற மாநில அரசின் கோரிக்கையை

ஏற்றுக் கொண்டதற்காக மைய திட்டக் குழுவிற்கு எனது நெஞ்சார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

அண்மையில் சென்னையில் சர்வதேச தமிழ் இணைய மாநாடு ஒன்றை நடத்தி, அம்மாநாட்டில் கணினியில் பயன்படத்தக்க வகையில் தமிழ் எழுத்து வரிவடிவங்களும், கணினி தமிழ் விசைப் பலகையும் தரப்படுத்தப்பட்டன. இது தகவல் தொழில்நுட்பத்தில் தமிழைப் பெரிய அளவில் பயன்படுத்துவதற்கு உதவும். இங்கிலாந்து நாட்டின் 'வேர்ல்டு டெல்' (World Tel) நிறுவனத்துடன் இணைந்து 13,000 சமுதாய இணைய மையங்களை மாநிலம் முழுவதும் அமைக்க உத்தேசித்துள்ளோம்.

தமிழ்நாட்டின் வளர்ச்சிக்கு தொடர்புள்ள பின்வரும் முக்கிய பொருட்களைப் பற்றி மைய திட்டக் குழுவின் கவனத்திற்கு கொண்டு வருவதுடன் திட்டக்குழுவின் பரிந்துரையையும் நாடுகிறேன்.

சேது சமுத்திரக் கால்வாய் திட்டம் விரைவில் எடுத்துக்கொள்ளப் படுமென்றும், 3 அல்லது 4 ஆண்டுக் காலத்திற்குள் இத்திட்டம் நிறைவேற்றப்படும் என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது. இத்திட்டத்தை ஒன்பதாவது ஐந்தாண்டு கால திட்டத்தில் சேர்த்து அதற்குத் தேவையான நிதி வசதியை அளிக்க வேண்டுமென்று மாண்புமிகு திட்டக் குழுத் துணைத்தலைவர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

1997–98 வரை வறுமை ஒழிப்புத் திட்டங்களுக்காக தமிழகத்திற்கு மத்திய ஒதுக்கீடு 7.062 விழுக்காடாக இருந்தது. அது, 1998–99இல் 4.987 விழுக்காடாகக் குறைக்கப்பட்டது. இப்படி குறைக்கப்பட்டமைக்காக மாநில அரசு எதிர்ப்பு தெரிவித்தது. இப்பிரச்சினை தேசிய வளர்ச்சிக் குழுவின் வல்லுநர் குழுவின் முடிவிற்கு விடப்பட்டுள்ளது. அவ்வல்லுநர் குழு இப்பிரச்சினை குறித்து ஒரு முடிவு எடுக்கும்வரை, தமிழ்நாட்டிற்குரிய ஒதுக்கீடு 7.062 விழுக்காடாகவே இருக்க வேண்டும் என வேண்டுகிறேன்.

*சென்னையில் உள்ள கூவம், அடையாறு, பக்கிம்ஹாம், ஒட்டேரி நல்லா போன்ற நீர்வழிகளை சுத்தம் செய்வதற்காக தமிழக அரசு செயற்படுத்தவுள்ள திட்டத்தில் ஒரு பகுதியாக அவற்றின் கரைகளில் உள்ள குடிசைகளை வேறு இடங்களில் மாற்றி அமைப்பதற்காக கூடுதல் நிதி ஒதுக்கீடு செய்ய வேண்டுமென்றும் முதலமைச்சர் கேட்டுக் கொண்டார்.*

தமிழ்நாடு எந்த ஒரு பெரிய பாசனத் திட்டத்தையும் கொண்டிருக்கவில்லை. ஆதலால், விரைவுபடுத்தப்பட்ட பாசனப் பயன்பாட்டுத்திட்டத்தின் கீழ் மத்திய அரசின் உதவியைப் பெற முடியவில்லை; எனவே, Accelerated Irrigation Benefit Programme வழிகாட்டு நெறிமுறைகளில் நடுத்தர மற்றும் சிறு பாசனத் திட்டங்களையும் சேர்த்திடுமாறு திட்டக்குழுவைக் கேட்டுக்கொள்கிறேன்.

இம்மாநிலத்தில் கிழக்குத் தொடர்ச்சி மலைகள் 16 மாவட்டங்களில் 134 ஒன்றியங்களின் வழியாகச் செல்கின்றன. கிழக்குத் தொடர்ச்சி மலைப்பகுதியில் ஏறத்தாழ 32,000 சதுர மீட்டர் பகுதிகள் இயற்கைச் சூழல் மாசுபடும் நிலையில் உள்ளன. மாநில அரசு ஒன்பதாவது திட்டக் காலத்தில் கிழக்குத் தொடர்ச்சி மலைப்பகுதிகளை மேம்படுத்தும் திட்டத்தினை செயல்படுத்திட திட்டமிட்டுள்ளது. ஒன்பதாவது திட்டத்தின் பணிக்குழு விவாதங்களின்போதும் இத்திட்டம் ஏற்றுக்கொள்ளப்பட்டது. எனவே, கிழக்கு தொடர்ச்சி மலைப்பகுதிகளை மேம்படுத்திட மத்திய அரசு இத்திட்டத்தை ஒன்பதாவது திட்டத்தில் சேர்த்து தனி ஒதுக்கீடாக நிதி வழங்கி நிறைவேற்றிட முன்வரவேண்டும் என வலியுறுத்த விரும்புகிறேன்.

*தமிழகத்தில் உள்ள பாசன வாய்க்கால்களையும் தூர் வாருவதற்காக கூடுதலாக நிதி ஒதுக்கீடு செய்யுமாறு முதலமைச்சர் கேட்டுக் கொண்டார். இதைப்பற்றி முதலமைச்சர் சொன்னபோது திட்டக்குழு துணைத் தலைவர் குறுக்கிட்டு இந்தப் பணியை கடந்த இரண்டாண்டுகளில் மேற்கொண்டது பற்றி மேலும் கேட்டறிந்ததோடு அந்தப் பணியை நிறைவேற்றியதற்காக தன்னுடைய பாராட்டுதல்களை தெரிவித்துக் கொண்டார்.*

மாநிலங்கள் தன் விரிவாக்கத் திட்டங்களுக்கான மூலதனங்களை பெறுவதற்கு இடையூறாக இரண்டு பிரச்சினைகள் உள்ளன. முதலாவது, ஐந்தாவது ஊதியக் குழுவின் பரிந்துரைகளின்படி மாநில அரசு ஊழியர்களின் ஊதியங்களை உயர்த்தியதன் மூலம் மாநிலங்களுக்கு ஏற்பட்ட கூடுதல் பணச்சுமை பற்றியதாகும். இதனை நிவர்த்தி செய்ய இந்த கூடுதல் பணச்சுமையில் 50 விழுக்காடு தொகையாவது மத்திய அரசு மாநிலங்களுக்கு அளிப்பது இன்றியமையாததாகும். இரண்டாவதாக, சிறுசேமிப்புத் திட்டங்களுக்கான வட்டி வீதத்தினை மத்திய அரசு தற்போது குறைத்து அறிவித்துள்ளது. மாநிலங்களுக்கு இந்த சிறுசேமிப்புத் திட்டங்களின் மூலம் நிதி திரட்டுவதற்கு ஊறு விளைவிக்கும் வகையில் அமைந்துள்ளது. சிறுசேமிப்பு திட்டங்களுக்கான வட்டி வீதங்களை முன்பு இருந்த வீதத்திற்கே திரும்ப மாற்ற வேண்டி மத்திய அரசிடம் திட்டக்குழு பரிந்துரைக்க வேண்டும் என கேட்டுக் கொள்கிறேன். மாண்புமிகு திட்டக்குழு துணைத் தலைவர் இந்தப் பிரச்சினையில் தலையிட்டு தீர்க்க வேண்டுமென்று நான் வலியுறுத்துகிறேன்.

பொருளாதாரத்தில் வளர்ச்சி பெறும் வகையிலும், புதிய வேலைவாய்ப்பினை உருவாக்குவதிலும், வறுமை ஒழிப்பு, மக்களின் வாழ்க்கைத் தரம் மேம்படுத்தல் ஆகியவற்றை அடைவதிலும் மாநில அரசு செயல்படுத்தும் பல்வேறு முயற்சிகளுக்கும் திட்டக்குழு அளித்து வரும் ஆதரவைப் பாராட்டுகிறேன்; இந்த ஆதரவு தொடர வேண்டும் என்றும் விரும்புகிறேன்.

★ ★ ★

# பெண் விடுதலை






ஏட்டையும் பெண்கள் தொடுவது தீமையென்
றெண்ணி யிருந்தவர் மாய்ந்து விட்டார்;
வீட்டுக் குள்ளே பெண்ணைப் பூட்டிவைப் போமென்ற
விந்தை மனிதர் தலை கவிழ்ந்தார்.

மாட்டை யடித்து வசக்கித் தொழுவினில்
மாட்டும் வழக்கத்தைக் கொண்டு வந்தே,
வீட்டில் எம்மிடங் காட்ட வந்தார், அதை
வெட்டி விட்டோமென்று கும்மியடி!

நல்ல விலை கொண்டு நாயை விற்பார், அந்த
நாயிடம் யோசனை கேட்ப துண்டோ?
கொல்லத் துணிவின்றி நம்மையும் அந்நிலை
கூட்டிவைத் தார்பழி கூட்டி விட்டார்.





கற்பு நிலையென்று சொல்ல வந்தார், இரு
கட்சிக்கும் அஃது பொதுவில் வைப்போம்;
வற்புறுத் திப்பெண்ணைக் கட்டிக்கொடுக்கும்
வழக்கத்தைத் தள்ளி மிதித்திடுவோம்.

பட்டங்கள் ஆள்வதுஞ் சட்டங்கள் செய்வதும்
பாரினிற் பெண்கள் நடத்த வந்தோம்;
எட்டு மறிவினில் ஆணுக் கிங்கேபெண்
இளப்பில்லை காணென்று கும்மியடி!

காத லொருவனைக் கைப்பிடித்தே, அவன்
காரியம் யாவிலும் கைகொடுத்து,
மாத ரறங்கள் பழமையைக் காட்டிலும்
மாட்சி பெறச் செய்து வாழ்வமடி!

– பாரதியார்

# கன்னியாகுமரியில் திருவள்ளுவர் சிலை அமைப்புப் பணிகள்

மாண்புமிகு செய்தி, விளம்பரம் மற்றும் அச்சுத்துறை அமைச்சர்

திரு. வ. முல்லைவேந்தன் அவர்கள் நேரடி ஆய்வு



கன்னியாகுமரியில் நடுக்கடலில் அமைக்கப்பட்டு வரும் திருவள்ளுவர் சிலை அமைப்புப் பணியை மாண்புமிகு அமைச்சர் பார்வையிட்டார். தொடர்ந்து திருவள்ளுவர் சிலை சுற்றுச் சுவர் அமைக்கும் பணியைத் தொடங்கி வைத்தார்.


அவருடன் செய்தி – மக்கள் தொடர்புத் துறை இயக்குநர் திரு.முத்துசாமி, குமரி மாவட்ட ஆட்சியர் திரு. பாண்டியன், துணை இயக்குநர்கள் திரு.பரதன், திரு.அண்ணாமலை, ஆகியோர் உடன் சென்றனர்.

தொடர்ந்து அமைச்சர் குமரி அரசு விருந்தினர் மாளிகையில் தென் மாவட்ட மக்கள் தொடர்பு அதிகாரிகளின் களப் பணிகள் குறித்து ஆய்வு மேற்கொண்டார்.


அதன்பிறகு நிருபர்களுக்கு பேட்டி அளித்தார். அப்போது அவர் கூறியதாவது:–

*"கன்னியாகுமரி கடலில் உள்ள பாறையில் 133 அடி திருவள்ளுவர் சிலை அமைக்கும் பணியில் 38 அடி ஆதார பீடம் முடிவுற்று உள்ளது. தொடர்ந்து சிலை அமைப்பு பணி நடந்து வருகிறது. இதில் 5 அடுக்குகள் முடிவுற்று 6ஆவது அடுக்கு பணி நடந்து வருகிறது. இதுவரை சிலை மட்டும் 30 அடி உயர்ந்து உள்ளது. மொத்தத்தில் ஆதார பீடமும் சேர்ந்து 68 அடி உயர்ந்து உள்ளது.*

*சிலைப் பணியில் ஒவ்வொரு அடுக்கும் 5 அடி உயரம் கொண்டதாகும். ஒவ்வொரு மாதமும் 10 அடி உயரம் சிலைப் பணி நடந்து வருகிறது. சிலையின்*



மேல்பகுதி செல்லச் செல்லக் கற்கள் எண்ணிக்கை குறைவதால் சிலை பணியும் வேகமாக நடைபெற்று ஆகஸ்டு மாதத்துக்குள் முடிவுற்று விடும். சிலைப்பணி நடக்கும் போதே சுற்றுச்சுவர் அமைக்கும் பணியும் சிலையின் கீழ் இருந்து சிலையின் மேல் உச்சி தெரியும் வரையிலான அதிக சக்தி கொண்ட மின்விளக்கு அமைக்கும் பணியும் நடந்து வரும்.



முதலில் சிலை பணி முடிவுற்றதும் பார்வையாளர்கள் பார்வையிடுவதற்கு அனுமதிக்கப்படுவார்கள். பயணிகள் படகு மூலம் அழைத்து செல்லப்படுவார்கள்.

சிலைப் பணிக்கு மட்டும் ரூ.5 கோடியே 70 இலட்சம் செலவிடப்பட்டுள்ளது. திரு. கணபதி ஸ்தபதி மேற்பார்வையில் நடைபெறும் சிலை அமைப்பு பணிக்கு மட்டும் ரூ.4 கோடியே 63 இலட்சத்து 40 ஆயிரம் செலவிடப்பட்டுள்ளது. கப்பலோடை மற்றும் சாரம் அமைத்தல், பாறையைச் சமப்படுத்துதல் பணிக்கு மட்டும் ரூ.1 கோடியே 42 இலட்சம் செலவிடப்பட்டுள்ளது.

## காமராஜர் நினைவு மண்டபம்

கன்னியாகுமரியில் காமராஜர் நினைவு மண்டபம் அமைக்க மத்திய அரசு அனுமதி கிடைக்கவில்லை. மத்திய அரசு அனுமதி கிடைக்கப் பெற்றதும் மணிமண்டபம் அமைக்கப்படும்.

தீண்டாமை ஒழிப்புக்காக செய்தி மற்றும் விளம்பரத்துறை மூலம் சினிமாப் படம் தயாரிக்கப்பட்டு உள்ளது. இந்த படம் அந்தந்த மாவட்ட மக்கள் தொடர்பு அலுவலகம் மூலம் கிராமம் தோறும் மக்களுக்குக் காட்டப்படும்.

கடலூர் மற்றும் விழுப்புரத்தில் வானொலி நிலையம் ஏற்படுத்தவும் மத்திய அரசைக் கேட்டுள்ளோம். அனுமதி கிடைத்ததும் வானொலி நிலையம் அமைக்கப்படும்.

சினிமா கேளிக்கை வரி மூலம் அரசுக்கு ரூ.100 கோடி வருமானம் கிடைத்துள்ளது. கேபிள் டி.வி.யை வரைமுறைப்படுத்த அனைத்து மாநில அரசுகளும் மத்திய அரசைக் கேட்டுள்ளன.



## கன்னியாகுமரியில் பொருட்காட்சி

அரசு பொருட்காட்சிகள் மூலம் 7 கோடியே 18 இலட்சம் ரூபாய் அரசுக்கு இலாபம் கிடைத்து உள்ளது. இந்த அரசு பொறுப்பேற்ற பிறகு இதுவரை நடத்தப்பட்ட பொருட்காட்சி மூலம் அதிக அளவு இலாபம் கிடைத்துள்ளது. கன்னியாகுமரியிலும் பொருட்காட்சி நடத்துவது பற்றி பரிசீலிக்கப்படும்".

– இவ்வாறு கூறினார். ★

# சிறுதொழில் வளர்க்கும் சிட்கோ நிறுவனம்

சிறுதொழில்களை தமிழகத்தில் பெருக்கவும் மற்றும் மாநிலத்தின் பிற்படுத்தப்பட்ட மற்றும் வளர்ச்சி அடையா பகுதிகளில் சிறுதொழில்கள் பரவலாக்கப்படுவதையும் முக்கிய குறிக்கோளாகக் கொண்டு, தமிழக அரசின் நிறுவனமான 'தமிழ்நாடு சிறுதொழில் வளர்ச்சிக் கழகம் (சிட்கோ)' நிறுவப்பட்டது. இந்நோக்கங்களின் அடிப்படையில் 'சிட்கோ' 14.10.1970 முதல் சிறு தொழில்நிறுவனங்களின் வளர்ச்சிக்கு பணியாற்றி வருகிறது.

நாட்டில் சுய வேலைவாய்ப்பினை ஏற்படுத்தவும், தொழில்வல்லுநர்கள், படித்த வேலையில்லா இளைஞர்கள் மற்றும் மகளிர் தொழில் முனைவோர் ஆகியோரின் தேவைகளைப் பூர்த்தி செய்யும் வகையிலும் அவர்கள் பயனடையும் பொருட்டும், 'சிட்கோ' பல்வேறு திட்டங்களை நிறைவேற்றி வருகிறது. மேலும் சிறு தொழில்கள் வளர்ச்சியால் நேரிடையான மற்றும் மறைமுகமான வேலைவாய்ப்புகள் ஒவ்வோர் ஆண்டும் நமது மாநிலத்தில் உருவாகிறது. இதனால் மனிதவள ஆதாரங்களை கண்டறிந்து அவற்றை ஆக்கபூர்வமாக பயன்படுத்த ஏதுவாகிறது. மாநிலத்தில் பொருளாதார வளர்ச்சி மேம்பாடடைய 'சிட்கோ' சிறுதொழில் மற்றும் குறுந்தொழில் வளர்ச்சிக்கு துணை புரிந்து தனது பங்கை செவ்வனே நிறைவேற்றி வருகிறது.

**சிட்கோவின் முக்கிய நடவடிக்கைகள்**

தொழிற்பேட்டைகளை உருவாக்கி, மேம்படுத்தப்பட்ட மனைகளை உருவாக்குதல், தொழிற்கூடங்கள் கட்டுதல் மற்றும் உள்ளமைப்பு வசதிகள் ஏற்படுத்துதல். அத்துடன் அடுக்குமாடி தொழில் வளாகங்கள் கட்டுதல். 'சிட்கோ' உதவியுடன் தனியார் தொழிற்பேட்டைகளை உருவாக்குதல், சிறு தொழில் நிறுவனங்களுக்கு உதவும் பொருட்டு விற்பனை உதவித் திட்டம் (MAS), சிறுதொழில்களுக்கான சிட்கோவின் ஏற்றுமதி உதவித் திட்டம், பில் டிஸ்கவுண்டிங் உதவித் திட்டம், தொழிற்பேட்டைகளில் தொழில்கூடங்கள் மற்றும் அடிப்படை உள்ளமைப்பு வசதிகள் ஏற்படுத்துதல்

வளர்ச்சிக்கான உள்ளாற்றல் கொண்ட மையங்களில் தொழிற்பேட்டைகளை உருவாக்குவதும், தொழில் முனைவோரின் தேவைக்கேற்ப தொழிற்கூடங்களை கட்டுவதும் சிட்கோவின் முக்கிய நடவடிக்கைகளில் ஒன்றாகும். குடிநீர் வசதி, சாலை வசதி, கழிவுநீர்க்கான இணைப்புகள், மின்விளக்கு வசதி மற்றும் இது போன்ற அடிப்படை வசதிகளை உருவாக்கி தொழிற்பேட்டைகளில் 'சிட்கோ' மேம்படுத்தப்பட்ட மனைகளை அமைக்கின்றது. தொழில் முனைவோர் தொழில் சார்ந்த நடவடிக்கைகளை ஆரம்பிப்பதற்காக தேவைகளை கருத்தில் கொண்டு இத்தகை தொழிற்கூடங்கள் மற்றும் மேம்படுத்தப்பட்ட மனைகள் மாநிலத்தின் அனைத்துப் பகுதியிலும் பரவலாக உருவாக்கப்படுகிறது. இது 'சிட்கோ'வின் நடவடிக்கைகளில் முக்கிய ஒன்றாகும். மாநிலத்தில் பரந்து விரிந்திருக்கும் 77 தொழிற்பேட்டைகள் சிட்கோவினால் பராமரிக்கப்படுகின்றன. இவற்றில் 4 தனியார் தொழிற்பேட்டைகளும் அடங்கும். 'சிட்கோ'வின் தொழிற் பேட்டைகளில் சிறு தொழில்கள் மற்றும் குறுந்தொழில்களுக்கு உகந்த தொழிற் கூடங்களும், மேம்படுத்தப் பட்ட மனைகளும் உருவாக்கப்பட்டு சிறுதொழில் மற்றும் குறுந்தொழில் முனைவோர்களுக்கு ஒதுக்கீடு செய்யப்படுகின்றன. இதுகாறும் சுமார் 4,250 தொழில்கூடங்களும் 1840 குறுந்தொழில்கூடங்களும் மாநிலத்தின் வெவ்வேறு பகுதிகளில் கட்டப்பட்டுள்ளன.

ஒதுக்கீட்டுக்காக தயார் நிலையில் இருக்கும் தொழிற்கூடம் மற்றும் மனை விவரங்களை செய்தித் தாள்களில் 'சிட்கோ' விளம்பரம் செய்யும். விளம்பரத்தின்படி தொழில் கூடம்/மனை வேண்டி பெறப்படும் விண்ணப்பங்கள் சிட்கோ தலைமை அலுவலகத்திலோ அல்லது சிட்கோவின் கிளை அலுவலகங் களிலோ ஏற்றுக்கொள்ளப்படும்.

தொழிற்கூடம் மற்றும் மேம்படுத்தப்பட்ட மனைகளுக்கான விண்ணப்பங்கள் அந்தந்த தொழிற்பேட்டைகளில் மற்றும் மாவட்டத் தலைநகரில் உள்ள கிளை அலுவலகங்களில் சமர்ப்பிக்கப்பட வேண்டும். மேற்படி விண்ணப்பங்கள் ஆய்வு செய்த பிறகு தலைமை அலுவலகத்தில் "ஒதுக்கீட்டு குழுவின்" பரிந்துரையின் பேரில் தொழில் முனைவோருக்கு ஒதுக்கீடு செய்யப்படும். குறிப்பாக ஒதுக்கீட்டுக்குழு சமர்ப்பிக்கப்பட்ட தொழில் திட்டங்களை, ஆய்வு செய்து, தொழில் முனைவோர்களின் நிதி ஆதாரங்களை கருத்தில் கொண்டு சிறுதொழில் அமைக்க தொழிற்கூடம்/ மேம்படுத்தப்பட்ட தொழில் மனைகள் ஒதுக்கீடு கோரும் விண்ணப்பங்கள் சரிபார்க்கப்பட்டு தகுதியான தொழில் முனைவோர்களுக்கு தொழிற் கூடங்கள்/மற்றும் மேம்படுத்தப்பட்ட மனைகள் ஒதுக்கீடு செய்யப்படுகின்றன.


மகளிர் தொழில் முனைவோருக்கு 30% வரையிலும், முன்னாள் இராணுவ வீரர்களுக்கு 10% வரையிலும், ஒதுக்கீடுகளில் முன்னுரிமை வழங்கப்படும்.

அதிக தேவை உள்ள பகுதிகளில் தொழிற்கூடங்களில் முழுத் தொகை செலுத்தும் வகையிலும், கிராக்கி இல்லாத இடங்களில் தொழிற்கூடங்கள் தவணை முறைத் திட்டத்திலும் வழங்கப்படுகின்றன.

சிட்கோ தொழிற்பேட்டைகளில் ஆரம்பிக்கும் தொழில்களுக்கு 15% மாநில முதலீட்டு மான்யமும், விற்பனை வரியை வட்டியில்லாமல் தள்ளிக்கட்டும் (ஐந்து வருடம் கழித்து) சலுகையும் அவ்வப்போது உள்ள அரசு ஆணைப்படி வழங்கப்படும்.

**சுய மின் உற்பத்தித் திட்டம்**

தற்போது ஏற்படும் மின் தடைகளை சமாளிக்கவும், தடையில்லா மின்சாரம் தொழிற்பேட்டைகளில் வழங்கிடவும் முக்கியமான மின் தேவை அதிகம் உள்ள தொழிற்பேட்டைகளில் "Captive Power Generation Plant" அமைக்கும் திட்டத்தை 'சிட்கோ' உருவாக்கி உள்ளது. இத்திட்டம் தொழிற் பேட்டையிலுள்ள தொழில் நிறுவனங்களுக்கு தேவைப்படும் மின் சக்தியை அவர்களே சொந்தமாக உற்பத்தி செய்து கொள்ளும் திட்டமாகும். 'சிட்கோ தொழிற்பேட்டைகளில் உள்ள நிறுவனங்கள் இந்த Captive Power Generation Plant" கம்பெனியில் பங்குதாரர் களாக இருந்து, அந்தக் கம்பெனியை நடத்துவர். 'சிட்கோ' இதில் சிறிய அளவில் (Nominal Share) பங்கேற்று, இந்த "சுய மின் உற்பத்தித் திட்டத்தை" ஏற்று நடத்தும் கம்பெனிகளை தொழிற்பேட்டைகளில் நிறுவனம் செய்வதற்கான ஏற்பாடுகளை செய்யும்.




**மூலப்பொருட்கள் பகிர்ந்து வழங்குதல்**

சிறு தொழில்கள் பிரிவின் தேவைகளை நிறைவு செய்யும் பொருட்டு 'சிட்கோ' சில முக்கிய மூலப் பொருட்களாகிய இரும்பு மற்றும் எஃகு கல்கரி மற்றும் மெழுகு போன்றவைகளை பகிர்ந்தளிக்கிறது. மேற்கூறிய மூலப் பொருட்கள் தவிர ஈயம், துத்தநாகம், ஐபிசிஎல் பிளாஸ்டிக் மூலப் பொருள் பொட்டாசியம் குளோரேட் போன்ற மற்ற மூலப் பொருட்களையும் 'சிட்கோ' கையாளுகிறது. தமிழ்நாடு காகித உற்பத்தி நிறுவனத்தின் தயாரிப்பான காகிதத்தை விநியோகிக்கும், வழிப்படுத்தும் முகமையாகவும் 'சிட்கோ' செயல்படுகிறது.

**மூலப் பொருட்கள் உதவிக்கான நடைமுறைகள்**

தமிழ்நாட்டிலுள்ள சிறு தொழில் நிறுவனங்கள் தங்களது சிறுதொழில் சான்றிதழை காண்பித்து, சிட்கோவின் மூலப் பொருட்கள் கிடங்கிலிருந்து தேவையான இரும்பு மற்றும் எஃகு சார்ந்த பொருட்களை விலை கொடுத்து பெற்றுக் கொள்ளலாம். மேலும் சிறு தொழில் நிறுவனங்கள் தங்களது வங்கியின் காப்புறுதியை கொடுத்து கடன் பேரிலும் பொருட்களைப் பெற்றுக் கொள்ளலாம். இந்திய எஃகு நிறுவனம் டாடா இரும்பு எஃகு நிறுவனம், விசாகப்பட்டினம் எஃகு நிறுவனம் மற்றும் இந்திய இரும்பு மற்றும் எஃகு நிறுவனம் போன்ற இரும்பு எஃகு உற்பத்தியாளர்களிடமிருந்து இரும்பு மற்றும் எஃகு பொருட்கள் மொத்த விலையில் கொள்முதல் செய்யப்படுகின்றன. சென்னை சுத்திகரிப்பு நிறுவனத்திலிருந்து மொத்த விலையில் பெறப்படும் மெழுகு மூலப் பொருட்களை சிறுதொழில் நிறுவனங்கள் தொழில் மற்றும் வணிகத்துறை இயக்குநரிடமிருந்துபெறப்பட்டஒதுக்கீட்டு அட்டையின் பேரில் விலை



கொடுத்து 'சிட்கோ' மூலப் பொருட்கள் கிடங்கிலிருந்து பெற்றுக் கொள்ளலாம்.

கோயம்புத்தூர் மூலப் பொருள் கிடங்கிலிருந்து கல்கரி (Coke)யை தாராளமாக விலை கொடுத்து பெற்றுக் கொள்ளலாம். இந்துஸ்தான் துத்தநாகம் (Zinc) நிறுவனத்தின் பரிந்துரையின் பேரில் துத்தநாகம் ஈயம் (Lead) போன்ற பொருட்கள் அம்பத்தூர் மூலப் பொருட்கள் கிடங்கிலிருந்து விநியோகம் செய்யப்படுகிறது. கிண்டி, கோவில்பட்டி, சாத்தூர் மூலப் பொருட்கள் கிடங்குகளிலிருந்து பொட்டாசியம் குளோரேட் விநியோகம் செய்யப்படுகிறது.

**விற்பனை உதவித் திட்டம்**

சிறுதொழில்கள் வெற்றிகரமாக நடப்பதற்கு முக்கிய பகுதியானது 'விற்பனை' பகுதியாகும். போட்டிகரமான விலையில் சிறுதொழில்கள் தங்கள் உற்பத்திப் பொருட்களை விற்பனை செய்வதற்கு உதவும் வகையில் 'சிட்கோ' ஏற்படுத்திய திட்டம் 'விற்பனை உதவித் திட்டம்' கொள்முதல் செய்யும் நிறுவனங்களுக்கு உரிய காலத்தில் பொருட்கள் கிடைக்க 'சிட்கோ' வகை செய்கிறது.

மேலும் அரசு நிறுவனங்கள் அழைக்கும் ஒப்பந்தப் புள்ளிகளில் சிறுதொழில்கள் பங்கேற்கும் வாய்ப்பினை உருவாக்கித் தருவதும் இந்த 'விற்பனை உதவித் திட்டம்' அரசு நிறுவனங்களுக்கும் சிறுதொழில்களுக்கும் இடையே பாலமாக இருந்து தொடர் நடவடிக்கைகளை 'சிட்கோ' செயல் திறமுடன் நடத்தி வருகிறது.

இதுவரை இத்திட்டத்தின் கீழ் 3050 சிறுதொழில் நிறுவனங்கள் பதிவு செய்துள்ளன. இந்த நடப்பு ஆண்டில் திரவவியல் உருளை மற்றும் திறப்பான்கள், மின் தடையில்லா தரும் மின் வசதி பொருட்கள், ஆய்வுக்கூட/மருத்துவமனை மற்றும் வேதியல் தயாரிப்பு கருவிகள், ரப்பர், வல்கனைசிங் சிமெண்ட் போன்ற சிறுதொழில் நிறுவனங்கள் 'சிட்கோ' விற்பனை உதவித் திட்டத்தில் பதிவு செய்துள்ளன.

**விற்பனை உதவித் திட்ட நடைமுறைகள்**

சிட்கோவின் விற்பனை உதவித் திட்டத்தின் கீழ் பயன்பெற விரும்பும் சிறுதொழில் நிறுவனங்கள், சிட்கோவின் எந்தவொரு கிளை அலுவலகத்திலும், நிரந்தர சிறுதொழில் நிறுவன சான்றிதழ், கட்டணத் தொகை ரூ.100 மற்றும் தேவையான சான்றிதழ்களை சமர்ப்பித்து பதிவு செய்து கொள்ளலாம். சிட்கோ கிளை மேலாளர் பதிவுக்கு விண்ணப்பித்த சிறுதொழில் நிறுவனங்களை ஆய்வு செய்து, விற்பனை உதவித் திட்டத்தின் கீழ் பதிவு செய்து, பதிவுச்சான்றிதழை அளிப்பார்.

**சிறுதொழில்களுக்கான சிட்கோவின் ஏற்றுமதி உதவி**

தமிழகத்தில் எண்ணற்ற சிறுதொழிற்கூடங்கள், உலகத்தரமும் தகுதியும் வாய்ந்த ஏற்றுமதிக்குரிய பொருட்களை உற்பத்தி செய்கின்றன. ஏற்கெனவே தோல் பொருட்கள், துணி வகைகள், வாகன உதிரிப் பொருட்கள், மென்பொருள் மற்றும் சேவைகள் போன்றவற்றை பல சிறுதொழிற் கூடங்கள் ஏற்றுமதி செய்து வருகின்றன. சர்வதேச தொடர்புகளால் சில சிறு தொழிற்கூடங்கள் ஏற்றுமதி சந்தையில் கால் பதிய முடிந்தாலும் அவை போன்ற சிறந்த ஏற்றுமதி தரம் வாய்ந்த பொருட்களை உற்பத்தி செய்து சர்வதேச சந்தைக்கு வழங்கக்கூடிய ஆற்றலுள்ள மேலும் பல சிறுதொழிற் கூடங்களால் அவ்வாறு செய்ய இயலவில்லை. ஏற்றுமதி சந்தையைப் பற்றிய விழிப்பு நிலைஇன்மை, வெளிநாடுகளில் வாங்கும் ஆற்றல் உள்ளவர்களுடன் தொடர்பு கொள்ளாமை, அதற்கான வழி வகைகள் இன்மை, சர்வதேச சந்தைக்கு அறிமுகமின்மை, அரசுக்கொள்கைகள், ஊக்கங்கள் மற்றும் ஏற்றுமதி வழிமுறைகளைப் பற்றிய தகவல்களை அறிந்து கொள்ளும் வழியின்மை ஆகிய பல காரணங்களால் அவ்வாறு செய்ய இயலவில்லை. இக்குறைகளை கடந்து முயற்சித்தாலும், செலவினங்கள் உயர்ந்து அம்முயற்சிதனை லாபமற்றதாக்கி போட்டியிட தகுதியற்றதாக்கி விடுகிறது.


இந்திய ஏற்றுமதி நிலவரத்தில் சிறுதொழிற்பொருட்களின் பங்கு 55 சதவீதத்திற்கும் மேலாகும். இது இந்திய சிறுதொழிற்பொருட்கள் உலகத் தரத்தினையும், போட்டியையும் சந்திக்கும் தகுதியுடையதையேகுறிப்பிடுகிறது. உலக சந்தையில் நுழைய ஏராளமான வாய்ப்புகள் இந்திய சிறுதொழிற் பொருட்களுக்கு இருப்பினும், அத்தகையத் தொழிற்கூடங்களின் முயற்சிகளுக்கு தொடர்ந்து ஆதரவு தற்போது தேவைப்படுகிறது. உலகமயமாக்கம் மற்றும் தாராளமயமாக்கம்

இத்தருணத்தில் இத்தகைய சிறுதொழிற்கூடங்களுக்கு தகவல் தொடர்பு வசதிகள் போன்றவைகளை, உலக சந்தைக்குள் நுழைவதற்காக அமைத்துக் கொடுப்பது இன்றியமையாதாகிறது.

தமிழகத்தில் சிறுதொழில்கள் வளர்ச்சிக்கு சேவை செய்து வரும் சிட்கோ தற்போது டான்ஸ்டியா—எப்.என்.எப் (TANSTIA-FNF) சேவை மையத்துடன் இணைந்து சிறுதொழிற்கூடங்களுக்கான ஏற்றுமதி உதவித் திட்டத்தை இன்டர்நெட் மூலம் துவக்கியுள்ளது.

சிறுதொழில் நிறுவனங்களுக்கு ஏற்றுமதி வாய்ப்பினை அறிய உதவி செய்வதே ஆகும். இதன் செயல்கள் :

"இன்டர்நெட்" வசதியில் ஒவ்வொரு சிறுதொழில் நிறுவனத்தினையும் நிலை நிறுத்துதல்.



சிறுதொழில் நிறுவனங்களின் முழுவிவரங்களும் மற்றும் அவை தயாரிக்கும் பொருட்களின் விவரங்களும் 'வெப்' (WEB) வசதியில் நிலை நிறுத்தி உலக சந்தைக்கு கிடைக்க வழி செய்தல்.

உறுப்பினர் நிறுவனங்களுக்கு மின்னியல் தபால் சேவை மூலம் அயல் நாட்டின் உள்ள வாங்கும் திறன் கொண்ட வர்த்தகர்களுடன் தகவல் பரிமாற்றம் செய்ய உதவுதல்.

'வெப்' இடத்தில் (WEBSITE) பார்வையிடும் தகுதியான வெளிநாட்டு வர்த்தகர்களுக்கும் சிறுதொழில் நிறுவனங்களுக்கும் இடையே தொடர்பு கொள்ள உதவுதல்.

ஏற்றுமதி ஆணைகளை தகவல் தொடர்பு வழியாக பெற வழி செய்தல்.

சுங்கத்துறை (CUSTOMS) மற்றும் ரிசர்வ் வங்கியின் ஏற்றுமதி தொடர்பான கட்டுப்பாடு விதிகளை நிறைவேற்றும் வழி அறிய உதவி செய்தல்.

ஏற்றுமதி அபிவிருத்திக்குத் தேவையான ஆலோசனைகள் வழங்குதல்.

ஏற்றுமதி வணிகத்திற்குத் தேவையான ஆலோசனைகளை வழங்குவதோடு, உலக வர்த்தகப் பொருட்காட்சிகளில் கலந்துக் கொள்ள உதவி செய்தல்.

உறுப்பினர் நிறுவனங்களுக்கு தேவையான நிதி ஆதாரங்களை வணிக வங்கிகள் மற்றும் வளர்ச்சி நிதி நிறுவனங்களிடமிருந்து பெறுவதற்கு ஆலோசனை வழங்குதல்.

இத்திட்டத்தின் கீழ் உதவிகள் நியாயமான கட்டணத்திற்குச் சிறுதொழிற்கூடங்களுக்கு வழங்கப்படும்.

**பில் டிஸ்கவுண்டிங் உதவி**

சிறிய மற்றும் குறுந்தொழில்கள், அரசு நிறுவனங்களுக்கு தேவையான பொருட்களை விநியோகம் செய்த பின் அந்த பொருட்களுக்கான விலைப்பட்டியல் தொகையை அந்தந்த நிறுவனங்களிடமிருந்து பெற தாமதம் ஏற்படுவதால் **45** நாட்களிலிருந்து **90** நாட்கள் வரை பில் டிஸ்கவுண்டிங் உதவி மூலம் சிட்கோ நிறுவனமே அந்த தொகையை சிறுதொழில் நிறுவனங்களுக்கு கடனாக கொடுத்து உதவுகிறது.

**தொழிற்திறமை வளர்ப்பு மையம்**

சிறிய மற்றும் குறுந்தொழில்களுக்கு தேவையான தொழிலாளர்களின் திறமைகளை வளர்க்க தேவையான பயிற்சிகளை அளிக்க சிட்கோ தொழிற்பேட்டைகளில், தொழிற்திறமை வளர்ப்பு மையங்களை உருவாக்க சிட்கோ முயற்சிகளை எடுத்து வருகிறது.

**வழிகாட்டி மையம்**

புதிதாக தொழில் தொடங்க முனைவோர்களுக்கு உதவும் வகையில் வழிகாட்டி மையம் ஒன்று சிட்கோ ஏற்படுத்தியிருக்கிறது. இதன் மூலம் தொழில் முனைவோர்களுக்கு தேவையான சம்பந்தப்பட்ட அரசு நிறுவனங்களிடமிருந்து பெறவேண்டிய அனுமதிகளை நியாயமான கட்டணத்தில் பெற்றுத் தருகிறது.


**இதுபோன்ற சீரிய செயல்களால் 'சிட்கோ' நிறுவனம் சிறுதொழில் வளர்ச்சிக்கு பெரிதும் உதவி வருகிறது.**

★ ★ ★

பேரம் பேசி சாத்துக்குடி வாங்கி விட்டான். மாலை நேரப் பேருந்துப் பயணம் பாலனுக்கு ஒன்றும் புதிதல்ல. அலுவலகத்தில் பணி மிருந்து விடும்போது வழக்கமான ஆறேகால் ரயிலைத் தவறவிட்டு, இரு பஸ்கள் மாறி புறநகரத்தின் உள்ளே புகுந்து இருட்டிய பின்பே கசங்கிய நிலையில் வீடு திரும்ப நேர்வதுண்டு.

காலை ஏழு ஐம்பது ரயிலைப் பிடித்தால்தான் பீச் ஸ்டேஷனில் இறங்கி...மண்ணடி நெரிசலுக்குள் புகுந்து வந்து தனது அலுவலகப் பதிவேட்டில் கையெழுத்திட முடியும். மறைமலை நகரின் கடைசியில் உள்ள எழுநூறு ரூபாய் வாடகை வீட்டிலிருந்து நகருக்குள் எங்காவது அடுக்குமாடிக் குடியிருப்புகளில் புகுந்து விட ஆசைதான். தனியார் நிறுவன சம்பளத்தில் எட்டாக் கனியாகவே தொங்குகிறது பாலனின் ஃப்ளாட் கனவு.

மானேஜரின் தந்தை ஹார்ட் அட்டாக்கில் ஆஸ்பத்திரியில் படுத்திருந்த போதே போய்ப் பார்க்க நினைத்திருந்தான். கண்ணாடி அறையில் பார்வையாளர் தவிர்க்கப்பட்ட நிலையில் இவன் செல்வதைத் தவிர்த்தான். வீட்டுக்குக் கூட்டி வந்துவிட்டதாகப் ப்யூன் கேசவன் சொல்லக் கேட்டு இப்போது கிளம்பியிருக்கிறான்.



– அகிலன் கண்ணன்

மரங்களடர்ந்த பாதையில் சினிமாவில் மட்டுமே பார்த்துப் பிரம்மித்திருக்கிற மாதிரியில் ஃப்ளாட்டினுள் நுழையவே பாலன் தயங்கினான். நுழைவாயிலின் இடது பக்க ஓரமாக பொதுத் தொலைபேசி பூத் வடிவில் அமைந்திருந்த கூர்க்காவின் இருப்பிடம் காலியாயிருந்தது. சுற்று முற்றும் பார்த்தான்; திரையரங்க வாசல் போல் வரிசை வரிசையாக இரு சக்கர வாகனங்கள். வலது பக்கக் காம்பவுண்டுச் சுவரை ஒட்டி வெள்ளை, சிவப்பு மாருதி முயல்கள், அண்ணாந்து பார்க்க, மாலைச் சூரியன் ஜன்னல் கண்ணாடிகளிலும் சுவரில் பதிக்கப்பட்டிருந்த பளிங்குக் கற்களிலும் சிவந்து பிரதிபலித்தான்.

காலை–மாலை நசுங்கிய ரயில் பயணத்தின் பின்னே சுமார் ஒரு கிலோமீட்டர் நடந்து சென்று வீட்டையும் தினசரிக் களைப்பு நீங்கிட, நகருக்குள் குடியிருப்புத் தனக்கு வாய்த்துவிடாதா என ஏக்கப் பெருமூச்சு எழுந்தது பாலனுள்.

வலது பக்கப் பாதை வழியே மூன்றாம் எண் ஃப்ளாட்டை அடைகிறான். வாசற் கதவு தாளிடப்படாது திறந்துள்ளது. சிகப்புக் கம்பளமும் பளபளத்த பளிங்குத் தரையும் வேலைப்பாடுகள் நிறைந்த சோபா செட்களும் பாலனை மிரள வைத்தன. அழைப்பு மணியை அடிக்கத் தயங்கி, திறந்திருந்த கதவை விரலால் மெதுவாய்த் தட்டி ஒலி எழுப்பினான் பாலன்.

சமையலறையிலிருந்து வெளிப்பட்ட பெண் 'யார்?' எனக் கேட்க, பாலன் தன்னை அறிமுகப்படுத்திக் கொண்டான்.

"வாங்க! அந்த ரூமிலதான் இருக்கார். மாமாவுக்கு மருந்து குடுத்திட்டுருக்கார்'' அறையைக் காண்பித்தார் அந்தப் பெண்மணி. செருப்பை வராந்தாவிலேயே கழட்டிப் போட்டுவிட்டு, உள் வாங்கும் மிதியடியில் கால் பதித்து மெது மெதுவாக நடந்து அறையினுள் நுழைந்தான் பாலன். அறுபது வயது மதிக்கத்தக்க பெரியவர் கட்டிலில் சரிந்து படுத்திருந்தார். உறக்கம். அருகே செய்தித் தாள், பத்திரிகைகள், மறுபக்கம் சிறிய மேஜையின் மீது மருந்துகள். ஏதேச்சையாகத் திரும்பிய மேனேஜர் பாலனை அன்புடன் வரவேற்றார்.

"வாங்க பாலு! உக்காருங்க!"

"பரவால்லை சார். அப்பாவைப் பார்த்துட்டுப் போகலாம்னு... ஆஸ்பத்திரிக்கே வரனும்னு. ஐ.சி.ல இருந்ததால தொந்தரவு பண்ண வேணாம்னு... இப்ப அப்பா எப்பிடி இருக்காங்க?"

"தேவலை. நல்ல வேளையாக சரியான நேரத்துல அட்மிட் பண்ணீட்டதால கடவுள் காப்பாத்தீட்டாரு. இன்னும் ஆறு மாசத்துக்குக் கம்ப்ளீட் ரெஸ்டில் இருக்கணும்னுருக்கார் டாக்டர். எந்தவிதமான அதிர்ச்சியும் அவுங்களைப் பாதிக்கக் கூடாதுன்னு

கவனமாப் பாத்துக்கிட்டுருக்கோம். சத்தம் அதிகம் கேட்காம கொஞ்சம் நிம்மதியா இருக்கணும்னு சொன்னாங்க. அதனால்தான் காலிங்பெல் சப்தம் கூடத் தொந்தரவு பண்ணிடக் கூடாதுன்னு பகல்ல வாசக் கதவைக் கூடப் பூட்றதில்ல.''

''ஆமா. ஹார்ட் அட்டாக்குன்னா முதல்ல முழு ஓய்வுதான் முக்கியம்னு சொல்வாங்க. அப்பாவுக்கு வேற ஏதாவது ரத்தக் கொதிப்பு, சர்க்கரைன்னு...''

''நோ, நோ, அதெல்லாம் இல்ல. ஆனா பொதுவாவே அப்பாவுக்குக் கொஞ்சம் பலவீனமான ஹார்ட். பலமா சத்தம் கேட்டா, வேகமா நடந்தா, பளு தூக்கினா படபடத்துடும்''.

அவரது பேச்சைக் கேட்க முடியாதபடி வாசலிலிருந்து திடீரென காரின் ஹாரன் ஒலி




எழுகிறது. மேனேஜர் ''சே!'' என்று அலுத்துக்கொண்டே பதட்டத்துடன் ஓடிச்சென்று ஜன்னலைச் சாத்தினார். அங்கிருந்தபடியே அப்பாவைப் பார்த்தார். அவர் மெதுவாகப் புரண்டு படுத்தார், லேசாகக் கண்விழித்தார்.

மேனேஜர் ஓடி வந்தார். ''தண்ணி குடிக்கிறீங்களாப்பா?''

வேண்டாமெனத் தலையாட்டியபடியே கண் அயர்ந்தார் பெரியவர்.

காம்பவுண்டுக்குள் எழுந்த கார் ஹாரன் ஒலி நிற்கவில்லை. விட்டு, விட்டு எழுந்தது. மூடிய ஜன்னலையும் தாண்டி அறையினுள் பூதமாகப் பரவியது, ஒலி.

மேனேஜர் எழுந்து சென்று அறையின் அடுத்த ஜன்னலையும் மூடினார். ஒலி குறையவில்லை. பக்கத்து அறையிலிருந்து வெளிப்பட்ட இருபது வயதுப் பையன் ஒருவன் வீட்டிலிருந்து வேகமாக வெளியேறினான்.

காரின் அழைப்பொலி நிற்கவில்லை.

மேனேஜர் திரும்பி வந்து அறையின் கதவையும் மூடினார்.

வெளியே கார்க் கதவு திறந்து மூடும் ஒலி எழுந்தது.

''நீ யார்டா என்னைச் சத்தம் போடாதேன்னு சொல்ல?''

''வீட்ல ஹார்ட் பேஷண்ட் இருக்காங்க. காம்பவுண்டுக்குள் இப்பிடி கார் ஹாரன் சத்தத்தை அலறவிடாதிங்கன்னு தெனம் உங்கிட்ட சொல்றேன்!''

''நான் ட்ரைவர். இது எங்க வண்டி. எங்க கார் ஹாரனை நான் அழுத்துறேன்!''

'ஒனக்கு மனுஷ பாஷை புரியாது!''

யாரோ யாரையோ அறையும் ஒலி.

கார் ஹாரன் சப்தம் நின்று விட்டது.

தெளிவாகப் புரியாதபடி கலவரமான உரத்த குரலில் கத்தல்கள்.

''நீ எப்பிடிடா என்னைக் கை நீட்டி அடிக்கலாம்?''

''சொன்னாக் கேக்கலைன்னா இப்படித்தான்.''

''ராஸ்கல்...திமிருடா. காசுத் திமிரு. உன்னைப் பொரட்டி எடுக்கலைன்னா நான் ரத்னம் இல்லைடா!''

''விடு. விட்ரு ரத்னம்..சின்னப் பையன்...''

''என்ன பண்ணுவ? உங்க வீட்ல இப்படி யாராவது கஷ்டப்பட்டா அப்பத் தெரியும் உனக்கு?''

மானேஜர் புரியாதவராகப் பாய்ந்து ஜன்னலைத் திறந்து பார்த்தார். திகைத்துத் திரும்பிப் பார்த்தார்.

இவனைப் பார்த்து, ''ஒரு நிமிஷம் அப்பாவைப் பாத்துக்குங்க!'' என்று பதறியபடி கலவரத்துடன் வாசலுக்கு ஓடினார்.

கலவையாகக் கூச்சல், கூக்குரல்.

பாலன் படுக்கையிலிருக்கும் முதியவரைப் பார்த்தான். மெதுவாக ஜன்னலருகே சென்று வெளியே பார்த்தான்.

வாசலில் தள்ளு வண்டியில் துணி அயர்ன் செய்பவர். ஆட்டோ டிரைவர், இவர்களின் நடுவே வெள்ளுடுப்பு டிரைவர்.

மேனேஜரின் மகன் தனியே...

"என்னைக் கை நீட்டி அடிச்சுட்டான்ல...என்ன பண்றேன் பாரு இப்ப இவனை..."

மேனேஜர் பையன் மீது பாய வந்தான். மேலும் இருவர் மேனேஜர் பையனின் காலரைப் பிடித்து இழுத்துத் தள்ளினர்.

"சேகர்! உள்ள போடா!" மேனேஜர் தம் மகனைக் காப்பாற்றக் குறுக்கே பாய்ந்தார். அவரது மனைவி சேகரின் கையைப் பிடித்து இழுத்தார்.

டிரைவர் பக்கம் சம்பந்தப்பட்டவர், சம்பந்தப்படாதவர் எனப் பலர்.

பாலனுக்கு உள்ளே இருப்புக் கொள்ளவில்லை. தவித்தது மனம்.

"டிரைவர்ங்கறதுனாலதானடா என்னை அடிச்சுட்ட? நீ இனிமே எப்பிடி இந்தத் தெருவில நடக்கப் போறேன்னு பாத்துட்றேன்!"



ஆட்டோ டிரைவர் ஒருவர் பையன் மீது பாய்ந்தார்.

பாலன், தூங்கும் நோயாளிப் பெரியவரைப் பார்த்துவிட்டு வாசலுக்கு விரைந்தான்.

அந்த அடுக்கு மாடி மாளிகையின் ஜன்னல்கள் எங்கும் மனித முகங்கள்; வராந்தாவெங்கும் முகங்கள்.

போலீஸ் காவலர் ஒருவர் சைக்கிளில் வந்து தடியுடன் இறங்கினார்.

"என்னப்பா கலாட்டா இங்க? ஒரு பையன் டிரைவர் ஒருத்தர அடிச்சுட்டானாமே, யாரது?"

"இதோ இந்தப் பையன்தான். டிரைவரைப் போட்டு அடிச்சுப்புட்டான் சார்!"

கோரஸாகக் குரல்கள்.

மேனேஜர் பதறினார். "இந்த ட்ரைவர் சொல்லச் சொல்லக் கேக்காம கார் ஹாரனை அடிச்சுக்கிட்டே இருந்தாரு. உள்ள ஹார்ட் பேஷண்ட் படுத்திருக் காருன்னு சொல்லியும் இவரு சத்தம் குடுத்துகிட்டே யிருந்தாரு".

"அதுக்காக? அடிச்சுட்றதா? சட்டத்த நீங்களே கைல எடுத்துக்கிறதா? வா. ஸ்டேஷனுக்கு... கம்ப்ளெய்ண்ட் குடுத்திருக்காங்க. விசாரிக்கணும் வா!"

"நாந்தான் சொல்றேனே...விட்ருங்க?"

மேனேஜர் கோபமாகக் கத்த சேகர் நிதானப் படுத்தினான்.

"அப்பா! நீங்க அம்மாவைக் கூட்டிக்கிட்டு உள்ள போங்க. வாங்க சார் போலாம்; ஸ்டேஷனுக்கு!"

சேகர் தெருவிலிறங்கி நடந்தான்.

மேனேஜர் பாலுவின் கைப்பிடித்து உள்ளே வந்தார். மேனேஜரின் மனைவி கண் கலங்கிப் பின் தொடர்ந்தார்.

"ஏங்க, நீங்க போயி கூட்டிட்டு வந்துடுங்க. பாவம் சேகர்!"

"பேசாம உள்ள வா!"

வீட்டினுள் வந்து, தந்தையின் அறையினுள் நுழைந்து, உறங்கும் அப்பாவைப் பார்த்தபடியே பாலனிடம் பேசினார் மேனேஜர்.

"பாலு! நீங்க கொஞ்ச நேரம் இங்க அப்பாக்கிட்டயிருந்து பாத்துக்குங்களேன். நான் போயி சேகரைக் கூட்டிக்கிட்டு வந்துர்றேன்" என்றவர் தம் மனைவியிடம் "ஜானகி! டெலிபோன் புக்கையும் என் பர்ஸையும் குடு!" என்றார்.

"நீங்க போய்ட்டு வாங்க சார். நான் பாத்துக்குறேன்!" பாலு பதில் சொன்னான்.

ஈரக் கையைப் புடவைத் தலைப்பில் துடைத்தபடியே ஓடிவந்து டைரியையும் பர்ஸையும் எடுத்துத் தந்தார் ஜானகி.

அறையின் ஜன்னலைத் திறந்துவிட்டான் பாலு.

கார் டிரைவர்கள், ஆட்டோ ட்ரைவர் என ஒரு சிறு படையே போலீஸ் காவலர் பின்னே டிரைவருடன் சென்றது.

முன் செல்லும் கூட்டத்தின் பின்னே, தனியராய் நடந்தார் மேனேஜர்.

அடுக்கு மாளிகை ஆமை மனிதர்கள் தங்கள் முகங்களை அழகான ஓடுகளுக்குள் உள்ளிழுத்துக் கொண்டனர்.

உள்ளிறங்க மறுக்கும் எச்சிலை வரண்ட தொண்டையில் கஷ்டப்பட்டு விழுங்கினான் பாலு.

தலையைச் சிலிர்த்துக் கொண்டு தன் அடுக்கு மாடிக் கனவை உதறிக் கலைத்தபின் இருட்டிய வானத்தை அண்ணாந்து பார்த்தான் பாலு. தொலைவில் ஒற்றை நட்சத்திரம் சிரித்தபடி கண் சிமிட்டியது.

– *'நெஞ்சோடு' சிறுகதைத் தொகுப்பிலிருந்து...*

# இன்றைய சாதனை நாளைய சரித்திரம்



எஸ்.நாகராஜன்

விரிந்திருக்கும் பாரதத்தில் நிறைந்திருக்கும் கிராமங்களில்
அரும்பணிகள் பலசெய்து உள்ளத்தில் இடம்கொண்டாய்
திருவிளக்கே நீயிருந்தால் தெருவெங்கும் ஒளிவீசும்.
வருங்காலம் உனக்கொரு வாழ்த்துப்பா வடித்துவைக்கும்.

சாலைகளைச் சீராக்கிப் பாலங்கள் பலகட்டி,
ஆலயங்கள் பழுதுபார்த்து, அகல்விளக்கை ஏற்றி வைப்பாய்
பாலகளைப் படிக்கவைத்து, முதியவரை எழுதவைத்து,
ஏழையினைச் சிரிக்கவைத்து இறைவனையும் கண்டிடுவாய்.

ஏரிகுளம் தூர்வாரி, வான்மாரி நீர்சேர்த்து,
சேரிகளில் பணிசெய்து, எரிபொருளைச் சேமித்து,
வாரிசூழ் உலகமேலாம் அமைதியெனும் பயிர்வளர்க்க
போராடும் நாட்டிலெலாம் வெண்புறாவாய் வலம்வருவாய்.

நீதியதை நிலைநாட்ட மனுநீதி நாள்தருவாய்.
சாதிமதம் பாராமல் சமத்துவத்தை வளர்த்திடுவாய்.
வேதமதில் ஐந்தாய்நீ கல்விப்பணி ஆற்றிடுவாய்
பேதியம்மை ஒழிந்திடவே சுகாதாரம் பேணிடுவாய்.

புதர்களையும் களைந்துநல்ல புதுப்பாதை அமைக்கின்றாய்
இதமான மொழிபேசி மனிதநேயம் வளர்க்கின்றாய்
முதியோர்க்குக் கால்மூன்றாய் முதலுதவி செய்கின்றாய்
மதுபோதை ஒழித்துநல்ல புதுவாழ்வை நீதருவாய்.

முடமாகிப் போனவர்க்கு முதுகெலும்பு நீதானே
திடமான நம்பிக்கை உணவூட்டி உயிர்வளர்ப்பாய்

அடக்கத்தின் மறுஉருவே! ஆக்கத்தின் உயிர்வடிவே!
விடப்பாம்பும் உன்பணியில் குணம்மறந்து துணைசெய்யும்.

கண்தானம் செய்கின்றாய், நுகர்வோரைக் காக்கின்றாய்
மண்ணரிப்பைத் தடுத்திடவே மரங்களையும் நடுகின்றாய்
பெண் கொடுமை தீர்க்கின்றாய், வன்முறையை ஒழிக்கின்றாய்
இன்னுயிரைக் காத்திடவே செங்குருதி தருகின்றாய்.

பள்ளிகளைப் புதுப்பித்து, மைதானம் சீராக்கி
முள்வேலி அமைப்பதுடன், தண்ணீரைச் சேமிப்பாய்
கொள்ளைநோய் தீர்ந்திடவே அருமருந்தை வழங்கிட்டாய்
பள்ளமேடு சமன்செய்து பயிர்வளர்க்கத் துணைசெய்வாய்.

சிசுவதையைத் தடுப்பதுடன் சிறுகுடும்பம் பேணிடுவாய்
பசுவதையை எதிர்த்திடுவாய். கொசு ஒழிக்க வழிசெய்வாய்
பசிகளையச் சுயதொழிலைப் பாரெங்கும் தொடங்கிவைப்பாய்
அசுத்தங்கள் அகற்றி நல்ல அரும்பணிகள் செய்திடுவாய்.

கால்நடையைக் காப்பதுடன் பால்வளத்தைப் பெருக்கிடுவாய்
வாழ்வதனை வளமாக்க சிக்கனத்தைப் பேணிடுவாய்
சூழ்ந்திருக்கும் குப்பையிலே எரிசக்தி பெற்றிடுவாய்
தோல்கருக்க உழைப்பவனை வாழ்வாங்கு வாழவைப்பாய்.

எரிசாண வாயுவுடன் எலிஒழிப்புத் திட்டமுண்டு
அரிவையார்க்குச் சுயவேலை; ஆடவர்க்கு நம்பிக்கை
உறிஞ்சுகின்ற குழிகளுடன், புகையில்லா அடுப்புமுண்டு
விரிவான தொலைநோக்குத் திட்டங்கள் பலவுண்டு. ★

# மனிதக் கழிவை மனிதன் சுமக்கும் அவலம் அகற்றப்படும்; கழிவு சுமக்கிறவர்களுக்கு விரைவில் மாற்று வேலை

**சட்டப்பேரவையில் முதலமைச்சர் கலைஞர் அறிவிப்பு**

ஆளுநர் உரையின் மீது இதுவரையிலே இந்த அவையில் 38 உறுப்பினர்கள் ஏறத்தாழ 9 மணி நேரம் விவாதம் நடத்தி, அவர்கள் எழுப்பியுள்ள பிரச்சினைகளின் அடிப்படையில், எல்லாவற்றுக்கும் அல்ல, என்னுடைய கருத்துக்கள் சிலவற்றை இந்த அவையிலே பதிய வைக்க விரும்புகிறேன்.

இந்த உரை குறித்து இங்கே கருத்துக்களைச் சொன்ன எதிர்க்கட்சித் தலைவர் அவர்களும் மற்றும் பல்வேறு கட்சிகளின் தலைவர்களும், உறுப்பினர்களும் எடுத்துச் சொன்ன செய்திகளை இந்த அரசு, தான் கொண்டுள்ள பண்பாட்டின்படி நிச்சயமாக அலட்சியப்படுத்தாது என்பதைத் தெளிவாக முதலில் தெரிவித்துக் கொள்கிறேன். அவற்றையெல்லாம் தொகுத்து, இங்கே திருநாவுக்கரசு அவர்கள் எடுத்துக் காட்டியதைப் போல, வரவிருக்கின்ற நிதிநிலை அறிக்கைக்குத் தேவையான ஆலோசனைகள் சொல்லப்பட்டிருக்கின்றன என்பதை உணர்ந்து அதற்கேற்ப இந்த அரசு தன்னுடைய செயல்முறைகளை வகுக்கும், இயன்ற வரையிலே நிதிநிலை அறிக்கையைத் தயாரிக்கும் என்பதையும் நான் முதலிலேயே தெளிவுபடுத்த விரும்புகிறேன். பாராட்ட வேண்டியவைகளைப் பாராட்டி, இருக்கின்ற குறைகளைச் சுட்டிக்காட்டி, அவைகளையெல்லாம் தீர்த்துவைக்க வேண்டுமென்ற முயற்சியிலே ஆக்கபூர்வமாக பல உரைகள் இங்கே நிகழ்த்தப்பட்டிருக்கின்றன.

### கோலப்பன் குழுவின் அறிக்கை இந்தக் கூட்டத் தொடரில் வைக்கப்படும்

எடுத்த எடுப்பில், பொத்தாம் பொதுவாக இது என்ன உரையா என்று கேட்கின்ற அளவில் உள்ளேயும் சிலர், வெளியேயும் சிலர் இந்த உரை பற்றிய கருத்துக்களை வெளியிட்டிருக்கிறார்கள். ஆளுநர் உரை வெறும் காகிதம், இது கவைக்கு உதவாது என்றெல்லாம்கூட கருத்துக்கள் சொல்லப்பட்டுள்ளன. பொறுப்பாகச் சொல்லப்பட்ட கருத்துக்கள் அல்ல. ஆனால், பொறுப்பிலே இருந்தவர்களால் சொல்லப்பட்ட கருத்துக்கள்.

இந்த உரையிலேதான், நீண்ட காலமாக நம்முடைய இந்திய கம்யூனிஸ்ட் கட்சி நண்பர்களும், மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி நண்பர்களும் வலியுறுத்தி வருகின்ற, விவசாயிகளுடைய குறைந்தபட்ச ஊதியம் குறித்த கோலப்பன் குழுவின் அறிக்கை இந்தக் கூட்டத் தொடரிலே அறிவிக்கப்படும், வைக்கப்படும் என்று சொல்லப்பட்டிருக்கிறது.

மிக முக்கியமான சமுதாயத் தொண்டாகக் கருதப்படுகின்ற மனிதக் கழிவுகளை மனிதன் எடுக்கவும், சுமக்கவுமான இழிவு நிறைந்த நிலையை அகற்ற சட்டமுன்வடிவு இந்தக் கூட்டத் தொடரில் கொண்டுவரப்படும் என்று அறிவிக்கப் பட்டிருக்கின்றது.



ஒரு இலட்சத்து ஐம்பதாயிரம் பேருக்கு வேலைவாய்ப்பை உருவாக்கவும், பள்ளிகளில் கல்வி பயின்று வெளியே வரும் மாணவர்கள் கணினி அறிவு பெற்றவர்களாக இருக்கவும் இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளது. நம்முடைய எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் இங்கே குறிப்பிட்டார்கள். இதனைக் கணினி ஆண்டாகவே கொண்டு இந்த அரசு செயல்படுகிறது என்பதைக் குறிப்பிட்டு, அதற்கேற்ப அண்மையில் வெற்றிகரமாக நடைபெற்ற தமிழ் இணைய மாநாடு குறித்து, பாராட்டும், வாழ்த்தும் அவர்கள் கூறியிருக்கிறார்கள். ஒன்றே ஒன்றுதான். எல்லா உறுப்பினர்களுக்கும் கணினி வழங்க வேண்டும் என்பதுதான் சற்று சிக்கலான விஷயம். ஏனென்றால், கணினியும் வழங்கி, கற்றுத் தருகின்ற பயிற்சியும் அவர்களுக்குக் கொடுத்து, அதைப் பொறுமையோடு நம்முடைய சட்டப் பேரவை உறுப்பினர்கள் இருந்து கற்றுக் கொள்வார்களானால், நிச்சயமாக அடுத்தத் தேர்தலிலே, அவர்களுடைய தொகுதிகளிலே அவர்கள் வெற்றி பெறுவார்கள் என்பதை இப்போதே என்னால் உறுதியாகக் கூறமுடியும். ஏனென்றால், அவ்வளவு அக்கறை கணினியிலே அவர்களுக்கு வருமேயானால், எதிர்க்கட்சித் தலைவரைவிட நான் இரட்டிப்பு மகிழ்ச்சி அடைவேன் என்பதை இங்கே தெரிவித்துக் கொள்கிறேன்.

**கணினிக்கான முயற்சியை முதலில் தொடங்கி வெற்றிகண்ட மாநிலம் தமிழகம்**

தமிழ் வரி வடிவங்களை ஒரே சீராகத் தொகுத்து தரப்படுவதற்கும், தமிழ்க் கணினி விசைப் பலகைகளைத் தரப்படுத்துவதற்கும் 'தமிழ் இணையம் 99' என்று நடத்தப்பட்டு இந்த உலகத்தில் உள்ள பல்வேறு நாடுகளில் தமிழர்கள் வாழுகின்ற நாடுகளிலிருந்து – வந்த தமிழ் மேதைகள் அரிய கருத்துக்களை எடுத்துச் சொல்லி– ஒன்றுபட்ட கருத்து உருவாகுமா என்று எதிர்பார்த்த நிலையில், ஒன்றுபட்ட கருத்து உருவாகி – இண்டர்நெட் என்று சொல்லப்படும் தமிழ் இணையத்தில் இனிமேல் வேறு மொழிகள் இடம் பெற்றாலுங்கூட தமிழ்மொழி தலையாய இடம் பெறும் – உலகத்தில் எந்தக் கோடியில் இருக்கின்ற தமிழனும் தமிழ் வாயிலாக செய்திகளை அறிந்து கொள்ள முடியும், தகவல்களைப் பெறமுடியும் என்ற நிலையை நாம் உருவாக்க இருக்கிறோம்.

இந்தியாவிலேயே இந்த முயற்சியை முதல் முதலாகத் தொடங்கி அதிலே வெற்றி காணவிருப்பது நம்முடைய தமிழ்நாடுதான் என்பதை எண்ணும்போது நாமனைவரும் பெருமிதம் கொள்ளலாம்.

தகவல் தொடர்பு என்பது இன்றைக்கு எந்த அளவுக்கு வளர்ந்திருக்கிறது என்றால், ஒரு காலத்தில் 'ஆப்ரகாம் லிங்கன்' கொல்லப்பட்ட செய்தி 5 நாட்கள் கழித்துதான் இலண்டனுக்கே தெரிய வந்தது என்பார்கள். அப்போது தந்தி என்ற சாதனம் இருந்தும்கூட லிங்கன் கொல்லப்பட்ட செய்தி 5 நாட்கள் கழித்துதான் இலண்டனுக்கு வந்து சேர்ந்ததாகச் சொல்லுவார்கள். ஆனால், இன்றைக்கு அப்படி அல்ல. ஆஸ்திரேலியாவில் ஆடுகின்ற கிரிக்கெட் ஆட்டத்தில் இப்போது யார் அவுட் ஆனார்கள் என்பதை உடனடியாக, நேரிலேயே தெரிந்து கொள்ளுகின்ற அளவுக்கு தகவல் தொடர்பு பெருகியிருக்கின்ற விஞ்ஞான உலகத்திலே நாம் வாழ்ந்து கொண்டிருக்கின்றோம். இது மேலும் வளர்ந்து உலகம் என்பது ஒரு சிறிய குக்கிராமம், குக்கிராமத்தைவிட இன்னும் சிறிய அளவுக்கு சுருங்கிவிட்ட ஒரு வடிவம் என்ற நிலையை எதிர்காலத்திலே இந்தத் தகவல் தொடர்பு உருவாக்க இருக்கிறது. அந்த நேரத்திலே நம்முடைய தமிழ் அதிலே ஆக்கம் பெற வேண்டும், இடம் பெற வேண்டும் என்பதற்காகத்தான் இந்தப் பெருமுயற்சியிலே நாம் ஈடுபட்டிருக்கிறோம்.


**எல்லோராலும் பாராட்டப்பட்ட மகளிர்க்கான சிறு வணிகக் கடன் திட்டம்**

இந்த உரையிலே மகளிருக்கான சிறு வணிகக் கடன் திட்டம் ஒன்று குறிப்பிடப்பட்டிருக்கிறது. அது ஒரு வரியில் குறிப்பிடப்பட்டிருந்தாலும் அதனுடைய விளைவு, பயன் மகத்தானதாக எதிர்காலத்திலே இருக்கத்தான் போகிறது. மகளிர் தாங்கள் நடத்த விரும்புகின்ற சிறுசிறு தொழில்களுக்காகக் கடன் வாங்குவதற்கு வங்கிகளுக்குச் சென்றால், அதிக வட்டி தர வேண்டிய சூழ்நிலை இருக்கிறது. அல்லது, யாராவது வியாபாரிகளிடத்திலே, வட்டிக்கடைக் காரர்களிடத்திலே சென்று கடன் பெற்றால், அதற்கு அளவுக்கு மீறிய வட்டி தர வேண்டியிருக்கிறது. இதையெல்லாம் கணக்கிலே கொண்டு, கூட்டுறவு வங்கிகள் மூலமாக, ஒரு ரூபாய் வட்டிக்கு, 500 ரூபாய் முதல் 2,000, 3,000 ரூபாய் வரை சிறு கடைகள், காய்கறி வியாபாரம் போன்ற சிறிய வியாபாரங்களில் ஈடுபடுகின்ற மகளிருக்கு கடன் தருவதற்கான ஒரு வழிவகை உருவாக்கப்பட்டு, சென்னை மாநகரத்திலே, முதலில் சேப்பாக்கத்திலே இது தொடங்கப்பட்டு, அண்ணா நகரில் அது தொடர்ந்து, சென்னை மாநகரம் முழுவதும் இந்த சிறு வணிகக் கடன் திட்டம் மகளிருக்காக பரப்பப்பட இருக்கிறது. மாநகரங்களுக்கு மாத்திரமல்லாமல், எல்லா நகரங்களிலும் இந்தத் திட்டத்தை நாம் பரவலாக நடத்த இருக்கிறோம். நகரங்களில் முடிவுற்ற பிறகு, கிராமங்களிலேகூட இந்தத் திட்டத்தை விரிவாக்குவதற்கு அரசு முயற்சிகளை மேற்கொண்டிருக்கிறது. எனவே, இந்தத் திட்டம் மகத்தானதாக, எல்லோராலும் பாராட்டப்படக்கூடியதாக, இந்தியாவிலே முதன்முதலாக தமிழகத்திலே உருவாக்கப்பட்ட திட்டமாக அமையும் என்பதில் எனக்குச் சிறிதும் சந்தேகம் இல்லை.

அதைப்போல, தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டுத் திட்டம், ஏற்கனவே இருக்கின்ற மாவட்டங்கள் அன்னியில் மேலும் ஏழு மாவட்டங்களுக்கு விரிவாக்கப்பட இருக்கிறது. பத்தாயிரம் ஹெக்டேர் பரப்பளவில் தரிசு நில மேம்பாட்டுத் திட்டம் இந்த உரையிலேதான் குறிப்பிடப்பட்டு இருக்கிறது. விரைவுபடுத்தப்பட்ட தோட்டக்கலைப் பயிர் மேம்பாட்டுத் திட்டம் இந்த உரையிலே குறிப்பிடப்பட்டிருக்கிறது. காவிரி கழிமுகப் பகுதிகளிலும் மற்றும் பல்வேறு மாவட்டங்களிலும் தூர்வாரும் பணிக்கு அதிக நிதி, எதிர்காலத்திலே ஒதுக்கப்படும் என்றும் இந்த உரை கூறுகின்றது. சென்னை தரமணியில் 320 கோடி ரூபாய் செலவில் உலகத் தரத்திலான கணினி மென்பொருள் பூங்கா Software Park அமைகிறது என்ற செய்தியையும் இந்த உரைதான் சுட்டிக் காட்டியிருக்கின்றது.

**5ஆம் இடத்தில் இருந்த தமிழகம் தொழில் வளர்ச்சியில் 2ஆம் இடத்திற்கு உயர்வு**

தொழில் வளர்ச்சியில் 1996 ஏப்ரலில் ஐந்தாம் இடத்தில் இருந்த தமிழ்நாடு, 1998 அக்டோபரில் இரண்டாம் இடத்திற்கு முன்னேறி இருக்கின்ற



செய்தியையும் இந்த உரைதான் விளக்கியிருக்கிறது. ஆயிரக்கணக்கான மெகாவாட் மின்சார உற்பத்திக்கான திட்டங்களை பற்றிய குறிப்புகளும் இந்த உரையிலே இடம் பெற்றிருக்கிறது. நகர்ப்பகுதிகளில் அடிப்படைக் கட்டமைப்பு வசதிக்கும், நகர்ப்பகுதி அமைப்புகளின் வசதிக்கும் கணிசமான நிதி உதவி கிடைத்திட, தமிழ்நாடு நகர்ப்பகுதி இரண்டாவது மேம்பாட்டுத் திட்டம் இந்த உரையிலே குறிப்பிடப்பட்டிருக்கிறது.

சென்னை மாநகரத்தினுடைய வளர்ச்சிக்கு ஆரச்சாலைகளை அகலப்படுத்தி, வலுவூட்டும் பணி முக்கியமான, சந்திப்புகளில் 10 சிறு மேம்பாலங்கள் கட்டும் பணி, பெருநகர்ப் பகுதிக்கான வெள்ளக்கட்டுப்பாடு மற்றும் வடிகால் திட்டப் பணி இந்த உரையிலே இடம் பெற்றிருக்கிறது. ஊராட்சிகளுக்கு மேலும் அதிகாரப் பகிர்வு தரப்படும் என்ற உறுதியும் இந்த உரையிலே இடம்பெற்றிருக்கிறது. நமக்கு நாமே திட்டம், அண்ணா மறுமலர்ச்சித் திட்டம் ஆகிய அனைவரும்

பாராட்டக்கூடிய இந்த திட்டங்களை மேலும் மேம்படுத்துவோம் என்ற உறுதிமொழியும் இந்த உரை வாயிலாக வழங்கப்பட்டுள்ளது. நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகளில் குடிநீர் வழங்குவதை மேம்படுத்த 500 கோடி ரூபாயிலே திட்டம் தயார் என்று இந்த உரையிலே அறிவிக்கப்பட்டுள்ளது.

சென்னை மற்றும் தூத்துக்குடி பகுதிகளில் ஆஸ்திரியா அரசின் உதவியோடு கடல்நீரைக் குடிநீர் ஆக்கும் திட்டம் வகுக்கப்படுவதையும் இந்த உரை எடுத்துக்காட்டுகிறது.

2.1.99 அன்று பெரியபாளையத்தில் பணி தொடங்கப்பட்ட 106 பாலங்கள் அன்னியில், மாநிலம் முழுவதும் 360 கோடி ரூபாய் செலவில் இந்த ஆண்டு 104 பாலங்கள் கட்டுவதற்கான பணியும் அண்மையிலே தொடங்கப்பட்டிருக்கின்றது. உலக வங்கி நிதியுதவியோடு தமிழ்நாடு சாலைப் பகுதி திட்டம் இந்த உரையிலே அறிவிக்கப்பட்டிருக்கிறது. சாதி பேதமற்ற சமுதாயத்தை உருவாக்க சமத்துவபுரங்கள் தொடரும் என்ற அறிவிப்பும் இந்த உரையில் இடம் பெற்றிருக்கிறது. ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் மேம்பாட்டிற்கு அதிக நிதி ஒதுக்கப்படும் என்ற செய்தியும் இந்த உரையிலே சொல்லப்பட்டிருக்கிறது. கல்வி கற்கும் வயதடைந்த அனைவரையும் பள்ளியில் சேர்க்கும் வகையில், தமிழ்நாடு கட்டாய தொடக்கக் கல்விச் சட்டம் இயற்றப்பட்டுள்ளதைச் சுட்டிக்காட்டி, அந்தக் குறிக்கோள் நிறைவேற அரசு பாடுபடும் என்ற சூளுரையும் எடுக்கப்பட்டிருக்கிறது.

### கைத்தறித் தொழிலுக்கு புத்துயிர் அளிப்பதற்கான முயற்சிகள்

இந்த உரையின் வாயிலாக, கைத்தறி தொழிலுக்குப் புத்துயிர் அளிப்பதற்கான முயற்சிகள் தொடர் முயற்சிகள் இவ்வளவும் கவர்னர் உரையிலே இடம் பெற்றிருக்கின்றன. நேர்மையான, ஒளிவு மறைவற்ற மற்றும் பொறுப்புள்ள நிருவாகத்தை ஏற்படுத்தவும், ஊழலைத் தடுக்கவும் நீதிபதி இராமானுஜம் குழு பரிந்துரைகள் செயலாக்கம் பெற இந்த அவையிலேயே அந்த அறிக்கை அரசினுடைய குறிப்புகளோடு விரைவில் இந்தக் கூட்டத்தொடரிலே வைக்கப்படும் என்றும் எடுத்துக்காட்டப்பட்டிருக்கிறது.

இங்கே பேசிய உறுப்பினர் சுந்தரம் அவர்கள் தொடக்கத்திலேயே தமிழ்நாட்டின் பொருளாதார வளர்ச்சி அதிகரிக்கவில்லை என்றும், தமிழக மக்களின் வாழ்க்கைத் தரம் உயரவில்லை என்றும் குறிப்பிட்டார்.

### தனிநபர் வருமானம் இந்த ஆண்டும் உயர்வு

1996–97இல் தமிழகத்தினுடைய தனிநபர் சராசரி ஆண்டு வருமானம் 2,918 ரூபாய். 1997–98இல் தமிழ்நாட்டினுடைய தனிநபர் சராசரி வருமானம் 3,057ஆக உயர்ந்துள்ளது. புள்ளியியல் துறை மதிப்பீட்டின்படி இந்த ஆண்டும் தனிநபர் சராசரி வருமானம் ரூபாய் 3,164ஆக உயரும் என எதிர்பார்க்கப்படுகிறது. இந்த தனிநபர் சராசரி வருமானம் 1980–81ஆம் ஆண்டு விலைப் புள்ளிகளைக் கொண்டு மதிப்பிடப்பட்டதாகும். 1991–92ஆம் ஆண்டு விலைப்புள்ளிகளைக் கொண்டு ஒப்பிட்டுப் பார்க்கும்போது தனிநபர் வருமானம் மேலும் அதிகமாக இருக்கும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

தொழில் வளர்ச்சியில் இரண்டாவது இடத்தைப் பெற்றிருக்கிறது நம்முடைய மாநிலம் என்பதை இங்கே எடுத்துக் கூறினேன். ஆனால் நம்முடைய எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் இங்கே உரையாற்றும்போது ஏற்கெனவே அறிவிக்கப்பட்ட தொழில்கள் எல்லாம் என்ன ஆயிற்று என்று சில தொழில்கள் தொடரப்படாமலே முடிந்து விட்டதை எடுத்துக்காட்டினார்கள். குறிப்பாக பில்கிங்டன் கிளாஸ் தொழிற்சாலைப் பற்றி சொன்னார்கள்.

மார்க்கெட்டில் போதிய தேவை (demand) இல்லை என்று கணித்த காரணத்தால் பில்கிங்டன் நிறுவனம் அந்தத் திட்டத்தைக் கைவிட்டு விட்டது. இதற்கு நான் பொறுப்பாளி அல்ல. அவர்களே மார்க்கெட் நிலவரத்தை அறிந்து அதை கைவிட்டு விட்டார்கள். அதற்குக் காரணம் பிரான்ஸ் நாட்டைச் சேர்ந்த 'செயின்ட் கோஃபெயின்' என்ற நிறுவனம் இந்த கிளாஸ் தொழிற்சாலையை வேகமாக உருவாக்கி வருகிறது. பெரிய அளவிலே அத்தொழிற்சாலையை தமிழகத்திலேயே அது உருவாக்கி வருகிற காரணத்தினால் அவர்களும் அந்தத் தொழிற்சாலையை கைவிட்டு விட்டார்கள்.

கும்ஹோ டயர் தொழிற்சாலைப் பற்றி சொன்னார்கள். அவருக்கும் தெரியும். உறுப்பினர்களுக்கும் நன்றாகத் தெரியும். பொருளாதாரத்திலே ஏற்பட்ட மந்தநிலை எந்த அளவிற்குக் கொரியாவை தாக்கியது என்று நன்றாகத் தெரியும்.


இது தென்கொரியாவிலே உள்ள ஒரு நிறுவனத்தால் ஆரம்பிக்கப்படுவதாக இருந்த தொழிற்சாலையாகும். இந்தோனேஷியாவிலே தொடங்கி ஹாங்காங் போன்ற இடங்களில் பரவி கொரியா வரையிலே வியாபித்த இந்தப் பொருளாதார மந்த நிலையினால் தென்கொரியாவிலே உள்ள இந்தப் பிரச்சினையின் காரணமாக இந்த கும்ஹோ டயர் நிறுவனம் தனது திட்டத்தை அடியோடு இரத்து செய்துவிடவில்லை, தள்ளிப் போட்டிருக்கிறது என்பதை நான் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

நார்க்ஸ் ஹைடிரோம், உலக அளவிலே பி.வி.சி.க்கு மார்க்கெட் குறைந்துள்ளதால் அதுவும் தனது திட்டத்தைக் கைவிட்டு விட்டது. ஆனால்

அதே நேரத்தில் மிட்சுபிசி, ஹூண்டாய் போன்ற நிறுவனங்கள் உற்பத்தியைத் தொடங்கிவிட்டன என்ற மகிழ்ச்சியான செய்தியையும் இந்த மாமன்றம் மிக நன்றாக அறியும் என்று கருதுகிறேன். ஃபோர்டு நிறுவனம் அக்டோபர் திங்களில் தனது உற்பத்தியைத் தொடங்கவிருக்கிறது.

### கரும்புச் சக்கையிலிருந்து வரும் ஆண்டு மேலும் 100 மெகாவாட் மின்சாரம் தயாராகும்

கரும்புச் சக்கையிலிருந்து மின்சாரம் தயாரிக்கும் திட்டத்திற்கு இதுவரையிலே தற்போது சுமார் 141 மெகாவாட் மின்சாரம் தயாரிக்கப்பட்டு வருகிறது என்பதை மாண்புமிகு எதிர்க்கட்சிகளின் கவனத்திற்கு நான் கொண்டு வருகிறேன். வரும் ஆண்டில் மேலும் சுமார் 100 மெகாவாட் மின்சாரம் தயாரிக்கப்படும் என்பதையும் நான் அவர்களுக்கு தெரிவித்துக் கொள்கிறேன்.



தொழில் வளர்ச்சியைப் பொறுத்தவரையில் நம்முடைய தமிழ்நாட்டைப் பார்த்தால் Centre for Monitoring Indian Economy என்கிற பெரிய நிறுவனம், மத்திய அரசு இந்திய அரசு; இவைகளினுடைய புள்ளி விவரங்களையெல்லாம் தருகின்ற ஒரு பெரிய நிறுவனம் Centre for Monitoring Indian Economy Survey of Investment Projects, May - 1996 அதன்படியும், அதற்குப் பிறகு எடுத்த சர்வேக்களின் படியும் உள்ள குறிப்புகளை இந்த அவையின் கவனத்திற்கு கொண்டுவர நான் விரும்புகின்றேன்.

### 1996ஆம் ஆண்டு மாநிலங்கள் தொழிலில் செய்துள்ள முதலீடுகள்

மே, 1996இல் Trends in total investment by States என்ற தலைப்பில் கர்நாடகாவில் ஒரு இலட்சத்து பதினொராயிரத்து நானூற்று அறுபத்தி நாலு கோடி ரூபாய் (இன்வெஸ்ட்மென்ட்) முதலீடு;

குஜராத்தில் ஒரு இலட்சத்து மூவாயிரத்து நானூற்று அறுபத்தொரு கோடி ரூபாய் இன்வெஸ்ட்மென்ட்;

ஒரிசாவில் ஒரு இலட்சத்து ஆயிரத்தொன்பது கோடி ரூபாய் இன்வெஸ்ட்மென்ட்;

மராட்டியத்தில் ஒரு இலட்சத்து ஐந்நூற்று பதினாறு கோடி ரூபாய் இன்வெஸ்ட்மென்ட்;

தமிழ்நாடு தொன்னூறு ஆயிரத்து அறுநூற்று ஐம்பது கோடி ரூபாய் இன்வெஸ்ட்மென்ட் மே, 1996இல்.

அதற்கு கீழேதான் உத்தரப் பிரதேசம், மத்தியப் பிரதேசம், ஆந்திரப் பிரதேசம், மேற்கு வங்கம் இவைகள் எல்லாம், இதற்கு அடுத்துதான் வருகின்றன. ஆறாவது, ஏழாவது, எட்டாவது மற்றும் ஒன்பதாவது இடங்களில் இவைகள் எல்லாம் வருகின்றன. இது 1996ஆம் ஆண்டு மே மாதத்தினுடைய நிலைமை. அப்போது, தமிழ்நாடு தொன்னூறு ஆயிரத்து அறுநூற்றி ஐம்பது கோடி ரூபாய் முதலீட்டிலே 5ஆவது இடத்தில் இருந்தது.

### தொழில் முதலீட்டில் இரண்டாவது இடத்தில் தமிழ்நாடு

ஜனவரி, 1999 வரை இன்வெஸ்ட்மென்ட் என்ற அந்த ரேங்கைப் பார்த்தால் மகாராஷ்டிரம் ஒரு இலட்சத்து ஐம்பத்தொன்றாயிரத்து ஐந்நூற்று தொன்னூற்றி எட்டு கோடி இன்வெஸ்ட்மென்ட்;

தமிழ்நாடு ஒரு இலட்சத்து ஐம்பத்தோராயிரத்து இருநூற்றி முப்பத்தியேழு கோடி ரூபாய். எனவே இரண்டாவது இடத்திற்கு தமிழ்நாடு வந்து விட்டது என்பதை பெருமையோடு சொல்லிக் கொள்கின்றோம்.

இதிலே என்ன வித்தியாசம் என்றால் மகாராஷ்டிரத்திலே ஒரு இலட்சத்து ஐம்பத்தோரா யிரத்து ஐந்நூற்றி தொன்னூற்றி எட்டு கோடி இன்வெஸ்ட்மென்ட். தமிழ்நாட்டிலே ஒரு இலட்சத்து ஐம்பத்தோராயிரத்து இருநூற்றி முப்பத்தேழு கோடி இன்வெஸ்ட்மென்ட், அது 11.52 சதவிகிதம் மகாராஷ்டிரா; தமிழ்நாடு 11.49 சதவிகிதம். அதாவது .03 அவ்வளவுதான் வித்தியாசம். மராட்டியத்தோடு வித்தியாசம் .03 தான். ஒரு சதவிகிதம் கூட அல்ல. .1 சதவிகிதம் கூட அல்ல; நாம் இரண்டாவது இடத்திற்கு வருகிறோம். அதே நேரத்தில் மற்ற

மாநிலங்கள் பற்றி நான் சொல்லவில்லை. குஜராத் மூன்றாவது இடத்திற்குப் போய் விடுகிறது; நாம் இரண்டாவது இடத்திற்கு வந்தது மாத்திரமல்ல, மராட்டியத்திலே மே, 1996ஆம் ஆண்டு முதலீட்டிற்கும் ஜனவரி 1999–க்கும் இடையிலுள்ள வித்தியாசம் என்னவென்றால் மராட்டியத்திலே ஐம்பத்தோராயிரத்து எண்பத்திரண்டு கோடி வித்தியாசம்.

தமிழ்நாடு அறுபதாயிரத்து ஐந்நூற்றி எண்பத்தி ஏழு கோடி வித்தியாசம், மராட்டியத்திலே 21.03 சதவிகிதம். தமிழ்நாடு 24.94 சதவிகிதம் 3.9 அதிகம். எனவே, இந்த வகையிலும் வித்தியாசம் என்ற வகையிலே தமிழ்நாடு முதலிடத்திற்கே வந்துவிட்டது என்பதை நான் மகிழ்ச்சியோடு சொல்லிக் கொள்ள விரும்புகிறேன்.

அகில இந்தியாவினுடைய மொத்த முதலீடு என்று எடுத்துக் கொண்டால் ஜனவரி 1999இல் பதிமூன்று இலட்சத்து பதினைந்தாயிரத்து அறுநூற்றி தொன்னூற்று இரண்டு கோடி அகில இந்திய மொத்த முதலீடு; அதிலே தமிழ்நாட்டிற்கு ஒரு இலட்சத்து ஐம்பத்தோராயிரத்து இருநூற்று முப்பத்தேழு கோடி.

இதேநிலை 1996இலே பார்த்தால் அகில இந்தியாவில் பத்து இலட்சத்து எழுபத்திரண்டாயிரத்து எழுநூற்று ஐம்பத்தி மூன்று; அப்பொழுது தமிழ்நாட்டில் தொன்னூறு ஆயிரத்து அறுநூற்று ஐம்பது கோடி, அதாவது 8.45 சதவிகிதம். இரண்டரை ஆண்டுகளிலே உயர்வு இந்திய அளவில் இரண்டு இலட்சத்து நாற்பத்திரண்டாயிரத்து தொள்ளாயிரத்து பத்தொன்பது கோடி; தமிழ்நாட்டிலே அறுபதாயிரத்து ஐந்நூற்று எண்பத்தியேழு கோடி. இரண்டு இலட்சம் அகில இந்தியாவில் அதிகம். தமிழ்நாட்டிலே அறுபதாயிரம் கோடி அதிகம். இது 24.94 சதவிகிதம் என்பதை நாம் எண்ணிப்பார்த்து பெருமையடையலாம்.

### மூடப்பட்ட – மூடப்படுகின்ற தொழிற்சாலைகளுக்காக அரசு வருத்தம்

இந்தத் தொழிற்சாலைகள் வளருகின்றன. தொழில்கள் வளருகின்றன என்று சொல்கிற நேரத்தில் சில தொழிற்சாலைகள் மூடப்படுகின்றனவே என்கின்ற ஆதங்கமும் நம்முடைய உறுப்பினர்களுக்கு இல்லாமல் இல்லை. இவர்கள் எல்லாம் இங்கே இதைக் குறிப்பிட்டு பேசியிருக்கின்றார்கள். மூடப்பட்ட அல்லது மூடப்படுகின்ற தொழிற்சாலைகளுக்காக இந்த அரசும் வருத்தப்படுகிறது, கவலையைத் தெரிவிக்கிறது. ஆனால், இயற்கையிலே பழையன கழிதலும், புதியன புகுதலும் என்பது இயற்கை.

அதற்காக மூடப்பட்ட தொழிற்சாலைகள் எல்லாம் மூடப்பட்டது சரிதான் என்று வாதிக்க விரும்பவில்லை. அதற்குப் பின்னாலே இருக்கின்ற தொழிலாளர்களுடைய வயிறு என்னுடைய நினைவுக்கு வருகிறது. அவர்களுடைய வாழ்க்கை என்னுடைய நினைவுக்கு வராமல் இல்லை. இருந்தாலும், வாழை மரம் வளர வளர, பிறகு கன்று வளர வளர ஏற்கெனவே இருந்த வாழை போய்விடுவதைப் போல தமிழ்நாட்டிலே சில தொழில்கள் நலிவடைந்து இருக்கின்றன என்பதை நாம் மறப்பதற்கில்லை.

இதற்குக் காரணம் என்ன என்று பார்த்தால் நீண்ட காலமாகவே இயங்காமல் இருக்கிற நிறுவனங்கள் தமிழ்நாட்டில் 43. இவை பெரும்பாலும் நிதிநெருக்கடி, பங்குதாரர்களுக்குள் மன வேறுபாடு ஆகிய காரணங்களினால் மாத்திரமே இயங்காமல் உள்ளன. இவைகள் தொழிலாளர் பிரச்சினையால் மூடப்பட்டவை அல்ல. அதேபோல, தொழில் தகராறு சட்டம் பிரிவு 25(ஓ)ன் கீழ் அனுமதி வழங்கப்பட்டு, மூடப்பட்ட நிறுவனங்கள் எதுவும் இல்லை. மேற்கூறிய 43 நிறுவனங்களில் கலைப்பு அதிகாரி (official liquidator) முன் நிலுவையில் உள்ளது 11 நிறுவனங்கள் ஆகும். தொழில் நிதி மற்றும் புனரமைப்பு வாரியம் பி.ஐ.எஃப்.ஆர்., ஏ.ஏ.ஐ.எஃப்.ஆர்., முன்பு நிலுவையில் உள்ளவை 8 நிறுவனங்கள் ஆகும். 2 நிறுவனங்கள் தமிழ்நாடு தொழில் முதலீட்டுக் கழகத்திற்குச் செலுத்த வேண்டிய தொகையை செலுத்தாததால், அந்த நிறுவனம் இவற்றை கையகப்படுத்தியுள்ளது. 3 நிறுவனங்கள் தொடர்பாக உயர்நீதிமன்றத்திலே வழக்கு நிலுவையிலே உள்ளது. 12 நிறுவனங்கள் மூடப்பட்ட பிரச்சினை தொடர்பாக தொழிற்சங்கங்கள் எழுப்பிய தாவாக்களில் அரசு நீதிமன்றத் தீர்ப்புக்கு விட்டு ஆணை பிறப்பித்துள்ளது.

இவை தவிர, சென்னை பி அண்டு சி மில் கதவடைப்பு பிரச்சினையில் அரசு நீதிமன்றத் தீர்ப்பிற்கு அனுப்பிய பின், தமிழக அரசின் அறிவுரைப்படி 28–3–1998 அன்று தொழில் தகராறு சட்டம், பிரிவு 12(3)இன் கீழ் ஆலை மீண்டும் திறப்பது குறித்தும், தன் விருப்ப ஓய்வுத் திட்டத்தில் செல்ல விருப்பம் உள்ள தொழிலாளர்களுக்கு வழங்க வேண்டிய இழப்பீட்டுத் தொகை குறித்தும் ஒரு ஒப்பந்தம் ஏற்பட்டது. அதன் அமலாக்கம் கண்காணிக்கப்பட்டு வருகின்றது. நீண்ட காலமாக இயங்காமல் உள்ள இத்தகைய 43 நிறுவனங்கள் தவிர, தமிழ்நாட்டில் அண்மைக் காலத்தில் இயங்காமல் உள்ள 19 நிறுவனங்கள் இருக்கின்றன. இவற்றில் 5 நிறுவனங்களின் பிரச்சினை அரசால் தொழில் தீர்ப்பாயத்தின் முடிவுக்கு அனுப்பப்பட்டுள்ளது.

### வேலூர் மாவட்ட கூட்டுறவு நூற்பாலை திறக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது

வேலூர் மாவட்ட கூட்டுறவு நூற்பாலை பற்றி ஞானசேகரன் நேற்றைய தினம் குறிப்பிட்டார். அந்த நூற்பாலை புனரமைப்பு செய்யப்பட அரசால் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு ஆலை திறப்பது குறித்து கைத்தறி மற்றும் துணி நூல் இயக்குநரால் நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது என்பதை ஞானசேகரன் அவர்களுக்கு ஆறுதலாகக் கூறிக் கொள்கிறேன்.

தமிழ்நாட்டில் இயங்காமல் உள்ள நிறுவனங்கள் அனைத்துமே நிதி நெருக்கடி காரணமாக மட்டுமே மூடப்பட்டு, இயங்காமல் உள்ளன. அவை தவிர வேறு எந்தக் காரணமும் இல்லை. இவற்றில் தொழிலாளர் பிரச்சினை எதுவும் இல்லை. நிதி நெருக்கடி காரணமாகவே மூடப்பட்டுள்ள நிறுவனங்களைத் திறப்பதற்கு அரசு நடவடிக்கை எடுக்க வாய்ப்பில்லை. ஏனென்றால், அரசு தரப்பிலே நிதி ஆதாரத்திலும், இப்போது உள்ள சூழ்நிலையிலும் அரசு அந்த அளவிற்கு அகல கால் வைப்பதற்கு தயாராக இல்லை என்பதை நான் தெரிவித்துக் கொள்கிறேன். மேலும், ஏற்கெனவே கூறியபடி இவற்றில் பெரும்பாலான நிறுவனங்கள் கலைப்பு நடவடிக்கையிலும், பி.ஐ.எஃப்.ஆர். மற்றும் உயர்நீதிமன்றம் ஆகியவற்றின் முன் வழக்குகள் நிலுவையிலே உள்ள நிலைமையிலும், இவற்றின் மீது அரசு நடவடிக்கை எடுப்பதற்கான சாத்தியக்கூறுகள் இல்லை என்பதை நான் தெரிவித்துக் கொள்கிறேன்.

நிதி நெருக்கடி காரணமாக மூடப்பட்டுள்ள நிறுவனங்களின் நிர்வாகத்தினர் பி.ஐ.எஃப்.ஆர். முன்பு எடுத்துச் சென்று, புனரமைப்புத் திட்டம் தயார் செய்து, ஒப்புதல் பெற்று, அதற்குரிய நிதி மூலதனத்தை உரிய நிதி நிறுவனங்கள் அல்லது வங்கிகளிடமிருந்து பெற்று ஆலையைத் திறக்க நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது. மூடப்பட்டு இயங்காமலேயே உள்ள நிறுவனங்களை திறந்து, நிதி பெற ஏதாவது வாய்ப்பு உள்ளதா என்பதை ஆராய தொழிலாளர் நலத்துறை அமைச்சர், சம்பந்தப்பட்ட நிர்வாகத்தினர் மற்றும் தொழிற் சங்கத் தரப்பினர் மற்றும் அரசு அதிகாரிகளோடு மண்டல வாரியாக கூட்டங்கள் நடத்தி விவாதித்துள்ளார்கள். இந்தக் கூட்டங்களில் எடுக்கப்பட்ட முடிவுகளின்படி மீண்டும் பேச்சுவார்த்தை நடத்த, தொழிற்சங்கங்கள் கேட்டுக் கொண்டதற்கிணங்க, அதிகாரிகள் முன்னிலை யிலேயே பேச்சுவார்த்தைகளும் நடவடிக்கைகளும் தொடரப்பட்டன. ஆனாலும், சுமுக முடிவு எதுவும் இதுவரையிலே ஏற்படவில்லை.

### அரக்கோணம் எஃகு நிறுவன தொழிலாளர்களுக்கு பணம்

அரக்கோணம் எஃகு நிறுவனத்தைப் பொறுத்தவரை, அது நலிவடைந்தும், மூட வேண்டிய நிலை ஏற்பட்டதைத் தொடர்ந்து, அந்த ஆலையிலே வேலை செய்து வந்த 722 தொழிலாளர்கள் தாமாகவே முன்வந்து, தன்னிச்சையாக ஓய்வு பெறும் திட்டத்தின் கீழ் (Voluntary Retirement Scheme) செல்வதற்கு ஒப்புதல் தரப்பட்டதன் பேரில், அவர்களுக்கு 16,76,30,681 ரூபாய் வழங்கப்பட்டுவிட்டது என்பதையும் நான் தெரிவித்துக் கொள்கிறேன்.

நலிவடைந்த கூட்டுறவு நூற்பாலைகள் பற்றி இங்கே பேசப்பட்டது. நம்முடைய சுப்புராயன் அவர்கள்கூட அதைப் பற்றி இங்கே எடுத்துக்காட்டினார்கள். கடந்த ஆட்சியில் திட்டமிட்டு தரம் குறைந்த பஞ்சை அதிக விலை கொடுத்து வாங்கி பல கோடி ரூபாய் ஊழல் நடைபெற்றதால் கூட்டுறவு நூற்பாலைகளுடைய நிதி நிலைமை மிகவும் சீர்கெட்டது. தரமற்ற நூலை தயாரித்து விற்க முடியாமல் தத்தளிக்கும் நிலைமைக்கு கூட்டுறவு நூற்பாலைகள் தள்ளப்பட்டன. பணம் இல்லாமல் காசோலை வழங்கி அதன் காரணமாக நிர்வாக இயக்குநர்கள் கைது செய்யப்பட்ட நிலை எல்லாம் கடந்த ஆட்சியிலே நடைபெற்று, கூட்டுறவு நூற்பாலைகள் முடமாக்கப்பட்டதை நான் இங்கே வேதனையோடு நினைவு கூருகின்றேன்.

### 16 கூட்டுறவு நூற்பாலைகள் ரூ.185.25 கோடியில் புனரமைக்கும் திட்டம்

நலிவடைந்துள்ள 18 கூட்டுறவு நூற்பாலைகளைப் புனரமைக்க அரசு பல்வேறு நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளது. 18 கூட்டுறவு நூற்பாலைகளில் 16 ஆலைகளுக்கு ரூ.185.25 கோடி மதிப்பில் புனரமைக்கும் திட்டத்தை ஏற்று, அரசு ஆணை வழங்கியுள்ளது என்பதையும் தெரிவித்துக் கொள்கிறேன். என்றாலும் உடனடியாக 6 கூட்டுறவு நூற்பாலைகளுக்கு மட்டும் தேசிய வேளாண்மை மற்றும் கிராமப்புற வளர்ச்சி வங்கி 'நபார்டு' புனரமைப்புத் திட்டத்திற்கு நிர்வாக ஒப்புதலை அளித்துள்ளது. அரசு 5 ஆலைகளுக்கு ரூ.2.23 கோடி விளிம்புத் தொகை (Margin money) அளித்துள்ளது. இந்த ஆலைகளுக்குத் தேவையான பஞ்சு வகைகள் 'டான்ஸ்பின்' Tamil Nadu Spinning Mills Federation மூலம் வாங்க ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

கூட்டுறவு நூற்பாலைகள் சட்டப்படி செலுத்த வேண்டிய நிலுவைத் தொகையைப் பைசல் செய்யும் பொருட்டு ரூ.7.11 கோடி வழங்க அரசாணை பிறப்பித்து, அதிலே ரூ.1.7 கோடி உடனடியாக வழங்கப்பட்டுள்ளது. மீதித் தொகையை வழங்கவும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. இந்தக் கடன் எல்லாம் எப்போது வாங்கப்பட்டது? கடந்த ஆட்சியிலே ஏற்பட்ட தொல்லைகளை நாம் அனுபவித்துக் கொண்டிருக்கிறோம்.

இதற்கெல்லாம் அவர்கள்மேல் பரிதாபப்பட்டு அவர்களுடைய நிலைகளை எனக்கு அடிக்கடி உணர்த்துகின்ற பணியில் நம்முடைய எதிர்க்கட்சித் தலைவர்கூட ஈடுபட்டிருந்தார். இவைகளையெல்லாம் மனதிலே வைத்துத்தான் இந்தப் பணிகள் அரசின் சார்பாக முடுக்கிவிடப்பட்டன. ICICI, IFCI, IDBI போன்ற நிதி நிறுவனங்களுக்கு இரண்டு கூட்டுறவு நூற்பாலைகள் செலுத்த வேண்டிய ரூ.4.4 கோடியை அரசுதான் வழங்கியது. கூட்டுறவு நூற்பாலைகள் தனியார் பஞ்சு வியாபாரிகளுக்கு கடந்த ஆட்சிக் காலத்திலே செலுத்த வேண்டிய நிலுவைத் தொகையில் முதல் தவணையாக ரூ.1.65 கோடியையும்

இந்த அரசுதான் வழங்கியது. மீதியை விரைவில் வழங்கவும் நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன. அதற்கான பேச்சுவார்த்தைகள் எல்லாம் நடைபெற்று எவ்வளவு குறைத்துக் கொள்ளலாம் என்று ஒரு settlement வந்து, அப்போது நிர்ணயிக்கப்பட்ட தொகையிலே ரூ.1.65 கோடியை அரசு வழங்கிவிட்டது. மீதியை வழங்கவும் நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது.

இத்தகைய இன்னல்களுக்கிடையிலே கூட இந்த அரசு திட்டங்களை, நிதி நிருவாகத்தைச் சரிவர நடத்தி வருகிறது என்பதற்கு யாரும் நமக்கு நற்சான்றிதழ் அளிப்பதற்கு முன்பாக திட்டக் குழுவினுடைய துணைத் தலைவராக இருக்கின்ற கே.சி.பந்த் அவர்கள், கோவிந்த வல்லப பந்த் அவர்களுடைய திருக்குமாரன் இன்றைக்கு திட்டக் குழுவினுடைய துணைத் தலைவராக இருக்கின்றார்.

பிப்ரவரி 19ஆம் தேதி, தேசிய வளர்ச்சிக் குழுக் கூட்டத்தில் மத்திய திட்டக் குழுவினுடைய துணைத் தலைவர், கே.சி.பந்த் உரையாற்றும்பொழுது பின்வருமாறு கூறுகின்றார்:

"Projection of a plan, far beyond what the resources would warrant, leads to distortion of priorities and to thin spread of resources. I must hasten to add that a number of States are exceptions to this, for example, Goa, Gujarat, Karnataka, Kerala, Maharashtra and Tamil Nadu. Their prudence in deciding the Plan size and realising it, I am sure, makes a better impression on the public than announcing large Plans and not realising them"

– அதாவது நிதியாதாரத்திற்கு அதிகமாக திட்டத்தின் அளவை நிர்ணயிப்பது முன்னுரிமை திட்டங்களைப் பாதிக்கும். மேலும் நிதியாதாரங்களைச் சிதறச் செய்துவிடும். அப்படி இல்லாமல் சில மாநிலங்கள் இருக்கின்றன. உதாரணமாக, கோவா, குஜராத், கர்நாடகா, கேரளா, மகாராஷ்டிரா மற்றும் தமிழ்நாடு ஆகிய மாநிலங்களைக் குறிப்பிடலாம். பெருமளவிலான திட்டங்களை அறிவித்துவிட்டு அவற்றைச் செயல்படுத்தாமல் இருப்பதைவிட விவேகமான முறையில் திட்டத்தின் அளவை நிறைவேற்றுவதுதான் மக்கள் மத்தியில் நல்லெண்ணத்தை ஏற்படுத்தும் என்று கூறி, தமிழ்நாடு அப்படித்தான் நிதி நிருவாகத்தை Financial Management நடத்துகிறது என்பதற்கான நற்சான்றை அவர் வழங்கியிருக்கின்றார்.

**'அன்னையைச்' சந்தித்தபின்**
**'சென்னை'யில் விமர்சனம்**

ஆனால் மேற்கு வங்கத்திலேயிருந்து வந்த ஒரு அம்மையார் மதுரையிலே ஒன்றும், மதராஸ் வீதியிலே ஒன்றுமாகப் பேசியதை நீங்கள் அறிவீர்கள். மதராஸ் என்று நானே சொல்வதற்காக மன்னிக்கவும். அடுக்குத் தொடராகச் சொல்லிவிட்டேன். சென்னையிலே ஒன்றுமாகப் பேசுகிறார்கள். சென்னையிலே "அன்னையைச்" சந்தித்த பிறகு அவர்களுடைய விமர்சனம் அதுவாக அமைந்தது.

தமிழ்நாட்டினுடைய நிதி நிருவாகத்திற்கு திட்டக்குழுவினுடைய துணைத் தலைவரே இந்தச் சான்று வழங்கிய பிறகு யாரோ மம்தா போன்றவர்கள் வந்து ஏதோ பேசிவிட்டு போனார்கள் என்பதற்காக நாம் கவலைப்படத் தேவையில்லை.

**டி.சுதர்சனம் :** அன்னை என்று சொன்னால் இந்திராகாந்தியைத்தான் குறிக்கும். சாதாரண மானவர்கள் எல்லாம் அன்னை ஆக முடியாது.

**கே. சுப்பராயன் :** அன்னை கஸ்தூரிபாய் இருக்கிறார்கள்.

**ச. அழகிரி :** அன்னை என்று சொல்வதற்குப் பதிலாக "அக்காவை" சந்திக்கச் சென்றார்கள் என்று சொல்லுங்கள்.

**முதல்வர் கலைஞர் :** நான் அக்கா என்று சொன்னால் பொன்னம்மாள் அக்காவை குறிப்பதாக எடுத்துக் கொள்ளக் கூடாது. நம்முடைய ஜி.கே. மணி அவர்கள் பாட்டாளி மக்கள் கட்சியின் சார்பிலே இங்கே உரையாற்றும்போது ஒன்றைச் சொன்னார்கள். நான் அப்போது விளக்கம் அளித்தேன். இருந்தாலும் விரிவாக அதைப் பற்றிக் கூற விரும்புகிறேன்.

மிகவும் பிற்படுத்தப்பட்டோர் பட்டியலில் 108 ஜாதிகளைச் சேர்த்துவிட்டு அதிலே 20% கொடுத்தால் நியாயமா என்ற ஒரு கேள்வி; இது மணி மாத்திரம் அல்ல; அந்தக் கட்சியினுடைய தலைவர் அன்புக்குரிய நண்பர் டாக்டர் ராமதாஸ் அவர்களும் இந்தக் கேள்வியை அடிக்கடி எழுப்பியிருக்கிறார். நம்முடைய கணேசன் அவர்களும் சென்ற முறை இங்கே பேசும்போது அதைக் குறிப்பிட்டிருக்கிறார். ஆனால் இந்த 108 ஜாதிகள் என்று சொல்லும்போது மலைப்பாக இருக்கிறது. அடேயப்பா! 108 ஜாதிக்கு 20% தானா என்று ஒரு மலைப்பாக இருக்கிறது. இந்த உண்மை என்ன என்பதை அறிய வேண்டும்.

1982 ஆம் ஆண்டு அம்பாசங்கர் தலைமையிலே அருமை நண்பர் எம்.ஜி.ஆர். அவர்களுடைய ஆட்சிக் காலத்திலே அமைக்கப்பட்ட இரண்டாவது பிற்படுத்தப்பட்டோர் நலக்குழு. அதற்கு முன்பு முதல் பிற்படுத்தப்பட்டோர் நலக்குழு நான் முதலமைச்சராக இருக்கும்போது அமைத்தேன். பிறகு எம்.ஜி.ஆர். அவர்களுடைய ஆட்சிக் காலத்திலே இரண்டாவது பிற்படுத்தப்பட்டோர் நலக்குழு அமைக்கப்பட்டது. அது 1985ஆம் ஆண்டு வழங்கிய அறிக்கையில் மிகப் பிற்படுத்தப்பட்டோர் பட்டியலில் உள்ள வன்னியர் உள்ளிட்ட 109 ஜாதிவாரியான மக்கள் தொகை அறிவிக்கப்பட்டது. அதனுடைய விவரம் :

**ஜாதி வாரியான மக்கள் தொகை**

அந்த 109 ஜாதிகளுடைய மொத்த மக்கள் தொகை 1,23,34,987 பேர். அதிலே வன்னியர் மாத்திரம் 65,04,855

பேர். அதுதான் பெரும் எண்ணிக்கை. 1 கோடியே 23 இலட்சத்திலே 65 இலட்சம் பேர் வன்னியர் பெருமக்கள். அஃதன்னியில் மறவர், பிரமலைக்கள்ளர், அம்பலக்காரர், சேர்வை, அப்பநாடு கொண்டையம்பேட்டை மறவர், அம்பலக்காரர் (சூரியனூர்), கந்தர்வகோட்டை கள்ளர், கூட்டப்பால்கள்ளர், பெரியசூரியூர் கள்ளர், செம்பநாடு வளவு உட்பட உள்ள சீர்மரபினர் 17,18,532 பேர்.

இவைபோக எஞ்சியுள்ள 41,11,600 பேரில் எத்தனை ஜாதிகள் வருகின்றன என்பதை எண்ணிப் பார்க்க வேண்டும். அந்த எண்ணிக்கை என்ன என்பதையும் நாம் மறந்துவிடக்கூடாது. சலவைத் தொழிலாளிகள் 4,45,637, மருத்துவர், நாவிதர், மங்களார் என்று சொல்லப்படுகின்ற வகுப்பினர் 4,26,427, போயர், ஒட்டர் 4,09,567. ஆண்டிப்பண்டாரம் 2,23,770, இசை வேளாளர் 58,327, குலாளர் 3,01,179. குரும்பர் 1,83,689. மீனவர் 2,71,764. தொட்டிய நாயக்கர் 2,71,318. வேட்டுவகௌண்டர் 1,25,886. டொம்மாளார் 4,436. எரவல்லர் 1,377. கொரச்சார் 3,429. குருகினி செட்டி 4,225, நோக்கர் 7,559. முக்குவர் அல்லது முகையர் 4,358. பண்ணையர் 9,758. தொண்டமான் 14,036. பட்டுருக்கார் 441.(441 பேரெல்லாம் இருக்கிறார்கள். இதெல்லாம் சேர்த்துத்தான் 108 ஜாதிகள் என்கிறோம்.) டோம்ஸ் 260 பேர். தொங்கபோயா 238. தொங்கவூர் கொரச்சார் 287. தேவகுடி தலையாரி 1,955. தொப்பைகுரச்சாஸ் வெறும் 51. குடுதாசைகள் 482. முண்டகுறவர் 196. முண்டகொல்லா 64. சேலம் மேலநாட்டுக்குறவர் 1,839. சேலம் உப்புக் குறவர் 2,782. சாரங்கபள்ளிக் குறவர் 54. தோகமலை குறவர் அல்லது கேப்மாரிகள் 512. வயல்பாடு அல்லது நாவல் பேடா கொறச்சாள் 15. வடுவாங்கபட்டி குறவர் 381. வரகனேரிக் குறவர் 313.

இப்படி ஒரு இலட்சத்திற்கு மேற்பட்ட மக்கள் தொகை கொண்ட ஜாதிகள் 14. 50,000த்திற்கு மேற்பட்ட ஆனால் 1 இலட்சத்திற்குக் குறைவான மக்கள் தொகை கொண்ட ஜாதிகள் 10. 10,000–த்திற்கு மேல் ஆனால் 50,000த்திற்குக் கீழே மக்கள்தொகை உள்ள ஜாதிகள் 19. 1000 முதல் 10,000 வரை மக்கள்தொகை உள்ள ஜாதிகள் 40. 1000–த்திற்கும் கீழே மக்கள்தொகை கொண்ட ஜாதிகள் 25. இப்படித்தான் 108 ஜாதிகளே அல்லாமல், இதிலே அதிகமான பலனைப் பெறக்கூடியவர்கள் நான் முதலிலே குறிப்பிட்ட இரண்டு வகுப்பினர்கள். வன்னியப் பெருமக்கள், அதற்கடுத்த அளவிற்கு பயனைப் பெறக்கூடியவர்கள் சீர் மரபினர் மற்றும் மறவர், பிரமலைக் கள்ளர் என்பவர்கள்தான்.

### உடனடியாக 20 சதவிகிதத்தை அறிவித்தது கழக அரசு

எனவே, 108 ஜாதிகளுக்கும் பிரித்து எல்லோருக்கும் குறைத்துக் கொடுத்துவிட்டார்கள் என்று சொல்வது தவறு. இந்த 20% கொடுத்த பிறகு, பெரிய போராட்டத்தை நடத்தி அதிலே 28 பேரைப் பலி கொடுத்து அதற்குப் பிறகும் கிடைக்காத இந்த 20 சதவீதத்தை, 1989ஆம் ஆண்டு, கழகம் ஆட்சிப் பொறுப்பை ஏற்றவுடன், உடனடியாக அந்தத் தலைவர்களை அழைத்துப் பேசி 20 சதவீதத்தை அறிவித்தது. அதன்பிறகு பட்டியலைப் பார்த்தால், நீங்கள் புரிந்து கொள்ளலாம். மருத்துவக் கல்லூரியில், பொறியியல் கல்லூரியில், வேளாண்மைக் கல்லூரியில் மற்றும் பல தொழிற் கல்லூரிகளில் எந்த அளவிற்கு இந்த மக்களுடைய விகிதாச்சாரம், இந்த 20% ஒதுக்கீடு காரணத்தால் உயர்ந்திருக்கிறது என்பதைப் புரிந்து கொள்ள முடியும்.

அடுத்து, இங்கே பெரும்பாலான உறுப்பினர்களால் அதிகமாகப் பேசப்பட்ட ஒரு செய்தி, குடும்ப அட்டைகளைப் பற்றியது ஆகும். அதைப் பற்றி இப்போது நம்முடைய எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள்கூட கோடிட்டுக் காட்டினார்கள். நம்முடைய ஞானசேகரன் அவர்கள்கூட ஒரு பத்திரிகையிலே அதைப்பற்றி எழுதியிருக்கிறார். எல்லோருக்கும் குடும்பக் கார்டு கொடுக்கப் பட்டுவிட்டது என்று இந்த அரசு சொல்வது, முழுப் பூசணிக்காயைச் சோற்றிலே மறைக்கிறது மாதிரி என்று சொல்லியிருக்கிறார். இந்த உதாரணத்தைப் பார்த்துவிட்டு நான் ரொம்ப சந்தோஷப்பட்டேன். ஏனென்றால், ஒரு முழுப் பூசணிக்காயைச் சோற்றிலே மறைக்கிற அளவுக்கு சோறு இருந்தால் தமிழ்நாடு எவ்வளவு வளமாக இருக்கும் என்பதை எண்ணிப்பார்க்க வேண்டும்.




சொல்லும்போது ஜாக்கிரதையாகச் சொல்ல வேண்டும். நான் எப்போதும், சொல்லும்போதும், எழுதும்போதும் அப்படி எழுத மாட்டேன். முழுப் பூசணிக்காயைச் சோற்றிலே மறைப்பதுபோல என்று

சொன்னால், அந்த அளவுக்குச் சோறைக் கொட்டி, அதிலே பூசணிக்காயை மறைத்துவிடலாம். அதனாலே 'முழுப் பூசணிக்காயை இலைச் சோற்றிலே மறைப்பதுபோல' அப்படி என்று போட்டால் சரியாக இருக்கும்.

ஏனென்றால், இலையையும் வைத்து மறைக்கலாம். இலையும் வருகிறது அதிலே மறைப்பதற்கு, சோறும் வருகிறது. அவருக்கும், மற்றும் அவரைப் போல இங்கே இந்த குடும்பக் கார்டு முறையிலே உள்ள குறைகளைச் சொன்ன அழகிரி போன்றவர்கள் மற்றும் எதிர்க்கட்சித் தலைவர், மற்றும் நம்முடைய அருமை நண்பர் லத்தீப் மற்றும் பழனிச்சாமி போன்றவர்களெல்லாம் சொன்ன அந்தக் கருத்திற்கு சில விளக்கங்களை நான் சொல்ல விரும்புகிறேன்.

முக்கியமான விஷயமாக இருப்பதால், சில விளக்கங்களை நான் சொல்லியாக வேண்டும்.

## இதுவரை தரப்பட்டுள்ள குடும்பக் கார்டுகளின் எண்ணிக்கை 142.79 இலட்சமாகும்

தமிழ்நாட்டினுடைய மக்கள்தொகை கணக்கெடுப்பின் படி உள்ள குடும்பங்கள் 136.95 இலட்சம் குடும்பங்கள். ஆனால், இதுவரை கொடுக்கப்பட்டுள்ள குடும்பக் கார்டுகளின் எண்ணிக்கை 142.79 இலட்சம் அட்டைகள். மக்கள்தொகைக் கணக்கெடுப்பிலே உள்ள குடும்பங்களை விட அதிகமாகக் குடும்பக் கார்டுகள் தரப்பட்டிருப்பது 5.84 இலட்சம் ஆகும்.

இந்த அளவிற்கு அதிகமாக வரக் காரணம், ஒரே குடும்பத்தில் உள்ளவர்களே தனித்தனியாக இரண்டு கார்டுகளை, தந்தைக்கு ஒன்றும், மகனுக்கு ஒன்றுமாக வாங்கியதால் இருக்கலாம். புதிய கார்டுகள் வழங்குவதற்கு முன்னதாக கடந்த முறைப் புழக்கத்தில் இருந்த உணவு கார்டுகளின் எண்ணிக்கை 148 இலட்சம். இதிலே போலி கார்டுகள் ஏராளமாக இருந்தது எல்லாம் கண்டு பிடிக்கப்பட்டு களையப்பட்டது சுமார் 11 இலட்சம். அச்சடிக்கப்பட்டு பெற்றுக் கொள்ள யாரும் வராமல் இருக்கின்ற கார்டுகள் மட்டும் சுமார் இரண்டு இலட்சம் இருக்கின்றன. இந்த இரண்டு இலட்சம் கார்டுகளுக்கு உரியவர்கள் போலிகள் என்பதால் அதனைப் பெற்றுக் கொள்வதற்கு அவர்கள் வரவேயில்லை.

எனவே, பழைய குடும்ப அட்டைதாரர்களுக்கெல்லாம் எந்தவிதமான குழப்பமுமின்றி அட்டைகள் வழங்கப்பட்டு முடிவுபெற்று விட்டன. அதிலே எந்தவிதமான தவறும் இல்லை. ஆனால் இதற்கு முன்பு குடும்ப அட்டைகள் வைத்திருக்காமல் புதிதாக விண்ணப்பம் போட்டு அவ்வப்போது கார்டு பெற வேண்டியவர்கள் மாத்திரம்தான் தொடர்ந்து புதிய அட்டைகளைக் கோரி மனு கொடுத்து வருகின்றார்கள். அரசு பழைய அட்டைகளுக்கு பதிலாக மாற்று அட்டைகள் வழங்குகிற பணியிலே தொடர்ந்து அக்கறை செலுத்தி வந்ததால் புதிய மனுக்களைத் தனியாக எடுத்துக்கொண்டு அவற்றுக்கும் கார்டுகள் வழங்கும் பணி மேற்கொள்ளப்பட்டது. இவ்வாறு முன்பு குடும்ப அட்டைகள் அல்லாமல் புதிய அட்டைகள் கோரி வந்த மனுக்கள் மாத்திரம் 22 இலட்சம் ஆகும். இந்த 22 இலட்சம் மனுக்கள் மீது ஒவ்வொரு மாவட்ட விநியோக அலுவலரும், கூட்டுறவுத்துறை அதிகாரிகளும் விசாரணை மேற்கொண்டபோது அது உண்மையானது என்று தெரிந்தது 4.5 இலட்சம் மனுக்கள்தான். இதிலும் 2 இலட்சம் குடும்ப அட்டைகள் வழங்கப்பட்டு விட்டன. மீதமுள்ள 2.5 இலட்சம் மனுக்களுக்கான குடும்ப அட்டைகளும் தொடர்ந்து அச்சடித்து வழங்கப்படும் பணி முறையே நடந்து கொண்டுள்ளது.

## குடும்பக் கார்டுகள் வழங்குவது முடிவுறாத திட்டமாகும்

இந்த 2 இலட்சத்து 50 ஆயிரம் பேர்தான், உறுப்பினர்களை எல்லாம் சந்தித்து "எங்களுக்கு கார்டு வரவில்லை, கார்டு வரவில்லை" என்று ஆங்காங்கு சொல்லிக்கொண்டிருக்கிறார்கள். இந்தக் குடும்ப அட்டைகள் பிரச்சினை இத்தோடு முடிந்துவிட முடியாது. தொடர்ந்துகொண்டே இருக்கக் கூடியது. புதிய புதிய குடும்ப அட்டைகள், தமிழகத்தில் புதிது புதிதாக குடும்பங்கள் தொடங்கப்படும்போதெல்லாம் அவர்கள் தங்களுக்கு தனியாக இந்தக் கார்டுகள் வேண்டும் என்று மனு கொடுத்துக் கொண்டேதான் இருப்பார்கள். எனவே, இது முடிவுறாத பணியாகும் என்று நான் முன்பு சொன்னதை மீண்டும் வலியுறுத்திச் சொல்ல விரும்புகிறேன். இவ்வாறு இது, புதியதாகக் குடும்ப அட்டைகள் பெறுபவர்களுக்கு அவை கிடைப்பதில் தாமதம் ஏற்பட்டால், உடனே ஒட்டுமொத்தமாக குடும்ப அட்டைகள் வழங்குவதில் கோளாறு என்று கூறுவதில் அர்த்தம் இருக்க முடியாது என்று மாத்திரம் நான் சுட்டிக்காட்ட விரும்புகின்றேன். குறைகள் அறவே இல்லையென்று சொல்ல மாட்டேன். இங்கே எடுத்துக்காட்டுகின்ற அளவிற்குப் பூதாகாரமாக இதிலே குற்றம் இல்லை, குறையில்லை என்பதைத்தான் நான் திட்டவட்டமாகத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

## போலி கார்டுகளுடன் ஊழல் செய்யும் கூட்டம்

அங்கொன்றும் இங்கொன்றுமாக உள்ள இந்தக் குறைபாடுகளை மாண்புமிகு உறுப்பினர்கள் சுட்டிக் காட்டினால், குறிப்பிட்ட குறைகள் இருக்குமேயானால் அவைகளை, இந்தப் பிரச்சினைகளைத் தீர்க்க இந்தத் துறை நிச்சயமாக முன்வரும் என்பதைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.


இன்னொன்றையும் மறந்துவிடக்கூடாது. போலி கார்டுகளை வைத்துக்கொண்டு ஊழல் செய்வதற்காக ஒரு கூட்டம் அலைந்து கொண்டிருக்கிறது என்பதை மறந்து விடக்கூடாது. இந்தப் போலி கார்டுகளைக் கொண்டு ரேஷன் கடைகளிலே அரிசியை வாங்கி அல்லது ஏதாவது உணவுப்பொருட்களை வாங்கி அதை வேறு இடங்களிலே விற்று, அவற்றைத் தாங்கள் பயன்படுத்திக் கொள்ளாமல் வேறு இடங்களிலே அதிக

விலைக்கு விற்று அதிலே சம்பாதிக்க வேண்டும் என்று ஒரு கூட்டம் தமிழகத்திலே அலைந்துகொண்டிருக்கிறது என்பதை மறந்துவிடக்கூடாது.

### இரண்டரை ஆண்டில் 1255 புதிய வழித்தடங்களில் பேருந்துகள்

இந்தக் குடும்ப அட்டைகளுக்கு அடுத்தப்படியாக போக்குவரத்துத் துறை பற்றித்தான் அதிகமாக இந்த அவையிலே ஆளுநர் உரையிலே பேசப்பட்டிருக்கிறது. இந்த ஆட்சி நான்காவது முறையாக ஏற்பட்ட இந்த இரண்டரை ஆண்டுகளில் பேருந்துகள் இயக்கப்பட புதிய வழித்தடங்கள் உருவாக்கும் வகையில் 1,245 புதிய தடங்கள் ஏற்படுத்தப்பட்டன. கடந்த ஆட்சியிலே நஷ்டம் என்று கூறி நிறுத்தப்பட்ட வழித்தடங்களினுடைய எண்ணிக்கை 410. அதையும் இந்த ஆட்சியில் எடுத்து நடத்தியதில் மொத்தம் புதிய வழித்தடங்கள் 1,655 ஆகும். நடத்த முடியாது என்ற விட்டவையெல்லாம், தனியாருக்குச் சென்ற அந்தக் கதையெல்லாம் உங்களுக்கு தெரியும். அவைகளையெல்லாம் ஏற்று நடத்தி, நஷ்டத்தால் கைவிடப்பட்ட தடங்களையும் ஏற்று நடத்தி 1,255 புதிய வழித்தடங்கள் இந்த இரண்டரை ஆண்டு காலத்திலே இன்றைக்கு அனுமதிக்கப்பட்டிருக்கின்றன.

5 ஆண்டுகால, கடந்த கால ஆட்சியிலே வாங்கப்பட்ட புதிய பேருந்துகளினுடைய எண்ணிக்கை, 10 ஆயிரத்து 673. இந்த இரண்டரை ஆண்டுகால ஆட்சியிலே வாங்கப்பட்ட பேருந்துகள் 7,212. போக்குவரத்துக் கழகங்களில், முந்தைய ஆட்சிக்காலத்திலே பேருந்துகளுக்கு உதிரிப் பாகங்கள் கொள்முதல் செய்தல், மேற்கூடுக் கட்டுதல் – பாடிக் கட்டுதல் – ஆகியவற்றில் ஊழல் மிகுந்து காணப்பட்டதால் இந்த ஆட்சி பொறுப்பு ஏற்றவுடன் புதிய கொள்முதல் முறை ஒன்று வகுக்கப்பட்டது. உதிரிப் பாகங்கள் கொள்முதல் முறை சீரமைக்கப்பட்டது. பேருந்து பாடிகளை, மேற்கூடுகளைக் கட்டும் பணி அந்தந்த அரசு போக்குவரத்துக் கழகப் பணிமனைகளிலேயே செய்யலாம் என்று முடிவு எடுக்கப்பட்டது. இந்த மாற்றங்களினால் பேருந்து மேற்கூடு கட்டும் செலவு, 1995–96ஆம் ஆண்டோடு ஒப்பிடும் போது 30 சதவீதத்திற்கு மேலாக குறைக்கப்பட்டு அந்த வகையிலே மாத்திரம் இந்த இரண்டரை ஆண்டுகளில் 48 கோடி ரூபாய் அளவிலே சேமிப்பு ஏற்பட்டிருக்கிறது. தவிர, உதிரிப் பாகங்கள், டயர் போன்ற செலவினங்களில் 68 சதவீதம் குறைக்கப்பட்டு நடப்பாண்டில் ரூபாய் 14 கோடி அளவிலே சேமிப்பு ஏற்பட்டுள்ளது. அதே நேரத்திலே பேருந்துகளை இயக்குவதற்கான பல்வேறு செலவுகள் ஆண்டுக்காண்டு கூடிக்கொண்டே வருகிறது என்பதை மறந்துவிடுவதற்கில்லை.



சராசரியாகத் தமிழ்நாடு அரசுப் போக்குவரத்துக் கழகங்கள் மூலம் இயக்கப்படும் பேருந்து ஒவ்வொன்றும் அன்றாடம் 405 கிலோ மீட்டர் தூரம் செல்கிறது. போக்குவரத்துக் கழகங்களின் மூலம் அன்றாடம் இயக்கும் பேருந்துகளுடைய எண்ணிக்கை 15,346. 96–97ல் பேருந்தை ஒரு கிலோ மீட்டர் ஓட்டுவதற்கு டீசல் செலவு 2.12 ரூபாய் என்று இருந்தது. தற்போது அந்த செலவு 2.73 ரூபாயாக உயர்ந்துள்ளது. அதாவது 61 பைசா ஒரு கிலோ மீட்டருக்குக் கூடியுள்ளது.

### பயணக்கட்டணம் இந்தியாவில் தமிழகத்திலேதான் குறைவு

அதேபோன்று வட்டிச் செலவு 96–97ல் ஒரு கிலோ மீட்டருக்கு 49 பைசாவாக இருந்தது தற்போது 71 பைசாவாக உள்ளது. சம்பளம் மற்றும் நிர்வாகச் செலவுகள் ஒரு கிலோ மீட்டருக்கு 96–97ல் 3.77 ரூபாயாக இருந்தது. தற்போது 4.48 ரூபாயாக உயர்ந்துள்ளது.

இவ்வாறு சிரமங்கள் பலயிருந்தாலும்கூட, இந்தியாவில் தமிழ்நாட்டிலேதான் பயணக் கட்டணம் குறைவாக இருக்கிறதென்பதைச் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். நான் வேறு எங்கும் செல்ல விரும்பவில்லை. பயப்பட வேண்டாம். ஆந்திராவிலே புறநகருக்கு ஒரு கி.மீட்டருக்கு 24 காசு; கர்நாடகத்திலே 21 காசு; கேரளத்திலே 22 காசு; தமிழ்நாட்டிலே 18 காசு.

ஓரளவு சொகுசு உள்ள விரைவுப் பேருந்துக்கு ஆந்திராவிலே 34 காசு; கர்நாடகத்திலே 25.5 காசு; கேரளத்திலே 34 காசு; தமிழ்நாட்டிலே 20 காசு.

சொகுசுப் பேருந்துக்கு புறநகர் சொகுசுப் பேருந்துக்கு ஆந்திராவிலே 39 காசு; கர்நாடகத்திலே 31 காசு; கேரளத்திலே 39 காசு; தமிழ்நாட்டிலே 25 காசு.

இதையெல்லாம் சொன்னால், கட்டணமும் குறைவாக இருக்க வேண்டும், வசதியும் அதிகமாக இருக்க வேண்டும். கூழுக்கும் ஆசை; மீசைக்கும் ஆசை என்ற நிலைமையிலே இருக்கின்ற உறுப்பினர்கள் இந்த இரண்டு ஆசைகளிலே எந்த ஆசையைவிடப் போகிறார்கள் என்று நான் மிகுந்த பவ்வியமாகப் பணிவன்போடு கேட்டுக் கொள்கிறேன்.

உங்களுடைய அரிய யோசனைகளெல்லாம் பட்ஜெட்டுக்கு முன்பு – இவ்வளவு யோசனைகளை யெல்லாம் சொன்னீர்கள். திருநாவுக்கரசு அருமையான யோசனைகளை யெல்லாம் சொன்னார். இதற்கும் ஒரு யோசனையை நீங்களெல்லாம் சொல்ல வேண்டுமென்று உங்களையெல்லாம் கேட்டுக் கொள்கிறேன். எதிர்க்கட்சித் தலைவரும் மிக நிதானமாகச் சிந்திப்பவர். அதனால் அவரும் அதற்கு நல்ல யோசனைகளைச் சொல்ல வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

**கரும்புக்கு விலை: தேர்தல் அறிக்கையில் கூறியது என்ன ?**

கரும்பு விலையைப் பற்றி இங்கே சொல்லப்பட்டது. ஆயிரம் ரூபாய், ஆயிரம் ரூபாய் என்று நீங்கள் தேர்தல் அறிக்கையிலேயே சொல்லியிருக்கிறீர்களே, என்ன ஆச்சு, என்ன ஆச்சு என்று சொன்னீர்கள். நானும் எப்படியோ ஏமாந்து போயிருக்கிறேன். எப்படியென்றால், இந்த ஆட்சி ஆரம்பித்தபோது நம்முடைய சுதர்சனம் தான் ஒரு கேள்வியைக் கேட்டார். ஆயிரம் ரூபாய் கரும்பு விலை என்று தேர்தல் அறிக்கையிலே போட்டிருக்கிறோமே, எப்பொழுது நிறைவேற்றப் போகிறீர்கள் என்று. சுதர்சனம் சொன்னால் சரியாக இருக்கும் என்று நினைத்துக்கொண்டு, நானும் அவர் பேச்சை நம்பி அன்றைக்கு இந்த அவையிலே விரைவில் ஆயிரம் என்பது ஒரு குறிக்கோள்தான், அதை நிச்சயமாக அடைந்து தீருவோம், மெல்ல மெல்ல அடைந்து தீருவோம் என்று சொல்லிவிட்டேன்.

அடிக்கடி பேசப் பேச அப்படி ஒரு வாசகத்தைத் தேர்தல் அறிக்கையிலேயே போட்டிருக்கிறோமா என்று – தேர்தல் அறிக்கையை எடுத்து வந்து பார்த்தேன். இது தேர்தல் அறிக்கை. 96ஆம் ஆண்டு தேர்தல் அறிக்கையிலே, அதிலே எங்கேயும் ஆயிரம் ரூபாய் தருகிறோம் என்று சொல்லவே இல்லை. இது புதுசா பிரிண்ட் பண்ணியது இல்லை. தமிழ் மாநிலக் காங்கிரஸ் ஆபீசிலேகூட இருக்கும். அது. கம்யூனிஸ்ட் கட்சி ஆபிசிலேயும் இருக்கும். எடுத்துப் பார்க்கலாம். அதில் என்ன போட்டிருக்கிறோம் என்றால், "கரும்புக்கு அதிக விலை" என்கிற தலைப்பிலே, என்ன வாக்குறுதி கொடுத்திருக்கிறோம் என்றால், "மற்ற மாநிலங்களைப்போல வெட்டுக்கூலி, வண்டி வாடகை" முதலியவைகளை ஆலையே ஏற்று கரும்பு விலையை உயர்த்தி நிர்ணயிக்கும் விதத்தில் – அதுகூட நிர்ணயிக்கச் சொல்லவில்லை – "முத்தரப்பு மாநாடு கூட்டி எல்லோருடைய யோசனையையும் பெற்று உரிய முடிவெடுக்கப்படும் என்பதை மகிழ்ச்சியோடு தெரிவித்துக் கொள்கிறோம்". தேர்தல் அறிக்கையிலே இதுதான் போட்டிருக்கிறோம்.

**ஜி.பழனிச்சாமி:** பேரவைத் தலைவர் அவர்களே, தேர்தல் அறிக்கையிலே சொல்லவில்லை. திருச்சியில் நடைபெற்ற 96வது மாநாட்டிலே மாண்புமிகு முதலமைச்சரவர்கள் அதிலே அறிவித்ததாக எனக்கு ஞாபகம் இருக்கிறது.

**முதல்வர் கலைஞர் :** அதுவும் ஞாபகம் என்றுதான் சொல்கிறார் அவர்.

**முதல்வர் கலைஞர் :** மகாநாட்டிலே தீர்மானம் போட்டிருக்கலாம். அந்தத் தீர்மானத்தை மறு பரிசீலனை பண்ணித்தான் தேர்தல் அறிக்கை வெளியிடப் பட்டிருக்கிறது. நான் அதற்காகப் பின்வாங்குவதாக அர்த்தம் அல்ல. கொஞ்சம் நாம் சிந்தித்துப் பார்க்க வேண்டுமென்று சொல்ல விரும்புகின்றேன். கரும்பு விலையைப் பொறுத்தவரையிலும், ஒரு ஒப்பீடு பார்த்தால், இந்த விலை, சர்க்கரைக் கட்டுமானம் (Recovery) பிழிதிறன் என்பதை வைத்துத்தான் நிர்ணயிக்கப்படுகிறது என்பது உங்களுக்கெல்லாம் நன்றாகத் தெரியும். இதில் Recovery குறைவாக இருந்தாலும்கூட, அதிகமாகக் கொடுப்பது நாம்தான்.

உதாரணமாக, ஆந்திராவில் சர்க்கரைக் கட்டுமானம் Recovery 10.22 சதவீதம். அங்கே டன் ஒன்றுக்கு கொடுக்கப்படும் விலை 630 ரூபாய். கர்நாடகாவில் recovery 10.54 சதவீதம். அங்கே 730 ரூபாய் டன் ஒன்றுக்கு விலையாகக் கொடுக்கிறார்கள். மராட்டியத்தில் recovery 11.11 சதவீதம். அங்கே டன் ஒன்றுக்கு விலை 680 ரூபாய். குஜராத்தில் சர்க்கரைக் கட்டுமானம் recovery 10.72 சதவீதம். அங்கே டன் ஒன்றுக்கு விலை 648 ரூபாய். தமிழ்நாட்டில் recovery 10ம் இல்லை, 11ம் இல்லை, 9ம் இல்லை. 8.94 சதவீதம் recovery அதற்கு நாம் தருகின்ற விலை 753 ரூபாய். எல்லா மாநிலத்தையும் விட அதிகமாகக் கொடுக்கிறோமே நாம், பாராட்ட வேண்டாமா நீங்கள்?

கூட்டுறவு மற்றும் பொதுத்துறையில் இயங்கி வரும் 19 சர்க்கரை ஆலைகளில் 1997–98ஆம் ஆண்டு முடிய 364 கோடி ரூபாய் திரண்ட நட்டம் (Cumulative loss) ஏற்பட்டுள்ளது. இந்தப் பெரிய நட்டத்திற்குக் காரணம், சர்க்கரை உற்பத்திக்கு ஆகும் செலவை ஈடுகட்ட முடியாத நிலை. 1994–95 மற்றும் 1995–96ஆம் ஆண்டுகளில் தமிழ்நாட்டில் கூடுதல் கரும்பு உற்பத்தி காரணமாக, அரவைக் காலத்தை நீட்டிக்க வேண்டிய சூழ்நிலை ஏற்பட்டது. அதனால் கட்டுமானமே குறைந்தது. (ரெக்கவரியே குறைந்து போச்சு).

1997–98ல் அரவைப் பருவத்தில் பெருமழை. அதே 1997–98 அரவைப் பருவத்தில் தொழிலாளர்களுடைய வேலை நிறுத்தம். கடந்த ஆட்சியில் விரிவாக்கப் பணிகளை காலத்திலே அவர்கள் முடிக்கவில்லை என்பதும் ஒரு காரணம்.

**விவசாயிகளுக்குரிய நிலுவை தீபாவளிக்கு முன்பே வழங்கப்பட்டது**

கடந்த ஆட்சியில் சில ஆலைகளில் உபரி கரும்பு, இதர ஆலைகளுக்குத் திருப்பி அனுப்பப்பட்டது. அதுவும் ஒரு காரணம். இப்படி தொடர்ந்து நட்டம் ஏற்பட்டதால், 14 கூட்டுறவு மற்றும் பொதுத்துறை சர்க்கரை ஆலைகள் 1997–98ஆம் ஆண்டு அரவைப் பருவத்திற்கான மாநில அரசு மற்றும் மைய அரசு நிர்ணயம் செய்த கரும்பு விலைக்கான வித்தியாசத் தொகையை வழங்க முடியாத இக்கட்டான நிலை ஏற்பட்டது. இந்த வித்தியாசத் தொகையை வழங்க முடியாத சூழ்நிலை அந்த ஆலைகளுக்கு ஏற்பட்டது.

கரும்பு விவசாயிகள் மற்றும் பல்வேறு அரசியல் கட்சிகளின் கோரிக்கையை ஏற்று 14 கூட்டுறவு மற்றும் பொதுத்துறை சர்க்கரை ஆலைகளுக்கு 82 கோடி ரூபாயை இந்த அரசு வழங்கியது. எதற்காக? அந்த ஆலைகளுக்கு அல்ல, அந்த விவசாயிகளுக்குத் தர வேண்டிய பணத்திற்காக 82 கோடி ரூபாயை இந்த அரசு உதவியாக வழங்கியது. கரும்பு விவசாயிகளுக்குச் சேர வேண்டிய நிலுவையை, தீபாவளிக்கு முன்பே வழங்க வேண்டுமென்று அரசு உத்தரவிட்டு அதுவும் நிறைவேற்றப்பட்டது. கழக அரசு வழங்கிய நிதியுதவியின் காரணமாக 70,263 கரும்பு விவசாயிகள் பயன் அடைந்தார்கள். இதற்கு மேலும் நம்முடைய ஞானசேகரன் அவர்கள், ஐ. கணேசன் போன்றவர்கள் வெந்த புண்ணிலே வேல் பாய்ச்சுகிறீர்கள் என்று சொல்லாமல் இருந்தால் நலம் என்று நம்புகின்றேன். இதற்கு மேலும் தருவதற்கு முத்தரப்பு மாநாட்டை நாம் நடத்தி அதற்கான முயற்சிகளையும் அரசு மேற்கொள்ளும் என்ற உறுதியை இந்த அவையில் தங்கள் மூலமாக கரும்பு விவசாயிகளுக்கு நான் தெரிவித்துக் கொள்கின்றேன்.

நம்முடைய நண்பர் சுந்தரம் அவர்கள், ராசிபுரம் தொகுதிக்கு இந்த அரசு ஒன்றுமே செய்யவில்லை என்று ஒரு பயங்கரமான குற்றச்சாட்டைச் சொன்னார்கள். நானும் அதிர்ச்சியடைந்து மாவட்ட ஆட்சித் தலைவரோடு தொடர்பு கொண்டு, அவரிடமிருந்து ஒரு அறிக்கையைப் பெற்றேன். அந்த அறிக்கையின்படி, ராசிபுரம் தொகுதியில் நான் எல்லாப் பணிகளையும் சொல்லவில்லை, நேரமாகும். இந்த இரண்டரை ஆண்டுகளில் நடைபெற்ற பணிகளில் சிலவற்றை மாத்திரம் சொல்ல விரும்புகின்றேன்.

ராசிபுரத்தில் இரண்டரை ஆண்டில் நடைபெற்ற பணிகளின் விபரம் ஊரக வளர்ச்சித் துறை மூலம், சமத்துவபுரப் பணிகள் நடைபெற்றவை 101. செலவு 46 இலட்சத்து 50 ஆயிரம் ரூபாய். அண்ணா மறுமலர்ச்சித் திட்டப்பணிகள் 39 – செலவு 48 இலட்சத்து 16 ஆயிரம் ரூபாய். நமக்கு நாமே திட்டப் பணிகள் 16. செலவு 16 இலட்சத்து 11 ஆயிரம் ரூபாய். தொகுப்பு வீடுகள் 769. செலவு 2 கோடியே 16 இலட்சம் ரூபாய். சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டுத் திட்டப் பணிகள் 61. செலவு 33 இலட்சத்து 59 ஆயிரம் ரூபாய். வேளாண்மைப் பொறியியல் துறைப் பணிகள் 59, செலவு ரூ.87 இலட்சத்து 33 ஆயிரம். மற்றும் ஊரக வளர்ச்சித் துறையின் மூலமாக இதர பணிகள் உள்ளிட்ட துறையின் மூலமாக மாத்திரம் 7,227 பணிகள், செலவு 11.18 கோடி ரூபாய்.

தமிழ்நாடு மின்வாரியத்தின் மூலம் 47 Transformers அமைக்கச் செலவு 70 இலட்சத்து 50 ஆயிரம் ரூபாய். உயர் மற்றும் குறைந்த மின்னழுத்த இணைப்புகள் கொடுக்க 1.53 கோடி ரூபாய். உயர் அழுத்த மின் இணைப்பு 3 தர 6 இலட்சம் ரூபாய். விவசாயத்திற்கு 466 மின் இணைப்புத் தர 1 கோடியே 63 இலட்சம் ரூபாய். 162 குடிசைகளுக்கு மின் இணைப்புத் தர 1 இலட்சத்து 2 ஆயிரம் ரூபாய். தெருவிளக்குகள் 396 அமைக்க 19 இலட்சத்து 80 ஆயிரம் ரூபாய். மேல்நிலை குடிநீர்த் தொட்டி 55க்கு 22 இலட்சம் ரூபாய். இப்படி மின் துறை மூலமாக ஆன செலவு 7 கோடியே 19 இலட்சம் ரூபாய்.

குடிநீர் வடிகால் வாரியத்தின் மூலம் 84 குடியிருப்புகளுக்குக் குடிநீர் வழங்கியதற்குச் செலவு 1 கோடியே 39 இலட்சம் ரூபாய்; வருவாய்த் துறை மூலம் பயனாளிகளுக்குச் செலவு 1.47 கோடி ரூபாய்.

பிற்படுத்தப்பட்டோர் நலத்துறை மூலம் 514 குடும்பங்களுக்கு இலவச வீட்டுமனை வழங்கியதற்கான செலவு 16 இலட்சத்து 50 ஆயிரம் ரூபாய்.

பொதுப்பணித் துறை மூலமாக சிங்கலாண்டபுரத்தில் ஆரம்ப சுகாதார நிலையக் கட்டடம் கட்ட 16 இலட்சத்து 50 ஆயிரம் ரூபாய்.

இராசிபுரம் அரசு மருத்துவமனையிலே புறநோயாளிகள் பிரிவு கட்டடம் கட்ட 20 இலட்சம் ரூபாய்.

உடையார்பாளையம்; ஆர்.புதுப்பாளையம் மற்றும் வெண்ணந்தூர் உயர்நிலைப் பள்ளிகளிலே கூடுதல் வகுப்பறை கட்ட 15 இலட்சம் ரூபாய்.

இராசிபுரம் மேல்நிலைப் பள்ளியிலே அறிவியல் ஆய்வுக் கூடம் கட்ட 18 இலட்சத்து 44 ஆயிரம் ரூபாய்.

நெடுஞ்சாலைத் துறை மூலமாக 84 கிலோ மீட்டர் நீளச் சாலை பராமரிப்புப் பணிக்காக 1.55 கோடி ரூபாய்.

போக்குவரத்துத் துறை மூலம் பேருந்து வழித்தடம் 5 புதிய பேருந்து வழித்தடங்கள் மற்றும் 23 புதிய பேருந்துகள், 33 மினி பேருந்துகள்.

முழு நேர நியாய விலைக் கடை மற்றும் 14 பகுதி நேர நியாய விலைக் கடைகள் இந்தத் தொகுதியிலே புதியதாக இரண்டரை ஆண்டுகளில் அமைக்கப் பட்டிருக்கின்றன.

கல்வித் துறை மூலமாக ஒரு நடுநிலைப் பள்ளி உயர்நிலைப் பள்ளியாக உயர்த்தப்பட்டுள்ளது. ஒரு பள்ளி பிளஸ் டூ தேர்வு மையமாக புதியதாக அங்கீகரிக்கப்பட்டிருக்கிறது.

## ரூ.52.41 கோடிக்கு பணிகளும், பயன்களும்

ஒட்டுமொத்தமாக, எல்லாவற்றையும் சுருக்கமாகச் சொல்ல வேண்டுமானால் இந்த இரண்டரை – மூன்று ஆண்டு காலத்தில் மொத்தமாக 52.41 கோடி ரூபாய் அளவுக்குப் பணிகளும், பயன்களும் இராசிபுரம் தொகுதியிலே நடைபெற்றிருக்கின்றன என்பதை நான் தெரிவித்துக் கொள்கிறேன்.

நண்பர் தாமரைக்கனி அவர்கள் ஒரு புகாரைச் சொன்னார். திருவில்லிபுத்தூர் தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கியில் 15 கோடி ரூபாய் ஊழல் என்றார். குறை இருக்கலாம். ஆனால் எப்போதுமே அவர் அதிகமாகத்தான் சொல்வார். 500 பேர் என்றால் 5000 பேர் என்பார். 500 பேர் வந்திருந்தால் 5000 பேர் வந்திருந்தார்கள்; 5000 பேர் வந்திருந்தால், 50,000 பேர் வந்திருந்தார்கள் என்றெல்லாம் கூட்டத்திலே சொல்லும்போது சொல்லலாம். 15 கோடி ரூபாய் ஊழல் என்றார். அதைப் பற்றி விசாரித்தபோது, விருதுநகர் மாவட்ட ஆட்சித் தலைவர் இணைப் பதிவாளரிடமிருந்து அறிக்கைப் பெற்று எனக்கு அனுப்பி இருக்கிறார்கள். அவர் அனுப்பிய தகவல்படி, அந்த வங்கியின் மூலமாக நுகர்பொருள் கடன் மாத்திரம் 362 பேருக்கு 61 இலட்சம்தான் வழங்கப்பட்டுள்ளது. வீடுகள் ரிப்பேர் கடன் என்ற தலைப்பில் 130 பேருக்கு ரூ.53.88 இலட்சம் மாத்திரம் வழங்கப்பட்டுள்ளது.

பண்ணைச்சாரா கடன்கள் என்ற தலைப்பில் 31 பேருக்கு 14.02 இலட்சம் ரூபாய் கடன் வழங்கப்பட்டிருக்கிறது. இந்த வங்கியின் மூலமாக இந்த ஆண்டு வழங்கப்பட்ட கடன்களே ஒரு கோடியே 29 இலட்சத்து 29 ஆயிரம் ரூபாய்தான்.

## எங்கே ஊழல் நடந்தாலும் கண்டுபிடித்து நடவடிக்கை எடுப்போம்

அவர் 15 கோடி ரூபாய்க்கு அந்தச் சொஸைட்டியிலே ஊழல் நடைபெற்றதாகக் குறிப்பிட்டார். அதன் மீது விசாரித்த அளவில் கூட்டுறவு துறை அதிகாரிகள், மாவட்ட ஆட்சித் தலைவர் மூலமாக அனுப்பிய விவரத்தில் அங்கே 15 கோடி ரூபாய்க்கு ஊழல் நடைபெற்றதற்கான ஆதாரம் இருப்பதாகத் தெரியவில்லை. ஆனால் கொடுக்கப்பட்ட கடனே ஒரு கோடியே சொச்ச ரூபாய்தான் என்கிறபோது 15 கோடிக்கு ஊழல் நடைபெற்றிருக்க இயலாது. இந்த ஒரு கோடி ரூபாய்க்குள் ஊழல் நடைபெற்றிருக்குமேயானால் தாமரைக்கனி அதைச் சுட்டிக் காட்டுவாரேயானால் நான் நடவடிக்கை எடுக்கத் தயாராக இருக்கின்றேன், எங்கே ஊழல் நடைபெற்றாலும், அதை இந்த அரசு நிச்சயமாக கண்டிபிடித்து நடவடிக்கை எடுக்கும் என்பதிலே தாமரைக்கனிக்கு சந்தேகம் தேவையேயில்லை என்பதை சொல்லிக் கொள்கின்றேன்.

தஞ்சை மாவட்டத்தில், விவசாயிகளிடத்தில் ஜப்தி நடைபெறுகிறது என்பதைப் பற்றி நம்முடைய பழனிச்சாமி அவர்களும், மற்றவர்களும் இங்கே எடுத்துச் சொன்னார்கள். எல்லா உறுப்பினர்களும் சொல்லாவிட்டாலும், குறிப்பிட்ட சில உறுப்பினர்கள் ஜப்தியைப் பற்றிச் சொன்னார்கள். கூட்டுறவு வங்கிகளுக்கான கடனை நாம் திருப்பிச் செலுத்தாவிட்டால்,மீண்டும் அந்த நிறுவனங்களிட மிருந்து கடனைப் பெற முடியாது என்பது எல்லோருக்கும் புரிந்த எளிமையான இலக்கணம்தான்.

30.6.1999 தேதியின்படி அந்தப் பகுதியிலே மொத்தமாக ஏற்படும் இந்தக் கூட்டுறவுக் கடன் தவணைத் தொகை 43 கோடியே 10 இலட்ச ரூபாய். இந்தத் தொகையில் குறைந்தது 40 சதவீதம் அளவுக்காவது வசூல் செய்தால்தான் வருகிற ஆண்டு மீண்டும் நாம் நபார்டு வங்கியின் மூலம் தொகையைப் பெற்று விவசாயிகளுக்கு மீண்டும் சலுகை வட்டியிலே கடன் தர இயலும். அந்த உரிமையை நாம் ஏன் இழக்க வேண்டும். முழுக்கக் கேட்கவில்லை. 40 சதவீதம்தான் கேட்கப்பட்டிருக்கிறது. அதிலேகூட ஏற்கெனவே வசூல் செய்யப்பட வேண்டிய 43 கோடி ரூபாயில் 40 சதவீதம் என்பது 17.24 கோடி ரூபாய்தான். இதில் 17.2.1999ஆம் நாள் வரை வசூலிக்கப்பட்ட தொகை வெறும் 36 இலட்சம்தான். இன்னும் வசூலிக்க வேண்டிய தொகை 16.88 கோடி ரூபாய். இந்தக் கடன் தொகையை கட்ட தவணைத் தவறிய விவசாயிகளுடைய எண்ணிக்கை 81,553. மொத்தம் தவணை தவறிய தொகை 43 கோடியே 10 இலட்ச ரூபாய்.

## கடனை திருப்பிச் செலுத்தாத பெரிய விவசாயிகளுக்கு நோட்டீஸ்

இதிலே பெரிய விவசாயிகள் 21,898 பேர். இந்தப் பெரிய விவசாயிகள் மாத்திரம் தரவேண்டிய கடன் 19 கோடியே 22 இலட்சம். பெரிய விவசாயிகள் என்றால் யார்? 5 ஏக்கருக்கு மேல் நிலம் உள்ளவர்கள். டிராக்டர் போன்ற இயந்திரங்களைப் பயன்படுத்தி சாகுபடி செய்பவர்கள், நிலங்களை அன்னியில் மாத ஊதியம் பெற்று வேலையில் இருப்பவர்கள், இவர்கள்தான் பெரிய விவசாயிகள் என்ற அந்த வரம்பில் வருகிறார்கள். மொத்தம் 81,553 தவணை தவறிய விவசாயிகளில் சுமார் 60,000 பேர் சிறு விவசாயிகள். அவர்கள் மீது எந்த நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை. அவர்களுக்கு நோட்டீஸ்கூட அனுப்பப்படவில்லை. பெரிய விவசாயிகளை 21 ஆயிரம் பேருக்கு மாத்திரம்தான் உடனடியாக கடன் தொகையை, அந்த 40 சதவீதத்தைக் கட்ட வேண்டுமென்றும், இல்லாவிட்டால் சட்டபூர்வமான நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் நோட்டீஸ் அனுப்பப்பட்டது. விளம்பரம் செய்யப்பட்டது. இதிலே தஞ்சை மத்தியக் கூட்டுறவு வங்கியின் சார்பில் நோட்டீஸ் மாத்திரம்தான் அனுப்பப்பட்டிருக்கிறது. யாரையும் ஜப்தி செய்யவில்லை.

கும்பகோணம் சங்கத்தின் மூலம், அதிலே திருவாரூர் மாவட்டம், தஞ்சாவூர் மாவட்டம், நாகை மாவட்டம் எல்லாம் இருக்கிறது. இந்த கும்பகோணம் மத்தியக் கூட்டுறவு வங்கியில் மாத்திரம் 60 பேர் மீது; அதாவது திருவாரூர் மாவட்டத்தில் 10 பேர் மீதும், தஞ்சை மாவட்டத்தில் 29 பேர் மீதும், நாகை மாவட்டத்தில் 21 பேர் மீதும் ஜப்தி நடவடிக்கை

எடுக்கப்பட்டது. இவர்கள் எல்லாம் யார்? அவர்கள் கட்சி பெயரை சொல்ல விரும்பவில்லை நான். எந்தக் கட்சியில் இருக்கிறார்கள் என்று. பெயரை மாத்திரம் சொல்கிறேன். சுவாமிநாதன் அவர் கடன் வாங்கியது 1991ல், செலுத்த வேண்டிய தொகை 1 இலட்சத்து 83 ஆயிரம் ரூபாய். இந்தப் பெரிய விவசாயிடமிருந்து கடன் தொகையைக் கேட்கக் கூடாதா? 40 சதவீதத்தைக் கொடுக்கக் கூடாதா அவர்? சுவாமிக்கண்ணு, 74 ஆயிரம் ரூபாய் 1996ல் வாங்கினார், கொடுக்கவில்லை. சண்முகவேல் 85 ஆயிரம் ரூபாய் 1996ல் வாங்கிய கடன். எம். மாரியப்பன் 1996ல் வாங்கிய கடன் 53 ஆயிரம் ரூபாய். சம்பந்தம் 1991ல் வாங்கிய கடன் 1 இலட்சத்து 20 ஆயிரம் ரூபாய். கலியமூர்த்தி குடும்பம் 1992ல் வாங்கிய கடன் 1 இலட்சத்து 80 ஆயிரம் ரூபாய். இவர் விவசாயச் சங்கத் தலைவர்கூட. கண்ணபிரான் 1990ல் வாங்கிய கடன் 2 இலட்சத்து 30 ஆயிரம் ரூபாய். எஸ். செந்தில் 1992ல் வாங்கிய கடன் 1 இலட்சத்து 4 ஆயிரம் ரூபாய். கோபாலகிருஷ்ணன் 1993ல் வாங்கிய கடன் இலட்சம் ரூபாய். திருஞானசம்பந்தம் 1996ல் வாங்கிய கடன் 59 ஆயிரம் ரூபாய். சுந்தரப்பா 1996ல் வாங்கிய கடன் 79 ஆயிரம் ரூபாய். மந்திரமூப்பனார் 1 இலட்சத்து 86 ஆயிரம் ரூபாய் 1996ல் வாங்கிய கடன். சண்முகம் 1995ல் வாங்கிய கடன் 1 இலட்சத்து 15 ஆயிரம் ரூபாய். சேரன் குடும்பத்தார் 1995ல் வாங்கியிருக்கிறார்கள். 1991லும் வாங்கியிருக்கிறார்கள் ஒன்பது இலட்சத்து 58 ஆயிரம் ரூபாய். விவசாயச் சங்கக் கூட்டுக் குழுவின் தலைவர் அவர். அவர் கட்ட வேண்டாமா? 40 சதவீதம்கூட அவர் கட்ட வேண்டாமா? சுந்தரமூர்த்தி 1996ல் வாங்கிய கடன் இலட்சத்து 20 ஆயிரம் ரூபாய். ராமகிருஷ்ணன், 1994ல் வாங்கிய கடன் இலட்சத்து 50 ஆயிரம் ரூபாய். ஆனந்தன் 1992ல் வாங்கிய கடன் 74 ஆயிரம் ரூபாய். குணசேகரன் 1996ல் வாங்கிய கடன் 61 ஆயிரம் ரூபாய். இந்த மாதிரி வந்து கொண்டே இருக்கிறது.

சில எம்.எல்.ஏ.க்கள் எல்லாம் இருக்கின்றார்கள். நான் பெயரை எல்லாம் சொல்ல விரும்பவில்லை. சொல்லிவிட்டு, அவர் முகத்தைப் பார்க்க எனக்கும் கஷ்டமாக இருக்கும். அவர்களுக்கும் கஷ்டமாக இருக்கும். இதிலே இந்த ஜப்தி நடவடிக்கை எடுக்கப்பட்டவர்களில் ஆர். மகாலிங்கம், பூண்டி, இவர் கட்ட வேண்டிய தொகை 18 ஆயிரத்து 902 ரூபாய். இவருக்கு 8.78 ஏக்கர் நிலம் சொந்தம். அரிசி ஆலை நடத்திக் கொண்டிருக்கிறார். அவரிடம் கேட்கக் கூடாதா? கட்டாயப்படுத்தக் கூடாதா?

பன்னீர் செல்வம், ஆச்சாள்புரம், கட்ட வேண்டிய தொகை 32 ஆயிரத்து 410 ரூபாய். இவருக்கு 6 ஏக்கர் நிலம் இருக்கிறது, கல்யாண மண்டபம் இருக்கிறது, நெல் வியாபாரம் இருக்கிறது. உரக்கடையும் இருக்கிறது. இவ்வளவும் இருக்கிறது. சிறிய விவசாயியா இவர்?

ராஜதுரை, தேவனாஞ்சேரி, பாக்கித் தொகை 15 ஆயிரம் ரூபாய்தான் இவருக்கு 8 ஏக்கர் நிலம் இருக்கிறது. சொந்தத்தில் டிராக்டர் உள்ளது.

மணிவண்ணன், செம்பியமாதேவி 43 ஆயிரம் ரூபாய் பாக்கி. இவருக்கு 10 ஏக்கர் நிலம் இருக்கிறது. அஞ்சல் துறையில் பணியாற்றுகிறார்.

பெருமாள், வலங்கைமான், பாக்கி 19 ஆயிரம் ரூபாய். இவருக்கு 6 ஏக்கர் நிலம் இருக்கிறது. ஜவுளிக்கடை சொந்தத்தில் நடத்துகிறார்.

### ஆதிதிராவிடர்களை தூண்டிவிடுவது போல் பேசுவதா?


எம். ராணி திருப்புறம்பியம், 23 ஆயிரம் ரூபாய் பாக்கி, 6 ஏக்கர் நிலம் இருக்கிறது. செங்கல் காளவாய் போட்டு செங்கல் வியாபாரம் செய்கிறார். இவர்களிடமிருந்தெல்லாம் பாக்கி வசூல் பண்ணக் கூடாதா? அதுவெல்லாம் ஜப்தி என்று சொல்லி பழனிச்சாமி போன்றவர்கள் எல்லாம் சொன்னால் கம்யூனிசத் தத்துவத்தை எப்போது மாற்றிக் கொண்டீர்கள் என்று நான் கேட்க விரும்புகிறேன்.

மிக முக்கியமாக டாக்டர் கிருஷ்ணசாமி ஒன்று சொன்னார். யாரோ சேட்டு மகளுக்கு 5 இலட்சம் ரூபாய் கொடுத்தோம் என்று சொன்னார். நானும் கொடுத்ததாகத் தெரியவில்லை. நிதித்துறையையும் கேட்டேன், அவர்களும் கொடுக்கவில்லை யென்று சொல்கிறார்கள். ஏதோ தவறான தகவல் அது. அதேநேரத்தில் கொலை செய்யப்படுகின்றவர்கள் யாராக இருந்தாலும், அவர்கள் ஆதிதிராவிட மக்களாக இருந்தாலும் அல்லது ஆதிதிராவிடர் அல்லாத மக்களாக இருந்தாலும், சாதிச் சண்டையில் கொலை செய்யப்பட்டால், ஏற்கனவே 50 ஆயிரம் ரூபாய் இருந்ததை இலட்சம் ரூபாயாக ஆக்கி, இப்போது 2 இலட்சம் ரூபாய். அவர்கள் ஜாதி இந்துக்களாக இருந்தாலும் சரி, தாழ்த்தப்பட்டவர்களாக இருந்தாலும் சரி, இரண்டு பேருக்கும் 2 இலட்சம் ரூபாய் என்ற அளவுக்கு உயர்த்தியிருக்கிறோம். இதிலே, ஏதோ சேட்டு மகளுக்கு 5 இலட்சம் கொடுத்தோம் என்று கூறி ஆதிதிராவிட மக்களைத் தூண்டிவிடுகின்ற முறையிலே பேசுவது சரியில்லையென்றே நான் தெரிவித்துக் கொள்கின்றேன்.

திரு. லத்தீப் அவர்கள் பேசியதைப் பற்றியும் நான் சில வார்த்தைகளைச் சொல்ல வேண்டும். இதற்கிடையிலே இந்த ஆளுநர் உரை வெறும் தாள் என்று சொன்னார்களே, அதில் என்னுடைய உள்ளத்தைக் கவருகின்ற ஒரு திட்டம், உணர்ச்சிமயமான ஒரு திட்டம் மனிதக் கழிவுகளை அகற்றும் இழிநிலை போக்குகின்ற ஒரு திட்டமாகும்.

### அனைவரும் பாராட்டியுள்ள சமத்துவபுரத் திட்டம்

இதுபோன்றத் திட்டங்களை இந்த அரசு இன்றல்ல; நான் முதல் முறையாக முதலமைச்சராக ஆன அந்தக் காலந்தொட்டு இதுவரையிலே தொடர்ந்து நடந்து வருகின்றது. கண்ணொளி வழங்குகின்றத் திட்டம் பரவலாக தமிழகம் முழுவதும் நடத்தப்படுகின்றத்



திட்டம். கைரிக்ஷாக்களை ஒழித்து சைக்கிள் ரிக்ஷா இலவசமாக வழங்கியத் திட்டம், இந்த அரசு அறிமுகப்படுத்தியத் திட்டம். தொழுநோய் இரவலருக்கு ஏறத்தாழ **4** ஆயிரம் பேர், **5** ஆயிரம் பேருக்கு ஒவ்வொரு மாவட்டத்திலும் இரவலர் விடுதிகள், மறுவாழ்வு இல்லங்களை அமைத்து அவர்களைப் பராமரித்து வருகின்றத் திட்டம்; அப்பொழுது **1976**க்கு முன்பே ஆரம்பித்து தொடர்ந்து நடந்து வருகின்றத் திட்டம். ஏழைப் பெண்களுக்குத் திருமண உதவி, மூவலூர் மூதாட்டி இராமாமிர்தம் அம்மையாருடைய நினைவாக நடத்தப்படுகின்றத் திட்டம். சமத்துவபுரம் திட்டம். நீங்கள் அனைவரும் பாராட்டிப் பேசியிருக்கிறீர்கள்.

ஆதிதிராவிட மக்களுக்கு இந்தியாவிலே முதன்முதலாக இலவசமாக கான்கிரீட்டு வீடு கட்டிய திட்டத்தை தமிழகத்திலே தி.மு.க. ஆட்சியிலேதான் நாம் அறிமுகப்படுத்தினோம். குடிசை மாற்று வாரியம், முன்பெல்லாம் குடிசை மேம்பாட்டுத் திட்டம் என்று இருந்தது. அதை மாற்றி மேம்பாடு ஒரு பக்கம் நடைபெறட்டும்; 'ஸ்லம் கிளியரன்ஸ்' – இருக்கின்ற குடிசைகளை அகற்றிவிட்டு, அங்கு மாடி வீடுகளைக் கட்டித் தருவது; குடிசைவாசிகளுக்கு இந்தத் திட்டம் இந்தியாவுக்கு வழி காட்டுகின்ற முறையிலே தமிழ்நாட்டிலேதான் தொடங்கினோம்.

பிளஸ் **2** மாணவர்களுக்கு பஸ் பாஸ் இலவசமாக வழங்குகின்றத் திட்டம். இப்படிப் பல திட்டங்கள் ஏழை எளிய மக்களை அடிப்படையாக வைத்து நடத்தப்படுகிற திட்டம். எப்படி மனிதனை வைத்து மனிதன் இழுக்கின்ற கை ரிக்ஷாவை அகற்றினோமோ, அதைப்போல மனிதக் கழிவுகளை அகற்றுகின்ற இழிநிலையை மனிதனிடமிருந்து விலக்க வேண்டும் என்பதற்காக ஒரு திட்டம் இந்த ஆளுநர் உரையிலே அறிவிக்கப்பட்டு இருக்கிறது. எல்லாவற்றையும் எதிர்த்துப் பேசிய சில பேர், பல பேர் பாராட்டியும் குறையும் சொல்லிப் பேசி இருக்கின்றீர்கள்; அதுவேறு விஷயம்; எல்லாவற்றையும் எதிர்க்க வேண்டுமே என்று எதிர்த்துப் பேசியவர்கள், இந்தத் திட்டத்தையாவது ஆதரிப்பார்கள் என்று நான் கருதுகிறேன். அவர்கள் அதையும்கூட ஆதரிக்க வில்லை.

ஒரு நல்ல பார்லி மென்டேரியன் என்பது பற்றி ஏ.டி.பன்னீர்செல்வம் ஒரு தடவை சொல்லி யிருக்கிறார். அவரை ஒருவர் கேள்வி கேட்கிறார். "நீங்கள் எல்லாவற்றையும் எதிர்க்கிறீர்களே; நீங்கள் ஆக்கப்பூர்வமாக என்ன செய்தீர்கள்" என்று. ஆக்கபூர்வமாக செய்த காரியங்களை எல்லாம் சொல்கிறார். திடீரென்று கேள்வி கேட்கிறார் செய்தியாளர். "அரசு ஆதிதிராவிட மக்களுக்கு இலவசமாக வீடு கட்டித் தருகிறது என்று சொன்னால் அதை நீங்கள் ஆதரிப்பீர்களா" என்று கேட்டார். உடனே ஏ.டி.பி. சொன்னார் "ஆதரிப்பேன். ஆதரித்துவிட்டு, வீடு கட்டித் தந்தால் மட்டும் போதாது; ஆளுக்கு **200** ரூபாய் கொடுக்க வேண்டும் அப்படீன்னு சொல்வேன்" என்று சொன்னார்.

அதுமாதிரி, நீங்கள் ஆக்கபூர்வமாக சொல்லுங்கள்; வேண்டாம் என்று சொல்லவில்லை. ஒரு எதிர்க்கட்சி, அந்த மாதிரி ஆக்கப் பூர்வமாக ஈடுபடலாம். ஆனால், இருக்கிற எந்தத் திட்டத்தையுமே ஒரு நல்ல திட்டத்தைக்கூட ஆதரிக்காமல், இந்த கவர்னர் உரை வெறும் வெற்றுத்தாள்; வெறும் காகிதம் என்றால்; காகிதத்தில்தான் கவர்னர் உரையை அச்சடிக்க முடியும்; கரன்சி நோட்டிலேயா அச்சடிக்க முடியும்**?** கரன்சி நோட்டிலே அச்சடிக்கப்பட்ட கவர்னர் உரை அல்ல இது; இது காகிதத்திலேதான் அச்சடித்து இருக்கிறோம். ஏழை எளிய மக்களுடைய இரத்தத்தைத் துடைக்க, அவர்களுடைய கண்ணீரைத் துடைக்க காலங்காலமாக இருந்து வருகின்ற இழிவைப் போக்க, மகாத்மா காந்தியடிகள், தந்தை பெரியார் – இவர்கள் எல்லாம் எதற்காகப் பாடுபட்டார்கள்**?** மனிதனுடைய இழிவுகள் நீக்கப்பட வேண்டும் என்பதற்காகப் பாடுபட்டார்கள்; அவர்களுடைய சுயமரியாதைக்காகப் பாடுபட்டார்கள். அதை மனதிலே வைத்துத்தான் இந்தத் திட்டத்தை நான் அறிவித்து இருக்கிறேன்.

**டாக்டர் வா.செ. குழந்தைசாமி**
**தினமணி மூலம் அளித்த நற்சான்று**

இந்தத் திட்டம் பற்றி நேற்றைய தினம் தினமணி பத்திரிகையிலே டாக்டர் வா.செ. குழந்தைசாமி, முன்னாள் துணைவேந்தராக அண்ணா

பல்கலைக்கழகத்திலும், இந்திரா காந்தி பல்கலைக்கழகத்திலும் பணியாற்றிய பெருந்தகை சொல்கிறார் :

"இந்த ஆண்டு ஆளுநர் உரையில் பாராட்டத்தக்க அம்சங்கள் பல இருக்கலாம். ஆனால், என் நெஞ்சைத் தொட்ட ஓர் அறிவிப்பு. இனம் அறிய இயலாத ஒரு மனநிறைவு அங்கம் முழுவதும் அலை போலப் பரவச் செய்த ஒரு பிரகடனம். 'மனிதக் கழிவுகளை மனிதன் சுமக்கும் அவலம் தமிழ் மண்ணிலே இருந்து விரைவில் மறையும்' என்பதுதான். மாந்தர் கழித்ததை மாந்தர் சுமக்கும் அவலத்தை அகற்றும் இந்த முடிவு ஒரு நிகழ்ச்சியை என் நினைவிற்கு கொண்டு வருகிறது. 1989-90ஆம் நிதியாண்டில் கலைஞர் தலைமையில் நடந்த தமிழகத் திட்டக்குழுக் கூட்டம் ஒன்றில் இக்கொடுமை ஒழிக்கப்பட வேண்டும் என்ற கருத்து முன் வைக்கப்பட்டது. அப்போது மைய அரசின் நகர்ப்புற மேம்பாட்டுத்துறை அமைச்சராக இருந்த முரசொலி மாறன் தேசிய அளவில் இந்தப் பழக்கத்தை ஒழிக்கும் திட்டம் ஒன்றைச் செயல்படுத்த இருப்பதாக முதல்வர் கலைஞரிடம் கூறினார். எனவே, அதைப்பற்றிக் குழு விவாதிக்கவில்லை. பின்னர் மைய அரசு கவிழ்ந்தது. மாநில அரசும் கலைக்கப்பட்டது. இந்தச் சாபக்கேடு தொடர்ந்தது.

கங்கை வெள்ளமும் கழுவ இயலாத இந்தக் களங்கத்தைத் தலைமுறை தலைமுறையாகச் சுமந்து, வயிற்றைக் கழுவி, வாழ்க்கை நடத்தும் அப்பாவி மக்களின் உள்ளக் குமறல்களின் உருவகமாக அமைந்தது, பின்வரும் கவிதை என்று அவர் எழுதிய கவிதையில் 4 வரி மாத்திரம் படித்துக் காட்டுகிறேன்:

*"மாந்தர் கழித்தலை மாந்தர் சுமந்திடும்*
*வாழ்வு தொடர்ந்திடும் நாட்டினிலே,*
*போந்த சுதந்திரம், பேசு சமத்துவம்*
*பொய்யடா; யாவையும் ஏட்டினிலே".*

இந்த ஆண்டு முதல் மனித இனத்தையே மாசுபடுத்தி வந்த ஓர் இழிவு மறைகிறது. தன்மான உணர்வுள்ள சமுதாயம் தலைகுனிய வேண்டிய ஒரு மாசு அகல்கிறது. தமிழ்ச் சமுதாயத்தின் சரிதையில் கறை படிந்த பக்கம் கடந்த காலச் செய்தியாகிறது. ஆளுநர் உரையில் ஒரு நீண்ட வாக்கியத்தின் சிறு பகுதியாக மட்டுமே இடம் பெற்றிருக்கும் இந்த அறிவிப்பு, ஒரு சாதாரண திட்டம் அன்று; தாழ்த்தப்பட்ட மக்களின் சமுதாய வாழ்வில் ஒரு மகத்தான திருப்பம். வரலாறு பதிவு செய்யத் தவறாது. இதன் தாக்கம் மற்ற மாநிலங்களிலும் எதிரொலிக்கும். வைதீக மொழியில் கூறுவதானால், வைக்கம் வீரரின் ஆவி வாழ்த்தும்"

– என்று குழந்தைச்சாமி அவர்கள் இப்படி ஒரு நற்சான்றை தினமணி பத்திரிகையிலே எழுதி இருக்கிறார்.

**கழிவை சுமக்கின்றவர்களுக்கு விரைவில் மாற்று வேலை**

இதில் நாம் அனைவரும் ஒன்றுபட்டு இந்தத் திட்டத்தை வெற்றிகரமாக நிறைவேற்றிட வேண்டும். இதிலே ஈடுபட்டிருக்கின்ற தொழிலாளர்களுக்கு, கழிவைச் சுமக்கின்றவர்களுக்கு மாற்று வேலை தருகின்ற திட்டத்தினை வெகுவிரைவிலே இந்த அரசு அறிவிக்கும். 6,7 மாதங்களுக்குள்ளாக இந்தத் திட்டத்தை வெற்றிகரமாக நடத்தி முடிப்போம் என்ற உறுதியை இந்த அவைக்குத் தெரிவித்துக் கொள்கிறேன்.

இறுதியாக, திரு.அப்துல் லத்தீப் அவர்கள் பேசும்போது ஒன்றைக் குறிப்பிட்டார்கள். என் மீது அவருக்கு இருக்கின்ற நம்பிக்கையை இந்த அரசு மீது அவருக்கு இருக்கின்ற நம்பிக்கையை உறுதிப்படுத்தியதோடு மாத்திரமல்ல; இஸ்லாமிய சமுதாயத்தின் மீது, சிறுபான்மையின சமுதாயத்தின் மீது, அது இஸ்லாமியராக இருந்தாலும், கிறிஸ்துவராக இருந்தாலும், சிறுபான்மையினருக்கு என்றைக்கும் தி.மு.க. ஆட்சி துணையாக இருக்கும்; இன்னும் சொல்லப் போனால் அமைந்திருக்கின்ற தி.மு.க. கூட்டணி என்றைக்கும் துணையாக இருக்கும் என்ற உறுதியை எதிர்க்கட்சித் தலைவர் அவர்களின் சார்பிலும், இங்கே வீற்றிருக்கின்ற மற்ற தோழமைக் கட்சிகளின் சார்பிலும், நான் லத்தீப் அவர்களுக்கும், இஸ்லாமிய சமூகத்தினருக்கும் தெரிவித்துக் கொள்ள பெரிதும் கடமைப்பட்டிருக்கிறேன்.

இங்கே யாரும் சிறுபான்மையினர் சமுதாயம் சீரழிக்கப்பட வேண்டும்; சீர் குலைக்கப்பட வேண்டும்; வன்முறைக்கு ஆளாக்கப்பட வேண்டுமென்ற எண்ணத்தை ஏற்றுக் கொள்பவர்கள் அல்ல. லத்தீப் அவர்கள் சொன்ன ஒரே ஒரு குறை, தீவிரவாதிகளை வேட்டையாடுவது என்கின்ற பெயரால் அப்பாவி மக்களை துன்புறுத்துகிறார்கள் என்று சொன்னார்கள். அவர்கள் இதை எடுத்துச் சொல்லச் சொல்ல – காவலர்கள் அதில் எவ்வளவு நிதானமாக நடந்து கொள்ள வேண்டுமோ அவ்வளவு நிதானமாக நடக்கத் தொடங்கி இருக்கிறார்கள் என்பதை தெரிவித்துக் கொள்கிறேன். இருந்தாலும் ஒன்றைச் சொல்ல விரும்புகிறேன்.

நான் ஏற்கெனவே சொன்ன உதாரணத்தைத்தான் சொல்ல விரும்புகிறேன். ஒரு பள்ளி வகுப்பில் ஆசிரியருடைய பேனா காணாமல் போய்விட்டது என்றால் அவர் உடனே இவன்தான் எடுத்திருப்பான் என்று 2 பேரைக் கூப்பிட்டு, "நீதான் எடுத்தாய்" என்று சொன்னால் வம்பு வரும். அதற்காக என்ன செய்வார் என்றால், அந்த ஆசிரியர் எல்லா பையன்களும் கையிலே வைத்திருக்கிற பையைத் திறந்து காட்டுங்கள் என்று சொல்வார். எல்லோரும் கையில் உள்ள பையைத் திறந்து காட்டுவார்கள். அப்போதுதான் மற்றவர்களுக்கு இவர் மீது கோபம் வராது. நம்மை திருடன் என்று நினைத்து விட்டாரே

என்று கோபம் வராது. எல்லோருடைய பைகளையும் திறந்து பார்த்து, உண்மையான திருடனைக் கண்டுபிடிப்பதைப் போல, சில காரியங்கள் தமிழகத்திலே காவல்துறை மூலம் நடைபெற்றிருக்கலாம் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். அதற்காக இஸ்லாமியப் பெருமக்களானாலும் சரி, கிறிஸ்தவ பெருமக்களானாலும் சரி, மனம் வருந்தத் தேவையில்லை என்பதை எடுத்துக் காட்டிக் கொள்கிறேன்.

**கவர்னர் உரையில் கண்டிக்க வேண்டிய அளவிற்குத்தான் கண்டிக்க முடியும்**

இன்றைக்கு இந்தியா முழுவதும் ஆங்காங்கே நடைபெறுகின்ற வன்முறைகள், சிறுபான்மை சமுதாயத்திற்கு இன்றைக்கு அறைகூவல் விடுகின்ற முறையிலே நடைபெறுகின்ற வன்முறைகளையெல்லாம் இந்த மாமன்றம் கண்டித்திருக்கிறது. நம்முடைய மணி அவர்கள், மார்க்சிஸ்ட் கட்சியின் சார்பிலே பேசும்போது, விலைவாசி உயர்வைக் கண்டிக்கவில்லை என்று சொன்னார்கள். பீகார் அரசு கலைப்பை கண்டிக்கவில்லை என்று சொன்னார்கள். நான் கண்டிப்பேன். வெளியிலேயும் கண்டிப்பேன், உள்ளேயும் கண்டிப்பேன். கவர்னர் உரையின் மூலமாகக் கண்டிக்க வேண்டிய அளவிற்குத்தான் கண்டிக்க முடியும் என்பதை மணி அவர்கள் உணராதவர் அல்ல என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். இந்த உரைக்கு நன்றியுரை பகர்ந்தவர்களுக்கும், கருத்துரை பகர்ந்தவர்களுக்கும் என்னுடைய அன்பான நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

*- மேதகு ஆளுநர் உரை மீதான விவாதங்களுக்குப் பதிலளித்து சட்டப்பேரவையில் 23-2-1999 அன்று, மாண்புமிகு முதலமைச்சர் கலைஞர் அவர்கள் ஆற்றிய உரையிலிருந்து...*

---

## சமுதாயச் சீர்திருத்தம்

சமூகச் சீர்திருத்தம் என்ற பெயரால் இங்கும் அங்கும் ஏதோ மாறுதல்களைச் செய்வதோ, ஒட்டு வேலை - மேல் பூச்சு வேலை செய்வதோ பயன்தராது. இன்றைய சமுதாய அமைப்பையே அடியோடு ஒழித்து விட்டுப் புதியதொரு சமுதாய அமைப்பை - சாதியற்ற, உயர்தாழ்வு அற்ற சமுதாய அமைப்பை உருவாக்க வேண்டும்.

**– தந்தை பெரியார்**




*சாதிகள் இருந்தாக வேண்டும் என்று எண்ணுபவர்கள், எவ்வழி உலகம் செல்கிறது என்பதை அறியாத ஏமாளிகள். காலத்தின் தாக்குதலைக் கயவரின் தாக்குதல் என்றும், பகுத்தறிவின் வேகத்தைப் பாப காரியம் என்றும் தவறாகக் கருதும் பக்குவமற்றவர்கள்.*

**– அண்ணா**

# தமிழ் இலக்கியத்தில் பொருளியல் கோட்பாடுகள்

– முனைவர் ச.ரா.நடராஜன்

இலக்கியம் என்பது காலத்தின் கண்ணாடி. மக்களின் வாழ்வியல் நெறியிலிருந்து வடித்தெடுப்பது இலக்கியமாகும். பல்வேறு காலங்களில் வாழ்ந்த மக்களின் வாழ்க்கை, கலாச்சாரம், நாகரிகம் மற்றும் பண்பாடு இவற்றை பிரதிபலிப்பனவே இலக்கியங்கள் ஆகும். இத்தகு இலக்கியங்கள் கால வெள்ளத்துக்கு ஏற்ப பல மாற்றங்களை அடைகின்றன. சில கால வெள்ளத்தில் மூழ்கி மறைந்து விட்டன. சில இலக்கியங்கள் காலத்தை வென்று என்றும் நிலவுகின்றன. தமிழ் இலக்கியத்தை காலத்தின் அடிப்படையில் சங்ககால இலக்கியங்கள், சங்கமருவிய கால இலக்கியங்கள், காப்பியகால இலக்கியங்கள் மற்றும் உரையாளர் கால இலக்கியங்கள் என்றும், அரசியலை அடிப்படையாகக் கொண்டு பல்லவர்க்கு முந்திய கால இலக்கியம், பல்லவர்கால இலக்கியம், சோழர்கால இலக்கியம் மற்றும் நாயக்கர்கால இலக்கியம் என்று பகுக்கலாம். இலக்கியங்கள் உணர்த்தும் பொருளைக் கொண்டு அகப்பொருள் இலக்கியங்கள் என்றும் புறப்பொருள் இலக்கியங்கள் என்றும் இருகூறுகளாகவும் பகுக்கலாம். அகப்பொருள் இலக்கியங்கள் பொதுவாகத் தலைவன், தலைவி இருவருக்கும் இடையே இலங்கும் உள்ள உணர்வுகளைப் பற்றியதாகும். புறப்பொருள் இலக்கியங்கள், போர், வீரம் கொடை, புகழ், அறநெறி போன்ற புறக்கூறுகளைப் பற்றியதாகும். பொதுவாக இலக்கியங்கள் மூன்று முக்கிய வாழ்வியல் நெறிகளை – காதல், வீரம், பக்தி நெறிகளை – விளக்குகின்றன. மக்களின் வாழ்வியல் நெறிகள் அவர்தம் நாட்டின் பொருளாதாரத்தை அடிப்படையாகக் கொண்டே அமைகின்றன.



பொருளாதாரம் என்பது மார்ஷல் என்பவரின் கூற்றுப்படி மனிதனின் அன்றாட நடவடிக்கைகளைப் பற்றிய ஓர் ஆய்வு ஆகும்.

"Economics is the study of human behaviour in the ordinery business of life"

- Alferd Marshall

மக்களின் நடவடிக்கைகளை அடிப்படையாகக் கொண்டு பல்வேறு பொருளியல் கோட்பாடுகள் எழுந்தன. அவற்றுள் வர்த்தகம் அல்லது வாணிபத்தை அடிப்படையாகக் கொண்ட கோட்பாடு (Mercantalism) விவசாயத்தை அடிப்படையாகக் கொண்ட பருப் பொருள் ஆக்க கோட்பாடு (Psysiocracy) என இரண்டு அடிப்படை பொருளியல் கோட்பாடுகள் பொருளாதாரத்தில் இலங்குகின்றன. இக்கோட்பாடுகள் நம் தமிழ் இலக்கியத்தில் எவ்வாறு நின்று நிலவுகின்றன என்பதை ஆய்வதே இக்கட்டுரையின் நோக்கமாகும்.

வர்த்தக கோட்பாட்டின்படி ஒரு நாட்டின் பொருளாதார வளர்ச்சி அல்லது முன்னேற்றம் என்பது அந்நாட்டின் கருவூலத்தில் உள்ள தங்கம், வெள்ளி மற்றும் விலை மதிப்புமிக்க உலோகங்களின் இருப்பைக் கொண்ட நிர்ணயிக்க முடியும். இத்தகைய மதிப்புமிக்க உலோகத்தின் இருப்பைப் பெருக்க அந்த நாட்டில் சுரங்கங்கள் இருப்பின் இந்த உலோகங்களின் இருப்பினை அதிகரிக்க முடியும். சுரங்கங்கள் இல்லை எனில் தங்கத்தின் இருப்பைப் பெருக்க அண்டை நாடுகளுடன் போரிட்டு அங்கிருந்து கருவூலகத்தைக் கவர்ந்து வந்து தங்கத்தின் இருப்பினை அதிகரிக்கலாம். மேலும் பிற நாடுகளுக்குத் தேவையான பண்டங்களை உற்பத்தி செய்து ஏற்றுமதி செய்து அதற்கு ஈடாக தங்கத்தைப் பெற்று நாட்டின் தங்கத்தை இருப்பை அதிகரிக்கலாம். பண்டங்களை உற்பத்தி செய்ய தொழிற்சாலைகளையும், வாணிபத்தையும் பெருக்க வேண்டும். தொழிற்சாலைகளில் பணியாற்றவும், வெளிநாடுகளுடன் வாணிபம் செய்யவும், போரில் ஈடுபடவும் மக்கள் தேவைப்படுகின்றனர். எனவே அதிக மக்கட்பெருக்கம் அதிக வளத்துக்கு வழிகாட்டும் என்று வர்த்தகக் கோட்பாட்டினர் சொன்ன இக்கருத்துக்களை வள்ளுவன்

*பெறுமவற்றுள் யாமறிவதில்லை அறிவறிந்த*
*மக்கட் பேறு அல்லபிற*

– என்னும் குறளில் மக்கள் செல்வத்தின் சிறப்பினை வலியுறுத்தி கூறியுள்ளார்.

பகைநாட்டவருடன் போர்புரியவென நம் தமிழரசர்கள் தேர்ப்படை, யானைப்படை, குதிரைப்படை மற்றும் காலாட்படைகளை வைத்திருந்தனர் என்பதற்கு நம் தமிழ் இலக்கியத்தில் சான்றுகள் பல உள.

யானைப்படையின் சிறப்பாக – போர் பயிற்சி நன்குடைய யானைகள் மலையோ என பகைவர் மருளும் உயர்ந்த உருவமுடையனவாயும், சினம் மிகுந்து போரில் பகை மறவரைக் கொன்று செருக்கி திரிந்தன என்றும் பகைவர் மேல் பாயும் புறவிகளின் குளம்பு கிண்ட எழுந்த நிறமிக்க தூளி விண்ணிடத்தே வெயிலை

மறைப்பவும். தாவுகின்ற குதிரைகளைப் பூட்டி விரைந்து செல்லும் இயல்புடைய உறுதியானத் தேர்கள், சூறைக்காற்றுப் போல் விரைந்து சுழலவும், வாட்போரின் மிகுந்த வண்ணம் உடைய காலாட்படை மறவர்தம் தோள்களாலே இயற்றும் முறை பிறழாப்போரினைச் செய்து வெற்றியை முற்றச் செய்யும் பெற்றுடையவராய் இருந்தனர் என்றும் மதுரைக் காஞ்சி சான்று பகர்கின்றது. இதிலிருந்து நம் தமிழரசர்கள் பகை நாட்டவரோடு பொருதுவதற்குப் பெரும்படை உடையவராக இருந்தனர் என்பது விளங்கும்.

அயல்நாடுகளுடன் போர்புரியவும், கடல் வாணிபம் செய்யவும் நம் தமிழரசர்கள் விசும்பினோடே கலந்து ஒன்றுபட்டுத் தோன்றுதலையுடைய பெரியதாய் மூன்று நீர்மையை உடைய கரிய கடலிடத்தே எழும் அலைகளைக் குறுக்கே பிளந்து ஓடும் நெடிய கொடி உயர்த்தப்பட்டு பாய் விரிக்கப்பட்டு இனியமுரசம் முழங்கப் பொன் மிகுதற்குக் காரணமான சிறந்த பண்டங்களை ஏற்றிக் கொணர்ந்த பெரிய மரக்கலங்கள் நிற்கும் துறைமுகத்தினை கொண்டிருந்தனர் என்று மதுரைக் காஞ்சி செப்புகின்றது. நாட்டின் வளத்தினைப் பெருக்கவும், வெளிநாடுகளுடன் வாணிபத் தொடர்புக் கொள்ளவும் நம் தமிழகத்தில் தொண்டி, முசிறி, கொற்கை போன்ற இடங்களில் துறைமுகங்களை நிறுவி அயல்நாட்டு வாணிபத்தில் சிறந்து விளங்கியதாக தமிழ் இலக்கியங்கள் சான்று பகர்கின்றன. ஆவியண்ண ஆடைகளையும், சந்தனம், மிளகு, ஏலம் போன்ற வாசனைத் திரவியங்களையும் வாங்கிச்செல்ல அரபியர்களும், ரோமர்களும், யவணர்களும் தமிழகத்து சந்தைகளுக்கு வந்து சென்றதற்கான சான்றுகள் பல உள்ளன.

கரிகால்பெருவளத்தான் மீது கடியலூர் உருத்திரங் கண்ணனாரால் பாடப்பட்ட பட்டினப்பாலையின் பாடல் ஏற்றுமதி இறக்குமதிக்கு உதவும் பண்டகச்சாலை முற்றம் எவ்வாறு இருந்தது என்பதை விளங்கா நிற்கும்.

*வான்முகந் நீர்மலைப் பொழியவும்*
*மலைப் பொழிந்த நீர் கடற்பரப்பவும்*
*மாரி பெய்யும் பருவம் போல*
*நீரினின்று நிலத்தேற்றவும்*
*நிலத்தினின்று நீர்ப்பரப்பவும்*
*அளந்தறியாப் பலபண்டம்*
*வரம்பறியாமை வந்தீண்டி*
*அருங்கடிப் பெருங்காப்பின்*
*வலியுடை வல்லணங்கினோன*
*புலிப்பொருத்தி புறம்போக்கி*
*நீரின் வந்த நிமிர்பரிப்புரவியும்*
*காலின் வந்த கருங்கறி மூடையும்*
*வடமலைப் பிறந்த மணியும்பொன்னும்*
*குடமலைப் பிறந்த ஆரமும் அகிலும்*
*தென்கடல் முத்தும் குணகடல் துகிலும்*
*கங்கை வாரியும் காவிரி பயிறும்*
*ஈழத்துணவும் தாழகத்தாக்கமும்*
*அரியவும் பெரியவும் ஈன்டி*
*வலிந்தலை மயங்கிய நனந்தலைமறுகின்*

– என்ற பாடலில் கரிகால் பெருவளத்தானின் துறைமுகத்தில் அரேபியாவிலிருந்து இறக்குமதி செய்யப்பட்ட வலிமை மிக்க குதிரைகளும், ஏற்றுமதிக்கென மிளகும், பொன்னும், மணியும், அகில் போன்ற வாசனைத் திரவியங்களும், ஆடை ஆபரணங்களும், முத்தும், கங்கை மற்றும் காவிரித்துறையில் விளைந்த விளைப்பொருட்களும் மலைப்போல் குவிந்து கிடந்தன என்னும் செய்தியிலிருந்து பன்னாட்டு வாணிபத்துக்கு எவ்வளவு முக்கியத்துவம் தமிழகத்தில் தரப்பட்டது என்பது சொல்லாவிளங்கும்.

வாணிபத்தின் சிறப்பினைக் கருதியே திரைக்கடலோடியும் திரவியம் தேடு என்னும் பழமொழி நம் இலக்கியத்தில் இன்றும் நின்று நிலவுகிறது. பன்னாட்டு வாணிபத்தில் ஈடுபடுவோர்க்குப் பெருவணிகன் என்னும் பட்டத்தை வழங்கி அரசன் அயல்நாட்டு வாணிபத்தை ஊக்குவித்தனர். நாட்டின் வளத்தைப் பெருக்க பல்வேறு ஆயத்தீர்வுகளையும், நிலத்தீர்வை, சுங்கவரி போன்றவற்றை வசூலித்தனர். தமிழ் மன்னர்கள் பல்வேறு நாடுகளுடன் போரிட்டு அந்த நாட்டின் செல்வங்களை கவர்ந்து வந்து தன் நாட்டின் கருவறையில் நிரப்பினர். சுமத்ரா, ஜாவா, போர்னியோ போன்ற நாடுகளை தமது ஆதிக்கத்தின் கீழ் கொண்டிருந்தனர் என்றும் நம் தமிழ் இலக்கியங்கள் சான்று பகர்கின்றன. இக்காலத்தில் நடத்தப்படும் தொழில் மற்றும் வணிக பொருட்காட்சிகளைப் போல் நம் பழந்தமிழகத்தில் இந்திர விழா ஆண்டுதோறும் நடத்தப்பட்டத்திலிருந்து உள்நாட்டு வாணிபத்தைப் பெருக்க இந்த விழாக்களை நம் தமிழர் பயன்படுத்திக் கொண்டனர்.

வலிமையும், வளமும் மிக்க அரசனின் கருவூலம் சுங்கப் பொருள்களாலும், பகைவரிடம் இருந்து திரையாகப் பெற்றப் பொருள்களாலும் நிறைந்து இருக்கும் என்று வள்ளுவர்

*உறுபொருளும் உல்கு பொருளும் தன்ஒன்னார்த்*
*தெறுபொருளும் வேந்தன் பொருள்*

– என்னும் குறளில் தெளிவுபடுத்தி உள்ளார்.

ஆற்றல் மிக்க நாடு எது என்று கேட்கும்போது வள்ளுவர்

*பெரும் பொருளால் பெட்டகத்தாகி அருங்கேட்டால்*
*ஆற்ற விளைவது நாடு*

என்னும் குறளில் ஆற்றல் மிக்க நாடு பெரும் பொருள் வளத்தால் சிறப்புப் பெற்று இருக்கும் என்னும் வர்த்தகக் கோட்பாட்டினை வலியுறுத்துகின்றார்.

நம் தமிழகத்தின் சந்தைகளில் சிறுகுடி என்னும் உழவர்களும், பெருந்தொழுவர் என்னும் பெருவணிகர்களும், ஏனைய நால்வகை நிலங்களில் வாழும் மக்களின் தேவைகளைப் பூர்த்தி செய்யும் வகையில் வாணிபம் நடத்தினர் என்றும் அவ்வாணிபம்

*வாணிகம் செய்வார்க்கு வாணிகம் பேணிப்*
*பிறவும் தமபோற்செயின்* – குறள்

*தமவும் பிறவும் ஒப்பநாடிக்*
*கொள்வதூஉ மிகைக்கொளாது*
*கொடுப்பதூஉம் குறைகொடாது*
*பல்பண்டம் பகர்ந்து வீசும்*
*தொல் கொண்டித்துவன்றிருக்கை*

- பட்டினப்பாலை

வரிகளிலிருந்து வாணிபம் பெருகியது என்பதை அறியலாம். இச்சந்தைகளில் சூல் முற்றி ஒளி முதிர்ந்த சீரிய முத்துக்களும், சங்குகளும், நிலம் பொறுக்கவியலாத பொருட்குவியலையும், கெடாத பெருக்கத்தை உடைய புதுவருவாயும் இருந்தன என அறிகிறோம். நம் பழந்தமிழகத்தில் நாளங்காடியும், அல்லங்காடியும் இருந்தன.

தமிழகத்தின் கடை வீதிகள் ஆறுகிடந்தென்ன அகன்ற தெருவாகிய கடை வீதியின் இருபுறங்களில் உள்ள கடைகளில் பல்வேறு மொழி பேசும் (யவனம், அராபியம், கிரேக்கம்) பல்வேறு தேசத்து வணிக மக்களும் ஒன்று திரண்டு பேசும் மொழியின் ஆராவாரமும் சேர்ந்து அங்காடியில் பல்வேறு பண்ணியம் பகர்வோரும், வாசனை மலர்களை விற்போரும், வெற்றிலைப்பாக்கு விற்போரும் திரண்டுகொண்டிருந்தனர். மதுரை மாநகரத்து நாளங்காடி பண்டங்கள் மக்கள் கொள்ளக் கொள்ளக் குறையமாலும் வணிகர்கள் மேலும் மேலும் கொண்டுவரக் கொண்டுவர நிறைவுராமலும் இருந்தது. முகில் கொள்ளுதலால் குறையாமலும், ஆறுகள் புகுதலால் பறந்து கிடக்கும் கடலைப்போன்று நாளங்காடி இருந்ததாக மதுரைக் காஞ்சி சான்று பகர்கின்றது. இந்த அங்காடியில் சங்குகளை அறுத்து வளையல் முதலியனவாக கடைவாரும், மணிகளை துளையிடுவோரும், பொன்னை உரையிட்டு அறுதியிடும் பொன் வணிகரும், புடவை விற்பாரும், செம்பினை நிறுத்தி வாங்குவோரும், பூக்களையும் சாந்தையும் ஆராய்ந்து விற்போரும், ஓவியம் எழுதுவோரும் பிறரும் திரண்டு ஒருவர் காலோடு ஒருவர் கால் பொருந்துமாறு நின்று வாணிபம் செய்தனர். அல்லங்காடியில் நல்ல பாய்களை விரித்து காற்றுக் கொண்டு வருகின்ற மரக்கலங்களிற் கொணர்ந்த பல்வேறு பண்டங்களை இறக்கும் ஓசையும், யவனர் போன்ற அயல்நாட்டு வணிகர் நம் தமிழகத்தில் செய்த ஆடை அணிகலன்களை வாங்க உலாவுதலால் எழும் ஓசையும் கொண்டிருந்ததாக அறிய வருகின்றது. இந்த அங்காடியில் சிவந்து நுண்ணிதாகும் வடிவாலே கண்களைக் கவரும் ஒன்றிய பூத்தொழிலையுடைய ஆடைகளும், பொன்னிட்ட உடைவாளும், மாணிக்கமாலை அணிந்த மார்புடைய பெருநிதிக்கிழார்கள் வாணிகம் செய்தனர். வணிகர் வீதி பலவாய் வேறுபட்ட பண்டங்களோட உணவுப் பொருள்களும், மிக்க அழகு பெற்று மலையிடத்தும், நிலமிடத்தும், நீரிடத்தும் பிற இடங்களிலிருந்தும் பெறப்பட்ட மணி, முத்து, பவழம், பொன் முதலியவற்றை பண்ட மாற்றாக பெற்று அயல் நாடுகளினின்றும் கொணர்ந்த பண்டங்களை விற்கும் வணிகர் உறைந்தனர்.



*வடுவஞ்சி வாய்மொழிந்து*
*தமவும்பிறவும் ஒப்பநாடிக்*
*கொள்வதூஉ மிகைக் கொளாது*
*கொடுப்பதூஉங் குறை கொடாது*
*பல்பண்டம் பகர்ந்து*

– என்னும் வரிகளில் இருந்து பழந்தமிழகத்தில் அல்லும் பகலும் வாணிபம்அயராது நடந்து நாட்டின் வளம் பெருக வழிகோளியது என்பது வெள்ளிடைமலை.

## பருப்பொருள் ஆக்கக்கோட்பாடு

தமிழர்தம் நாகரிகம் இயற்கையோடு இயைந்ததொன்றாகும். இயற்கையை அடியொற்றிதாம் வாழ்ந்த நிலத்தை ஐந்து பகுதிகளாகப் பகுத்து, ஒவ்வொரு பகுதிக்கும் ஒரு தொழிலை வகுத்து பழங்காலத்தே (Territorial Division of Labour) நிலம் சார்ந்த பணிப்பகுபாடு செய்து வாழ்ந்தனர்.

பருப்பொருள் ஆக்கக் கோட்பாட்டினர் நாட்டின் வாட்டத்தைப் போக்கி பொருளாதாரத்துக்கு ஆக்கம் தர வல்லது விவசாயமே என்று கருதினர். ஏனெனில் விவசாயம் இயற்கையோடு இரண்டறக் கலந்துள்ளதாகும். ஒரு நெல்மணியிலிருந்து பல நெல்கதிர்கள் கிடைக்கின்றன.

இதனையே மதுரைக் காஞ்சியில் –

*"தொடுப்பின் வித்தியது ஆயிரம் விளைய"*

என்னும் வரியில் ஒரு விதைப்பின்கண் வித்திய விதை ஆயிரமாக விளையும் என்றும் கூறப்பட்டுள்ளது. எனவே உபரி உற்பத்தி என்பது விவசாயத்தில் மட்டுமே கிடைக்கும். வாணிபத்திலும் தொழிலிலும் உபரி உற்பத்திக்கு வாய்ப்பில்லை. விவசாயம் மட்டுமே செல்வத்தை ஆக்கவல்லது. விவசாயத்துக்குப் புறம்பான செயல்கள் யாவும் நாட்டு முன்னேற்றத்துக்குத் தடையாக அமைவன. விவசாய வளர்ச்சிக்கு வழிவகுக்கும்

**மனிதன் பெண்களைத் தன்னுடைய சொத்தாக மதிக்கிறானே ஒழிய, தன்னைப்போன்ற உணர்ச்சிக்கு அருகதையுள்ள மனித வர்க்கம் என்று மதிக்கிறானா?**

**– பெரியார்**

செயல்கள் யாவும் பொருளாதார முன்னேற்றத்துக்கு வித்திட்டு நாட்டு முன்னேற்றத்துக்கு வழிகோலும் என்று கருதினர். எனவே உழவே ஒரு நாட்டினை வலிமை உடையதாக மாற்றும் என்னும் இக்கருத்தை வள்ளுவர்

*பல்குடை நிழலும் தம்முடைக்கீழ்க் காண்பர்*
*அல்குடை நிழலவர் – என்னும் குறளில்*

நெற்கதிர்களின் நிழலையே தமக்குடையதாக கொண்ட உழவர்கள் உள்ள நாட்டின் அரசன் மற்ற அரசர்களின் ஆதிக்கத்தில் உள்ள நிலத்தையும் தன் ஆதிக்கத்தில்கொண்டு வரும் வல்லமை பெறுவர் என்று கூறியுள்ளார்.

ஒரு நாட்டின் வளர்ச்சிக்கு அடிப்படையாக அமைவது விவசாயமே என்பதற்குப் பின்வரும்பாடல் சான்று பகர்கி றது

*வரப்புயர நீர் உயரும், நீர் உயர நெல் உயரும்*
*நெல்உயர குடி உயரும், குடி உயர கோல் உயரும்*

இவ்வரிகள் விவசாயத்தின் வளர்ச்சி எவ்வாறு நாட்டின் வளர்ச்சிக்கு வழி வகுக்கின்றது என்பதைத் தெள்ளிதின் விளக்குகின்றன

உழவே நாட்டின் உயிர்நாடி என்பதை வள்ளுவர்

*சுழன்றும் ஏர்ப்பின்னது உலகம் – அதனால்*
*உழந்தும் உழவே தலை – என்றும்*

*உழுவார் உலகத்தார்க்கு ஆணி அஃதாற்றது*
*எழுதுவாரையெல்லாம் பொருத்து – என்று*

உழுபவர் உலகத்தவர்க்கு அச்சாணி போன்றவர் என்று வள்ளுவர் கூறியுள்ள இக்கருத்துக்கள் யாவும் பருப்பொருள் ஆக்கக்கோட்பாட்டினர் கூறிய கருத்துக்கள் நம் தமிழ் இலக்கியத்தில் இன்றைக்கு இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்பே நின்று நிலவி வந்துள்ளது என்பது விளங்கும்

***நல அரசுகள்***

இரண்டாவது உலகப்போருக்குப் பிறகு உலகில்உள்ள எல்லா நாடுகளும் தங்களின் பொருளாதாரக் கோட்பாடு எதுவாயினும் நல அரசினை அமைப்பது தமது குறிக்கோளாக கொண்டுள்ளன. நல அரசு என்பது தம் மக்களின் நல்வாழ்விற்கு அடிப்படையான செயல்களில் ஈடுபடுவது என்பதாகும். நலஅரசுகள் எவ்வாறு இருக்க வேண்டும் என்ற இக்கால பொருளியல் விற்பன்னர்களின் கருத்துக்களை வள்ளுவன் இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்பே பின்வரும் குறள்களில் விளக்குகின்றார்.

*உறுபசியும் ஓவாப் பிணியும் செறு பகையும்*
*சேராது இருப்பது நாடு*

என்னும் குறளில் மிக்கப்பசியும், ஓயாத நோயும், அழிவு செய்யும்பகையும் தன்னிடம் சேராமல் நல்ல வகையில் நடைபெறுவதே நாடு என்றும்

*பிணியின்மை செல்வம் விளையின்பம் ஏமம்*
*அணியென்ப நாட்டிற்கு இவ்வைந்தும்*

என்னும் குறளில் நோயில்லாதிருத்தல், செல்வம், விளைபொருள்வளம், இன்பவாழ்வு, நல்ல காவல் ஆகிய இந்த ஐந்தும் நாட்டிற்கு அழகு என்று கூறியுள்ளார்.

***நல அரசுகளின் முடிவார்ந்த குறிக்கோள்***

நல அரசின் குறிக்கோள் தம் நாட்டு மக்களுக்குத் தேவைப்படும் பண்டங்களை வரைவிலாது வழங்க வேண்டும். மக்களின் நுகர்ச்சியால் எந்த அளவு பண்டத்தின் அளவு, குறைகின்றதோ அந்த அளவிற்கு அந்த பண்டங்களின் அளிப்பு மிக வேண்டும். எந்த அளவிற்கு பண்டத்தின் அளிப்பு மிகுகின்றதோ அந்த அளவிற்கு அந்த நாடு வளமுடையதாக கருதப்படும் என்ற இக்கோட்பாட்டை மதுரைக் காஞ்சி பின்வருமாறு அறிவிக்கின்றது

*பண்ணியம் கமழ்நறும் பூவோடு மனைமனைமறுக*
*மழை கொள்ளக்குறையாது புனல்புகமிகாது*
*கரைபொரு திரங்கு முந்நீர்ப் போலக்*
*கொள்ளக் கொள்ளக் குறையாது தரத்தர மிகாது*

என்ற வரிகளில் முகில் முகக்க குறைவுபடாமல் ஆறுகள் பாய்வதனால் மிகுதலைச் செய்யாமல் கரையை மோதி ஒலிக்கும் கடல்போல பலரும் வந்து கொள்ளக் கொள்ள குறையாமல் பலரும் மென்மேலும் கொண்டுவர கொண்டுவர மிகாமல் நிறையுற்ற அங்காடிகள் பல மதுரையில் இருந்ததாக மாங்குடி மருதனார் மதுரைக்காஞ்சியில் தெரிவித்துள்ளார். இதிலிருந்து தலையாலங்கானத்து செறுவென்ற நெடுஞ்செழியன் தன் நாட்டில் மக்களுக்குத் தேவைப்படும் எல்லாப்

**ஆளப்பிறந்தவன் ஆண்மகன். அவன் இஷ்டத்துக்கு ஓடிப் பிழைக்க வேண்டியவள் பெண் மகள். இப்படிப் பேசிடும் பண்பு இருக்கும்வரை நம் நாடு உருப்பட முடியுமா?**

**– அண்ணா**

பண்டங்களையும் குறைவர வழங்கினான் என்பதால் நல அரசு கோட்பாடு அன்றே நம் தமிழகத்தில் இருந்துள்ளது என்பது விளங்கும்.

### *பொது நிதி*

நல அரசினை ஏற்படுத்த நாடுகள் பொது நிதியத்தை பயன்படுத்துகின்றன. பொது நிதியம் என்பது வரி, பொதுக்கடன், பொதுச்செலவினம் மற்றும் வரவு செலவு திட்டத்தால் ஏற்படுத்தப்படுவதாகும்.

நாட்டின் நலத்துக்கு என்று நம் தமிழ் மன்னர்கள் பல்வேறு வரிகளை விதித்து தமது வருவாயை பெருக்கியுள்ளனர். தண்டல் நாயக்கர் என்போர் குசக்காணம், வண்ணான்துறை போன்றவற்றிற்கு வரிவிதித்தும் அயல் நாடுகளில் இருந்து வாங்கப்படும் பொருள்களுக்கு சுங்கவரி விதித்தும் அரசின் நிதியை ஆக்கம் செய்துள்ளனர். தமக்கு நிதிப்பற்றாக்குறை ஏற்படும்போது தன் நாட்டில் வசிக்கும் வணிகப் பெருங்குடிகளிடம் இருந்து அரசன் கடன் பெற்றான் என்பதை கோவலனின் தந்தை மாசாத்துவான் சோழ அரசனுக்குத் தேவைப்படும்போது கடன் வழங்கியுள்ளான் என்னும் சிலப்பதிகார செய்தியின் மூலம் பழந்தமிழகத்தில் பொதுக்கடன் பெறும் வழக்கம் இருந்துள்ளது என்பது தெரியவருகிறது.

இவ்வாறு பலவாறாக ஆக்கப்பெற்ற நிதியை நம் தமிழ் மன்னர்கள் மக்களின் நலத்திற்கென்று இக்காலத்தைப் போன்றே பல்வேறு வாரியங்களை – ஏரி வாரியம், பொன் வாரியம், நீர் வாரியம் – ஏற்படுத்தி நாட்டு மக்களின் வளத்தை மேம்படுத்துவதென பொதுச் செலவினங்களை மேற்கொண்டனர் என்பதில் இருந்து பொது நிதி பழந்தமிழகத்தில் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளது என்பது தெளிவு.

இவ்வாறாக நம் தமிழ் இலக்கியத்தில் இக்கால பொருளியல் கோட்பாடுகள் மலிந்து இருக்கின்றன என்பது தெள்ளிதின் விளங்கும். ★

## பெண் உரிமை பற்றி காந்தியடிகள்



★ என்னைப் பொறுத்தவரையில் பெண்ணினம், ஒரு பலவீனமான பாலன்று. ஒருவேளை, நான் பெண்ணாகப் பிறந்திருந்தால், இத்தகைய உரிமையற்ற இந்நிலையையும், ஆணினத்தின் ஆணவப் போக்கையும் எதிர்த்துப் போராடியிருப்பேன்.

★ ஒத்த வாழ்க்கையை மேற்கொள்ளும் நிலையிலுள்ள பெண்களும், ஆண்களைப் போல் அடிப்படை உரிமையுள்ளவர்கள் என்ற சிந்தனை உருவாக வேண்டும்.

★ ஆண்களைவிடப் பெண்களுக்குத்தான் சாத்வீகத்தை ஏற்றுக்கொள்ளும் சக்தி, இயற்கையால் வழங்கப்பட்டுள்ளது.

★ வரதட்சணை என்பது மனித உறவைக் கீழ்த்தரமாக்கி, அழிவுக்குக் கொண்டு சென்று முடமாக்கிவிடும்.

★ "ஆணுக்கும் பெண்ணுக்கும் வேறுபாடு என்பது, புறப்பார்வையில் மட்டுமே; வேறு எவ்வகையிலும் பிரித்துப் பார்க்க என்னால் இயலாது".

# ஒரு மாணிட ஏக்கம்

★ இயற்கை இயலை
இதயத்தில் நிறுத்தி
சிந்தனையை
சிறிது கிளறிப்பார்த்தேன்.

★ பகலில் ஒளி பூமிமேல் விழுகின்றது
இரவின் இருள் பூமியை கவ்வுகின்றது
மழை பூமியை மலரச் செய்கின்றது
காற்று பூமியை ஆராதிக்கின்றது
பனி பூமிக்கு நகையைப் பூட்டுகின்றது.

**ஆனால் இவைகள்
எப்பொழுதும் பூமியை
எனதென்று சொந்தம் கொண்டாடியதில்லை.**

★ பகலும் இரவும் கலந்தும்
பூமிக்கு புதுவண்ணம் பூசுகின்றது
காற்றும் பனியும் சேர்ந்தும்
பூமியை ஊஞ்சலில் ஆட்டுகின்றது
மழையும் வெயிலும் கலந்தும்
பூமிக்கு சந்தனம் பூசி குளிப்பாட்டுகின்றது.

**ஆனால் இவைகள்
என்னால்தான் பூமி
அழகானதென்று ஏகத்தாளமில்லை.**

★ காற்று பூமிக்கு உயிர் தருகின்றது
மழை பூமிக்கு உடல் தருகின்றது
வெயில் பூமிக்கு ஆரோக்யம் தருகின்றது
பனி பூமிக்கு அழகு தருகின்றது
இரவு பூமிக்கு காதல் தருகின்றது.

**ஆனால் இவைகள்
''நான்'' தான் பூமிக்கு முக்கியமென
திமிராக திரிவதில்லை.**

★ என்னால்தான்
நதிகள் ஓடுகின்றன
மழை இப்படி கூறுவதில்லை

**ஏன் எனில்,**

★ காற்று
நதியை வழி நடத்தி செல்வதை
மழை அறிந்திருக்கின்றது.

★ என்னால்தான் மலர்கள்
இதழ் விரிக்கின்றன
பனி இப்படி சொல்லுவதில்லை.

**ஏன் எனில்,**

★ இளம் வெயில் ஒளிக்கயிறால்
மலரின் இதழ்களை
கட்டி இழுப்பதை
பனி புரிந்திருக்கின்றது!

★ என்னால்தான் ஒளிச்சேர்க்கை
நடைபெறுகிறது
வெயில் இப்படி உரைப்பதில்லை.

**ஏன் எனில்**

★ காற்று தன்னுடலை
கவசமாக்கிக் கொண்டால்
தான் பூமியை தொட முடியாததை
வெயில் விளங்கியிருக்கின்றது.

★ என்னால்தான்
மன்மதம் மலர்ந்து முக்தியில்
மூழ்கின்றது
இரவு இப்படி இரைப்பதில்லை.

**ஏன் எனில்,**

★ பகல்
மன்மதனையும் ரதியையும்
தன் வீட்டிற்கு அனுப்பி கதவு
சாத்திக்கொள்ளச் சொன்ன பெருந்தன்மையை
இரவு புரிந்திருக்கின்றது.

★ என் தீண்டலினால்தான்
மழைப் பொழிகின்றது
காற்று இப்படி கர்வம் கொள்வதில்லை!

**ஏன் எனில்,**

★ மேகங்கள் தாகமெடுத்து
கடலை தன் வழியே
அள்ளி பருகிய அவஸ்தையை
காற்று கண்டு வைத்திருக்கின்றது!

**முடிவாக,**

★ ''நான்'' தான் முதலில் படைக்கப்பட்டேன் என
முதலிடம் பிடிக்கும்
முண்டி சண்டையும் இவைகளிடமில்லை.

★ நான்தான் இறைவனுக்கு
மிகவும் அருகிலிலுள்ளவன் – என
இவைகளிடம் ஆன்மீக சர்ச்சைகளுமில்லை.

★ நான்தான் பூமியின்மேல்
அதிக காலம் நிலைத்திருப்பேன் – என
நிலையியல் தத்துவமும் இவைகளிடமில்லை.

ஆகவே, இப்படி

★ காற்றைப் போல!...
வெயிலைப் போல!...
இருளைப் போல!...
மழையைப் போல!...
பனியைப் போல!...

★ பூமியிலுள்ள ஒவ்வொரு
மதமும் இருந்தால்
அதுவும் இயற்கையின்
ஒரு அங்கமாகி விடுமல்லவா!...

– கவிச்சிற்பி

# சிதராலில் சமணர்களின் பல்கலைக் கழகம்

– டாக்டர் எஸ். பத்மநாபன்

குமரி மாவட்டத்தில் விளவங்கோடு வட்டத்தில் சிதரால் மலையில் பகவதி கோயில் ஒன்று உள்ளது. இந்த மலை ஒரு காலத்தில் திருச்சாரணத்து மலை என்று அழைக்கப்பட்டு வந்தது. இங்குச் சமணத் துறவிகள் பலர் தாவளமிட்டு சமயக் கல்வியூட்டி வந்துள்ளனர் என்றும், அவர்களில் பலர் பெண்களாக இருந்தனர் என்றும் கல்வெட்டுகள் மூலம் அறிய முடிகிறது. அங்கு கற்ற மாணவர்கள் பல்வேறு திசைகளுக்குச் சென்று சமண சமயக் கருத்துக்களைப் பரப்பினார்கள் என்று கழுகுமலைக் கல்வெட்டுகள் தெரிவிக்கின்றன. கழுகுமலைக் கல்வெட்டுகளிலிருந்து அங்கு தங்கியிருந்த சமண சமயத் துறவிகளுள் பலர் பெண்களாக இருந்தார்கள் என்றும், அவர்களில் பெரும்பாலோர் குமரி மண்ணைச் சார்ந்தவர்கள் என்றும் அறியலாம். கி.பி. ஒன்பதாம் நூற்றாண்டில் அன்றைய குமரிப் பகுதிகளை ஆண்டு வந்த ஆய்குல மன்னனான விக்கிரமாதித்த வரகுணன் சமண சமயத்தைச் சார்ந்திருந்ததாக கல்வெட்டு ஒன்று கூறுகின்றது.

சிதரால் மலையின் உச்சியில் இயற்கையான அமைந்த ஒரு தொங்கு பாறையின் அடியில் மண்டபம், தாழ்வாரம், மடப்பள்ளி இவற்றைக் கொண்ட ஒரு குகைக்கோயில் உள்ளது. இக்கோயில் மூன்று அறைகளைக் கொண்டது. முதல் அறையில் சமணர்கள் வணங்குகின்ற பத்மாவதியும், நடு அறையில் மகாவீரரும், மூன்றாவது அறையில் பார்சுவநாதரும் காணப்படுகின்றனர். இன்று பத்மாவதி தேவியை இவ்வட்டாரத்தினர் பகவதியாக வணங்குகின்றனர். தேவிக்கு மட்டுமே இங்கு பூஜை நடைபெறுகின்றது.

தொங்கு பாறையின் மேலே பாழடைந்த ஒரு கோபுரம் உள்ளது. கோயிலின் வடக்கே அமைந்த பாறையில் சமணர்கள் வணங்கும் 24 தீர்த்தங்கரர் உருவங்கள் புடைப்புச் சிற்பங்களாகச் செதுக்கப் பட்டுள்ளன.



இவற்றைச் செதுக்கியவர்கள் பெயர்களும் அங்கே காணப் படுகின்றன. அச்சணந்தி, உத்தனந்தி, வரகுணன், வீரநந்தி ஆகியோர் இந்த பெயர்ப் பட்டியலில் அடங்கும். இவர்கள் தஞ்சை மாவட்டத்திலுள்ள திருநெடும்பாறை, தென்ஆற்காடு மாவட்டத்திலுள்ள திருநறுங்கொண்டை ஆகிய தலங்களிலிருந்து இங்கு வந்தவர்களாகும். ஆய்குல மன்னன் வரகுணன் பெயரும் இங்கு காணப்படுகின்றது.

வரகுணன் காலத்திய வேறு இரண்டு கல்வெட்டுகளும் இம்மலையிலே கிடைக்கின்றன. இக்கல்வெட்டுக்கள் முத்தளக்குறிச்சி நாராயண குரத்தியர், குணந்தாங்கிக் குரத்தியர் இருவரையும் குறிப்பிடுகின்றன. குரத்தியர் என்பது சமண சமயப் பெண் துறவிகளைக் குறிக்கும்.

சிதம்பரனார் மாவட்டத்திலுள்ள கழுகுமலைக் கல்வெட்டுகள் திருச்சாரணத்துமலை பள்ளியிலே கல்வி புகட்டிய பெண் துறவிகளைப் பற்றியும் அவர்களது மாணவிகள் பற்றியும் தெரிவிக்கின்றன.

திருச்சாரணத்துமலை (சிதரால்) கழுகுமலை ஆகிய இரண்டு இடங்களில் உள்ள கல்வெட்டுகளையும் ஆராய்ந்த தொல்லியல் அறிஞர் டாக்டர் சிவல் இரண்டும் ஒரே காலத் தவை என்று குறிப் பிடுகிறார்.

திருச்சாரணத்து மலை இந்திய தொல்லியல் துறையினர் பாதுகாப்பில் உள்ளது. ஆனால் இந்த பழமையான கோயில் பாழடைந்த நிலையில் காணப்படுவது வருந்தத்தக்கது. இந்த மலையிலே கற்களை வெடி வைத்து பிளந்து எடுக்கிறார்கள்.

இந்நிலை தொடர்ந்தால் அந்த பழம்பெரும் மலை கூடிய விரைவில் அழிந்துவிடும். இச்செயலை தடுத்து நிறுத்தி வரலாற்றுச் சிறப்புமிக்க திருச்சாரணத்து மலையைப் பாதுகாக்க வேண்டியது அவசியமாகும். ★

# வாசனைத் திரவியப் பயிர்கள் சாகுபடி ஊக்குவிப்பு மற்றும் மேம்பாட்டுத் திட்டங்கள்

கன்னியாகுமரி மாவட்டத்தின் காலநிலை, மண்வாகு, மழை அளவு முதலானவைகள் வாசனைத் திரவியப் பயிர்கள் சாகுபடிக்கு' மிகவும் உகந்ததாகும். வாசனைத் திரவியப் பயிர்களில் மரவகை விதை வகைகளில் மரவகைகளைச் சார்ந்த கிராம்பு, மிளகு, ஏலம், ஜாதிக்காய், இலவங்கப்பட்டை போன்றவைகள் இம்மாவட்ட மேற்கு தொடர்ச்சி மலை மற்றும் சார்ந்த பகுதிகளில் குறிப்பாக தோவாளை, கல்குளம் வட்டங்களை உள்ளடங்கிய இடங்களில் அதிக அளவில் சாகுபடியாகிறது.

இவைகளில் கிராம்பு பயிர் மாநில மொத்த சாகுபடி பரப்பான 821 எக்டேரில் 528 எக்டேர் அதாவது 64சதவிகிதம் நமது மாவட்டத்தில் சாகுபடிச் செய்யப்பட்டு 510 மெ.டன் கிராம்பு உற்பத்திச் செய்யப்பட்டு முதல்நிலை வகிக்கின்றது. அதைப் போன்று மிளகுப் பயிரும் 200க்கும் அதிகமான எக்டேர் பரப்பில் சாகுபடியாகிறது. இந்த வாசனைத் திரவியப் பயிர்களின் மேம்பாட்டுக்காக மைய அரசின் உதவியுடன் மானியத் திட்டங்கள், இம்மாவட்டத்தில் கடந்த பல ஆண்டுகளாகவே செயல்பாட்டில் உள்ளது. மிளகு, கிராம்பு, இலவங்கப்பட்டை போன்ற வாசனைத் திரவியப் பயிர்களின் சாகுபடிப் பரப்பினை அதிகரிக்கும் நோக்குடன் சுமார் 3.15 இலட்சம் செடிகள் மானியத்தில் விநியோகம் செய்யப்படுகிறது. இந்த வகை வாசனைத் திரவியப் பயிர்களின் செடிகளின் உற்பத்தி இம்மாவட்டத்தில் உள்ள பேச்சிப்பாறையில் அமைந்துள்ள தமிழ்நாடு அரசின் தோட்டக்கலைத் துறையைச் சார்ந்த பண்ணையில் உற்பத்தி மேற்கொள்ளப்படுவது சிறப்பம்சமாகும். மேலும் மிளகுப்பயிரில் சீரிய உழவியல் தொழில் நுட்பங்களைக் கையாண்டு மகசூலை அதிகரிக்கும் இலக்கைக் கொண்ட பரப்பு அதிகரிப்புத் திட்டத்தின்படி எக்டேருக்கு ரூ.5,000 இடுபொருட்கள் 50 சதவீத மானியம் முதல் வருடத்தில் தொடங்கி தொடர்ந்து இரண்டு மூன்றாம் வருடங்களில் முறையே ரூ. 3,000 (40 சதம்) மற்றும் ரூ.2,000 (20 சதம்) இடுபொருட்கள் மானியம் வழங்கப்படுகிறது. இது போக, சிறு செயல் விளக்கத் திடல்கள் 25 சென்ட் பரப்பில் அமைத்திட ரூ.225 மதிப்புடைய இடுபொருள் 50 சதவீத மானியத்தில் வழங்கப்படுவதுடன், தொடர்ந்து இரண்டு மற்றும் மூன்றாம் வருடங்களில் முறையே ரூ.140 மற்றும் ரூ.140 பராமரிப்புக்கான 50 சதவீத இடுபொருள் மானியம் வழங்கப்பட்டு வருகிறது. இதுபோக வாடல் நோய் கட்டுப்படுத்தும் நோக்குடன் ரூ.1,860 மதிப்புடைய பயிர்ப்பாதுகாப்பு மருந்துகள் 50 சதவீத மானியத்தில் விநியோகம் செய்யப்படுகிறது. இதுபோலவே 50 சென்ட் பரப்புக்கான கிராம்பு சீரிய உழவியல் நுட்பத்தைத் தெரிவிக்கும் நோக்கத்துடன் செயல் விளக்கத்திடல் அமைத்திட முதல் வருடம் ரூ.400 மதிப்புடைய இடுபொருட்கள் 33 சதவீதமானியத்திலும், தொடர்ந்து 2 முதல் 5 ஆண்டுகள் ரூ. 150 முதல் ரூ.170 மதிப்புடைய இடுபொருட்கள் 20 சதவீத மானியத்தில் வழங்கப் படுகிறது. ஒவ்வொரு ஆண்டும் இவ்வாசனைத் திரவியப் பயிர்களின் மேம்பாட்டின் பொருட்டு சுமார் ரூ.7 இலட்சம் மதிப்பிலான மானியத் திட்டங்கள் செயல்படுத்தப்பட்டு வருகிறது. வாசனை திரவியப் பயிர்களில் கிராம்புக்குத் தற்போது கிடைக்கும் சந்தை விலை மும்பையை விடக் குறைந்துள்ளதால் இச்சாகுபடியாளர்கள் மத்தியில் ஆர்வம் குறையும் நிலை எனினும் இதற்கு நேர் மாறாக மிளகுக்கு அதிகச் சந்தை விலை கிடைப்பதன் காரணமாக இப்பயிர் சாகுபடியில் சாகுபடியாளர்கள் அதிகம் ஆர்வம் காட்டுகின்றனர். இப்பயிர் சாகுபடிப் பரப்பு அதிகரிப்புக்கு சாதகமான நிலை நிலவுகிறது மகிழ்ச்சிக்குரியது.

★ ★ ★

# மகளிருக்கு சிறு வணிகக் கடன்

இலவச காங்கிரீட் வீடுகள் ஆதிதிராவிடர்களுக்குக் கட்டித்தந்தது. ஏழையெளிய பெண்களுக்கு திருமண உதவி நிதி பத்தாயிரம் ரூபாய் தருவது, பெண்களுக்குச் சொத்திலே சமஉரிமை வழங்குகின்ற சட்டத்தை இயற்றியது, பெண்களுக்கு வேலை வாய்ப்பில் முப்பது சதவிகிதம் என்ற சூழ்நிலையை உருவாக்கி அதை நடைமுறைப் படுத்துவது, உள்ளாட்சி மன்றத் தேர்தல்களில் பெண்களுக்கு 33 சதவிகிதம் இட ஒதுக்கீடு செய்து அதை நடைமுறைப் படுத்தி அதிலே வெற்றி கண்டிருப்பது இதுபோன்ற பல திட்டங்களை நாம் இந்தியாவிலேயே முதன்முதலாகத் தொடங்கியிருக்கிறோம். அந்த வரிசையிலே ஒன்றுதான் இன்றைக்கு நாம் தொடங்குகின்ற மகளிர் சிறு வணிகக் கடன் வழங்கும் திட்டம்.

இதை கூட்டுறவுத் துறை மூலமாக நாம் செய்கிறோம். கூட்டுறவுத் துறை என்பது தம்பி மாறன் எடுத்துக்காட்டியதைப் போல ஒரு காலத்தில் மிட்டா மிராசுகள், செல்வச் சீமான்கள், கனதனவான்கள், பெரும் பணக்காரர்கள் இடத்திலே தான் இருந்தது. அப்படியிருந்தபோது இவர்கள் பெரும் பணக்காரர்கள், ஆகவே கூட்டுறவுத் துறையிலே தவறு நடக்காது என்றெல்லாம் அப்போது எண்ணப் பட்டது. நம்பப்பட்டது. ஆனால் பெரியவர்கள் செய்கிற வேலைதான் பலபேருக்குத் தெரியவில்லை என்பதைப் போல அன்றைக்குக் கனதனவான்கள் பலபேர் கூட்டுறவுத் துறையிலே கை வைத்ததுண்டு.

அதை மாற்றி இந்தத் துறை மக்களுக்காகப் பணியாற்றக்கூடிய மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட, மக்களுடைய பணியே மகேசன் பணி என்று எண்ணுகின்ற சாதாரண சாமான்ய மக்களிடத்திலே இந்தத் துறை வரவேண்டுமென்று எண்ணி அதற்கான வியூகம் வகுத்தவர் நம்முடைய தலைவர் பேரறிஞர் அண்ணா அவர்கள். அண்ணா அவர்கள் இந்தத் திட்டத்தை நிறைவேற்ற வேண்டுமென்று ஏழையெளியவர்களிடத்திலே இந்தக் கூட்டுறவு நிறுவனங்கள் வந்தாக வேண்டுமென்று எண்ணி, நடைமுறைப்படுத்த முற்பட்ட காலத்தில் மறைந்து விட்டார்கள். அந்தப் பொறுப்பு நம்முடைய தோள் மீது சுமத்தப்பட்டது.

## மேகங்களைப் போல கூடுங்கள் காகங்களைப் போல பகிர்ந்து கொள்ளாதீர்

நான் பல கூட்டுறவு விழாக்களில் பேசியிருக்கிறேன். கூட்டுறவுத் துறையிலே இயக்குநர்களாக இருப்பவர்களானாலும் சரி, நிர்வாகிகளானாலும் சரி, கூட்டுறவு நிறுவனங்களின் உறுப்பினர்களானாலும் சரி, கூட்டுறவு துறையிலே ஆங்காங்கு இருக்கின்ற பல்வேறு கிளைகளின் தலைவர்களானாலும் சரி அல்லது மாவட்டத் தலைவர்களானாலும் சரி இவர்கள் எல்லாம் இந்தக் கூட்டுறவுத் துறையை எப்படி கட்டிக் காக்க வேண்டுமென்றால் கூட்டுறவுத் துறை என்பது மேகங்கள் கூடி மழை பொழிவது போல் இருக்கவேண்டும். மேகங்கள் கூடினால் மழை பொழியும். காகங்கள் கூடினால் இருப்பதை பகிர்ந்துண்டு விட்டு போய் விடும். எனவே மேகங்களைப் போல கூடுங்கள் — காகங்களைப் போல கூடி இருப்பதைப் பகிர்ந்து கொண்டுபோய் விடாதீர்கள் என்று நான் பலமுறை கூறியிருக்கிறேன்.

கூட்டுறவுத் துறையைப் பொறுத்தவரை அந்தப் பொன்மொழியை கூட்டுறவுத் துறையிலே இடம் பெற்றிருக்கின்ற எல்லா கட்சி நண்பர்களையும் நம்முடைய தி.மு.க. தோழர்கள் இடம் பெற்றிருப்பார்களேயானால் அவர்களையும் நான் கேட்டுக்கொள்கிறேன். அப்பொழுது தான் நாம் எண்ணுகிற காரியங்களை ஏழையெளியவர்களுக்காக, சாதாரண சாமான்ய மக்களுக்காக செய்ய வேண்டுமென்று எண்ணுகின்ற அந்தச் செயல்களை நல்ல முறையிலே செய்து முடிக்க முடியும்.

இந்தத் திட்டத்தைப் பொறுத்த வரையில் இது சுலபமான வட்டிக்கு — குறைந்த வட்டிக்கு கடன் கொடுக்கின்ற ஒரு திட்டம். மாறன் இங்கே எடுத்துக் காட்டியதைப் போல அதிக வட்டி கிடைக்குமென்பதற்காக சில திட்டங்கள் விளம்பரப்படுத்தப்பட்டு அந்த விளம்பரங்கள் பத்திரிகைகளிலே ஒரு பக்க விளம்பரங்களாக வந்து தொலைக் காட்சியிலே விளம்பரங்களாக வந்து அதை நம்பி தாய்மார்கள், பெரியவர்கள், நடுத்தர குடும்பத்தைச் சேர்ந்தவர்கள் வங்கியிலே போட்டால் குறைந்த வட்டி தானே கிடைக்கிறது, இவர்கள் 30 சதவிகிதம் தருவதாகச் சொல்கிறார்களே என்று ஏமாந்து எத்தனை நிதி நிறுவனங்கள் இலட்சக்கணக்கான மக்களை ஏமாற்றியிருக்கின்றன என்பதை நாம்

உணர்ந்து கொள்ள முடிகிறது. அதிலே வேடிக்கையான வேதனை என்னவென்றால் கடந்த ஐந்தாறு ஆண்டுக் காலத்தில் இப்படி பல நிதி நிறுவனங்களுடைய மோசடிகளுக்கு ஆட்பட்டு நடுத்தெருவிற்கு வந்த மக்கள் மேலும் மேலும் இன்னமும் ஏமாறத் தயாராக இருக்கிறார்கள்.

அதிக வட்டி என்று சொன்னால் போதும், ஒரு ஆசை, உடனடியாக அங்கே ஓடுகிறார்கள். மீண்டும் ஏமாறுகிறார்கள். அரசாங்கம் அந்த மோசடிக் காரர்களைக் கைது செய்கிறது. அவர்களுடைய சொத்துக்களை பறிமுதல் செய்யத் திட்டமிடுகிறது. வழக்கு நீதி மன்றங்களுக்குச் செல்கிறது. அங்கே வழக்குகள் உடனடியாக முடிவதில்லை. அந்த வழக்கு முடிந்து தாங்கள் இழந்த சொத்து மீண்டும் கைக்கு வருகிற வரையிலே வட்டி அதிகமாக வருமென்று எண்ணி அன்றைக்குப் பணத்தைக் கொடுத்தவர்கள் கைபிசைந்து நிற்கிறார்கள். அரசாங்கத்திடம் முறையிடுகிறார்கள். அரசாங்கம் நீங்கள் செய்கின்ற தவறுக்கு என்ன செய்ய முடியும்? சிக்கிக் கொண்டீர்கள், உங்களைக் காப்பாற்ற அரசாங்கம் கைகொடுக்க முன் வருகிறது. ஆனால் சட்டப்படிதான் எந்தக் காரியத்தையும் செய்ய முடிகிறது.

**அதிக வட்டி வருகிறதென்று யாரும் ஏமாற வேண்டாம்**

நிதி நிறுவனங்களானாலும் கூட ஒரு கோடி இரண்டு கோடி அல்லது ஐம்பது அறுபது கோடி என்று மோசடி செய்திருக்கிறார்கள். ஆயிரம் கோடி மோசடி செய்தவர்களையே சுலபத்தில் நீதிமன்றத்தில் கொண்டு வந்து நிறுத்தி இன்னமும் தண்டனை வாங்கித் தர முடியவில்லை என்கிறபோது இந்த நூறு கோடி, ஐம்பது கோடி ஏமாற்றியவர்களை உடனடியாக என்ன செய்ய முடியும்? எனவே இனிமேலாவது அதிக வட்டி வருகிறதென்று எண்ணி யாரும் ஏமாற வேண்டாம், மோசடிக்கு உள்ளாக வேண்டாமென்று நான் இந்த விழாவிலே மெத்த பணிவன்போடு பொதுமக்களை — அதிக வட்டி கிடைக்குமென்று ஆசைப்படு கிறவர்களையெல்லாம் கேட்டுக் கொள்கிறேன்.

இதைப் பொறுத்தவரையிலே இதுவும் வட்டி விவகாரம்தான். ஆனால் எப்படி வட்டி விவகாரமென்றால் குறைந்த வட்டிக்குக் கடன் கொடுக்கிறோம் என்று அழைப்பு விடுகின்ற திட்டம் இத்திட்டம். 100 ரூபாய் இன்று மாலையிலே கடன் வாங்கினால் நாளை மாலையிலே பத்து ரூபாய் வட்டி சேர்த்துக் கொடுக்க வேண்டிய சூழ்நிலையை மாற்றி ஒரு ரூபாய் கொடுத்தால் போதும் — அந்த ஒரு ரூபாயிலேகூட சேவைக்காகவும், சேமிப்புக்காகவும் ஐம்பது அல்லது எழுபத்தைந்து காசு வரை வைத்துக் கொண்டு மீதத்தைத் தான் வட்டியாக நீங்கள் செலுத்த வேண்டும் என்கிற அருமையான திட்டம். இது சாதாரண ஏழையெளிய பெண்களுக்காக அமைக்கப்படுகின்ற திட்டமாகும்.

இது ஏன் பெண்களுக்கு மாத்திரம் இந்தக் கடனைத் தருகிறோம் என்றால் ஆண்கள் கோபித்துக் கொள்ளக் கூடாது. அவர்கள்தான் ஒழுங்காகத் திருப்பித் தருவார்கள் என்ற நம்பிக்கைதான் காரணம். தாய்மார்களுக்குத் தெரியும். ஒரு வீட்டிலே சர்க்கரையோ, உப்போ, உளுந்தோ இல்லையென்றால் பக்கத்து



வீட்டிற்குச் சென்று "அடி கமலம்!" ஒரு கிண்ணம் உப்புக் கொடு. அல்லது ஒரு கிண்ணம் சர்க்கரை கொடு, நாளைக்குத் திருப்பி கொடுத்துடுறேன்" என்பார்கள். அவர்களும் கொடுப்பார்கள். அடுத்த நாள் நாணயமாக திரும்பக் கொண்டு போய் கொடுத்து விடுவார்கள். ஆனால், அந்த உப்புக்கோ சர்க்கரைக்கோ வட்டி கிடையாது. இதற்கு வட்டி உண்டு. இந்த வட்டி 100க்கு 10 என்ற முறையிலே உள்ள வட்டி அல்ல. 100க்கு ஒரு ரூபாய் தான் வட்டி.

நாணயம் என்று ஏன் அதற்குப் பெயர் வந்தது தெரியுமா? அதைப் புரிந்து கொள்ளவேண்டும். நாணயமாக மனிதன் இருந்தால்தான் அவன் பயன்படுத்துவதுதான் நாணயம். அதனால்தான் இந்த ரூபாய்க்கே நாணயம் என்று பெயர் வந்தது. தங்க நாணயம், வெள்ளி நாணயம் என்றெல்லாம் சொல்கிறோமே, நாணயமாக நடந்துகொள்ள வேண்டும் ரூபாய் விஷயத்தில். ஆடவர்கள் வேண்டுமென்று கொடுக்கக்கூடாது என்று அல்ல. அவர்கள் கொடுக்கலாம் என்று இருக்கும்போது வேறு செலவு வந்து விடும்.

ஆண்கள் கோபித்துக் கொள்ளக்கூடாது. பேசுகின்ற நானும் ஆண் தானே. வட்டியைப் போட்டு திருப்பிக் கொடுக்கலாம் என்று போகும்போது, போகிற வழியில் ஒரு கடை இருக்கும்! அது என்ன கடையோ உங்களுக்குத் தெரியும். அல்லது வேறு யாராவது சிலர் திண்ணையிலே ஆடிக் கொண்டிருப்பார்கள். சரி நாமும் அவர்களோடு உட்கார்ந்தால் நான்கு காசு கூட கிடைக்காதா என்ற எண்ணம் வரும். இருப்பதையும் கொடுத்து விட்டு வட்டியையும் கடனையும் கொடுக்க முடியாமல் ஆண்கள் திண்டாடுவார்கள்.



பெண்கள் அப்படியல்ல. பெண்கள் வாங்கிய கடனை ஒழுங்காகத் திருப்பிச் செலுத்தக் கூடியவர்கள். 100க்கு 99 பேர் அப்படி. ஒன்று, இரண்டு — பெண்களிலும் சில ஆண்கள் இருக்கலாம். அது வேறு விஷயம். ஆனால் 100க்கு 99 பெண்கள் வாங்கிய கடனை ஒழுங்காகத் திருப்பிச் செலுத்தக் கூடியவர்கள் என்பதால்தான் மகளிர் சிறு வணிகக் கடன் திட்டம் என்று இத்திட்டத்தை நாம் தொடங்கியிருக்கிறோம்.

இதைத் தாய்மார்கள் பயன்படுத்திக் கொள்ள வேண்டும். இதில் எத்தகைய பெண்கள் இன்றைய துவக்க விழாவிலே பயன்பெறுகிறார்கள் என்றால் — இன்றைக்குக் கடன் பெறுகிறவர்கள் 767 பெண்கள்; இவர்களில் ஆதிதிராவிட சமுதாய மகளிர் 141 பேர்; பிற்படுத்தப்பட்ட சமுதாய மகளிர் 307 பேர்; மிகவும் பிற்படுத்தப்பட்ட சமுதாய மகளிர் 226 பேர்; மற்ற வகுப்பினர் 93 பேர். இந்த 767 மகளிரில் சிறுபான்மை சமுதாயத்தை — கிறிஸ்தவ, முஸ்லிம் சமுதாயத்தைச் சேர்ந்த மகளிர் 107 பேர் இருக்கிறார்கள் என்பதை நான் பெருமையோடும் பெருமகிழ்ச்சியோடும் தெரிவித்துக் கொள்கிறேன்.



இந்த 767 பெண்களில் படிப்பறிவில்லாதவர்கள் 473 பேர்; ஐந்தாம் வகுப்பு வரை படித்தவர்கள் 136 பேர். 6ஆம் வகுப்பிலிருந்து 8ஆம் வகுப்பு வரை படித்தவர்கள் 106 பேர்; 9ஆம் வகுப்புக்கு மேல் படித்தவர்கள் 52 பேர். இந்த 767 பெண்களில் திருமணம் ஆகாதவர்கள் 66 பேர். திருமணம் ஆனவர்கள் 537 பேர்; விதவைகள் 134 பேர். கணவனால் கைவிடப் பட்டவர்கள் 40 பேர்; 767 பேரில் ஊன முற்றவர்கள் 37 பேர். 767 மகளிரில் பூ விற்பனை செய்பவர்கள் 181 பேர்; காய்கறி விற்பனை செய்பவர் 249 பேர்; பழம் விற்பனை செய்பவர் 101 பேர்; துணி வியாபாரம் செய்பவர் 104 பேர்; பிளாஸ்டிக் பொருட்கள் விற்பவர்கள் 71 பேர்; இதர வியாபாரம் செய்பவர்கள் — நம்முடைய

ரெங்கநாதன் குறிப்பிட்டதைப் போல இட்லி கடை போன்ற வியாபாரங்களை செய்பவர்கள் 61 பேர்;

இந்த 767 பேரில் இன்றைக்குக் கடன் பெறுகிறவர்கள் 500 ரூபாய் கடன் பெறுகிறவர்கள் 82 பேர்; 500லிருந்து 1000 ரூபாய் வரை கடன்



பெறுகிறவர்கள் 607 பேர்; 1001லிருந்து 1500 ரூபாய் வரை கடன் பெறுபவர்கள் 65 பேர்; 1501லிருந்து 2000 ரூபாய் வரை கடன் பெறுபவர்கள் 13 பேர்; இதில் நாள்தோறும் கடனைத் திருப்பிச் செலுத்துபவர்கள் 408 பேர்; வாரந்தோறும் திருப்பிச் செலுத்துபவர்கள் 289 பேர்; 15 நாட்களுக்கு ஒருமுறை செலுத்துபவர்கள் 52 பேர்; மாதந்தோறும் செலுத்துபவர்கள் 18 பேர். ஆக மொத்தம் 767 பேர். இவர்கள் வாங்கிய கடனை நேர்மையாக, நாணயமாக இந்தக் குறைந்த வட்டி என்பதைப் பயன்படுத்திக் கொண்டு செலுத்துவார் களேயானால் வட்டி போக எஞ்சிய சேமிப்புத் தொகை திருப்பி உங்களுக்கே தரும்போது அது வட்டியோடு திருப்பித் தரப்படும் என்பதையும் நீங்கள் மனதிலே வைத்துக் கொள்ளலாம்.

## கூட்டுறவுத் துறையே உங்களுக்குக் கடன் கொடுக்கிறது

அந்தக் காலத்திலே கடன்பட்டார் நெஞ்சம் போல் கலங்கினான் இலங்கைவேந்தன் என்று ஒரு பாடல் உண்டு. ராவணன் கலங்கினானாம். எப்படி யென்றால், அப்படி கலங்கியதற்கு வேறு உதாரணமே சொல்லவில்லை அந்தகாலத்துப் புலவன். கடன் பட்டார் நெஞ்சம் போல் கலங்கினான் இலங்கை வேந்தன். கடன் பட்டவனுடைய நெஞ்சம் அப்படி கலங்குமாம். இப்போது அப்படி இல்லை. கடன் கொடுத்தார் நெஞ்சம் போல் கலங்கினான் இலங்கைவேந்தன் என்று சொல்லக்கூடிய அளவிற்கு நிலைமை இருக்கிறது. அதனால் கடன், கொடுப்பது தனிப்பட்ட ஆள் இல்லை. கூட்டுறவுத் துறையே உங்களுக்குக் கடன் கொடுக்கிறது. இன்னும் சொல்லப்போனால், நானே உங்களுக்குக் கொடுப்பதாக வைத்துக் கொள்ளுங்கள். நான் ஆட்சியிலே இருக்கிற வரை கூட்டுறவுத் துறை என் துறைதான்.

அதனால் நான் தம்பி நேருவைக் கேட்டுக் கொள்கிறேன். சென்னையிலே உள்ள ஐந்தாறு கூட்டுறவு வங்கிகள் மட்டும் இதிலே பங்கேற்பது போதாது. அடுத்தடுத்து எல்லா நகரங்களிலும், பேரூராட்சிகளிலும் அதற்கடுத்து கிராமங்களிலும் இது பெருகி இன்னும் மீதமிருக்கிற இரண்டரை ஆண்டுக் காலம் — அதற்குப் பிறகும் இருக்கிறது. இருந்தாலும் இந்தத் தேர்தலில் மீதமிருக்கின்ற இரண்டரை ஆண்டுக் காலத்தில் தமிழகம் முழுவதும் மகளிர் இந்த இயக்கத்திலே சேர்ந்து கடன் பெறுகிறார்கள். அதன்மூலம் பயன்பெறுகிறார்கள் என்ற நிலையை உருவாக்க வேண்டுமென்று கேட்டுக் கொண்டு இந்த இனிய துவக்க விழாவிலே கலந்து கொண்ட உங்கள் அனைவரையும் நான் வாழ்த்தி — கடன் பெறுகிறவர்கள் கடனைத் திருப்பிச் செலுத்துவதிலே கடமை தவறாமல் இருக்க வேண்டுமென்று கேட்டுக் கொண்டு விடை பெறுகிறேன்.

**— கூட்டுறவுத் துறையின் சார்பில் மகளிர் சிறுவணிகக் கடன் திட்டத்தை சென்னை சேப்பாக்கம் தொகுதியில் தொடங்கிவைத்து மாண்புமிகு முதலமைச்சர் கலைஞர் அவர்கள் ஆற்றிய உரை.**

**எந்தச் சமூக மக்கள் சாதி முறையை ஒழிக்க ஆர்வம் கொண்டிருக்கின்றனரோ, அந்த சமூக மக்களுக்குக் கல்வி அளிக்கப்பட வேண்டும். அப்படி அளித்தால், அவர்கள் நிச்சயமாய் சாதி முறையை அழித்து விடுவார்கள்.**

**– அம்பேத்கர்**

# 25-வது இந்திய சுற்றுலா மற்றும் தொழில் பொருட்காட்சி-1999

"சென்னை நகர வாசிகளுக்குப் பொழுது போக்கு அம்சமாக அமைவது மெரினா கடற்கரை. அதற்கடுத்து திரையரங்குகள். இவையன்றி ஆண்டுதோறும் ஜனவரி முதல் மார்ச் வரை தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகத்தால் நடத்தப்படும் சுற்றுலா மற்றும் தொழில் பொருட்காட்சி உள்ளபடியே நல்லதொரு பொழுதுபோக்கு அம்சமாக திகழ்கிறது.

தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகத்தால் இவ்வாண்டு நடத்தப்படும் 25வது இந்திய சுற்றுலா மற்றும் தொழிற்பொருட்காட்சி 7.1.99 அன்று தொடங்கப்பட்டு 50 நாட்களைக் கடந்து நடைபெற்று வருகிறது. 22 மாநில அரசுத் துறைகள், 10 மாநில அரசு நிறுவனங்கள், 29 மாவட்டங்கள், 7 பிறமாநில அரசுத் துறைகள் மற்றும் மத்திய அரசுத் துறைகள்/நிறுவனங்கள் பங்கேற்றுள்ள இப்பொருட்காட்சி முற்றிலும் மாறுபட்ட பொருட்காட்சியாக விளங்குகிறது.


பொதுவாக பொதுமக்களின் கருத்தினைக் கேட்டபொழுது, சுற்றுலாப் பொருட்காட்சியென்றால் பெரிய பேனர்கள், கட்அவுட்கள், அப்பளக் கடைகள், பஞ்சு மிட்டாய் என்ற வழக்கமான காட்சிகள் தான் இடம்பெறும் என்ற நிலை மாறி, இவ்வாண்டு புதிய அணுகுமுறையில் புதிதாகப் பலகாட்சிப் பொருட்கள் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளன என்று கூறியுள்ளார்கள். அவற்றின் விவரங்கள் சில கீழ்வருமாறு :—

**ஜுராசிக் பார்க்**

முற்றிலும் இயந்திர மயமாக்கப்பட்ட நான்கு வகையான டைனோசர்கள் எறியும் எப்பொருளையும் எளிதில் கௌவிப்பிடித்து அனைவரின் கண்ணையும் கருத்தையும் கவர்கின்றன. இதுபோல் ராட்சப் பறவையும் பறக்கும் தோரணையுடன் அமைக்கப்பட்டுள்ளது. தமிழ்நாட்டிலேயே முதன்முறையாக அமைக்கப்பெறும் இந்த ஜுராசிக் பார்க் எல்லாத் தரப்பினரையும் கவரும் வகையில் உள்ளது.

**பார்முலா டைப் கார்**

ஒருவர் மற்றும் இருவர் அமர்ந்து இயக்கி



செல்லக்கூடியதும் உற்சாகமூட்டுவதுமான கோ—கார்ட் எனப்படும் மினியேச்சர் பார்முலா டைப் கார் மற்றும் மோ—பைக் இவ்வாண்டு பொருட்காட்சியில் இடம் பெற்றுள்ளது. இதற்காக பிரத்தியேக ஓடுதளம் அமைக்கப்பட்டுள்ளது.

***விஞ்ஞான அறிவியல் அரங்கம்***

பள்ளி மாணவ மாணவியரின் அறிவியல் ஆற்றலை விளக்கும் வண்ணம் பல்வேறு அற்புதக் காட்சிகள் விஞ்ஞான அறிவியல் அரங்கில் இடம் பெற்றுள்ளன.

இவ்வாண்டின் சிறப்பு அம்சமாக ஒவ்வொரு நாளும் பல்வேறு அரசு மற்றும் பொதுத் துறைகளும் தங்களின் சாதனைகளை விளக்கும் வண்ணம் "தினம் ஒரு விழா" அந்தந்தத் துறையின் சார்பாக நடத்திட திட்டமிடப்பட்டுள்ளது. இதன் முன்னோடியாக ஓரிசா சுற்றுலாத்துறை 23.1.99 அன்று பொருட்காட்சியில் "ஓரிசா தினம்" கொண்டாடியது.

இவையன்றி தமிழக அரசின் பல்வேறுத் துறை அரங்குகளான காவல் துறை, தீயணைப்புத்துறை, மின்வாரியம், சுற்றுலாத்துறை, சென்னை மாநகராட்சி, இந்து சமய அறநிலையத் துறை, தொழில் துறை மற்றும் பல அரசுத் துறை அரங்குகளில் முந்தைய ஆண்டுகளைப் போல் வெறும் படங்களும், பொது மக்கள் எளிதில் புரிந்துகொள்ள முடியாத விளக்கத்துடன் கூடிய காட்சிகளும், இவவாண்டு சுற்றுலாப் பொருட்காட்சியில் முற்றிலும் தவிர்க்கப்பட்டு பொது மக்கள் எளிதில் புரிந்துகொள்ளும் வகையில் செயல்முறை விளக்கங்களோடு அந்தந்தத் துறைகளின் உண்மையான சாதனைகள் விளக்கங்களோடு அமைக்கப்பட்டுள்ளன.

இவைகள் தவிர குழந்தைகள் உல்லாச உலகம், சிறுவர் இரயில், ராட்ச ராட்டினங்கள், டோரா — டோரா, சினிமா, நாடகம், கிராமியக் கலை நிகழ்ச்சிகள், நடனம், மேஜிக் ஷோ, பலகுரல் நிகழ்ச்சி, பொம்மலாட்டம், இன்னிசை நிகழ்ச்சிகள் நடைபெறுகின்றன. மேலும் சிறப்பு நிகழ்ச்சிகளாக கோலப் போட்டி, பாரம்பரிய ஆடை அலங்கார அணிவகுப்பு, பாரம்பரிய உணவுக் கண்காட்சி போன்றவை நடத்திட திட்டமிடப்பட்டுள்ளது.

இன்னும் ஒரு மாதகாலத்திற்கு நடைபெறவுள்ள இச்சுற்றுலா மற்றும் தொழில் பொருட்காட்சி உண்மையிலேயே சென்னைவாழ் மக்களுக்குக் குறைந்த செலவில் குடும்பத்துடன் கண்டுகளிக்க ஒரு நல்ல பொழுதுபோக்கு மையமாக அமைந்துள்ளதில் எள்ளளவும் சந்தேகமில்லை.

★ ★ ★



"எந்த மனிதனும் எனக்குக் கீழானவன் அல்ல.
அது போலவே எவனும் எனக்கு மேலானவனும் அல்ல.
ஒவ்வொரு மனிதனும் சுதந்திரமாகவும், சமத்துவமாகவும்
இருக்க வேண்டும் என்பதே அதன் பொருள்.
இந்த நிலை ஏற்படச் சாதி ஒழிய வேண்டும்.

— தந்தை பெரியார்

"சாதி முறையை நாம் எதிர்க்கிறோம் என்றால்,
பொருளாதார பேத நிலையை உண்டாக்கியதும்,
நிலைத்திருக்கச் செய்வதுமான கொடிய
ஏற்பாட்டைத் தகர்க்கிறோம் என்று பொருள்.
அதாவது சமதர்மத்திற்கான சூழ்நிலையை
ஏற்படுத்துகிறோம் என்று அர்த்தம்".

— அண்ணா



ஆசிரியரும் வெளியிடுபவரும் : க.முத்துசாமி, இ.ஆ.ப. இயக்குநர், செய்தி–மக்கள் தொடர்புத்துறை, தமிழ்நாடு அரசு.
சென்னை–தமிழரசு அச்சகத்தில் அச்சிடப்பட்டது.
தமிழரசு அலுவலகம், ஓமந்தூரார் அரசினர் தோட்டம், அண்ணா சாலை, சென்னை–600 002.
தொலைபேசி:568926/568927/564906



தூய
பட்டு

தூய
சரிகை




ராஜகம்பீரமான ஊதா...
செந்தூரப்பூபோல் சிகப்பு...
மங்களகரமான மஞ்சள்...
வான்வெளிபோல் நீலம்...
கற்பனைக் கடங்கா
அற்புத வண்ணங்களில்
நேர்த்தியான பட்டு,
நல்குவது கோ-ஆப்டெக்ஸ்.

கோ-ஆப்டெக்ஸ்
தமிழ் நாடு கைத்தறி


தமிழரசு
பதிவு எண். M. 8676
Licence No. TN/MS(C)/PP-23



# வளம் கொழிக்க - நலன் குவிக்க !

# வளம் கொழிக்க - நலன் குவிக்க!

**மேதகு ஆளுநர்** அவர்களது உரை மீதான

விவாதங்களுக்குப் பதிலளித்து

மாண்புமிகு முதலமைச்சர் **கலைஞர் மு.கருணாநிதி** அவர்கள்

சட்டமன்றப் பேரவையில் 23–2–1999 அன்று ஆற்றிய உரை.

*வெளியீடு :*

இயக்குநர், செய்தி–மக்கள் தொடர்புத்துறை,

தமிழ்நாடு அரசு.

சிறப்பு வெளியீடு எண் : 17

'தமிழரசு' இலவச வெளியீடு

மார்ச் – 1999

*வெளியிடுபவர் :*

இயக்குநர்,
செய்தி–மக்கள் தொடர்புத்துறை,
சென்னை.

தமிழரசு அச்சகம்,
சென்னை–600 002.

## **மேதகு ஆளுநர்** அவர்களது உரை மீதான

## விவாதங்களுக்குப் பதிலளித்து

## மாண்புமிகு முதலமைச்சர் **கலைஞர் மு.கருணாநிதி** அவர்கள்

## சட்டமன்றப் பேரவையில் 23–2–1999 அன்று ஆற்றிய உரை.

ஆளுநர் உரையின் மீது இதுவரையிலே இந்த அவையில் 38 உறுப்பினர்கள் ஏறத்தாழ 9 மணி நேரம் விவாதம் நடத்தி, அவர்கள் எழுப்பியுள்ள பிரச்சினைகளின் அடிப்படையில், எல்லாவற்றுக்கும் அல்ல, என்னுடைய கருத்துக்கள் சிலவற்றை இந்த அவையிலே பதிய வைக்க விரும்புகிறேன்.

இந்த உரை குறித்து இங்கே கருத்துக்களைச் சொன்ன எதிர்க்கட்சித் தலைவர் அவர்களும் மற்றும் பல்வேறு கட்சிகளின் தலைவர்களும், உறுப்பினர்களும் எடுத்துச் சொன்ன செய்திகளை இந்த அரசு, தான் கொண்டுள்ள பண்பாட்டின்படி நிச்சயமாக அலட்சியப்படுத்தாது என்பதைத் தெளிவாக முதலில் தெரிவித்துக் கொள்கிறேன். அவற்றையெல்லாம் தொகுத்து, இங்கே திருநாவுக்கரசு அவர்கள் எடுத்துக் காட்டியதைப் போல, வரவிருக்கின்ற நிதிநிலை அறிக்கைக்குத் தேவையான ஆலோசனைகள் சொல்லப்பட்டிருக்கின்றன என்பதை உணர்ந்து அதற்கேற்ப இந்த அரசு தன்னுடைய செயல்முறைகளை வகுக்கும், இயன்ற வரையிலே நிதிநிலை அறிக்கையைத் தயாரிக்கும் என்பதையும் நான் முதலிலேயே தெளிவுபடுத்த விரும்புகிறேன். பாராட்ட வேண்டியவைகளைப் பாராட்டி, இருக்கின்ற குறைகளைச் சுட்டிக்காட்டி, அவைகளையெல்லாம் தீர்த்துவைக்க வேண்டுமென்ற முயற்சியிலே ஆக்கபூர்வமாக பல உரைகள் இங்கே நிகழ்த்தப்பட்டிருக்கின்றன.

### கோலப்பன் குழுவின் அறிக்கை இந்தக் கூட்டத் தொடரில் வைக்கப்படும்

எடுத்த எடுப்பில், பொத்தாம் பொதுவாக இது என்ன உரையா என்று கேட்கின்ற அளவில் உள்ளேயும் சிலர், வெளியேயும் சிலர்

இந்த உரை பற்றிய கருத்துக்களை வெளியிட்டிருக்கிறார்கள். ஆளுநர் உரை வெறும் காகிதம், இது கவைக்கு உதவாது என்றெல்லாம்கூட கருத்துக்கள் சொல்லப்பட்டுள்ளன. பொறுப்பாகச் சொல்லப்பட்ட கருத்துக்கள் அல்ல. ஆனால், பொறுப்பிலே இருந்தவர்களால் சொல்லப்பட்ட கருத்துக்கள்.

இந்த உரையிலேதான், நீண்ட காலமாக நம்முடைய இந்திய கம்யூனிஸ்ட் கட்சி நண்பர்களும், மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி நண்பர்களும் வலியுறுத்தி வருகின்ற, விவசாயிகளுடைய குறைந்தபட்ச ஊதியம் குறித்த கோலப்பன் குழுவின் அறிக்கை இந்தக் கூட்டத் தொடரிலே அறிவிக்கப்படும், வைக்கப்படும் என்று சொல்லப்பட்டிருக்கிறது.

மிக முக்கியமான சமுதாயத் தொண்டாகக் கருதப்படுகின்ற மனிதக் கழிவுகளை மனிதன் எடுக்கவும், சுமக்கவுமான இழிவு நிறைந்த நிலையை அகற்ற சட்டமுன்வடிவு இந்தக் கூட்டத் தொடரில் கொண்டுவரப்படும் என்று அறிவிக்கப் பட்டிருக்கின்றது.

ஒரு இலட்சத்து ஐம்பதாயிரம் பேருக்கு வேலைவாய்ப்பை உருவாக்கவும், பள்ளிகளில் கல்வி பயின்று வெளியே வரும் மாணவர்கள் கணினி அறிவு பெற்றவர்களாக இருக்கவும் இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளது. நம்முடைய எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் இங்கே குறிப்பிட்டார்கள். இதனைக் கணினி ஆண்டாகவே கொண்டு இந்த அரசு செயல்படுகிறது என்பதைக் குறிப்பிட்டு, அதற்கேற்ப அண்மையில் வெற்றிகரமாக நடைபெற்ற தமிழ் இணைய மாநாடு குறித்து, பாராட்டும், வாழ்த்தும் அவர்கள் கூறியிருக்கிறார்கள். ஒன்றே ஒன்றுதான். எல்லா உறுப்பினர்களுக்கும் கணினி வழங்க வேண்டும் என்பதுதான் சற்று சிக்கலான விஷயம். ஏனென்றால், கணினியும் வழங்கி, கற்றுத் தருகின்ற பயிற்சியும் அவர்களுக்குக் கொடுத்து, அதைப் பொறுமையோடு நம்முடைய சட்டப் பேரவை உறுப்பினர்கள் இருந்து கற்றுக் கொள்வார்களானால், நிச்சயமாக அடுத்தத் தேர்தலிலே, அவர்களுடைய தொகுதிகளிலே அவர்கள் வெற்றி பெறுவார்கள்

என்பதை இப்போதே என்னால் உறுதியாகக் கூறமுடியும். ஏனென்றால், அவ்வளவு அக்கறை கணினியிலே அவர்களுக்கு வருமேயானால், எதிர்க்கட்சித் தலைவரைவிட நான் இரட்டிப்பு மகிழ்ச்சி அடைவேன் என்பதை இங்கே தெரிவித்துக் கொள்கிறேன்.

## கணினிக்கான முயற்சியை முதலில் தொடங்கி வெற்றிகண்ட மாநிலம் தமிழகம்

தமிழ் வரி வடிவங்களை ஒரே சீராகத் தொகுத்து தரப்படுவதற்கும், தமிழ்க் கணினி விசைப் பலகைகளைத் தரப்படுத்துவதற்கும் 'தமிழ் இணையம் 99' என்று நடத்தப்பட்டு இந்த உலகத்தில் உள்ள பல்வேறு நாடுகளில் தமிழர்கள் வாழுகின்ற நாடுகளிலிருந்து – வந்த தமிழ் மேதைகள் அரிய கருத்துக்களை எடுத்துச் சொல்லி– ஒன்றுபட்ட கருத்து உருவாகுமா என்று எதிர்பார்த்த நிலையில், ஒன்றுபட்ட கருத்து உருவாகி – இண்டர்நெட் என்று சொல்லப்படும் தமிழ் இணையத்தில் இனிமேல் வேறு மொழிகள் இடம் பெற்றாலுங்கூட தமிழ்மொழி தலையாய இடம் பெறும் – உலகத்தில் எந்தக் கோடியில் இருக்கின்ற தமிழனும் தமிழ் வாயிலாக செய்திகளை அறிந்து கொள்ள முடியும், தகவல்களைப் பெறமுடியும் என்ற நிலையை நாம் உருவாக்க இருக்கிறோம்.

இந்தியாவிலேயே இந்த முயற்சியை முதல் முதலாகத் தொடங்கி அதிலே வெற்றி காணவிருப்பது நம்முடைய தமிழ்நாடுதான் என்பதை எண்ணும்போது நாமனைவரும் பெருமிதம் கொள்ளலாம்.

தகவல் தொடர்பு என்பது இன்றைக்கு எந்த அளவுக்கு வளர்ந்திருக்கிறது என்றால், ஒரு காலத்தில் 'ஆப்ரகாம் லிங்கன்' கொல்லப்பட்ட செய்தி 5 நாட்கள் கழித்துதான் இலண்டனுக்கே தெரிய வந்தது என்பார்கள். அப்போது தந்தி என்ற சாதனம் இருந்தும்கூட லிங்கன் கொல்லப்பட்ட செய்தி 5 நாட்கள் கழித்துதான் இலண்டனுக்கு வந்து சேர்ந்ததாகச் சொல்லுவார்கள்.

ஆனால், இன்றைக்கு அப்படி அல்ல. ஆஸ்திரேலியாவில் ஆடுகின்ற கிரிக்கெட் ஆட்டத்தில் இப்போது யார் அவுட் ஆனார்கள் என்பதை உடனடியாக, நேரிலேயே தெரிந்து கொள்ளுகின்ற அளவுக்கு தகவல் தொடர்பு பெருகியிருக்கின்ற விஞ்ஞான உலகத்திலே நாம் வாழ்ந்து கொண்டிருக்கின்றோம். இது மேலும் வளர்ந்து உலகம் என்பது ஒரு சிறிய குக்கிராமம், குக்கிராமத்தைவிட இன்னும் சிறிய அளவுக்கு சுருங்கிவிட்ட ஒரு வடிவம் என்ற நிலையை எதிர்காலத்திலே இந்தத் தகவல் தொடர்பு உருவாக்க இருக்கிறது. அந்த நேரத்திலே நம்முடைய தமிழ் அதிலே ஆக்கம் பெற வேண்டும், இடம் பெற வேண்டும் என்பதற்காகத்தான் இந்தப் பெருமுயற்சியிலே நாம் ஈடுபட்டிருக்கிறோம்.

## எல்லோராலும் பாராட்டப்பட்ட மகளிர்க்கான சிறு வணிகக் கடன் திட்டம்

இந்த உரையிலே மகளிருக்கான சிறு வணிகக் கடன் திட்டம் ஒன்று குறிப்பிடப்பட்டிருக்கிறது. அது ஒரு வரியில் குறிப்பிடப்பட்டிருந்தாலும் அதனுடைய விளைவு, பயன் மகத்தானதாக எதிர்காலத்திலே இருக்கத்தான் போகிறது. மகளிர் தாங்கள் நடத்த விரும்புகின்ற சிறுசிறு தொழில்களுக்காகக் கடன் வாங்குவதற்கு வங்கிகளுக்குச் சென்றால், அதிக வட்டி தர வேண்டிய சூழ்நிலை இருக்கிறது. அல்லது, யாராவது வியாபாரிகளிடத்திலே, வட்டிக்கடைக்காரர்களிடத்திலே சென்று கடன் பெற்றால், அதற்கு அளவுக்கு மீறிய வட்டி தர வேண்டியிருக்கிறது. இதையெல்லாம் கணக்கிலே கொண்டு, கூட்டுறவு வங்கிகள் மூலமாக, ஒரு ரூபாய் வட்டிக்கு, 500 ரூபாய் முதல் 2,000, 3,000 ரூபாய் வரை சிறு கடைகள், காய்கறி வியாபாரம் போன்ற சிறிய வியாபாரங்களில் ஈடுபடுகின்ற மகளிருக்கு கடன் தருவதற்கான ஒரு வழிவகை உருவாக்கப்பட்டு, சென்னை மாநகரத்திலே, முதலில் சேப்பாக்கத்திலே இது தொடங்கப்பட்டு, அண்ணா நகரில் அது தொடர்ந்து, சென்னை மாநகரம் முழுவதும் இந்த சிறு வணிகக் கடன் திட்டம் மகளிருக்காக பரப்பப்பட இருக்கிறது.

மாநகரங்களுக்கு மாத்திரமல்லாமல், எல்லா நகரங்களிலும் இந்தத் திட்டத்தை நாம் பரவலாக நடத்த இருக்கிறோம். நகரங்களில் முடிவுற்ற பிறகு, கிராமங்களிலேகூட இந்தத் திட்டத்தை விரிவாக்குவதற்கு அரசு முயற்சிகளை மேற்கொண்டிருக்கிறது. எனவே, இந்தத் திட்டம் மகத்தானதாக, எல்லோராலும் பாராட்டப்படக் கூடியதாக, இந்தியாவிலே முதன்முதலாக தமிழகத்திலே உருவாக்கப்பட்ட திட்டமாக அமையும் என்பதில் எனக்குச் சிறிதும் சந்தேகம் இல்லை.

அதைப்போல, தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டுத் திட்டம், ஏற்கனவே இருக்கின்ற மாவட்டங்கள் அன்னியில் மேலும் ஏழு மாவட்டங்களுக்கு விரிவாக்கப்பட இருக்கிறது. பத்தாயிரம் ஹெக்டேர் பரப்பளவில் தரிசு நில மேம்பாட்டுத் திட்டம் இந்த உரையிலேதான் குறிப்பிடப்பட்டு இருக்கிறது. விரைவுபடுத்தப்பட்ட தோட்டக்கலைப் பயிர் மேம்பாட்டுத் திட்டம் இந்த உரையிலே குறிப்பிடப்பட்டிருக்கிறது. காவிரி கழிமுகப் பகுதிகளிலும் மற்றும் பல்வேறு மாவட்டங்களிலும் தூர்வாரும் பணிக்கு அதிக நிதி, எதிர்காலத்திலே ஒதுக்கப்படும் என்றும் இந்த உரை கூறுகின்றது. சென்னை தரமணியில் 320 கோடி ரூபாய் செலவில் உலகத் தரத்திலான கணினி மென்பொருள் பூங்கா Software Park அமைகிறது என்ற செய்தியையும் இந்த உரைதான் சுட்டிக் காட்டியிருக்கின்றது.

## 5ஆம் இடத்தில் இருந்த தமிழகம் தொழில் வளர்ச்சியில் 2ஆம் இடத்திற்கு உயர்வு

தொழில் வளர்ச்சியில் 1996 ஏப்ரலில் ஐந்தாம் இடத்தில் இருந்த தமிழ்நாடு, 1998 அக்டோபரில் இரண்டாம் இடத்திற்கு முன்னேறி இருக்கின்ற செய்தியையும் இந்த உரைதான் விளக்கியிருக்கிறது. ஆயிரக்கணக்கான மெகாவாட் மின்சார உற்பத்திக்கான திட்டங்களை பற்றிய குறிப்புகளும் இந்த உரையிலே இடம் பெற்றிருக்கிறது. நகர்ப்பகுதிகளில் அடிப்படைக் கட்டமைப்பு

வசதிக்கும், நகர்ப்பகுதி அமைப்புகளின் வசதிக்கும் கணிசமான நிதி உதவி கிடைத்திட, தமிழ்நாடு நகர்ப்பகுதி இரண்டாவது மேம்பாட்டுத் திட்டம் இந்த உரையிலே குறிப்பிடப்பட்டிருக்கிறது.

சென்னை மாநகரத்தினுடைய வளர்ச்சிக்கு ஆரச்சாலைகளை அகலப்படுத்தி, வலுவூட்டும் பணி முக்கியமான, சந்திப்புகளில் 10 சிறு மேம்பாலங்கள் கட்டும் பணி, பெருநகர்ப் பகுதிக்கான வெள்ளக்கட்டுப்பாடு மற்றும் வடிகால் திட்டப் பணி இந்த உரையிலே இடம் பெற்றிருக்கிறது. ஊராட்சிகளுக்கு மேலும் அதிகாரப் பகிர்வு தரப்படும் என்ற உறுதியும் இந்த உரையிலே இடம்பெற்றிருக்கிறது. நமக்கு நாமே திட்டம், அண்ணா மறுமலர்ச்சித் திட்டம் ஆகிய அனைவரும் பாராட்டக்கூடிய இந்த திட்டங்களை மேலும் மேம்படுத்துவோம் என்ற உறுதிமொழியும் இந்த உரை வாயிலாக வழங்கப்பட்டுள்ளது. நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகளில் குடிநீர் வழங்குவதை மேம்படுத்த 500 கோடி ரூபாயிலே திட்டம் தயார் என்று இந்த உரையிலே அறிவிக்கப்பட்டுள்ளது.

சென்னை மற்றும் தூத்துக்குடி பகுதிகளில் ஆஸ்திரியா அரசின் உதவியோடு கடல்நீரைக் குடிநீர் ஆக்கும் திட்டம் வகுக்கப்படுவதையும் இந்த உரை எடுத்துக்காட்டுகிறது.

2.1.99 அன்று பெரியபாளையத்தில் பணி தொடங்கப்பட்ட 106 பாலங்கள் அன்னியில், மாநிலம் முழுவதும் 360 கோடி ரூபாய் செலவில் இந்த ஆண்டு 104 பாலங்கள் கட்டுவதற்கான பணியும் அண்மையிலே தொடங்கப்பட்டிருக்கின்றது. உலக வங்கி நிதியுதவியோடு தமிழ்நாடு சாலைப் பகுதி திட்டம் இந்த உரையிலே அறிவிக்கப்பட்டிருக்கிறது. சாதி பேதமற்ற சமுதாயத்தை உருவாக்க சமத்துவபுரங்கள் தொடரும் என்ற அறிவிப்பும் இந்த உரையில் இடம் பெற்றிருக்கிறது. ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் மேம்பாட்டிற்கு அதிக நிதி ஒதுக்கப்படும் என்ற செய்தியும் இந்த உரையிலே சொல்லப்பட்டிருக்கிறது. கல்வி கற்கும் வயதடைந்த அனைவரையும் பள்ளியில் சேர்க்கும் வகையில், தமிழ்நாடு கட்டாய தொடக்கக்

கல்விச் சட்டம் இயற்றப்பட்டுள்ளதைச் சுட்டிக்காட்டி, அந்தக் குறிக்கோள் நிறைவேற அரசு பாடுபடும் என்ற சூளுரையும் எடுக்கப்பட்டிருக்கிறது.

## கைத்தறித் தொழிலுக்கு புத்துயிர் அளிப்பதற்கான முயற்சிகள்

இந்த உரையின் வாயிலாக, கைத்தறி தொழிலுக்குப் புத்துயிர் அளிப்பதற்கான முயற்சிகள் தொடர் முயற்சிகள் இவ்வளவும் கவர்னர் உரையிலே இடம் பெற்றிருக்கின்றன. நேர்மையான, ஒளிவு மறைவற்ற மற்றும் பொறுப்புள்ள நிர்வாகத்தை ஏற்படுத்தவும், ஊழலைத் தடுக்கவும் நீதிபதி இராமானுஜம் குழு பரிந்துரைகள் செயலாக்கம் பெற இந்த அவையிலேயே அந்த அறிக்கை அரசினுடைய குறிப்புகளோடு விரைவில் இந்தக் கூட்டத்தொடரிலே வைக்கப்படும் என்றும் எடுத்துக்காட்டப் பட்டிருக்கிறது.

இங்கே பேசிய உறுப்பினர் சுந்தரம் அவர்கள் தொடக்கத்திலேயே தமிழ்நாட்டின் பொருளாதார வளர்ச்சி அதிகரிக்கவில்லை என்றும், தமிழக மக்களின் வாழ்க்கைத் தரம் உயரவில்லை என்றும் குறிப்பிட்டார்.

## தனிநபர் வருமானம் இந்த ஆண்டும் உயர்வு

1996–97இல் தமிழகத்தினுடைய தனிநபர் சராசரி ஆண்டு வருமானம் 2,918 ரூபாய். 1997–98இல் தமிழ்நாட்டினுடைய தனிநபர் சராசரி வருமானம் 3,057ஆக உயர்ந்துள்ளது. புள்ளியியல் துறை மதிப்பீட்டின்படி இந்த ஆண்டும் தனிநபர் சராசரி வருமானம் ரூபாய் 3,164ஆக உயரும் என எதிர்பார்க்கப்படுகிறது. இந்த தனிநபர் சராசரி வருமானம் 1980–81ஆம் ஆண்டு விலைப்புள்ளிகளைக் கொண்டு மதிப்பிடப் பட்டதாகும். 1991–92ஆம் ஆண்டு விலைப்புள்ளிகளைக் கொண்டு ஒப்பிட்டுப் பார்க்கும்போது தனிநபர் வருமானம் மேலும் அதிகமாக இருக்கும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

தொழில் வளர்ச்சியில் இரண்டாவது இடத்தைப் பெற்றிருக்கிறது நம்முடைய மாநிலம் என்பதை இங்கே எடுத்துக் கூறினேன். ஆனால் நம்முடைய எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் இங்கே உரையாற்றும்போது ஏற்கெனவே அறிவிக்கப்பட்ட தொழில்கள் எல்லாம் என்ன ஆயிற்று என்று சில தொழில்கள் தொடரப்படாமலே முடிந்து விட்டதை எடுத்துக்காட்டினார்கள். குறிப்பாக பில்கிங்டன் கிளாஸ் தொழிற்சாலைப் பற்றி சொன்னார்கள்.

மார்க்கெட்டில் போதிய தேவை (Demand) இல்லை என்று கணித்த காரணத்தால் பில்கிங்டன் நிறுவனம் அந்தத் திட்டத்தைக் கைவிட்டு விட்டது. இதற்கு நான் பொறுப்பாளி அல்ல. அவர்களே மார்க்கெட் நிலவரத்தை அறிந்து அதை கைவிட்டு விட்டார்கள். அதற்குக் காரணம் பிரான்ஸ் நாட்டைச் சேர்ந்த 'செயின்ட் கோஃபெயின்' என்ற நிறுவனம் இந்த கிளாஸ் தொழிற்சாலையை வேகமாக உருவாக்கி வருகிறது. பெரிய அளவிலே அத்தொழிற்சாலையை தமிழகத்திலேயே அது உருவாக்கி வருகிற காரணத்தினால் அவர்களும் அந்தத் தொழிற்சாலையை கைவிட்டு விட்டார்கள்.

கும்ஹோ டயர் தொழிற்சாலைப் பற்றி சொன்னார்கள். அவருக்கும் தெரியும். உறுப்பினர்களுக்கும் நன்றாகத் தெரியும். பொருளாதாரத்திலே ஏற்பட்ட மந்தநிலை எந்த அளவிற்குக் கொரியாவை தாக்கியது என்று நன்றாகத் தெரியும்.

இது தென்கொரியாவிலே உள்ள ஒரு நிறுவனத்தால் ஆரம்பிக்கப்படுவதாக இருந்த தொழிற்சாலையாகும். இந்தோனேஷியாவிலே தொடங்கி ஹாங்காங் போன்ற இடங்களில் பரவி கொரியா வரையிலே வியாபித்த இந்தப் பொருளாதார மந்த நிலையினால் தென்கொரியாவிலே உள்ள இந்தப் பிரச்சினையின் காரணமாக இந்த கும்ஹோ டயர் நிறுவனம் தனது திட்டத்தை அடியோடு இரத்து செய்துவிடவில்லை, தள்ளிப் போட்டிருக்கிறது என்பதை நான் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

நார்க்ஸ் ஹைடிரோம், உலக அளவில் பி.வி.சி.க்கு மார்க்கெட் குறைந்துள்ளதால் அதுவும் தனது திட்டத்தைக் கைவிட்டு விட்டது. ஆனால் அதே நேரத்தில் மிட்சுபிசி, ஹூண்டாய் போன்ற நிறுவனங்கள் உற்பத்தியைத் தொடங்கிவிட்டன என்ற மகிழ்ச்சியான செய்தியையும் இந்த மாமன்றம் மிக நன்றாக அறியும் என்று கருதுகிறேன். ஃபோர்டு நிறுவனம் அக்டோபர் திங்களில் தனது உற்பத்தியைத் தொடங்கவிருக்கிறது.

## கரும்புச் சக்கையிலிருந்து வரும் ஆண்டு மேலும் 100 மெகாவாட் மின்சாரம் தயாராகும்

கரும்புச் சக்கையிலிருந்து மின்சாரம் தயாரிக்கும் திட்டத்திற்கு இதுவரையிலே தற்போது சுமார் 141 மெகாவாட் மின்சாரம் தயாரிக்கப்பட்டு வருகிறது என்பதை மாண்புமிகு எதிர்க்கட்சிகளின் கவனத்திற்கு நான் கொண்டு வருகிறேன். வரும் ஆண்டில் மேலும் சுமார் 100 மெகாவாட் மின்சாரம் தயாரிக்கப்படும் என்பதையும் நான் அவர்களுக்கு தெரிவித்துக் கொள்கிறேன்.

தொழில் வளர்ச்சியைப் பொறுத்தவரையில் நம்முடைய தமிழ்நாட்டைப் பார்த்தால் Centre for Monitoring Indian Economy என்கிற பெரிய நிறுவனம், மத்திய அரசு இந்திய அரசு; இவைகளினுடைய புள்ளி விவரங்களையெல்லாம் தருகின்ற ஒரு பெரிய நிறுவனம் Centre for Monitoring Indian Economy Survey of Investment Projects, May - 1996 அதன்படியும், அதற்குப் பிறகு எடுத்த சர்வேக்களின் படியும் உள்ள குறிப்புகளை இந்த அவையின் கவனத்திற்கு கொண்டுவர நான் விரும்புகின்றேன்.

## 1996ஆம் ஆண்டு மாநிலங்கள் தொழிலில் செய்துள்ள முதலீடுகள்

மே, 1996இல் Trends in total investment by States என்ற தலைப்பில் கர்நாடகாவில் ஒரு இலட்சத்து பதினொராயிரத்து நானூற்று அறுபத்தி நாலு கோடி ரூபாய் இன்வெஸ்ட்மென்ட் முதலீடு;

குஜராத்தில் ஒரு இலட்சத்து மூவாயிரத்து நானூற்று அறுபத்தொரு கோடி ரூபாய் இன்வெஸ்ட்மெண்ட்;

ஒரிசாவில் ஒரு இலட்சத்து ஆயிரத்தொன்பது கோடி ரூபாய் இன்வெஸ்ட்மெண்ட்;

மராட்டியத்தில் ஒரு இலட்சத்து ஐந்நூற்று பதினாறு கோடி ரூபாய் இன்வெஸ்ட்மெண்ட்;

தமிழ்நாடு தொன்னூறு ஆயிரத்து அறுநூற்று ஐம்பது கோடி ரூபாய் இன்வெஸ்ட்மெண்ட் மே, 1996இல்

அதற்கு கீழேதான் உத்தரப்பிரதேசம், மத்தியப் பிரதேசம், ஆந்திரப் பிரதேசம், மேற்கு வங்கம் இவைகள் எல்லாம், இதற்கு அடுத்துதான் வருகின்றன. ஆறாவது, ஏழாவது, எட்டாவது மற்றும் ஒன்பதாவது இடங்களில் இவைகள் எல்லாம் வருகின்றன. இது 1996ஆம் ஆண்டு மே மாதத்தினுடைய நிலைமை. அப்போது, தமிழ்நாடு தொன்னூறு ஆயிரத்து அறுநூற்றி ஐம்பது கோடி ரூபாய் முதலீட்டிலே 5ஆவது இடத்தில் இருந்தது.

**தொழில் முதலீட்டில்**
**இரண்டாவது இடத்தில் தமிழ்நாடு**

ஜனவரி, 1999 வரை இன்வெஸ்ட்மென்ட் என்ற அந்த ரேங்கைப் பார்த்தால் மகாராஷ்டிரம் ஒரு இலட்சத்து ஐம்பத்தொன்றாயிரத்து ஐந்நூற்று தொன்னூற்றி எட்டு கோடி ரூபாய் இன்வெஸ்ட்மெண்ட்;

தமிழ்நாடு ஒரு இலட்சத்து ஐம்பத்தோராயிரத்து இருநூற்றி முப்பத்தியேழு கோடி ரூபாய். எனவே இரண்டாவது இடத்திற்கு தமிழ்நாடு வந்து விட்டது என்பதை பெருமையோடு சொல்லிக் கொள்கின்றோம்.

இதிலே என்ன வித்தியாசம் என்றால் மகாராஷ்டிரத்திலே ஒரு இலட்சத்து ஐம்பத்தோராயிரத்து ஐந்நூற்றி தொன்னூற்றி எட்டு கோடி

இன்வெஸ்ட்மென்ட். தமிழ்நாட்டிலே ஒரு இலட்சத்து ஐம்பத்தோராயிரத்து இருநூற்றி முப்பத்தேழு கோடி இன்வெஸ்ட்மென்ட், அது 11.52 சதவிகிதம் மகாராஷ்டிரா; தமிழ்நாடு 11.49 சதவிகிதம். அதாவது .03 அவ்வளவுதான் வித்தியாசம். மராட்டியத்தோடு வித்தியாசம் .03 தான். ஒரு சதவிகிதம் கூட அல்ல. .1 சதவிகிதம் கூட அல்ல; நாம் இரண்டாவது இடத்திற்கு வருகிறோம். அதே நேரத்தில் மற்ற மாநிலங்கள் பற்றி நான் சொல்லவில்லை. குஜராத் மூன்றாவது இடத்திற்குப் போய் விடுகிறது; நாம் இரண்டாவது இடத்திற்கு வந்தது மாத்திரமல்ல, மராட்டியத்திலே மே, 1996ஆம் ஆண்டு முதலீட்டிற்கும் ஜனவரி 1999–க்கும் இடையிலுள்ள வித்தியாசம் என்னவென்றால் மராட்டியத்திலே ஐம்பத்தோராயிரத்து எண்பத்திரண்டு கோடி வித்தியாசம்.

தமிழ்நாடு அறுபதாயிரத்து ஐந்நூற்றி எண்பத்தி ஏழு கோடி வித்தியாசம். மராட்டியத்திலே 21.03 சதவிகிதம். தமிழ்நாடு 24.94 சதவிகிதம் 3.9 அதிகம். எனவே, இந்த வகையிலும் வித்தியாசம் என்ற வகையிலே தமிழ்நாடு முதலிடத்திற்கே வந்துவிட்டது என்பதை நான் மகிழ்ச்சியோடு சொல்லிக் கொள்ள விரும்புகிறேன்.

அகில இந்தியாவினுடைய மொத்த முதலீடு என்று எடுத்துக் கொண்டால் ஜனவரி 1999இல் பதிமூன்று இலட்சத்து பதினைந்தாயிரத்து அறுநூற்றி தொன்னூற்று இரண்டு கோடி அகில இந்திய மொத்த முதலீடு; அதிலே தமிழ்நாட்டிற்கு ஒரு இலட்சத்து ஐம்பத்தோயிரத்து இருநூற்று முப்பத்தேழு கோடி.

இதேநிலை 1996இலே பார்த்தால் அகில இந்தியாவில் பத்து இலட்சத்து எழுபத்திரண்டாயிரத்து எழுநூற்று ஐம்பத்தி மூன்று; அப்பொழுது தமிழ்நாட்டில் தொன்னூறு ஆயிரத்து அறுநூற்று ஐம்பது கோடி, அதாவது 8.45 சதவிகிதம். இரண்டரை ஆண்டுகளிலே உயர்வு இந்திய அளவில் இரண்டு இலட்சத்து நாற்பத்திரண்டாயிரத்து தொள்ளாயிரத்து பத்தொன்பது கோடி;

தமிழ்நாட்டிலே அறுபதாயிரத்து ஐந்நூற்று எண்பத்தியேழு கோடி. இரண்டு இலட்சம் அகில இந்தியாவில் அதிகம். தமிழ்நாட்டிலே அறுபதாயிரம் கோடி அதிகம். இது 24.94 சதவிகிதம் என்பதை நாம் எண்ணிப்பார்த்து பெருமையடையலாம்.

## மூடப்பட்ட - மூடப்படுகின்ற தொழிற்சாலைகளுக்காக அரசு வருத்தம்

இந்தத் தொழிற்சாலைகள் வளருகின்றன. தொழில்கள் வளருகின்றன என்று சொல்கிற நேரத்தில் சில தொழிற்சாலைகள் மூடப்படுகின்றனவே என்கின்ற ஆதங்கமும் நம்முடைய உறுப்பினர்களுக்கு இல்லாமல் இல்லை. இவர்கள் எல்லாம் இங்கே இதைக் குறிப்பிட்டு பேசியிருக்கின்றார்கள். மூடப்பட்ட அல்லது மூடப்படுகின்ற தொழிற்சாலைகளுக்காக இந்த அரசும் வருத்தப்படுகிறது, கவலையைத் தெரிவிக்கிறது. ஆனால், இயற்கையிலே பழையன கழிதலும், புதியன புகுதலும் என்பது இயற்கை.

அதற்காக மூடப்பட்ட தொழிற்சாலைகள் எல்லாம் மூடப்பட்டது சரிதான் என்று வாதிக்க விரும்பவில்லை. அதற்குப் பின்னாலே இருக்கின்ற தொழிலாளர்களுடைய வயிறு என்னுடைய நினைவுக்கு வருகிறது. அவர்களுடைய வாழ்க்கை என்னுடைய நினைவுக்கு வராமல் இல்லை. இருந்தாலும், வாழை மரம் வளர வளர, பிறகு கன்று வளர வளர ஏற்கெனவே இருந்த வாழை போய்விடுவதைப் போல தமிழ்நாட்டிலே சில தொழில்கள் நலிவடைந்து இருக்கின்றன என்பதை நாம் மறப்பதற்கில்லை.

இதற்குக் காரணம் என்ன என்று பார்த்தால் நீண்ட காலமாகவே இயங்காமல் இருக்கிற நிறுவனங்கள் தமிழ்நாட்டில் 43. இவை பெரும்பாலும் நிதி நெருக்கடி, பங்குதாரர்களுக்குள் மன வேறுபாடு ஆகிய காரணங்களினால் மாத்திரமே இயங்காமல் உள்ளன. இவைகள் தொழிலாளர் பிரச்சினையால் மூடப்பட்டவை அல்ல.

அதேபோல, தொழில் தகராறு சட்டம் பிரிவு 25(ஒ)ன் கீழ் அனுமதி வழங்கப்பட்டு, மூடப்பட்ட நிறுவனங்கள் எதுவும் இல்லை. மேற்கூறிய 43 நிறுவனங்களில் கலைப்பு அதிகாரி (official liquidator) முன் நிலுவையில் உள்ளது 11 நிறுவனங்கள் ஆகும். தொழில் நிதி மற்றும் புனரமைப்பு வாரியம் பி.ஐ.எஃப்.ஆர்., ஏ.ஏ.ஐ.எஃப்.ஆர்., முன்பு நிலுவையில் உள்ளவை 8 நிறுவனங்கள் ஆகும். 2 நிறுவனங்கள் தமிழ்நாடு தொழில் முதலீட்டுக் கழகத்திற்குச் செலுத்த வேண்டிய தொகையை செலுத்தாததால், அந்த நிறுவனம் இவற்றை கையகப்படுத்தியுள்ளது. 3 நிறுவனங்கள் தொடர்பாக உயர்நீதிமன்றத்திலே வழக்கு நிலுவையிலே உள்ளது. 12 நிறுவனங்கள் மூடப்பட்ட பிரச்சினை தொடர்பாக தொழிற்சங்கங்கள் எழுப்பிய தாவாக்களில் அரசு நீதிமன்றத் தீர்ப்புக்கு விட்டு ஆணை பிறப்பித்துள்ளது.

இவை தவிர, சென்னை பி அண்டு சி மில் கதவடைப்பு பிரச்சினையில் அரசு நீதிமன்றத் தீர்ப்பிற்கு அனுப்பிய பின், தமிழக அரசின் அறிவுரைப்படி 28–3–1998 அன்று தொழில் தகராறு சட்டம், பிரிவு 12(3)இன் கீழ் ஆலை மீண்டும் திறப்பது குறித்தும், தன் விருப்ப ஓய்வுத் திட்டத்தில் செல்ல விருப்பம் உள்ள தொழிலாளர்களுக்கு வழங்க வேண்டிய இழப்பீட்டுத் தொகை குறித்தும் ஒரு ஒப்பந்தம் ஏற்பட்டது. அதன் அமலாக்கம் கண்காணிக்கப்பட்டு வருகின்றது. நீண்ட காலமாக இயங்காமல் உள்ள இத்தகைய 43 நிறுவனங்கள் தவிர, தமிழ்நாட்டில் அண்மைக் காலத்தில் இயங்காமல் உள்ள 19 நிறுவனங்கள் இருக்கின்றன. இவற்றில் 5 நிறுவனங்களின் பிரச்சினை அரசால் தொழில் தீர்ப்பாயத்தின் முடிவுக்கு அனுப்பப்பட்டுள்ளது.

**வேலூர் மாவட்ட கூட்டுறவு நூற்பாலை திறக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது**

வேலூர் மாவட்ட கூட்டுறவு நூற்பாலை பற்றி ஞானசேகரன் நேற்றைய தினம் குறிப்பிட்டார். அந்த நூற்பாலை புனரமைப்பு

செய்யப்பட அரசால் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு ஆலை திறப்பது குறித்து கைத்தறி மற்றும் துணி நூல் இயக்குநரால் நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது என்பதை ஞானசேகரன் அவர்களுக்கு ஆறுதலாகக் கூறிக் கொள்கிறேன்.

தமிழ்நாட்டில் இயங்காமல் உள்ள நிறுவனங்கள் அனைத்துமே நிதி நெருக்கடி காரணமாக மட்டுமே மூடப்பட்டு, இயங்காமல் உள்ளன. அவை தவிர வேறு எந்தக் காரணமும் இல்லை. இவற்றில் தொழிலாளர் பிரச்சினை எதுவும் இல்லை. நிதி நெருக்கடி காரணமாகவே மூடப்பட்டுள்ள நிறுவனங்களைத் திறப்பதற்கு அரசு நடவடிக்கை எடுக்க வாய்ப்பில்லை. ஏனென்றால், அரசு தரப்பிலே நிதி ஆதாரத்திலும், இப்போது உள்ள சூழ்நிலையிலும் அரசு அந்த அளவிற்கு அகல கால் வைப்பதற்கு தயாராக இல்லை என்பதை நான் தெரிவித்துக் கொள்கிறேன். மேலும், ஏற்கெனவே கூறியபடி இவற்றில் பெரும்பாலான நிறுவனங்கள் கலைப்பு நடவடிக்கையிலும், பி.ஐ.எஃப்.ஆர். மற்றும் உயர்நீதிமன்றம் ஆகியவற்றின் முன் வழக்குகள் நிலுவையிலே உள்ள நிலைமையிலும், இவற்றின் மீது அரசு நடவடிக்கை எடுப்பதற்கான சாத்தியக்கூறுகள் இல்லை என்பதை நான் தெரிவித்துக் கொள்கிறேன்.

நிதி நெருக்கடி காரணமாக மூடப்பட்டுள்ள நிறுவனங்களின் நிர்வாகத்தினர் பி.ஐ.எஃப்.ஆர். முன்பு எடுத்துச் சென்று, புனரமைப்புத் திட்டம் தயார் செய்து, ஒப்புதல் பெற்று, அதற்குரிய நிதி மூலதனத்தை உரிய நிதி நிறுவனங்கள் அல்லது வங்கிகளிடமிருந்து பெற்று ஆலையைத் திறக்க நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது. மூடப்பட்டு இயங்காமலேயே உள்ள நிறுவனங்களை திறந்து, நிதி பெற ஏதாவது வாய்ப்பு உள்ளதா என்பதை ஆராய தொழிலாளர் நலத்துறை அமைச்சர், சம்பந்தப்பட்ட நிர்வாகத்தினர் மற்றும் தொழிற் சங்கத் தரப்பினர் மற்றும் அரசு அதிகாரிகளோடு மண்டல வாரியாக கூட்டங்கள் நடத்தி விவாதித்துள்ளார்கள். இந்தக் கூட்டங்களில் எடுக்கப்பட்ட முடிவுகளின்படி மீண்டும் பேச்சுவார்த்தை நடத்த, தொழிற்சங்கங்கள் கேட்டுக் கொண்டதற்கிணங்க, அதிகாரிகள் முன்னிலையிலேயே

பேச்சுவார்த்தைகளும் நடவடிக்கைகளும் தொடரப்பட்டன. ஆனாலும், சுமுக முடிவு எதுவும் இதுவரையிலே ஏற்படவில்லை.

## அரக்கோணம் எஃகு நிறுவன தொழிலாளர்களுக்கு பணம்

அரக்கோணம் எஃகு நிறுவனத்தைப் பொறுத்தவரை, அது நலிவடைந்தும், மூட வேண்டிய நிலை ஏற்பட்டதைத் தொடர்ந்து, அந்த ஆலையிலே வேலை செய்து வந்த 722 தொழிலாளர்கள் தாமாகவே முன்வந்து, தன்னிச்சையாக ஒய்வு பெறும் திட்டத்தின் கீழ் (Voluntary Retirement Scheme) செல்வதற்கு ஒப்புதல் தரப்பட்டதன் பேரில், அவர்களுக்கு 16,76,30,681 ரூபாய் வழங்கப்பட்டுவிட்டது என்பதையும் நான் தெரிவித்துக் கொள்கிறேன்.

நலிவடைந்த கூட்டுறவு நூற்பாலைகள் பற்றி இங்கே பேசப்பட்டது. நம்முடைய சுப்புராயன் அவர்கள்கூட அதைப் பற்றி இங்கே எடுத்துக்காட்டினார்கள். கடந்த ஆட்சியில் திட்டமிட்டு தரம் குறைந்த பஞ்சை அதிக விலை கொடுத்து வாங்கி பல கோடி ரூபாய் ஊழல் நடைபெற்றதால் கூட்டுறவு நூற்பாலைகளுடைய நிதி நிலைமை மிகவும் சீர்கெட்டது. தரமற்ற நூலை தயாரித்து விற்க முடியாமல் தத்தளிக்கும் நிலைமைக்கு கூட்டுறவு நூற்பாலைகள் தள்ளப்பட்டன. கையிருப்பில் பணம் இல்லாமல் காசோலை வழங்கி அதன் காரணமாக நிர்வாக இயக்குநர்கள் கைது செய்யப்பட்ட நிலை எல்லாம் கடந்த ஆட்சியிலே நடைபெற்று, கூட்டுறவு நூற்பாலைகள் முடமாக்கப்பட்டதை நான் இங்கே வேதனையோடு நினைவு கூறுகின்றேன்.

## 16 கூட்டுறவு நூற்பாலைகள் ரூ.185.25 கோடியில் புனரமைக்கும் திட்டம்

நலிவடைந்துள்ள 18 கூட்டுறவு நூற்பாலைகளைப் புனரமைக்க அரசு பல்வேறு நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளது. 18 கூட்டுறவு

நூற்பாலைகளில் 16 ஆலைகளுக்கு ரூ.185.25 கோடி மதிப்பில் புனரமைக்கும் திட்டத்தை ஏற்று, அரசு ஆணை வழங்கியுள்ளது என்பதையும் தெரிவித்துக் கொள்கிறேன். என்றாலும் உடனடியாக 6 கூட்டுறவு நூற்பாலைகளுக்கு மட்டும் தேசிய வேளாண்மை மற்றும் கிராமப்புற வளர்ச்சி வங்கி 'நபார்டு' புனரமைப்புத் திட்டத்திற்கு நிர்வாக ஒப்புதலை அளித்துள்ளது. அரசு 5 ஆலைகளுக்கு ரூ.2.23 கோடி விளிம்புத் தொகை (Margin money) அளித்துள்ளது. இந்த ஆலைகளுக்குத் தேவையான பஞ்சு வகைகள் 'டான்ஸ்பின்' Tamil Nadu Spinning Mills Federation மூலம் வாங்க ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

கூட்டுறவு நூற்பாலைகள் சட்டப்படி செலுத்த வேண்டிய நிலுவைத் தொகையைப் பைசல் செய்யும் பொருட்டு ரூ.7.11 கோடி வழங்க அரசாணை பிறப்பித்து, அதிலே ரூ.1.7 கோடி உடனடியாக வழங்கப்பட்டுள்ளது. மீதித் தொகையை வழங்கவும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. இந்தக் கடன் எல்லாம் எப்போது வாங்கப்பட்டது? கடந்த ஆட்சியிலே ஏற்பட்ட தொல்லைகளை நாம் அனுபவித்துக் கொண்டிருக்கிறோம்.

இதற்கெல்லாம் அவர்கள்மேல் பரிதாபப்பட்டு அவர்களுடைய நிலைகளை எனக்கு அடிக்கடி உணர்த்துகின்ற பணியில் நம்முடைய எதிர்க்கட்சித் தலைவர்கூட ஈடுபட்டிருந்தார். இவைகளையெல்லாம் மனதிலே வைத்துத்தான் இந்தப் பணிகள் அரசின் சார்பாக முடுக்கிவிடப்பட்டன. ICICI, IFCI, IDBI போன்ற நிதி நிறுவனங்களுக்கு இரண்டு கூட்டுறவு நூற்பாலைகள் செலுத்த வேண்டிய ரூ.4.4 கோடியை அரசுதான் வழங்கியது. கூட்டுறவு நூற்பாலைகள் தனியார் பஞ்சு வியாபாரிகளுக்கு கடந்த ஆட்சிக் காலத்திலே செலுத்த வேண்டிய நிலுவைத் தொகையில் முதல் தவணையாக ரூ.1.65 கோடியையும் இந்த அரசுதான் வழங்கியது. மீதியை விரைவில் வழங்கவும் நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன. அதற்கான பேச்சுவார்த்தைகள் எல்லாம் நடைபெற்று எவ்வளவு குறைத்துக் கொள்ளலாம் என்று ஒரு settlement வந்து,

அப்போது நிர்ணயிக்கப்பட்ட தொகையிலே ரூ.1.65 கோடியை அரசு வழங்கிவிட்டது. மீதியை வழங்கவும் நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது.

இத்தகைய இன்னல்களுக்கிடையிலே கூட இந்த அரசு திட்டங்களை, நிதி நிர்வாகத்தைச் சரிவர நடத்தி வருகிறது என்பதற்கு யாரும் நமக்கு நற்சான்றிதழ் அளிப்பதற்கு முன்பாக திட்டக் குழுவினுடைய துணைத் தலைவராக இருக்கின்ற கே.சி.பந்த் அவர்கள், கோவிந்த வல்லப பந்த் அவர்களுடைய திருக்குமாரன் இன்றைக்கு திட்டக் குழுவினுடைய துணைத் தலைவராக இருக்கின்றார்.

பிப்ரவரி 19ஆம் தேதி, தேசிய வளர்ச்சிக் குழுக் கூட்டத்தில் மத்திய திட்டக் குழுவினுடைய துணைத் தலைவர், கே.சி.பந்த் உரையாற்றும்பொழுது பின்வருமாறு கூறுகின்றார்:

"Projection of a plan, far beyond what the resources would warrant, leads to distortion of priorities and to thin spread of resources. I must hasten to add that a number of States are exceptions to this, for example, Goa, Gujarat, Karnataka, Kerala, Maharashtra and Tamil Nadu. Their prudence in deciding the Plan size and realising it, I am sure, makes a better impression on the public than announcing large Plans and not realising them"

– அதாவது நிதியாதாரத்திற்கு அதிகமாக திட்டத்தின் அளவை நிர்ணயிப்பது முன்னுரிமை திட்டங்களைப் பாதிக்கும். மேலும் நிதியாதாரங்களைச் சிதறச் செய்துவிடும். அப்படி இல்லாமல் சில மாநிலங்கள் இருக்கின்றன. உதாரணமாக, கோவா, குஜராத், கர்நாடகா, கேரளா, மகாராஷ்டிரா மற்றும் தமிழ்நாடு ஆகிய மாநிலங்களைக் குறிப்பிடலாம். பெருமளவிலான திட்டங்களை அறிவித்துவிட்டு அவற்றைச் செயல்படுத்தாமல் இருப்பதைவிட விவேகமான முறையில்

திட்டத்தின் அளவை நிறைவேற்றுவதுதான் மக்கள் மத்தியில் நல்லெண்ணத்தை ஏற்படுத்தும் என்று கூறி, தமிழ்நாடு அப்படித்தான் நிதி நிர்வாகத்தை Financial Management நடத்துகிறது என்பதற்கான நற்சான்றை அவர் வழங்கியிருக்கின்றார்.

## ‘அன்னையைச்’ சந்தித்தபின் ‘சென்னை’யில் விமர்சனம்

ஆனால் மேற்கு வங்கத்திலேயிருந்து வந்த ஒரு அம்மையார் மதுரையிலே ஒன்றும், மதராஸ் வீதியிலே ஒன்றுமாகப் பேசியதை நீங்கள் அறிவீர்கள். மதராஸ் என்று நானே சொல்வதற்காக மன்னிக்கவும். அடுக்குத் தொடராகச் சொல்லிவிட்டேன். சென்னையிலே ஒன்றுமாகப் பேசுகிறார்கள். சென்னையிலே “அன்னையைச்” சந்தித்த பிறகு அவர்களுடைய விமர்சனம் அதுவாக அமைந்தது.

தமிழ்நாட்டினுடைய நிதி நிர்வாகத்திற்கு திட்டக்குழுவினுடைய துணைத் தலைவரே இந்தச் சான்று வழங்கிய பிறகு யாரோ மம்தா போன்றவர்கள் வந்து ஏதோ பேசிவிட்டு போனார்கள் என்பதற்காக நாம் கவலைப்படத் தேவையில்லை.

**டி.சுதர்சனம்** : அன்னை என்று சொன்னால் இந்திராகாந்தியைத் தான் குறிக்கும். சாதாரணமானவர்கள் எல்லாம் அன்னை ஆக முடியாது.

**கே. சுப்பராயன்** : அன்னை கஸ்தூரிபாய் இருக்கிறார்கள்.

**ச. அழகிரி** : அன்னை என்று சொல்வதற்குப் பதிலாக “அக்காவை” சந்திக்கச் சென்றார்கள் என்று சொல்லுங்கள்.

**முதல்வர் கலைஞர்** : நான் அக்கா என்று சொன்னால் பொன்னம்மாள் அக்காவை குறிப்பதாக எடுத்துக் கொள்ளக் கூடாது. நம்முடைய ஜி.கே. மணி அவர்கள் பாட்டாளி மக்கள் கட்சியின்

சார்பிலே இங்கே உரையாற்றும்போது ஒன்றைச் சொன்னார்கள். நான் அப்போது விளக்கம் அளித்தேன். இருந்தாலும் விரிவாக அதைப் பற்றிக் கூற விரும்புகிறேன்.

மிகவும் பிற்படுத்தப்பட்டோர் பட்டியலில் 108 ஜாதிகளைச் சேர்த்துவிட்டு அதிலே 20% கொடுத்தால் நியாயமா என்ற ஒரு கேள்வி; இது மணி மாத்திரம் அல்ல; அந்தக் கட்சியினுடைய தலைவர் அன்புக்குரிய நண்பர் டாக்டர் ராமதாஸ் அவர்களும் இந்தக் கேள்வியை அடிக்கடி எழுப்பியிருக்கிறார். நம்முடைய கணேசன் அவர்களும் சென்ற முறை இங்கே பேசும்போது அதைக் குறிப்பிட்டிருக்கிறார். ஆனால் இந்த 108 ஜாதிகள் என்று சொல்லும்போது மலைப்பாக இருக்கிறது. அடேயப்பா! 108 ஜாதிக்கு 20% தானா என்று ஒரு மலைப்பாக இருக்கிறது. இந்த உண்மை என்ன என்பதை அறிய வேண்டும்.

1982 ஆம் ஆண்டு அம்பாசங்கர் தலைமையிலே அருமை நண்பர் எம்.ஜி.ஆர். அவர்களுடைய ஆட்சிக் காலத்திலே அமைக்கப்பட்ட இரண்டாவது பிற்படுத்தப்பட்டோர் நலக்குழு. அதற்கு முன்பு முதல் பிற்படுத்தப்பட்டோர் நலக்குழு நான் முதலமைச்சராக இருக்கும்போது அமைத்தேன். பிறகு எம்.ஜி.ஆர். அவர்களுடைய ஆட்சிக் காலத்திலே இரண்டாவது பிற்படுத்தப்பட்டோர் நலக்குழு அமைக்கப்பட்டது. அது 1985ஆம் ஆண்டு வழங்கிய அறிக்கையில் மிகப் பிற்படுத்தப்பட்டோர் பட்டியலில் உள்ள வன்னியர் உள்ளிட்ட 109 ஜாதிவாரியான மக்கள் தொகை அறிவிக்கப்பட்டது. அதனுடைய விவரம் :

### ஜாதி வாரியான மக்கள் தொகை

அந்த 109 ஜாதிகளுடைய மொத்த மக்கள் தொகை 1,23,34,987 பேர். அதிலே வன்னியர் மாத்திரம் 65,04,855 பேர். அதுதான் பெரும் எண்ணிக்கை. 1 கோடியே 23 இலட்சத்திலே 65 இலட்சம் பேர் வன்னியர் பெருமக்கள். அஃதன்னியில் மறவர், பிரமலைக்கள்ளர், அம்பலக்காரர், சேர்வை, அப்பநாடு கொண்டையம்கோட்டை மறவர்,

அம்பலக்காரர் (சூரியனூர்), கந்தர்வகோட்டை கள்ளர், கூட்டப்பால்கள்ளர், பெரியசூரியூர் கள்ளர், செம்பநாடு வளவு உட்பட உள்ள சீர்மரபினர் 17,18,532 பேர்.

இவைபோக எஞ்சியுள்ள 41,11,600 பேரில் எத்தனை ஜாதிகள் வருகின்றன என்பதை எண்ணிப் பார்க்க வேண்டும். அந்த எண்ணிக்கை என்ன என்பதையும் நாம் மறந்துவிடக்கூடாது. சலவைத் தொழிலாளிகள் 4,45,637, மருத்துவர், நாவிதர், மங்களார் என்று சொல்லப்படுகின்ற வகுப்பினர் 4,26,427, போயர், ஒட்டர் 4,09,567. ஆண்டிப்பண்டாரம் 2,23,770, இசை வேளாளர் 58,327, குலாலா 3,01,179. குரும்பர் 1,83,689. (குரும்பர் என்றால் பெரிய 'று' அல்ல; சின்ன 'ரு') மீனவர் 2,71,764. தொட்டிய நாயக்கர் 2,71,318. வேட்டுவகௌண்டர் 1,25,886. டொம்மாரா 4,436. எரவல்லர் 1,377. கொரச்சா 3,429. குருகினி செட்டி 4,225, நோக்கர் 7,559. முக்குவர் அல்லது முகையர் 4,358. பண்ணையார் 9,758. தொண்டமான் 14,036. பட்டுதுர்காஸ் 441. (441 பேரெல்லாம் இருக்கிறார்கள். இதெல்லாம் சேர்த்துத்தான் 108 ஜாதிகள் என்கிறோம்). டோம்ஸ் 260 பேர். தொங்கபோயா 238. தொங்க ஊர் கொரச்சாஸ் 287. தேவகுடி தலையாரி 1,955. தொப்பைகுரச்சாஸ் வெறும் 51. குடு தாசரிகள் 482. மொண்டகொரவர் 196. மொண்டகொல்லா 64. சேலம் மேலநடுக்கொரவர் 1,839. சேலம் உப்புக் கொரவர் 2,782. சாரங்கபள்ளிக் கொரவர் 54. தோகமலை கொரவர் அல்லது கேப்மாரிகள் 512. வயல்பாடு அல்லது நாவல் பேடா கொறச்சாஸ் 15. வடுவாங்கபட்டி கொரவர் 381. வரகனேரிக் கொரவர் 313.

இப்படி ஒரு இலட்சத்திற்கு மேற்பட்ட மக்கள் தொகை கொண்ட ஜாதி 14. 50,000த்திற்கு மேற்பட்ட ஆனால் 1 இலட்சத்திற்குக் குறைவான மக்கள் தொகை கொண்ட ஜாதிகள் 10. 10,000–த்திற்கு மேல் ஆனால் 50,000–த்திற்குக் கீழே மக்கள்தொகை உள்ள ஜாதிகள் 19. 1000 முதல் 10,000 வரை மக்கள்தொகை உள்ள ஜாதிகள் 40. 1000–த்திற்கும் கீழே மக்கள்தொகை கொண்ட ஜாதிகள் 25. இப்படித்தான் 108 ஜாதிகளே அல்லாமல், இதிலே அதிகமான பலனைப்

பெறக்கூடியவர்கள் நான் முதலிலே குறிப்பிட்ட இரண்டு வகுப்பினர்கள். வன்னியப் பெருமக்கள், அதற்கடுத்த அளவிற்கு பயனைப் பெறக்கூடியவர்கள் சீர் மரபினர் மற்றும் மறவர், பிரமலைக் கள்ளர் என்பவர்கள்தான்.

## உடனடியாக 20 சதவிகிதத்தை அறிவித்தது கழக அரசு

எனவே, 108 ஜாதிகளுக்கும் பிரித்து எல்லோருக்கும் குறைத்துக் கொடுத்துவிட்டார்கள் என்று சொல்வது தவறு. இந்த 20% கொடுத்த பிறகு, பெரிய போராட்டத்தை நடத்தி அதிலே 28 பேரைப் பலி கொடுத்து அதற்குப் பிறகும் கிடைக்காத இந்த 20 சதவீதத்தை, 1989ஆம் ஆண்டு, கழகம் ஆட்சிப் பொறுப்பை ஏற்றவுடன், உடனடியாக அந்தத் தலைவர்களை அழைத்துப் பேசி உடனடியாக 20 சதவீதத்தை அறிவித்தது. அதன்பிறகு பட்டியலைப் பார்த்தால், நீங்கள் புரிந்து கொள்ளலாம். மருத்துவக் கல்லூரியில், பொறியியல் கல்லூரியில், வேளாண்மைக் கல்லூரியில் மற்றும் பல தொழிற் கல்லூரிகளில் எந்த அளவிற்கு இந்த மக்களுடைய விகிதாச்சாரம், இந்த 20% ஒதுக்கீடு காரணத்தால் உயர்ந்திருக்கிறது என்பதைப் புரிந்து கொள்ள முடியும்.

அடுத்து, இங்கே பெரும்பாலான உறுப்பினர்களால் அதிகமாகப் பேசப்பட்ட ஒரு செய்தி, குடும்ப அட்டைகளைப் பற்றியது ஆகும். அதைப் பற்றி இப்போது நம்முடைய எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள்கூட கோடு காட்டினார்கள். நம்முடைய ஞானசேகரன் அவர்கள்கூட ஒரு பத்திரிகையிலே அதைப்பற்றி எழுதியிருக்கிறார். எல்லோருக்கும் குடும்பக் கார்டு கொடுக்கப்பட்டுவிட்டது என்று இந்த அரசு சொல்வது, முழுப் பூசணிக்காயைச் சோற்றிலே மறைக்கிற மாதிரி என்று சொல்லியிருக்கிறார். இந்த உதாரணத்தைப் பார்த்துவிட்டு நான் ரொம்ப சந்தோஷப்பட்டேன். ஏனென்றால், ஒரு முழுப் பூசணிக்காயைச் சோற்றிலே மறைக்கிற அளவுக்கு சோறு இருந்தால் தமிழ்நாடு எவ்வளவு வளமாக இருக்கும் என்பதை எண்ணிப்பார்க்க வேண்டும்.

சொல்லும்போது ஜாக்கிரதையாகச் சொல்ல வேண்டும். நான் எப்போதும், சொல்லும்போதும், எழுதும்போதும் அப்படி எழுதமாட்டேன்.

முழுப் பூசணிக்காயைச் சோற்றிலே மறைப்பதுபோல என்று சொன்னால், அந்த அளவுக்குச் சோறைக் கொட்டி, அதிலே பூசணிக்காயை மறைத்துவிடலாம். அதனாலே 'முழுப் பூசணிக்காயை இலைச் சோற்றிலே மறைப்பதுபோல' அப்படி என்று போட்டால் சரியாக இருக்கும்.

ஏனென்றால், இலையையும் வைத்து மறைக்கலாம். இலையும் வருகிறது அதிலே மறைப்பதற்கு, சோறும் வருகிறது. அவருக்கும், மற்றும் அவரைப் போல இங்கே இந்த குடும்பக் கார்டு முறையிலே உள்ள குறைகளைச் சொன்ன அழகிரி போன்றவர்கள் மற்றும் எதிர்க்கட்சித் தலைவர், மற்றும் நம்முடைய அருமை நண்பர் லத்தீப் மற்றும் பழனிச்சாமி போன்றவர்களெல்லாம் சொன்ன அந்தக் கருத்திற்கு சில விளக்கங்களை நான் சொல்ல விரும்புகிறேன்.

முக்கியமான விஷயமாக இருப்பதால், சில விளக்கங்களை நான் சொல்லியாக வேண்டும்.

## இதுவரை தரப்பட்டுள்ள குடும்பக் கார்டுகளின் எண்ணிக்கை 142.79 இலட்சமாகும்

தமிழ்நாட்டினுடைய மக்கள் தொகை கணக்கெடுப்பின்படி உள்ள குடும்பங்கள் **136.95** இலட்சம் குடும்பங்கள். ஆனால், இதுவரை கொடுக்கப்பட்டுள்ள குடும்பக் கார்டுகளின் எண்ணிக்கை **142.79** இலட்சம் அட்டைகள். மக்கள்தொகைக் கணக்கெடுப்பிலே உள்ள குடும்பங்களை விட அதிகமாகக் குடும்பக் கார்டுகள் தரப்பட்டிருப்பது **5.84** இலட்சம் ஆகும்.

இந்த அளவிற்கு அதிகமாக வரக் காரணம், ஒரே குடும்பத்தில் உள்ளவர்களே தனித்தனியாக இரண்டு கார்டுகளை, தந்தைக்கு ஒன்றும், மகனுக்கு ஒன்றுமாக வாங்கியதால் இருக்கலாம். புதிய கார்டுகள் வழங்குவதற்கு முன்னதாக கடந்த முறைப் புழக்கத்தில் இருந்த உணவு கார்டுகளின் எண்ணிக்கை **148** இலட்சம். இதிலே

போலி கார்டுகள் ஏராளமாக இருந்தது எல்லாம் கண்டு பிடிக்கப்பட்டு களையப்பட்டது சுமார் 11 இலட்சம். அச்சடிக்கப்பட்டு பெற்றுக் கொள்ள யாரும் வராமல் இருக்கின்ற கார்டுகள் மட்டும் சுமார் இரண்டு இலட்சம் இருக்கின்றன. இந்த இரண்டு இலட்சம் கார்டுகளுக்கு உரியவர்கள் போலிகள் என்பதால் அதனைப் பெற்றுக் கொள்வதற்கு அவர்கள் வரவேயில்லை.

எனவே, பழைய குடும்ப அட்டைதாரர்களுக்கெல்லாம் எந்தவிதமான குழப்பமுமின்றி அட்டைகள் வழங்கப்பட்டு முடிவுபெற்று விட்டன. அதிலே எந்தவிதமான தவறும் இல்லை. ஆனால் இதற்கு முன்பு குடும்ப அட்டைகள் வைத்திருக்காமல் புதிதாக விண்ணப்பம் போட்டு அவ்வப்போது கார்டு பெற வேண்டியவர்கள் மாத்திரம்தான் தொடர்ந்து புதிய அட்டைகளைக் கோரி மனு கொடுத்து வருகின்றார்கள். அரசு பழைய அட்டைகளுக்கு பதிலாக மாற்று அட்டைகள் வழங்குகிற பணியிலே தொடர்ந்து அக்கறை செலுத்தி வந்ததால் புதிய மனுக்களைத் தனியாக எடுத்துக்கொண்டு அவற்றுக்கும் கார்டுகள் வழங்கும் பணி மேற்கொள்ளப்பட்டது. இவ்வாறு முன்பு குடும்ப அட்டைகள் அல்லாமல் புதிய அட்டைகள் கோரி வந்த மனுக்கள் மாத்திரம் 22 இலட்சம் ஆகும். இந்த 22 இலட்சம் மனுக்கள் மீது ஒவ்வொரு மாவட்ட விநியோக அலுவலரும், கூட்டுறவுத்துறை அதிகாரிகளும் விசாரணை மேற்கொண்டபோது அது உண்மையானது என்று தெரிந்தது 4.5 இலட்சம் மனுக்கள்தான். இதிலும் 2 இலட்சம் குடும்ப அட்டைகள் வழங்கப்பட்டு விட்டன. மீதமுள்ள 2.5 இலட்சம் மனுக்களுக்கான குடும்ப அட்டைகளும் தொடர்ந்து அச்சடித்து வழங்கப்படும் பணி முறையே நடந்து கொண்டுள்ளது.

## குடும்பக் கார்டுகள் வழங்குவது முடிவுறாத திட்டமாகும்

இந்த 2 இலட்சத்து 50 ஆயிரம் பேர்தான், உறுப்பினர்களை எல்லாம் சந்தித்து "எங்களுக்கு கார்டு வரவில்லை, கார்டு வரவில்லை" என்று ஆங்காங்கு சொல்லிக்கொண்டிருக்கிறார்கள். இந்தக் குடும்ப அட்டைகள் பிரச்சினை இத்தோடு முடிந்துவிட முடியாது.

தொடர்ந்துகொண்டே இருக்கக் கூடியது. புதிய புதிய குடும்ப அட்டைகள், தமிழகத்தில் புதிது புதிதாக குடும்பங்கள் தொடங்கப்படும்போதெல்லாம் அவர்கள் தங்களுக்கு தனியாக இந்தக் கார்டுகள் வேண்டும் என்று மனு கொடுத்துக் கொண்டேதான் இருப்பார்கள். எனவே, இது முடிவுறாத பணியாகும் என்று நான் முன்பு சொன்னதை மீண்டும் வலியுறுத்திச் சொல்ல விரும்புகிறேன். இவ்வாறு இது, புதியதாகக் குடும்ப அட்டைகள் பெறுபவர்களுக்கு அவை கிடைப்பதில் தாமதம் ஏற்பட்டால், உடனே ஒட்டுமொத்தமாக குடும்ப அட்டைகள் வழங்குவதில் கோளாறு என்று கூறுவதில் அர்த்தம் இருக்க முடியாது என்று மாத்திரம் நான் சுட்டிக்காட்ட விரும்புகின்றேன். குறைகள் அறவே இல்லையென்று சொல்ல மாட்டேன். இங்கே எடுத்துக்காட்டுகின்ற அளவிற்குப் பூதாகாரமாக இதிலே குற்றம் இல்லை, குறையில்லை என்பதைத்தான் நான் திட்டவட்டமாகத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

### போலி கார்டுகளுடன் ஊழல் செய்யும் கூட்டம்

அங்கொன்றும் இங்கொன்றுமாக உள்ள இந்தக் குறைபாடுகளை மாண்புமிகு உறுப்பினர்கள் சுட்டிக்காட்டினால், குறிப்பிட்ட குறைகள் இருக்குமேயானால் அவைகளை, இந்தப் பிரச்சினைகளைத் தீர்க்க இந்தத் துறை நிச்சயமாக முன்வரும் என்பதைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

இன்னொன்றையும் மறந்துவிடக்கூடாது. போலி கார்டுகளை வைத்துக்கொண்டு ஊழல் செய்வதற்காக ஒரு கூட்டம் அலைந்து கொண்டிருக்கிறது என்பதை மறந்து விடக்கூடாது. இந்தப் போலி கார்டுகளைக் கொண்டு ரேஷன் கடைகளிலே அரிசியை வாங்கி அல்லது ஏதாவது உணவுப்பொருட்களை வாங்கி அதை வேறு இடங்களிலே விற்று, அவற்றைத் தாங்கள் பயன்படுத்திக் கொள்ளாமல் வேறு இடங்களிலே அதிக விலைக்கு விற்று அதிலே சம்பாதிக்க வேண்டும் என்று ஒரு கூட்டம் தமிழகத்திலே அலைந்து கொண்டிருக்கிறது என்பதை மறந்துவிடக்கூடாது.

## இரண்டரை ஆண்டில் 1255 புதிய வழித்தடங்களில் பேருந்துகள்

இந்தக் குடும்ப அட்டைகளுக்கு அடுத்தப்படியாக போக்குவரத்துத் துறை பற்றித்தான் அதிகமாக இந்த அவையிலே ஆளுநர் உரையிலே பேசப்பட்டிருக்கிறது. இந்த ஆட்சி நான்காவது முறையாக ஏற்பட்ட இந்த இரண்டரை ஆண்டுகளில் பேருந்துகள் இயக்கப்பட புதிய வழித்தடங்கள் உருவாக்கும் வகையில் 1,245 புதிய தடங்கள் ஏற்படுத்தப்பட்டன. கடந்த ஆட்சியிலே நஷ்டம் என்று கூறி நிறுத்தப்பட்ட வழித்தடங்களினுடைய எண்ணிக்கை 410. அதையும் இந்த ஆட்சியில் எடுத்து நடத்தியதில் மொத்தம் புதிய வழித்தடங்கள் 1,655 ஆகும். நடத்த முடியாது என்று விட்டவையெல்லாம், தனியாருக்குச் சென்ற, அந்தக் கதையெல்லாம் உங்களுக்கு தெரியும். அவைகளையெல்லாம் ஏற்று நடத்தி, நஷ்டத்தால் கைவிடப்பட்ட தடங்களையும் ஏற்று நடத்தி 1,255 புதிய வழித்தடங்கள் இந்த இரண்டரை ஆண்டு காலத்திலே இன்றைக்கு அனுமதிக்கப் பட்டிருக்கின்றன.

5 ஆண்டுகால, கடந்த கால ஆட்சியிலே வாங்கப்பட்ட புதிய பேருந்துகளினுடைய எண்ணிக்கை, 10 ஆயிரத்து 673. இந்த இரண்டரை ஆண்டுகால ஆட்சியிலே வாங்கப்பட்ட பேருந்துகள் 7,212. போக்குவரத்துக் கழகங்களில், முந்தைய ஆட்சிக்காலத்திலே பேருந்துகளுக்கு உதிரிப் பாகங்கள் கொள்முதல் செய்தல், மேற்கூடு கட்டுதல் – பாடி கட்டுதல் – ஆகியவற்றில் ஊழல் மிகுந்து காணப்பட்டதால் இந்த ஆட்சி பொறுப்பு ஏற்றவுடன் புதிய கொள்முதல் முறை ஒன்று வகுக்கப்பட்டது. உதிரிப் பாகங்கள் கொள்முதல் முறை சீரமைக்கப்பட்டது. பேருந்து பாடிகளை, மேற்கூடுகளைக் கட்டும் பணி அந்தந்த அரசு போக்குவரத்துக் கழகப் பணிமணிகளிலேயே செய்யலாம் என்று முடிவு எடுக்கப்பட்டது. இந்த மாற்றங்களினால் பேருந்து மேற்கூடு கட்டும் செலவு, 1995–96ஆம் ஆண்டோடு ஒப்பிடும் போது 30 சதவீதத்திற்கு மேலாக குறைக்கப்பட்டு அந்த வகையிலே மாத்திரம் இந்த இரண்டரை

ஆண்டுகளில் 48 கோடி ரூபாய் அளவிலே சேமிப்பு ஏற்பட்டிருக்கிறது. தவிர, உதிரிப் பாகங்கள், டயர் போன்ற செலவினங்களில் 68 சதவீதம் குறைக்கப்பட்டு நடப்பாண்டில் ரூபாய் 14 கோடி அளவிலே சேமிப்பு ஏற்பட்டுள்ளது. அதே நேரத்திலே பேருந்துகளை இயக்குவதற்கான பல்வேறு செலவுகள் ஆண்டுக்காண்டு கூடிக்கொண்டே வருகிறது என்பதை மறந்துவிடுவதற்கில்லை.

சராசரியாகத் தமிழ்நாடு அரசுப் போக்குவரத்துக் கழகங்கள் மூலம் இயக்கப்படும் பேருந்து ஒவ்வொன்றும் அன்றாடம் 405 கிலோ மீட்டர் தூரம் செல்கிறது. போக்குவரத்துக் கழகங்களின் மூலம் அன்றாடம் இயக்கும் பேருந்துகளுடைய எண்ணிக்கை 15,346. 96–97ல் பேருந்தை ஒரு கிலோ மீட்டர் ஓட்டுவதற்கு டீசல் செலவு 2.12 ரூபாய் என்று இருந்தது. தற்போது அந்த செலவு 2.73 ரூபாயாக உயர்ந்துள்ளது. அதாவது 61 பைசா ஒரு கிலோ மீட்டருக்குக் கூடியுள்ளது.

## பயணக்கட்டணம் இந்தியாவில் தமிழகத்திலேதான் குறைவு

அதேபோன்று வட்டிச் செலவு 96–97ல் ஒரு கிலோ மீட்டருக்கு 49 பைசாவாக இருந்தது தற்போது 71 பைசாவாக உள்ளது. சம்பளம் மற்றும் நிர்வாகச் செலவுகள் ஒரு கிலோ மீட்டருக்கு 96–97ல் 3.77 ரூபாயாக இருந்தது. தற்போது 4.48 ரூபாயாக உயர்ந்துள்ளது.

இவ்வாறு சிரமங்கள் பலயிருந்தாலும்கூட, இந்தியாவில் தமிழ்நாட்டிலேதான் பயணக் கட்டணம் குறைவாக இருக்கிறதென்பதைச் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். நான் வேறு எங்கும் செல்ல விரும்பவில்லை. பயப்பட வேண்டாம். ஆந்திராவிலே புறநகருக்கு ஒரு கி.மீட்டருக்கு 24 காசு; கர்நாடகத்திலே 21 காசு; கேரளத்திலே 22 காசு; தமிழ்நாட்டிலே 18 காசு.

ஓரளவு சொகுசு உள்ள விரைவுப் பேருந்துக்கு ஆந்திராவிலே 34 காசு; கர்நாடகத்திலே 25.5 காசு; கேரளத்திலே 34 காசு; தமிழ்நாட்டிலே 20 காசு.

சொகுசுப் பேருந்துக்கு புறநகர் சொகுசுப் பேருந்துக்கு ஆந்திராவிலே 39 காசு; கர்நாடகத்திலே 31 காசு; கேரளத்திலே 39 காசு; தமிழ்நாட்டிலே 25 காசு.

இதையெல்லாம் சொன்னால், கட்டணமும் குறைவாக இருக்க வேண்டும், வசதியும் அதிகமாக இருக்க வேண்டும். கூழுக்கும் ஆசை; மீசைக்கும் ஆசை என்ற நிலைமையிலே இருக்கின்ற உறுப்பினர்கள் இந்த இரண்டு ஆசைகளிலே எந்த ஆசையைவிடப் போகிறார்கள் என்று நான் மிகுந்த பவ்வியமாகப் பணிவன்போடு கேட்டுக் கொள்கிறேன்.

உங்களுடைய அரிய யோசனைகளெல்லாம் பட்ஜெட்டுக்கு முன்பு – இவ்வளவு யோசனைகளையெல்லாம் சொன்னீர்கள். திருநாவுக்கரசு அருமையான யோசனைகளை யெல்லாம் சொன்னார். இதற்கும் ஒரு யோசனையை நீங்களெல்லாம் சொல்ல வேண்டுமென்று உங்களையெல்லாம் கேட்டுக் கொள்கிறேன். எதிர்க்கட்சித் தலைவரும் மிக நிதானமாகச் சிந்திப்பவர். அதனால் அவரும் அதற்கு நல்ல யோசனைகளைச் சொல்ல வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

## கரும்புக்கு விலை: தேர்தல் அறிக்கையில் கூறியது என்ன?

கரும்பு விலையைப் பற்றி இங்கே சொல்லப்பட்டது. ஆயிரம் ரூபாய், ஆயிரம் ரூபாய் என்று நீங்கள் தேர்தல் அறிக்கையிலேயே சொல்லியிருக்கிறீர்களே, என்ன ஆச்சு, என்ன ஆச்சு என்று சொன்னீர்கள். நானும் எப்படியோ ஏமாந்து போயிருக்கிறேன். எப்படியென்றால், இந்த ஆட்சி ஆரம்பித்தபோது நம்முடைய சுதர்சனம் தான் ஒரு கேள்வியைக் கேட்டார். ஆயிரம் ரூபாய் கரும்பு விலை என்று தேர்தல் அறிக்கையிலே போட்டிருக்கிறோமே, எப்பொழுது

நிறைவேற்றப் போகிறீர்கள் என்று. சுதர்சனம் சொன்னால் சரியாக இருக்கும் என்று நினைத்துக்கொண்டு, நானும் நாயுடு பேச்சை நம்பி அன்றைக்கு இந்த அவையிலே விரைவில் ஆயிரம் என்பது ஒரு குறிக்கோள்தான், அதை நிச்சயமாக அடைந்து தீருவோம், மெல்ல மெல்ல அடைந்து தீருவோம் என்று சொல்லிவிட்டேன்.

அடிக்கடி பேசப் பேச அப்படி ஒரு வாசகத்தைத் தேர்தல் அறிக்கையிலேயே போட்டிருக்கிறோமா என்று – தேர்தல் அறிக்கையை எடுத்து வந்து பார்த்தேன். இது தேர்தல் அறிக்கை. 96ஆம் ஆண்டு தேர்தல் அறிக்கையிலே, அதிலே எங்கேயும் ஆயிரம் ரூபாய் தருகிறோம் என்று சொல்லவே இல்லை. இது புதுசா பிரிண்ட் பண்ணியது இல்லை. தமிழ் மாநிலக் காங்கிரஸ் ஆபீசிலேகூட இருக்கும். அது. கம்யூனிஸ்ட் கட்சி ஆபிசிலேயும் இருக்கும். எடுத்துப் பார்க்கலாம். அதில் என்ன போட்டிருக்கிறோம் என்றால், "கரும்புக்கு அதிக விலை" என்கிற தலைப்பிலே, என்ன வாக்குறுதி கொடுத்திருக்கிறோம் என்றால், "மற்ற மாநிலங்களைப்போல வெட்டுக்கூலி, வண்டி வாடகை" இங்கே அழகர்ராஜா சொன்னாரே அது மாதிரி, "மற்ற மாநிலங்களைப்போல வெட்டுக்கூலி, வண்டி வாடகை" முதலியவைகளை ஆலையே ஏற்று கரும்பு விலையை உயர்த்தி நிர்ணயிக்கும் விதத்தில் – அதுகூட நிர்ணயிக்கச் சொல்லவில்லை – "முத்தரப்பு மாநாடு கூட்டி எல்லோருடைய யோசனையையும் பெற்று உரிய முடிவெடுக்கப்படும் என்பதை மகிழ்ச்சியோடு தெரிவித்துக் கொள்கிறோம்". தேர்தல் அறிக்கையிலே இதுதான் போட்டிருக்கிறோம்.

**ஜி.பழனிச்சாமி** : பேரவைத் தலைவர் அவர்களே, தேர்தல் அறிக்கையிலே சொல்லவில்லை. திருச்சியில் நடைபெற்ற மாநாட்டிலே மாண்புமிகு முதலமைச்சரவர்கள் அதிலே அறிவித்ததாக எனக்கு ஞாபகம் இருக்கிறது.

**முதல்வர் கலைஞர்** : அதுவும் ஞாபகம் என்றுதான் சொல்கிறார் அவர்.

**கரும்புக்கு விலை: எல்லா மாநிலங்களைவிட அதிகம் தருகிறோம்.**

**முதல்வர் கலைஞர்** : மகாநாட்டிலே தீர்மானம் போட்டிருக்கலாம். அந்தத் தீர்மானத்தை மறு பரிசீலனை பண்ணித்தான் தேர்தல் அறிக்கை வெளியிடப்பட்டிருக்கிறது. நான் அதற்காகப் பின்வாங்குவதாக அர்த்தம் அல்ல. கொஞ்சம் நாம் சிந்தித்துப் பார்க்க வேண்டுமென்று சொல்ல விரும்புகின்றேன். கரும்பு விலையைப் பொறுத்தவரையிலும், ஒரு ஒப்பீடு பார்த்தால், இந்த விலை, சர்க்கரைக் கட்டுமானம் (Recovery) பிழிதிறன் என்பதை வைத்துத்தான் நிர்ணயிக்கப்படுகிறது என்பது உங்களுக்கெல்லாம் நன்றாகத் தெரியும். இதில் Recovery குறைவாக இருந்தாலும்கூட, அதிகமாகக் கொடுப்பது நாம்தான்.

உதாரணமாக, ஆந்திராவில் சர்க்கரைக் கட்டுமானம் Recovery 10.22 சதவீதம். அங்கே டன் ஒன்றுக்கு கொடுக்கப்படும் விலை 630 ரூபாய். கர்நாடகாவில் recovery 10.54 சதவீதம். அங்கே 730 ரூபாய் டன் ஒன்றுக்கு விலையாகக் கொடுக்கிறார்கள். மராட்டியத்தில் recovery 11.11 சதவீதம். அங்கே டன் ஒன்றுக்கு விலை 680 ரூபாய். குஜராத்தில் சர்க்கரைக் கட்டுமானம் recovery 10.72 சதவீதம். அங்கே டன் ஒன்றுக்கு விலை 648 ரூபாய். தமிழ்நாட்டில் recovery 10ம் இல்லை, 11ம் இல்லை, 9ம் இல்லை. 8.94 சதவீதம் recovery அதற்கு நாம் தருகின்ற விலை 753 ரூபாய். எல்லா மாநிலத்தையும் விட அதிகமாகக் கொடுக்கிறோமே நாம், பாராட்ட வேண்டாமா நீங்கள்?

கூட்டுறவு மற்றும் பொதுத்துறையில் இயங்கி வரும் 19 சர்க்கரை ஆலைகளில் 1997–98ஆம் ஆண்டு முடிய 364 கோடி ரூபாய் திரண்ட நட்டம் (Cumulative loss) ஏற்பட்டுள்ளது. இந்தப் பெரிய நட்டத்திற்குக் காரணம், சர்க்கரை உற்பத்திக்கு ஆகும் செலவை ஈடுகட்ட முடியாத நிலை. 1994–95 மற்றும் 1995–96ஆம் ஆண்டுகளில் தமிழ்நாட்டில் கூடுதல் கரும்பு உற்பத்தி காரணமாக,

அரவைக் காலத்தை நீட்டிக்க வேண்டிய சூழ்நிலை ஏற்பட்டது. அதனால் கட்டுமானமே குறைந்தது. (ரெக்கவரியே குறைந்து போச்சு).

**1997–98**ல் அரவைப் பருவத்தில் பெருமழை. அதே **1997–98** அரவைப் பருவத்தில் தொழிலாளர்களுடைய வேலை நிறுத்தம். கடந்த ஆட்சியில் விரிவாக்கப் பணிகளை காலத்திலே அவர்கள் முடிக்கவில்லை என்பதும் ஒரு காரணம்.

**விவசாயிகளுக்குரிய நிலுவை தீபாவளிக்கு முன்பே வழங்கப்பட்டது**

கடந்த ஆட்சியில் சில ஆலைகளில் உபரி கரும்பு, இதர ஆலைகளுக்குத் திருப்பி அனுப்பப்பட்டது. அதுவும் ஒரு காரணம். இப்படி தொடர்ந்து நட்டம் ஏற்பட்டதால், **14** கூட்டுறவு மற்றும் பொதுத்துறை சர்க்கரை ஆலைகள் **1997–98**ஆம் ஆண்டு அரவைப் பருவத்திற்கான மாநில அரசு மற்றும் மைய அரசு நிர்ணயம் செய்த கரும்பு விலைக்கான வித்தியாசத் தொகையை வழங்க முடியாத இக்கட்டான நிலை ஏற்பட்டது. இந்த வித்தியாசத் தொகையை வழங்க முடியாத சூழ்நிலை அந்த ஆலைகளுக்கு ஏற்பட்டது.

கரும்பு விவசாயிகள் மற்றும் பல்வேறு அரசியல் கட்சிகளின் கோரிக்கையை ஏற்று **14** கூட்டுறவு மற்றும் பொதுத்துறை சர்க்கரை ஆலைகளுக்கு **82** கோடி ரூபாயை இந்த அரசு வழங்கியது. எதற்காக? அந்த ஆலைகளுக்கு அல்ல, அந்த விவசாயிகளுக்குத் தர வேண்டிய பணத்திற்காக **82** கோடி ரூபாயை இந்த அரசு உதவியாக வழங்கியது. கரும்பு விவசாயிகளுக்குச் சேர வேண்டிய நிலுவையை, தீபாவளிக்கு முன்பே வழங்க வேண்டுமென்று அரசு உத்தரவிட்டு அதுவும் நிறைவேற்றப்பட்டது. கழக அரசு வழங்கிய நிதியுதவியின் காரணமாக **70,263** கரும்பு விவசாயிகள் பயன் அடைந்தார்கள். இதற்கு மேலும் நம்முடைய ஞானசேகரன் அவர்கள், ஐ. கணேசன் போன்றவர்கள் வெந்த புண்ணிலே வேல் பாய்ச்சுகிறீர்கள் என்று சொல்லாமல் இருந்தால் நலம் என்று நம்புகின்றேன். இதற்கு மேலும் தருவதற்கு

முத்தரப்பு மாநாட்டை நாம் நடத்தி அதற்கான முயற்சிகளையும் அரசு மேற்கொள்ளும் என்ற உறுதியை இந்த அவையில் தங்கள் மூலமாக கரும்பு விவசாயிகளுக்கு நான் தெரிவித்துக் கொள்கின்றேன்.

நம்முடைய நண்பர் சுந்தரம் அவர்கள், ராசிபுரம் தொகுதிக்கு இந்த அரசு ஒன்றுமே செய்யவில்லை என்று ஒரு பயங்கரமான குற்றச்சாட்டைச் சொன்னார்கள். நானும் அதிர்ச்சியடைந்து மாவட்ட ஆட்சித் தலைவரோடு தொடர்புகொண்டு, அவரிடமிருந்து ஒரு அறிக்கையைப் பெற்றேன். அந்த அறிக்கையின்படி, ராசிபுரம் தொகுதியில் நான் எல்லாப் பணிகளையும் சொல்லவில்லை, நேரமாகும். இந்த இரண்டரை ஆண்டுகளில் நடைபெற்ற பணிகளில் சிலவற்றை மாத்திரம் சொல்ல விரும்புகின்றேன்.

ராசிபுரத்தில் இரண்டரை ஆண்டில் நடைபெற்ற பணிகளின் விபரம் ஊரக வளர்ச்சித் துறை மூலம், சமத்துவபுரப் பணிகள் நடைபெற்றவை 101. செலவு 46 இலட்சத்து 50 ஆயிரம் ரூபாய். அண்ணா மறுமலர்ச்சித் திட்டப்பணிகள் 39 – செலவு 48 இலட்சத்து 16 ஆயிரம் ரூபாய். நமக்கு நாமே திட்டப் பணிகள் 17. செலவு 16 இலட்சத்து 11 ஆயிரம் ரூபாய். தொகுப்பு வீடுகள் 769. செலவு 2 கோடியே 16 இலட்சம் ரூபாய். சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டுத் திட்டப் பணிகள் 61. செலவு 33 இலட்சத்து 59 ஆயிரம் ரூபாய். வேளாண்மைப் பொறியியல் துறைப் பணிகள் 59, செலவு ரூ.87 இலட்சத்து 33 ஆயிரம். மற்றும் ஊரக வளர்ச்சித் துறையின் மூலமாக இதர பணிகள் உள்ளிட்ட பணிகளுக்கு மாத்திரம் 7,227 பணிகள், செலவு 11.18 கோடி ரூபாய்.

தமிழ்நாடு மின்வாரியத்தின் மூலம் 47 Transformers அமைக்கச் செலவு 70 இலட்சத்து 50 ஆயிரம் ரூபாய். உயர் மற்றும் குறைந்த மின்னழுத்த இணைப்புகள் கொடுக்க 1.53 கோடி ரூபாய். உயர் அழுத்த மின் இணைப்பு 3 தர 6 இலட்சம் ரூபாய். விவசாயத்திற்கு 466 மின் இணைப்புத் தர 1 கோடியே 63 இலட்சம் ரூபாய். 162 குடிசைகளுக்கு மின் இணைப்புத் தர 1 இலட்சத்து 2 ஆயிரம் ரூபாய்.

தெருவிளக்குகள் 396 அமைக்க 19 இலட்சத்து 80 ஆயிரம் ரூபாய். மேல்நிலை குடிநீர்த் தொட்டி 55க்கு 22 இலட்சம் ரூபாய். இப்படி மின் துறை மூலமாக ஆன செலவு 7 கோடியே 19 இலட்சம் ரூபாய்.

குடிநீர் வடிகால் வாரியத்தின் மூலம் குடியிருப்புகளுக்குக் குடிநீர் வழங்கியதற்குச் செலவு 1 கோடியே 39 இலட்சம் ரூபாய் 84 குடியிருப்புகளுக்கு; வருவாய்த் துறை மூலம் பயனாளிகளுக்குச் செலவு 1.47 கோடி ரூபாய்.

பிற்படுத்தப்பட்டோர் நலத்துறை மூலம் 514 குடும்பங்களுக்கு இலவச வீட்டுமனை வழங்கியதற்கான செலவு 16 இலட்சத்து 50 ஆயிரம் ரூபாய்.

பொதுப்பணித் துறை மூலமாக சிக்கலாந்தபுரத்தில் ஆரம்ப சுகாதார நிலையக் கட்டடம் கட்ட 16 இலட்சத்து 50 ஆயிரம் ரூபாய்.

இராசிபுரம் அரசு மருத்துவமனையிலே புறநோயாளிகள் பிரிவு கட்டடம் கட்ட 20 இலட்சம் ரூபாய்.

உடையார்பாளையம்; ஆர்.புதுப்பாளையம் மற்றும் வெண்ணந்தூர் உயர்நிலைப் பள்ளிகளிலே கூடுதல் வகுப்பறை கட்ட 15 இலட்சம் ரூபாய்.

இராசிபுரம் மேல்நிலைப் பள்ளியிலே அறிவியல் ஆய்வுக் கூடம் கட்ட 18 இலட்சத்து 44 ஆயிரம் ரூபாய்.

நெடுஞ்சாலைத் துறை மூலமாக 84 கிலோ மீட்டர் நீளச் சாலை பராமரிப்புப் பணிக்காக 1.55 கோடி ரூபாய்.

போக்குவரத்துத் துறை மூலம் பேருந்து வழித்தடம் 5 புதிய பேருந்து வழித்தடங்கள் மற்றும் 23 புதிய பேருந்துகள், 33 மினி பேருந்துகள்.

முழு நேர நியாய விலைக் கடை மற்றும் 14 பகுதி நேர நியாய விலைக் கடைகள் இந்தத் தொகுதியிலே புதியதாக இரண்டரை ஆண்டுகளில் அமைக்கப்பட்டிருக்கின்றன.

கல்வித் துறை மூலமாக ஒரு நடுநிலைப் பள்ளி உயர்நிலைப் பள்ளியாக உயர்த்தப்பட்டுள்ளது. ஒரு பள்ளி பிளஸ் டூ தேர்வு மையமாக புதியதாக அங்கீகரிக்கப்பட்டிருக்கிறது.

## ரூ.52.41 கோடிக்கு பணிகளும், பயன்களும்

ஒட்டுமொத்தமாக, எல்லாவற்றையும் சுருக்கமாகச் சொல்ல வேண்டுமானால் இந்த இரண்டரை, மூன்று ஆண்டு காலத்தில் மொத்தமாக 52.41 கோடி ரூபாய் அளவுக்குப் பணிகளும், பயன்களும் இராசிபுரம் தொகுதியிலே நடைபெற்றிருக்கின்றன என்பதை நான் தெரிவித்துக் கொள்கிறேன்.

**பி.ஆர். சுந்தரம்** : பேரவைத் தலைவர் அவர்களே, முதல்வர் அவர்கள் குறிப்பிட்டது ஏதோ, என்னுடைய தொகுதிக்குத் தனிப்பட்ட முறையிலே செலவு செய்ததாகச் சொல்ல முடியாது. இதெல்லாம் Routine work சமத்துவபுரம், அண்ணா மறுமலர்ச்சித் திட்டம், நமக்கு நாமே திட்டம்...

**பேரவைத் தலைவர்** : எல்லோரும் கொஞ்சம் அமைதியாக இருக்க வேண்டும். சுந்தரம், முதல்வர் அவர்கள் அப்படியெல்லாம் சொல்லவில்லை; உங்களுடைய தொகுதியிலே எந்த வேலையுமே நடைபெறவில்லை என்று நீங்கள் சொன்னதற்கு, எல்லாத் தொகுதியையும் மாதிரி உங்களுடைய தொகுதியிலும் எல்லா வேலைகளும் நடைபெற்றிருக்கின்றன என்றுதான் சொல்லியிருக்கிறார்.

**முதல்வர்** : பேரவைத் தலைவர் அவர்களே, இதெல்லாம் தனிப்பட்ட முறையிலே செய்ததல்ல என்று சொன்னார். யாருக்கும் தனிப்பட்ட முறையிலே செய்ய முடியாது என்பதை நான் எடுத்துக் காட்டக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

**பேரவைத் தலைவர்** : நீங்கள் உட்காருங்கள். நான் அனுமதி கொடுக்கவில்லை.

**முதல்வர்** : நண்பர் தாமரைக்கனி அவர்கள் ஒரு புகாரைச் சொன்னார். திருவில்லிபுத்தூர் தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கியில் 15 கோடி ரூபாய் ஊழல் என்றார். குறை இருக்கலாம். ஆனால் எப்போதுமே அவர் அதிகமாகத்தான் சொல்வார். 500 பேர் என்றால் 5000 பேர் என்பார். 500 பேர் வந்திருந்தால் 5000 பேர் வந்திருந்தார்கள்; 5000 பேர் வந்திருந்தால், 50,000 பேர் வந்திருந்தார்கள் என்றெல்லாம் கூட்டத்திலே சொல்லும்போது சொல்லலாம். 15 கோடி ரூபாய் ஊழல் என்றார். அதைப் பற்றி விசாரித்தபோது, விருதுநகர் மாவட்ட ஆட்சித் தலைவர் இணைப் பதிவாளரிடமிருந்து அறிக்கை பெற்று எனக்கு அனுப்பி இருக்கிறார். அவர் அனுப்பிய தகவல்படி, அந்த வங்கியின் மூலமாக நுகர்பொருள் கடன் மாத்திரம் 362 பேருக்கு 61 இலட்சம்தான் வழங்கப்பட்டுள்ளது. வீடுகள் ரிப்பேர் கடன் என்ற தலைப்பில் 130 பேருக்கு ரூ.53.88 இலட்சம் மாத்திரம் வழங்கப்பட்டுள்ளது.

பண்ணைச்சாரா கடன்கள் என்ற தலைப்பில் 31 பேருக்கு 14.02 இலட்சம் ரூபாய் கடன் வழங்கப்பட்டிருக்கிறது. இந்த வங்கியின் மூலமாக இந்த ஆண்டு வழங்கப்பட்ட கடன்களே ஒரு கோடியே 29 இலட்சத்து 29 ஆயிரம் ரூபாய்தான். இதில் எப்படி 15 கோடி ரூபாய் ஊழல் நடந்திருக்க முடியும் என்று எனக்குத் தெரியவில்லை. உறுப்பினர் தாமரைக்கனி இதைப் பற்றி பிறகு விளக்குவார்களேயானால் அதைப் பற்றி அறிந்து ஆவன செய்கிறேன்.

**தாமரைக்கனி** : அந்த வங்கியில் தவறே நடக்கவில்லை என்று மாண்புமிகு முதல்வருக்கு அங்கேயுள்ள ஜெ.ஆர்., டி.ஆர்., கலெக்டர் மூலமாக தகவல் கொடுத்துள்ளதாகச் சொல்றாங்க! அந்தப் பகுதியில் உள்ள பொதுமக்களுக்கு என்னென்ன முறை கேடுகள் நடைபெற்றன என்று தெரியும்.

**பேரவைத் தலைவர்** : முதல்வர் தவறே நடக்கவில்லை என்று சொல்லவில்லை. நீங்கள் கையாடல் 15 கோடி என்று சொல்லியிருக்கிறீர்கள். ஆனால் அந்த வங்கியில் கடனே ஒன்றரை கோடிக்குத்தான் கொடுத்திருப்பதாகத் தான் சொல்றாங்க. அந்த ஒன்றரை கோடியில் தவறு இருந்தால் சொல்லுங்கள்.

**தாமரைக்கனி** : நான் பேசிய பிறகு முதலமைச்சர் மாவட்ட ஆட்சித் தலைவர் மூலமாக தகவல் கேட்டிருக்கிறாங்க. அதன்மீது நேற்று விசாரணை பண்ணியிருக்காங்க.

## எங்கே ஊழல் நடந்தாலும் கண்டுபிடித்து நடவடிக்கை எடுப்போம்

**முதல்வர் கலைஞர்** : அவர் குறிப்பிட்டது 15 கோடி ரூபாய்க்கு அந்தச் சொசைட்டியிலே ஊழல் நடைபெற்றதாகக் குறிப்பிட்டார். அதன் மீது விசாரித்த அளவில் கூட்டுறவு துறை அதிகாரிகள், மாவட்ட ஆட்சித் தலைவர் மூலமாக அனுப்பிய விவரத்தில் அங்கே 15 கோடி ரூபாய்க்கு ஊழல் நடைபெற்றதற்கான ஆதாரம் இருப்பதாகத் தெரியவில்லை. ஆனால் கொடுக்கப்பட்ட கடனே ஒரு கோடியே சொச்ச ரூபாய்தான் என்கிறபோது 15 கோடிக்கு ஊழல் நடைபெற்றிருக்க இயலாது என்று சொன்னேன். இந்த ஒரு கோடி ரூபாய்க்குள் ஊழல் நடைபெற்றிருக்குமேயானால் தாமரைக்கனி அதைச் சுட்டிக் காட்டுவாரேயானால் நான் நடவடிக்கை எடுக்கத் தயாராக இருக்கின்றேன் என்று அப்போதும் சொல்லி இருக்கின்றேன். அதை மறைக்க விரும்பவில்லை. எங்கே ஊழல் நடைபெற்றாலும், அதை இந்த அரசு நிச்சயமாக கண்டுபிடித்து நடவடிக்கை எடுக்கும் என்பதிலே தாமரைக்கனிக்கு சந்தேகம் தேவையேயில்லை என்பதை சொல்லிக் கொள்கின்றேன்.

**தாமரைக்கனி** : (குறுக்கீடு) அவைக்குறிப்பிலிருந்து நீக்கப்பட்டது.

**முதல்வர்** : ஒரு நல்ல நிகழ்ச்சியை திசைதிருப்புவதுதான் தாமரைக்கனி போன்ற நண்பர்களுடைய முயற்சியாக

இருக்குமேயானால், அதற்காக நான் ஆச்சர்யப்படவில்லை. எத்தனையோ நல்ல நிகழ்ச்சிகள், அரசு நிகழ்ச்சிகளில்கூட அ.தி.மு.க.வினர் கலந்துகொண்டு திசைதிருப்பிய கட்டங்கள் எல்லாம் அண்மைக் காலத்தில் பல நடைபெற்றிருக்கின்றன.

அதைப்போல, மாண்புமிகு உறுப்பினர்கள் 30க்கும் மேற்பட்டவர்கள் ஆக்கபூர்வமான உரைகள் பலவற்றை நிகழ்த்தி, அதற்கான விளக்கங்களை நான் தருகிறேன். அது சரியாகவும் இருக்கலாம்; தவறாகவும் இருக்கலாம். அதைப் பற்றிப் பேசிக் கொண்டிருக்கும்போது சில கருத்து விளக்கங்களைப் பெறுகிற நேரத்தில் மாலைப் பத்திரிகையிலே தாமரைக்கனியைப் பற்றி செய்திதான் வர வேண்டுமென்பதற்காக உரத்த குரல் எழுப்புவதை...

**தாமரைக்கனி** : (குறுக்கீடு)

**முதல்வர்** : தலைவர் அவர்களே, நான் மீண்டும் மீண்டும் சொல்கிறேன். தாமரைக்கனி சாட்டிய குற்றச்சாட்டு 15 கோடி ரூபாய் ஊழல் நடைபெற்றதாகச் சொன்னார். அதைப்பற்றி விசாரித்ததில் எனக்கு வந்த தகவலைத்தான் சொல்லியிருக்கிறேன். கலெக்டரும் மற்றும் உள்ள அதிகாரிகளும் தந்துள்ள தகவல். அவர்களுடைய கைப்பட வந்த கடிதங்கள் என்னிடத்திலே இருக்கின்றன. அங்கே கொடுக்கப்பட்ட கடனே 1 கோடியே சொச்சம் ரூபாய்தான் என்கிறபோது 15 கோடி ரூபாய் ஊழல் என்று சொல்லப்படுவது மிகையாக இருக்கிறது. அந்த ஒரு கோடிக்குள் ஏதாவது ஊழல் நடைபெற்றிருந்தால் சொல்லுங்கள். நான் விசாரிக்கிறேன். நடவடிக்கை எடுக்கிறேன் என்றுதான் குறிப்பிட்டிருக்கிறேன். விசாரிப்பதும் நடவடிக்கை எடுப்பதும்கூட உங்களால் ஏற்றுக்கொள்ள முடியவில்லை என்றால் என்ன செய்ய முடியும்? யாரோ அ.தி.மு.க.விலிருந்து ஊழல் செய்துவிட்டு தி.மு.க.வுக்கு வந்துவிட்டார்கள் என்று சொல்கிறார். அ.தி.மு.க.வில் அவர் ஊழல் செய்யும்போது மௌனமாக இருந்தவர், அவர் தி.மு.க.விற்கு வந்தபிறகு அதை வெளியிடுகிறார் என்றால் அந்த ரகசியம் எனக்குப் புரியவில்லை.

## கூட்டுறவு கடனில் 40 சதவிகிதம் வசூலித்தால்தான் நபார்டு வங்கி மீண்டும் கடன் தரும்

தஞ்சை மாவட்டத்தில், விவசாயிகளிடத்தில் ஜப்தி நடைபெறுகிறது என்பதைப் பற்றி நம்முடைய பழனிச்சாமி அவர்களும், மற்றவர்களும் இங்கே எடுத்துச் சொன்னார்கள். எல்லா உறுப்பினர்களும் சொல்லாவிட்டாலும், குறிப்பிட்ட சில உறுப்பினர்கள் ஜப்தியைப் பற்றிச் சொன்னார்கள். கூட்டுறவு வங்கிகளுக்கான கடனை நாம் திருப்பிச் செலுத்தாவிட்டால், மீண்டும் அந்த நிறுவனங்களிடமிருந்து கடனைப் பெற முடியாது என்பது எல்லோருக்கும் புரிந்த எளிமையான இலக்கணம்தான்.

30.6.1999 தேதியின்படி அந்தப் பகுதியிலே மொத்தமாக ஏற்படும் தவணைத் தொகை இந்தக் கூட்டுறவுக் கடன் 43 கோடியே 10 இலட்ச ரூபாய். இந்தத் தொகையில் குறைந்தது 40 சதவீதம் அளவுக்காவது வசூல் செய்தால்தான் வருகிற ஆண்டு மீண்டும் நாம் நபார்டு வங்கியின் மூலம் தொகையைப் பெற்று விவசாயிகளுக்கு மீண்டும் சலுகை வட்டியிலே கடன் தர இயலும். அந்த உரிமையை நாம் ஏன் இழக்க வேண்டும். முழுக்கக் கேட்கவில்லை. 40 சதவீதம்தான் கேட்கப்பட்டிருக்கிறது. அதிலேகூட ஏற்கெனவே வசூல் செய்யப்பட வேண்டிய 43 கோடி ரூபாயில் 40 சதவீதம் என்பது 17.24 கோடி ரூபாய்தான். இதில் 17.2.1999ஆம் நாள் வரை வசூலிக்கப்பட்ட தொகை வெறும் 36 இலட்சம்தான். இன்னும் வசூலிக்க வேண்டிய தொகை 16.88 கோடி ரூபாய். இந்தக் கடன் தொகையை கட்ட தவணைத் தவறிய விவசாயிகளுடைய எண்ணிக்கை 81,553. மொத்தம் தவணை தவறிய தொகை 43 கோடியே 10 இலட்ச ரூபாய்.

## கடனை திருப்பிச் செலுத்தாத பெரிய விவசாயிகளுக்கு நோட்டீஸ்

இதிலே பெரிய விவசாயிகள் 21,898 பேர். இந்தப் பெரிய விவசாயிகள் மாத்திரம் தரவேண்டிய கடன் 19 கோடியே 22 இலட்சம். பெரிய விவசாயிகள் என்றால் யார்? 5 ஏக்கருக்கு மேல் நிலம்

உள்ளவர்கள். டிராக்டர் போன்ற இயந்திரங்களைப் பயன்படுத்தி சாகுபடி செய்பவர்கள், நிலங்களை அன்னியில் மாத ஊதியம் பெற்று வேலையில் இருப்பவர்கள், இவர்கள்தான் பெரிய விவசாயிகள் என்ற அந்த வரம்பில் வருகிறார்கள். மொத்தம் 81,553 தவணை தவறிய விவசாயிகளில் சுமார் 60,000 பேர் சிறு விவசாயிகள். அவர்கள் மீது எந்த நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை. அவர்களுக்கு நோட்டீஸ்கூட அனுப்பப்படவில்லை. பெரிய விவசாயிகளை 21 ஆயிரம் பேருக்கு மாத்திரம்தான் உடனடியாக கடன் தொகையை, அந்த 40 சதவீதத்தைக் கட்ட வேண்டுமென்றும், இல்லாவிட்டால் சட்டபூர்வமான நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் நோட்டீஸ் அனுப்பப்பட்டது. விளம்பரம் செய்யப்பட்டது. இதிலே தஞ்சை மத்தியக் கூட்டுறவு வங்கியின் சார்பில் நோட்டீஸ் மாத்திரம்தான் அனுப்பப்பட்டிருக்கிறது. யாரையும் ஜப்தி செய்யவில்லை.

கும்பகோணம் சங்கத்தின் மூலம், அதிலே திருவாரூர் மாவட்டம், தஞ்சாவூர் மாவட்டம், நாகை மாவட்டம் எல்லாம் இருக்கிறது. இந்த கும்பகோணம் மத்தியக் கூட்டுறவு வங்கியில் மாத்திரம் 60 பேர் மீது; அதாவது திருவாரூர் மாவட்டத்தில் 10 பேர் மீதும், தஞ்சை மாவட்டத்தில் 29 பேர் மீதும், நாகை மாவட்டத்தில் 21 பேர் மீதும் ஜப்தி நடவடிக்கை எடுக்கப்பட்டது. இவர்கள் எல்லாம் யார்? அவர்கள் கட்சி பெயரை சொல்ல விரும்பவில்லை நான். எந்தக் கட்சியில் இருக்கிறார்கள் என்று. பெயரை மாத்திரம் சொல்கிறேன். சுவாமிநாதன் அவர் கடன் வாங்கியது 1991ல், செலுத்த வேண்டிய தொகை 1 இலட்சத்து 83 ஆயிரம் ரூபாய். இந்தப் பெரிய விவசாயிடமிருந்து கடன் தொகையைக் கேட்கக் கூடாதா? 40 சதவீதத்தைக் கொடுக்கக் கூடாதா அவர்? சுவாமிக்கண்ணு, 74 ஆயிரம் ரூபாய் 1996ல் வாங்கினார், கொடுக்கவில்லை. சண்முகவேல் 85 ஆயிரம் ரூபாய் 1996ல் வாங்கிய கடன். எம். மாரியப்பன் 1996ல் வாங்கிய கடன் 53 ஆயிரம் ரூபாய். சம்பந்தம் 1991ல் வாங்கிய கடன் 1 இலட்சத்து 20 ஆயிரம் ரூபாய். கலியமூர்த்தி குடும்பம் 1992ல் வாங்கிய கடன் 1 இலட்சத்து 80 ஆயிரம் ரூபாய். இவர் விவசாயச் சங்கத் தலைவர்கூட. கண்ணபிரான் 1990ல் வாங்கிய கடன் 2 இலட்சத்து

30 ஆயிரம் ரூபாய். எஸ். செந்தில் 1992ல் வாங்கிய கடன் இலட்சத்து 4 ஆயிரம் ரூபாய். கோபாலகிருஷ்ணன் 1993ல் வாங்கிய கடன் இலட்சம் ரூபாய். திருஞானசம்பந்தம் 1996ல் வாங்கிய கடன் 59 ஆயிரம் ரூபாய். சுந்தரப்பா 1996ல் வாங்கிய கடன் 79 ஆயிரம் ரூபாய். மந்திரமூப்பனார் 1 இலட்சத்து 86 ஆயிரம் ரூபாய். 1996ல் வாங்கிய கடன். சண்முகம் 1995ல் வாங்கிய கடன் 1 இலட்சத்து 15 ஆயிரம் ரூபாய். சேரன் குடும்பத்தார் 1995ல் வாங்கியிருக்கிறார்கள். 1991லும் வாங்கியிருக்கிறார்கள் ஒன்பது இலட்சத்து 58 ஆயிரம் ரூபாய். விவசாயச் சங்கக் கூட்டுக் குழுவின் தலைவர் அவர். அவர் கட்ட வேண்டாமா? 40 சதவீதம்கூட அவர் கட்ட வேண்டாமா? சுந்தரமூர்த்தி 1996ல் வாங்கிய கடன் இலட்சத்து 20 ஆயிரம் ரூபாய். ராமகிருஷ்ணன், 1994ல் வாங்கிய கடன் இலட்சத்து 50 ஆயிரம் ரூபாய். ஆனந்தன், 1992ல் வாங்கிய கடன் 74 ஆயிரம் ரூபாய். குணசேகரன் 1996ல் வாங்கிய கடன் 61 ஆயிரம் ரூபாய். இந்த மாதிரி வந்து கொண்டே இருக்கிறது.

சில எம்.எல்.ஏ.க்கள் எல்லாம் இருக்கின்றார்கள். நான் பெயரை எல்லாம் சொல்ல விரும்பவில்லை. சொல்லிவிட்டு, அவர் முகத்தைப் பார்க்க எனக்கும் கஷ்டமாக இருக்கும். அவர்களுக்கும் கஷ்டமாக இருக்கும். இதிலே இந்த ஜப்தி நடவடிக்கை எடுக்கப்பட்டவர்களில் ஆர். மகாலிங்கம், பூண்டி, இவர் கட்ட வேண்டிய தொகை 18 ஆயிரத்து 902 ரூபாய். இவருக்கு 8.78 ஏக்கர் நிலம் சொந்தம். அரிசி ஆலை நடத்திக் கொண்டிருக்கிறார். அவரிடம் கேட்கக் கூடாதா? கட்டாயப்படுத்தக் கூடாதா?

பன்னீர் செல்வம், ஆச்சாள்புரம், கட்ட வேண்டிய தொகை 32 ஆயிரத்து 410 ரூபாய். இவருக்கு 6 ஏக்கர் நிலம் இருக்கிறது, கல்யாண மண்டபம் இருக்கிறது, நெல் வியாபாரம் இருக்கிறது. உரக்கடையும் இருக்கிறது. இவ்வளவும் இருக்கிறது. சிறிய விவசாயியா இவர்?

ராஜதுரை, தேவனாஞ்சேரி, பாக்கித் தொகை 15 ஆயிரம் ரூபாய்தான் இவருக்கு 8 ஏக்கர் நிலம் இருக்கிறது. சொந்தத்தில் டிராக்டர் உள்ளது.

மணிவண்ணன், செம்பியமாதேவி 43 ஆயிரம் ரூபாய் பாக்கி. இவருக்கு 10 ஏக்கர் நிலம் இருக்கிறது. அஞ்சல் துறையில் பணியாற்றுகிறார்.

பெருமாள், வலங்கைமான், பாக்கி 19 ஆயிரம் ரூபாய். இவருக்கு 6 ஏக்கர் நிலம் இருக்கிறது. ஜவுளிக்கடை சொந்தத்தில் நடத்துகிறார்.

## ஆதிதிராவிடர்களை தூண்டிவிடுவது போல் பேசுவதா?

எம். ராணி திருப்புறம்பியம், 23 ஆயிரம் ரூபாய் பாக்கி, 6 ஏக்கர் நிலம் இருக்கிறது. செங்கல் காளவாய் போட்டு செங்கல் வியாபாரம் செய்கிறார். இவர்களிடமிருந்தெல்லாம் பாக்கி வசூல் பண்ணக் கூடாதா? அதுவெல்லாம் ஜப்தி என்று சொல்லி பழனிச்சாமி போன்றவர்கள் எல்லாம் சொன்னால் கம்யூனிசத் தத்துவத்தை எப்போது மாற்றிக் கொண்டீர்கள் என்று நான் கேட்க விரும்புகிறேன்.

மிக முக்கியமாக டாக்டர் கிருஷ்ணசாமி ஒன்று சொன்னார். யாரோ சேட்டு மகளுக்கு 5 இலட்சம் ரூபாய் கொடுத்தோம் என்று சொன்னார். நானும் கொடுத்ததாகத் தெரியவில்லை. நிதித்துறையையும் கேட்டேன், அவர்களும் கொடுக்கவில்லை யென்று சொல்கிறார்கள். ஏதோ தவறான தகவல் அது. அதேநேரத்தில் கொலை செய்யப்படுகின்றவர்கள் யாராக இருந்தாலும், அவர்கள் ஆதிதிராவிட மக்களாக இருந்தாலும் அல்லது ஆதிதிராவிடர் அல்லாத மக்களாக இருந்தாலும், ஜாதிச் சண்டையில் கொலை செய்யப்பட்டால், ஏற்கனவே 50 ஆயிரம் ரூபாய் இருந்ததை இலட்சம் ரூபாயாக ஆக்கி, இப்போது 2 இலட்சம் ரூபாய். அவர்கள் ஜாதி இந்துக்களாக இருந்தாலும் சரி, ஆதிதிராவிடர்களாக இருந்தாலும் சரி, இரண்டு பேருக்கும் 2 இலட்சம் ரூபாய் என்ற அளவுக்கு உயர்த்தியிருக்கிறோம். இதிலே, ஏதோ சேட்டு மகளுக்கு 5 இலட்சம் கொடுத்தோம் என்று கூறி ஆதிதிராவிட மக்களைத் தூண்டிவிடுகின்ற முறையிலே பேசுவது சரியில்லையென்றே நான் தெரிவித்துக் கொள்கின்றேன்.

திரு. லத்தீப் அவர்கள் பேசியதைப் பற்றியும் நான் சில வார்த்தைகளைச் சொல்ல வேண்டும். இதற்கிடையிலே இந்த ஆளுநர்

உரை வெறும் தாள் என்று சொன்னார்களே, அதில் என்னுடைய உள்ளத்தைக் கவருகின்ற ஒரு திட்டம், உணர்ச்சிமயமான ஒரு திட்டம் மனிதக் கழிவுகளை அகற்றும் இழிநிலை போக்குகின்ற ஒரு திட்டமாகும்.

## அனைவரும் பாராட்டியுள்ள சமத்துவபுர திட்டம்

இதுபோன்ற திட்டங்களை இந்த அரசு இன்றல்ல; நான் முதல் முறையாக முதலமைச்சராக ஆன அந்தக் காலந்தொட்டு இதுவரையிலே தொடர்ந்து நடந்து வருகின்றது. கண்ணொளி வழங்குகின்ற திட்டம் பரவலாக தமிழகம் முழுவதும் நடத்தப்படுகின்ற திட்டம். கைரிக்ஷாக்களை ஒழித்து சைக்கிள் ரிக்ஷா இலவசமாக வழங்கிய திட்டம், இந்த அரசு அறிமுகப்படுத்திய திட்டம். தொழுநோய் இரவலருக்கு ஏறத்தாழ 4 ஆயிரம் பேர், 5 ஆயிரம் பேருக்கு ஒவ்வொரு மாவட்டத்திலும் இரவலர் விடுதிகள், மறுவாழ்வு இல்லங்களை அமைத்து அவர்களைப் பராமரித்து வருகின்ற திட்டம்; அப்பொழுது 1976க்கு முன்பே ஆரம்பித்து தொடர்ந்து நடந்து வருகின்ற திட்டம். ஏழைப் பெண்களுக்கு திருமண உதவி, மூவலூர் மூதாட்டி இராமாமிர்தம் அம்மையாருடைய நினைவாக நடத்தப்படுகின்ற திட்டம். சமத்துவபுரம் திட்டம். நீங்கள் அனைவரும் பாராட்டிப் பேசியிருக்கிறீர்கள்.

ஆதிதிராவிட மக்களுக்கு இந்தியாவிலே முதன்முதலாக இலவசமாக கான்கிரீட்டு வீடு கட்டிய திட்டத்தை தமிழகத்திலே தி.மு.க. ஆட்சியிலேதான் நாம் அறிமுகப்படுத்தினோம். குடிசை மாற்று வாரியம், முன்பெல்லாம் குடிசை மேம்பாட்டுத் திட்டம் என்று இருந்தது. அதை மாற்றி மேம்பாடு ஒரு பக்கம் நடைபெறட்டும்; “ஸ்லம் கிளியரன்ஸ்” – இருக்கின்ற குடிசைகளை அகற்றிவிட்டு, அங்கு மாடி வீடுகளைக் கட்டித் தருவது; குடிசைவாசிகளுக்கு இந்தத் திட்டம் இந்தியாவுக்கு வழி காட்டுகின்ற முறையிலே தமிழ்நாட்டிலேதான் தொடங்கினோம்.

பிளஸ் 2 மாணவர்களுக்கு பஸ் பாஸ் இலவசமாக வழங்குகின்ற திட்டம். இப்படிப் பல திட்டங்கள் ஏழை எளிய மக்களை அடிப்படையாக வைத்து நடத்தப்படுகிற திட்டம். எப்படி மனிதனை வைத்து மனிதன் இழுக்கின்ற கை ரிக்ஷாவை அகற்றினோமோ, அதைப்போல மனிதக் கழிவுகளை அகற்றுகின்ற இழிநிலையை மனிதனிடமிருந்து விலக்க வேண்டும் என்பதற்காக ஒரு திட்டம் இந்த ஆளுநர் உரையிலே அறிவிக்கப்பட்டு இருக்கிறது. எல்லாவற்றையும் எதிர்த்துப் பேசிய சில பேர், பல பேர் பாராட்டியும் குறையும் சொல்லிப் பேசி இருக்கின்றீர்கள்; அதுவேறு விஷயம்; எல்லாவற்றையும் எதிர்க்க வேண்டுமே என்று எதிர்த்துப் பேசியவர்கள், இந்தத் திட்டத்தையாவது ஆதரிப்பார்கள் என்று நான் கருதுகிறேன். அவர்கள் அதையும்கூட ஆதரிக்கவில்லை.

ஒரு நல்ல பார்லிமென்டேரியன் என்பது பற்றி ஏ.டி.பன்னீர்செல்வம் ஒரு தடவை சொல்லியிருக்கிறார். அவரை ஒருவர் கேள்வி கேட்கிறார். "நீங்கள் எல்லாவற்றையும் எதிர்க்கிறீர்களே; நீங்கள் ஆக்கப்பூர்வமாக என்ன செய்தீர்கள்" என்று. ஆக்கபூர்வமாக செய்த காரியங்களை எல்லாம் சொல்கிறார். திடீரென்று கேள்வி கேட்கிறார் செய்தியாளர். "அரசு ஆதிதிராவிட மக்களுக்கு இலவசமாக வீடு கட்டித் தருகிறது என்று சொன்னால் அதை நீங்கள் ஆதரிப்பீர்களா" என்று கேட்டார். உடனே ஏ.டி.பி. சொன்னார் "ஆதரிப்பேன். ஆதரித்துவிட்டு, வீடு கட்டித் தந்தால் மட்டும் போதாது; ஆளுக்கு 200 ரூபாய் கொடுக்க வேண்டும் அப்படீன்னு சொல்வேன்" என்று சொன்னார்.

அதுமாதிரி, நீங்கள் ஆக்கபூர்வமாக சொல்லுங்கள்; வேண்டாம் என்று சொல்லவில்லை. ஒரு எதிர்க்கட்சி, அந்த மாதிரி ஆக்கப் பூர்வமாக ஈடுபடலாம். ஆனால், இருக்கிற எந்தத் திட்டத்தையுமே ஒரு நல்ல திட்டத்தைக்கூட ஆதரிக்காமல், இந்த கவர்னர் உரை வெறும் வெற்றுத்தாள்; வெறும் காகிதம் என்றால்; காகிதத்தில்தான் கவர்னர் உரையை அச்சடிக்க முடியும்; கரன்சி நோட்டிலேயா அச்சடிக்க முடியும்? கரன்சி நோட்டிலே அச்சடிக்கப்பட்ட கவர்னர் உரை அல்ல

இது; இது காகிதத்திலேதான் அச்சடித்து இருக்கிறோம். ஏழை எளிய மக்களுடைய இரத்தத்தைத் துடைக்க, அவர்களுடைய கண்ணீரைத் துடைக்க காலங்காலமாக இருந்து வருகின்ற இழிவைப் போக்க, மகாத்மா காந்தியடிகள், தந்தை பெரியார் – இவர்கள் எல்லாம் எதற்காகப் பாடுபட்டார்கள்? மனிதனுடைய இழிவுகள் நீக்கப்பட வேண்டும் என்பதற்காகப் பாடுபட்டார்கள்; அவர்களுடைய சுயமரியாதைக்காகப் பாடுபட்டார்கள். அதை மனதிலே வைத்துத்தான் இந்தத் திட்டத்தை நான் அறிவித்து இருக்கிறேன்.

**டாக்டர் வா.செ. குழந்தைசாமி**
**தினமணி மூலம் அளித்த நற்சான்று**

இந்தத் திட்டம் பற்றி நேற்றைய தினம் தினமணி பத்திரிகையிலே டாக்டர் வா.செ. குழந்தைசாமி, முன்னாள் துணைவேந்தராக அண்ணா பல்கலைக்கழகத்திலும், இந்திரா காந்தி பல்கலைக்கழகத்திலும் பணியாற்றிய பெருந்தகை சொல்கிறார் :

“இந்த ஆண்டு ஆளுநர் உரையில் பாராட்டத்தக்க அம்சங்கள் பல இருக்கலாம். ஆனால், என் நெஞ்சைத் தொட்ட ஓர் அறிவிப்பு. இனம் அறிய இயலாத ஒரு மனநிறைவு; அங்கம் முழுவதும் அலை போலப் பரவச் செய்த ஒரு பிரகடனம். ‘மனிதக் கழிவுகளை மனிதன் சுமக்கும் அவலம் தமிழ் மண்ணிலே இருந்து விரைவில் மறையும்’ என்பதுதான். மாந்தர் கழித்ததை மாந்தர் சுமக்கும் அவலத்தை அகற்றும் இந்த முடிவு ஒரு நிகழ்ச்சியை என் நினைவிற்கு கொண்டு வருகிறது. 1989–90ஆம் நிதியாண்டில் கலைஞர் தலைமையில் நடந்த தமிழகத் திட்டக்குழுக் கூட்டம் ஒன்றில் இக்கொடுமை ஒழிக்கப்பட வேண்டும் என்ற கருத்து முன் வைக்கப்பட்டது. அப்போது மைய அரசின் நகர்ப்புற மேம்பாட்டுத்துறை அமைச்சராக இருந்த முரசொலி மாறன் தேசிய அளவில் இந்தப் பழக்கத்தை ஒழிக்கும் திட்டம் ஒன்றைச் செயல்படுத்த இருப்பதாக முதல்வர் கலைஞரிடம் கூறினார். எனவே, அதைப்பற்றிக் குழு

விவாதிக்கவில்லை. பின்னர் மைய அரசு கவிழ்ந்தது. மாநில அரசும் கலைக்கப்பட்டது. இந்தச் சாபக்கேடு தொடர்ந்தது.

கங்கை வெள்ளமும் கழுவ இயலாத இந்தக் களங்கத்தைத் தலைமுறை தலைமுறையாகச் சுமந்து, வயிற்றைக் கழுவி, வாழ்க்கை நடத்தும் அப்பாவி மக்களின் உள்ளக் குமுறல்களின் உருவகமாக அமைந்தது, பின்வரும் கவிதை என்று அவர் எழுதிய கவிதையில் 4 வரி மாத்திரம் படித்துக் காட்டுகிறேன் :

*"மாந்தர் கழித்தலை மாந்தர் சுமந்திடும்*
*வாழ்வு தொடர்ந்திடும் நாட்டினிலே,*
*போந்த சுதந்திரம், பேசு சமத்துவம்*
*பொய்யடா; யாவையும் ஏட்டினிலே".*

இந்த ஆண்டு முதல் மனித இனத்தையே மாசுபடுத்தி வந்த ஓர் இழிவு மறைகிறது. தன்மான உணர்வுள்ள சமுதாயம் தலைகுனிய வேண்டிய ஒரு மாசு அகல்கிறது. தமிழ்ச் சமுதாயத்தின் சரிதையில் கறை படிந்த பக்கம் கடந்த காலச் செய்தியாகிறது. ஆளுநர் உரையில் ஒரு நீண்ட வாக்கியத்தின் சிறு பகுதியாக மட்டுமே இடம் பெற்றிருக்கும் இந்த அறிவிப்பு, ஒரு சாதாரண திட்டம் அன்று; தாழ்த்தப்பட்ட மக்களின் சமுதாய வாழ்வில் ஒரு மகத்தான திருப்பம். வரலாறு பதிவு செய்யத் தவறாது. இதன் தாக்கம் மற்ற மாநிலங்களிலும் எதிரொலிக்கும். வைதீக மொழியில் கூறுவதானால், வைக்கம் வீரரின் ஆவி வாழ்த்தும்"

– என்று குழந்தைச்சாமி அவர்கள் இப்படி ஒரு நற்சான்றை தினமணி பத்திரிகையிலே எழுதி இருக்கிறார்.

## கழிவை சுமக்கின்றவர்களுக்கு விரைவில் மாற்று வேலை

இதில் நாம் அனைவரும் ஒன்றுபட்டு இந்தத் திட்டத்தை வெற்றிகரமாக நிறைவேற்றிட வேண்டும். இதிலே ஈடுபட்டிருக்கின்ற

தொழிலாளர்களுக்கு, கழிவைச் சுமக்கின்றவர்களுக்கு மாற்று வேலை தருகின்ற திட்டத்தினை வெகுவிரைவிலே இந்த அரசு அறிவிக்கும். 6,7 மாதங்களுக்குள்ளாக இந்தத் திட்டத்தை வெற்றிகரமாக நடத்தி முடிப்போம் என்ற உறுதியை இந்த அவைக்குத் தெரிவித்துக் கொள்கிறேன்.

இறுதியாக, திரு.அப்துல் லத்தீப் அவர்கள் பேசும்போது ஒன்றைக் குறிப்பிட்டார்கள். என் மீது அவருக்கு இருக்கின்ற நம்பிக்கையை இந்த அரசு மீது அவருக்கு இருக்கின்ற நம்பிக்கையை உறுதிப்படுத்தியதோடு மாத்திரமல்ல; இஸ்லாமிய சமுதாயத்தின் மீது, சிறுபான்மையின சமுதாயத்தின் மீது, அது இஸ்லாமியராக இருந்தாலும், கிறிஸ்துவராக இருந்தாலும், சிறுபான்மையினருக்கு என்றைக்கும் தி.மு.க. ஆட்சி துணையாக இருக்கும்; இன்னும் சொல்லப் போனால் அமைந்திருக்கின்ற தி.மு.க. கூட்டணி என்றைக்கும் துணையாக இருக்கும் என்ற உறுதியை எதிர்க்கட்சித் தலைவர் அவர்களின் சார்பிலும், இங்கே வீற்றிருக்கின்ற மற்ற தோழமைக் கட்சிகளின் சார்பிலும், நான் லத்தீப் அவர்களுக்கும், இஸ்லாமிய சமூகத்தினருக்கும் தெரிவித்துக் கொள்ள பெரிதும் கடமைப்பட்டிருக்கிறேன்.

இங்கே யாரும் சிறுபான்மையினர் சமுதாயம் சீரழிக்கப்பட வேண்டும்; சீர் குலைக்கப்பட வேண்டும்; வன்முறைக்கு ஆளாக்கப்பட வேண்டுமென்ற எண்ணத்தை ஏற்றுக் கொள்பவர்கள் அல்ல. லத்தீப் அவர்கள் சொன்ன ஒரே ஒரு குறை, தீவிரவாதிகளை வேட்டையாடுவது என்கின்ற பெயரால் அப்பாவி மக்களை துன்புறுத்துகிறார்கள் என்று சொன்னார்கள். அவர்கள் இதை எடுத்துச் சொல்லச் சொல்ல – காவலர்கள் அதில் எவ்வளவு நிதானமாக நடந்து கொள்ள வேண்டுமோ அவ்வளவு நிதானமாக நடக்கத் தொடங்கி இருக்கிறார்கள் என்பதை தெரிவித்துக் கொள்கிறேன். இருந்தாலும் ஒன்றைச் சொல்ல விரும்புகிறேன்.


நான் ஏற்கெனவே சொன்ன உதாரணத்தைத்தான் சொல்ல விரும்புகிறேன். ஒரு பள்ளி வகுப்பில் ஆசிரியருடைய பேனா காணாமல் போய்விட்டது என்றால் அவர் உடனே இவன்தான்

எடுத்திருப்பான் என்று 2 பேரைக் கூப்பிட்டு, "நீதான் எடுத்தாய்" என்று சொன்னால் வம்பு வரும். அதற்காக என்ன செய்வார் என்றால், அந்த ஆசிரியர் எல்லா பையன்களும் கையிலே வைத்திருக்கிற பையைத் திறந்து காட்டுங்கள் என்று சொல்வார். எல்லோரும் கையில் உள்ள பையைத் திறந்து காட்டுவார்கள். அப்போதுதான் மற்றவர்களுக்கு இவர் மீது கோபம் வராது. நம்மை திருடன் என்று நினைத்து விட்டாரே என்று கோபம் வராது. எல்லோருடைய பைகளையும் திறந்து பார்த்து, உண்மையான திருடனைக் கண்டுபிடிப்பதைப் போல, சில காரியங்கள் தமிழகத்திலே காவல்துறை மூலம் நடைபெற்றிருக்கலாம் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். அதற்காக இஸ்லாமியப் பெருமக்களானாலும் சரி, கிறிஸ்தவ பெருமக்களானாலும் சரி, மனம் வருந்தத் தேவையில்லை என்பதை எடுத்துக் காட்டிக் கொள்கிறேன்.

## கவர்னர் உரையில் கண்டிக்க வேண்டிய அளவிற்குத்தான் கண்டிக்க முடியும்

இன்றைக்கு இந்தியா முழுவதும் ஆங்காங்கே நடைபெறுகின்ற வன்முறைகள், சிறுபான்மை சமுதாயத்திற்கு இன்றைக்கு அறைகூவல் விடுகின்ற முறையிலே நடைபெறுகின்ற வன்முறைகளையெல்லாம் இந்த மாமன்றம் கண்டித்திருக்கிறது. நம்முடைய மணி அவர்கள், மார்க்சிஸ்ட் கட்சியின் சார்பிலே பேசும்போது, விலைவாசி உயர்வைக் கண்டிக்கவில்லை என்று சொன்னார்கள். பீகார் அரசு கலைப்பை கண்டிக்கவில்லை என்று சொன்னார்கள். நான் கண்டிப்பேன். வெளியிலேயும் கண்டிப்பேன், உள்ளேயும் கண்டிப்பேன். கவர்னர் உரையின் மூலமாகக் கண்டிக்க வேண்டிய அளவிற்குத்தான் கண்டிக்க முடியும் என்பதை மணி அவர்கள் உணராதவர் அல்ல என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். இந்த உரைக்கு நன்றியுரை பகர்ந்தவர்களுக்கும், கருத்துரை பகர்ந்தவர்களுக்கும் என்னுடைய அன்பான நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

– இவ்வாறு முதலமைச்சர் **கலைஞர்** அவர்கள் உரையாற்றினார்.



வெளியீடு : இயக்குநர், செய்தி-மக்கள் தொடர்புத்துறை, தமிழ்நாடு அரசு.